புள்ளியியல் செய்முறை மாதிரிகள்

(பாகம் 1)

STATISTICS - PRACTICAL EXERCISES

(PART I)

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—791

புள்ளியியல் செய்முறை மாதிரிகள்

(முதல் பாகம்)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்
வே. சு. சௌந்தர பாண்டியன், எம். எஸ்சி.,
உதவிப் பேராசிரியர்,
புள்ளியியல் துறை, மாநிலக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—February, 1978
Number of Copies—2000

T. N. T. B. S. (C. P.) No. 791

STATISTICS-PRACTICAL EXERCISES (PART-I)

V. S. SOUNDARA PANDIAN

Price Rs. 15.30

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture) New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
Ravishankar Printers,
84, Perambur Barracks Road,
Madras—600 007.

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேழாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப்பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **புள்ளியியல் செய்முறை மாதிரிகள் (முதல் பாகம்)** என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **791**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **826** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ் ; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

1. சராசரிகள் அல்லது மையநிலைப் போக்கு அளவைகள்

ஒரு பரவலில் அடங்கியுள்ள எல்லாவித அம்சங்களின் அளவுகளைப் பிரதிபலிக்கின்ற ஓர் உண்மை அளவே, கொடுக்கப் பட்ட பரவலின் சராசரி அல்லது மையநிலைப் போக்கு அளவு எனக் கூறப்படுகிறது.

அல்லது சராசரியை, கொடுக்கப்பட்ட எளிதில் பிரித் தாய்ந்து புரிந்துகொள்ள இயலாத புள்ளிவிவரத் தொகுதியின் மையக் கருத்தை அளந்து கூறக் கூடிய சுருக்க விளக்க எண் எனவும் கொள்ளலாம். வழக்கில் பயன்படுத்தப்படுகின்ற சில முக்கியச் சராசரிகள் :

(1) கூட்டுச் சராசரி
(2) இடைநிலை
(3) முகடு
(4) பெருக்குச் சராசரி
(5) ஹார்மானிக் சராசரி

என்பனவாகும்.

கூட்டுச் சராசரி
(Arithmetic Mean)

சாதாரணக் கூட்டுச் சராசரியைக் கீழ்க்காணும் இரு முறை களில் கணக்கிடலாம் :

(1) நேரடி முறை, (2) சுருக்கு முறை

(அ) தனித்த தொகுதி

(1) நேரடி முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = \dfrac{\Sigma x}{n}$

இங்கு, n = உறுப்புகளின் எண்ணிக்கை

x = உறுப்புகளின் அளவு.

(2) சுருக்கு முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma dx}{n}$

இங்கு, $dx = (x-A)$

(ஆ) தொடர்ச்சியற்ற தொகுதி

(1) நேரடி முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma fx}{n}$

இங்கு, $n = \Sigma f$

f = அலைவெண்

(2) சுருக்கு முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

இங்கு, A = ஊகச் சராசரி

f = அலைவெண்

dx = ஊகச் சராசரியிலிருந்து கிடைத்த விலக்கம் $(x-A)$

n = அலைவெண்களின் கூடுதல்.

(இ) தொடர் தொகுதி

கூட்டுச் சராசரி $\bar{x}$:

இங்கு, பிரிவுகளின் மத்திய மதிப்புகளைக் கணக்கிட்டு (பிரிவின் இரு எல்லைகளைக் கூட்டி இரண்டால் வகுத்து : உதாரணமாக $10-20$ என்ற பிரிவில் $\frac{10+20}{2} = 15$ என்பதைக் கொண்டு), அவைகளை x எனக் கொண்டு, கூட்டுச் சராசரி $\bar{x}$ ஐத் தொடர்ச்சியற்ற தொகுதியில் கொடுக்கப்பட்ட சூத்திரத்தின் மூலம் கணக்கிடுகிறோம்.

(ஈ) கூட்டுச் சராசரியைப் படிவிலக்க முறை மூலமாகவும் கணக்கிடுகிறோம்.

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd'x}{n} \times C$

இங்கு,
$\bar{x}$ = கூட்டுச் சராசரி
A = ஊகச் சராசரி
f = அலைவெண்
$d'x$ = படி விலக்கம் $\left(d'x = \frac{x-A}{C}\right)$
n = அலைவெண்களின் கூடுதல் $(n = \Sigma f_i)$
C = பிரிவு இடைவெளி அளவு

நிறையிட்ட கூட்டுச் சராசரி

(1) நேரடி முறை :

$$\text{நிறையிட்ட கூட்டுச் சராசரி} = \frac{\Sigma x_i w_i}{\Sigma w_i}$$

இங்கு, x_i = 'x' என்ற 'மாறி' ஏற்கும் மதிப்புகள்
w_i = பளு

(2) சுருக்கு முறை :

$$\text{நிறையிட்ட கூட்டுச் சராசரி} = A + \frac{\Sigma w\ dx}{\Sigma w}$$

இங்கு,
A = ஊகச் சராசரி
$dx = (x_i - A)$ விலக்கம்

சார்லியரின் சோதனை

$\Sigma (f)$ மொத்த அலைவெண் $= \Sigma [(f(d+1)] - \Sigma (fd)$
அல்லது
$\Sigma fd = [f(d+1)] - \Sigma f$

கூட்டல் முறையில் கூட்டுச் சராசரி காணல்

கூட்டுச் சராசரி (கூட்டல் முறை) :

$$x = M - C(F_1 - 1)$$

இங்கு,
M = கடைசிப் பிரிவின் மத்திய மதிப்பு
C = இடைவெளித் தூரம்
F_1 = குவி அலைவெண் கூட்டலை, அலை வெண் கூடுதலால் வகுத்தபின் கிடைத்த மதிப்பு.

இடைநிலை

(1) தனித்த தொகுதி

தனித்த தொகுதியின் இடைநிலை காண, முதலில் கொடுத்த உறுப்புகளை ஏறு வரிசை மதிப்பிலோ, அல்லது இறங்கு வரிசை மதிப்பிலோ எழுதவேண்டும். பின்பு கீழ்க்காணும் முறைப்படி இடைநிலையைக் கணக்கிடுகிறோம்.

$M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பாகும். சில நேரங்களில் $\left(\frac{n+1}{2}\right)$ என்னும் மதிப்பு பின்னமாக வரலாம். உதாரணமாக, $\left(\frac{n+1}{2}\right)$ என்பது 12·5 எனக் கொண்டால், இடைநிலை

$$M_e = \frac{12\text{ஆவது உறுப்பின் மதிப்பு} + 13\text{ஆவது உறுப்பின் மதிப்பு}}{2}$$

எனக் கணக்கிட வேண்டும்.

(2) தொடர்ச்சியற்ற தொகுதி

இடைநிலையைக் கீழ்க்காணும் முறைப்படி கணக்கிட வேண்டும் :

(i) குவி அலைவெண் கணக்கிடல்.

(ii) $\left(\frac{n+1}{2}\right)$ஆவது உறுப்பின் மதிப்புக் கணக்கிடல்.

(iii) $\left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு விழும் குவி அலைவெண்ணின் உறுப்பின் மதிப்பே இடைநிலையாகும்.

(iv) $\left(\frac{n+1}{2}\right)$ஆவது உறுப்பின் மதிப்பு குவி அலைவெண்ணில் விழாவிட்டால், அதன் அடுத்த உயர் மதிப்புடைய உறுப்பின் மதிப்பை இடைநிலையாகக் கொள்ள வேண்டும்.

(3) தொடர் தொகுதி

(a) இடைநிலைச் சூத்திரம்

$$M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times l_2 - l_1$$

அல்லது $$M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$$

இங்கு, M_e = இடைநிலை.

n = அலைவெண்ணின் கூடுதல்

l_1 = இடைநிலைப் பிரிவின் கீழ்வரம்பு

l_2 = இடைநிலைப் பிரிவின் மேல்வரம்பு

f = இடைநிலைப் பிரிவின் அலைவெண்

m = இடைநிலைப் பிரிவிற்கு அடுத்த முந்திய பிரிவின் திரள் அலைவெண்

C = பிரிவு இடைவெளி அளவு, $(l_2 - l_1)$

(b) இடைநிலை கணக்கிடும் இரண்டாவது சூத்திரம்

$$M_e = l_1 + \frac{\left(\frac{n}{2} - m\right)}{f} \times C$$

இங்கு, M_e = இடைநிலை

n = அலைவெண்ணின் கூடுதல் (Σf)

l_1 = இடைநிலைப் பிரிவின் கீழ்வரம்பு

f = இடைநிலைப் பிரிவின் அலைவெண்

m = இடைநிலைப் பிரிவிற்கு அடுத்த, முந்திய பிரிவின் திரள் அலைவெண்

C = பிரிவு இடைவெளி அளவு

(c) இடைநிலை கணக்கிடும் மூன்றாவது சூத்திரம்

$$M_e = L + \frac{\left(\frac{N}{2} - F\right)}{f} \times C$$

இங்கு, L = இடைநிலைப் பிரிவின் கீழ்வரம்பு

f = இடைநிலைப் பிரிவின் அலைவெண்

C = பிரிவு இடைவெளி அளவு

F = இடைநிலைப் பிரிவிற்கு முந்திய அலைவெண்ணின் கூடுதல்

N = அலைவெண்களின் கூடுதல்

பிரிவுப் புள்ளிவிவரப் பரவலுக்கு இடைநிலை (M_e) காண இன்னும் சில சூத்திரங்கள் இருக்கின்றன. ஆனால் (*a*) முதல் சூத்திரமே சாதாரணமானதாகவும், உயரியதாகவும் கொண்டு இடைநிலை கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது.

இடைநிலையை ஒத்த சில அளவைகள்
கால்மானங்கள் (Quartiles); பத்துமானங்கள் (Deciles); நூற்றுமானங்கள் (Percentiles)

தனித்த தொகுதி

கால்மானங்கள் :

முதல் கால்மானம்

$$Q_1 = \left(\frac{N+1}{4}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

இரண்டாவது கால்மானம்

$$Q_2 = \left(\frac{N+1}{2}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

மூன்றாவது கால்மானம்

$$Q_3 = 3\left(\frac{N+1}{4}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

பத்துமானங்கள் :

முதல் பத்துமானம்

$$D_1 = \left(\frac{N+1}{10}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

இரண்டாவது பத்துமானம்

$$D_2 = 2\left(\frac{N+1}{10}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

மூன்றாவது பத்துமானம்

$$D_3 = 3\left(\frac{N+1}{10}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

....

ஒன்பதாவது பத்துமானம்

$$D_9 = 9\left(\frac{N+1}{10}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

நூற்றுமானங்கள் :

முதல் நூற்றுமானம்

$$P_1 = \left(\frac{N+1}{100}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

இரண்டாவது நூற்றுமானம் $P_2 = 2\left(\frac{N+1}{100}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு.

மூன்றாவது நூற்றுமானம் $P_3 = 3\left(\frac{N+1}{100}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு.

....

தொண்ணூற்றொன்பதாவது நூற்றுமானம்

$$P_{99} = 99\left(\frac{N+1}{100}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு.}$$

தொடர் தொகுதி

கால்மானங்கள் :

முதல் கால்மானம் $Q_1 = l_1 + \frac{\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$

இரண்டாவது கால்மானம் $Q_2 = l_1 + \frac{2\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$

மூன்றாவது கால்மானம் $Q_3 = l_1 + \frac{3\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$

பத்துமானங்கள் :

முதல் பத்துமானம் $$D_1 = l_1 + \frac{\left(\frac{n+1}{10}\right) - m}{f} \times C$$

இரண்டாவது பத்துமானம் $$D_2 = l_1 + \frac{2\left(\frac{n+1}{10}\right) - m}{f} \times C$$

....

ஒன்பதாவது பத்துமானம் $$D_9 = l_1 + \frac{9\left(\frac{n+1}{10}\right) - m}{f} \times C$$

நூற்றுமானங்கள் :

முதல் நூற்றுமானம் $$P_1 = l_1 + \frac{\left(\frac{n+1}{100}\right) - m}{f} \times C$$

இரண்டாவது நூற்றுமானம் $$P_2 = l_1 + \frac{2\left(\frac{n+1}{100}\right) - m}{f} \times C$$

....

தொண்ணூற்றொன்பதாவது நூற்றுமானம்

$$P_{99} = l_1 + \frac{99\left(\frac{n+1}{100}\right) - m}{f} \times C$$

முகடு
(Mode)

'ஒரு தொகுதியில் எந்த மதிப்பானது கூடுதல் தடவைகள் நிகழ்கின்றதோ, அந்த அளவே அத் தொகுதியின் முகடு ஆகும்.'

(1) தனித்த தொகுதி

ஒரு தொகுதியில் கூடுதல் தடவைகள் நிகழும் அல்லது இடம் பெறும் உறுப்பு மதிப்பே முகடாதலால், தனித்த தொகுதியில் முகட்டைப் பார்த்த அளவிலேயே கண்டுகொள்ளலாம்.

(2) தொடர்ச்சியற்ற தொகுதி

தொடர்ச்சியற்ற தொகுதியில் முகட்டைப் பிரிவுபடுத்தும் முறை (Grouping Method) மூலம் காணலாம்.

பிரிவுபடுத்தும் முறை

அலைவெண் பத்தியையும் சேர்த்து ஆறு பத்திகளை உண்டாக்க வேண்டும்.

(i) முதல் பத்தியில், பார்த்த அளவிலேயே அதிக அலைவெண் உடைய உறுப்பின் அளவை முகடாகக் காண்கிறோம்.

(ii) இரண்டாவது பத்தியில், மேலே இருந்து இரண்டிரண்டு அலைவெண்களாகக் கூட்டி மொத்த அலைவெண்களை எழுதுகிறோம். கூடுதலான அலைவெண் கொண்ட உறுப்பைக் குறித்துக் கொள்கிறோம்.

(iii) மூன்றாவது பத்தியில், இரண்டாம் பத்தியில் கணக்கிட்டபடி, இரண்டிரண்டாகக் கூட்டி முதல் அலைவெண்ணை விட்டு விட்டுக் கூட்டி எழுதுகிறோம்.

(iv) நான்காவது பத்தியில், மேலே இருந்து மூன்று மூன்று அலைவெண்களாகக் கூட்டி மொத்த அலைவெண்களை எழுதுகிறோம். கூடுதலான அலைவெண் கொண்ட உறுப்பைக் குறித்துக் கொள்கிறோம்.

(v) ஐந்தாவது பத்தியில், நான்காவது பத்தியில் கணக்கிட்டபடி மூன்று மூன்றாக, முதல் அலைவெண்ணை விட்டுவிட்டுக் கூட்டி எழுதுகிறோம். கூடுதலான அலைவெண் கொண்ட உறுப்பைக் குறித்துக் கொள்கிறோம்.

(vi) ஆறாவது பத்தியில், மூன்றாவது அலைவெண்ணிலிருந்து, முன்பு செய்ததுபோல மூன்று மூன்றாகக் கூட்டி எழுதுகிறோம். கடைசியாகக் கூடுதலான தடவை அடிக்கடி வரும் உறுப்பின் அளவைக் கண்டு அதை முகடாகக் கொள்கிறோம்.

தொடர் தொகுதி

முகடு காணும் சூத்திரம் :

(1) முகடு $M_0 = l_1 + \frac{f_1 - f_0}{2f_1 - f_0 - f_2} \times C$

இங்கு, M_o = முகடு

l_1 = முகட்டுப் பிரிவின் உண்மைக் கீழ்வரம்பு

f_0 = முகட்டுப் பிரிவிற்கு முந்திய பிரிவின் அலைவெண்

f_1 = முகட்டுப் பிரிவின் அலைவெண்

f_2 = முகட்டுப் பிரிவிற்குப் பிந்திய பிரிவின் அலைவெண்

C = முகட்டுப் பிரிவின் இடைவெளியளவு (l_2-l_1)

(2) முகடு $M_o = l_1 + \frac{f_2}{f_2+f_0}(l_2-l_1)$

(3) முகடு $M_o = L + \frac{N_2}{N_1+N_2} \times I$

இங்கு, L = முகட்டுப் பிரிவின் உண்மைக் கீழ்வரம்பு

N_2 = பிந்திய பிரிவின் அலைவெண்

N_1 = முந்திய பிரிவின் அலைவெண்

I = இடைவெளி அளவு

(4) முகடு $M_o = l_2 - \frac{N_0}{N_2+N_0} \times I$

(5) முகடு $M_o = 3\ M_e - 2\ \bar{x}$

= 3 இடைநிலை — 2 கூட்டுச் சராசரி

மேற்கண்ட முகடு காணும் சூத்திரங்களில் முதல் சூத்திரமே சாதாரணமானதாகவும் உயரியதாகவும் கொண்டு பயன்படுத்தப் படுகிறது.

பெருக்குச் சராசரி
(Geometric Mean)

சாதாரணப் பெருக்குச் சராசரி $G = \sqrt[n]{x_1 \times x_2 \times x_3 \times \ldots \times x_n}$

அல்லது $G = \left[\frac{\log x_1 + \log x_2 + \ldots + \log x_n}{n}\right]$-ன் எதிர்மடக்கை

அல்லது $\log G = \frac{\log x_1 + \log x_2 + \ldots + \log x_n}{n}$

அல்லது $x_1, x_2, x_3, \ldots, x_n$ என்பனவற்றிற்கு G கணக்கிடவேண்டும்.

n = உறுப்புகளின் எண்ணிக்கை

அலைவெண் பரவலுக்கு (தொடர் தொகுதி)

$$\text{பெருக்குச் சராசரி } G = \left(x_1^{f_1} \times x_2^{f_2} \times x_3^{f_3} \times \ldots \times x_n^{f_n}\right)^{\frac{1}{N}}$$

இங்கு, x = மாறி

f = அலைவெண்

N = அலைவெண்களின் கூடுதல்

மடக்கை வழியில் காணும் பெருக்குச் சராசரி

$$\log G = \frac{f_1 \log x_1 + f_2 \log x_2 + \ldots\ldots\ldots + f_n \log x_n}{N}$$

அல்லது $\log G = \dfrac{\Sigma f_i \log x_i}{N}$

அல்லது $G = \left\{\dfrac{\Sigma f_i \log x_i}{N}\right\}$ -ன் எதிர்மடக்கை.

நிறையிட்ட பெருக்குச் சராசரி

$$WG = \sqrt[n]{a_1^{w_1} \cdot a_2^{w_2} \cdot a_3^{w_3} \ldots\ldots a_n^{w_n}}$$

அல்லது $WG = \left[\dfrac{w_1 \log a_1 + w_2 \log a_2 + \ldots + w_n \log a_n}{n}\right]$-ன் எதிர்மடக்கை

ஹார்மானிக் அல்லது இசைச் சராசரி (Hormonic Mean)

சாதாரண ஹார்மானிக் அல்லது

$$\text{இசைச் சராசரி } H = \frac{n}{\frac{1}{x_1} + \frac{1}{x_2} + \frac{1}{x_3} + \ldots\ldots + \frac{1}{x_n}}$$

அல்லது $H = \text{தலைகீழ்ப் பின்னம்} \left\{\dfrac{\frac{1}{x_1} + \frac{1}{x_2} + \ldots\ldots + \frac{1}{x_n}}{n}\right\}$

இங்கு $x_1, x_2 \ldots\ldots x_n$ என்பவற்றிற்கு H கணக்கிட வேண்டும்.

n = உறுப்புகளின் எண்ணிக்கை.

அலைவெண் பரவலுக்கு (தொடர் தொகுதி)

ஹார்மானிக் (இசைச்) சராசரி $H = \dfrac{n}{\dfrac{f_1}{x_1} + \dfrac{f_2}{x_2} + \dfrac{f_3}{x_3} + \dots \dfrac{f_n}{x_n}}$

அல்லது $H = \dfrac{n}{\left(\Sigma f_i \times \dfrac{1}{x_i}\right)}$

அல்லது $H = \dfrac{\left(\Sigma f \times \dfrac{1}{x}\right)}{n}$ -ன் தலைகீழ்ப் பின்னம்

நிறையிட்ட ஹார்மானிக் (இசைச்) சராசரி

$$W.H. = \frac{\Sigma w}{\dfrac{w_1}{x_1} + \dfrac{w_2}{x_2} + \dots\dots + \dfrac{w_n}{x_n}}$$

அல்லது $W.H. = \dfrac{\left(\Sigma \dfrac{w_i}{x_i}\right)}{\Sigma w_i}$ -ன் தலைகீழ்ப் பின்னம்.

இருவிசைப்படிச் சமன்பாட்டுச் சராசரி (Quadratic Mean)

$$Q.M. = \frac{\sqrt{x_1^2 + x_2^2 + x_3^2 + \dots\dots + x_n^2}}{n}$$

அல்லது $Q.M. = \dfrac{\sqrt{\Sigma x_i^2}}{n}$

இங்கு, $x_1, x_2, x_3, \dots x_n$ = 'x' என்ற மாறி ஏற்கும் மதிப்புகள்

n = உறுப்புகளின் எண்ணிக்கை.

நகரும் சராசரி (Moving Average)

(i) 3 ஆண்டு நகரும் சராசரி :

$$\frac{a+b+c}{(n=3)}, \frac{b+c+d}{3}, \frac{c+d+e}{3}, \frac{d+e+f}{3}, \dots\dots$$

(ii) 5 ஆண்டு நகரும் சராசரி :

$$\frac{a+b+c+d+e}{(n=5)}, \frac{b+c+d+e+f}{5}, \frac{c+d+e+f+g}{5}, \ldots\ldots$$

கூடிச்செல் சராசரி
(Progressive Average)

இது, வரும் ஒவ்வோர் ஆண்டிலும் கிடைக்கும் மதிப்புகளைக் கணக்கில் கொண்டு கணக்கிடப்படும் சராசரி ஆகும். ஆகவே கூடிச்செல் சராசரி

$$P.A. = \frac{a+b}{2}; \frac{a+b+c}{3}; \frac{a+b+c+d}{4}; \frac{a+b+c+d+e}{5}; \ldots\ldots$$

இங்கு $a, b, c, d\ldots$ என்பன ஒரு நிறுவனத்தின் வெவ்வேறு ஆண்டுகளில் இலாப ரூபாய்களாகும்.

காம்போசிட் சராசரி
(Composite Average)

$$C.A. = \frac{a+b+c+d+e+f+g+h+i+j+k+l}{(n=12)}$$

இங்கு $a, b, c, d\ldots\ldots k, l$ என்பன ஒரு விற்பனை நிறுவனத்தின் மாத விற்பனை அளவுகள்.

இதுபோல் ஒரு நிறுவனத்தின் வெவ்வேறு ஆண்டுகளின் மாத விற்பனை அளவுகள் கிடைப்பின், அவற்றின் வெவ்வேறு ஆண்டுகளின் மாத விற்பனையின் சராசரி

$$= \frac{A+B+C+D+\ldots\ldots+N}{n}$$

இங்கு, n = உறுப்புகளின் எண்ணிக்கை

$A, B, C, D\ldots\ldots N$ வெவ்வேறு ஆண்டுகளின் மாத விற்பனையின் ஆண்டுச் சராசரிகளாகும்.

இவைகளே காம்போசிட் சராசரி (Composite Average) என்பனவாகும்.

சராசரிகளின் ஒப்புமை

I. தோராயமான ஒப்புமை

(1) இடைநிலை = கூட்டுச் சராசரி —

$\frac{2}{3}$ (கூட்டுச் சராசரி—முகடு)

(2) முகடு = 3 இடைநிலை — 2 கூட்டுச் சராசரி

(3) கூட்டுச் சராசரி = $\frac{1}{2}$ (3 இடைநிலை — முகடு)

II. ஒப்புமை

(1) கூட்டுச் சராசரி $\geqslant$ பெருக்குச் சராசரி $\geqslant$ இசைச் சராசரி

(2) பெருக்குச் சராசரி $= \sqrt[2]{\text{கூட்டுச் சராசரி} \times \text{இசைச் சராசரி}}$

இஃது இரண்டு எண்களுக்குத்தான் பொருந்தும்.

கூட்டுச் சராசரி

மாதிரி 1

ஒரு கிளை வங்கியின் வேலையாள்களின் மாதச் சம்பளங்கள் (ரூபாயில்) கீழே தரப்பட்டுள்ளன :

10, 17, 29, 95, 95, 100, 100, 175, 250, 750

கூட்டுச் சராசரியைக் கணக்கிடு.

(பி.காம்., காசி—1945)

தீர்வு :

கூட்டுச் சராசரிச் சூத்திரம் $= \bar{x} = \frac{\Sigma x_i}{n}$

இங்கு Σ கூட்டலைக் குறிக்கிறது.

x = உறுப்புகளின் அளவு

n = உறுப்புகளின் எண்ணிக்கை

ஆகவே கூட்டுச் சராசரி

$$\bar{x} = \frac{10+17+29+95+95+100+100+175+250+750}{10}$$

$$= \frac{1621}{10}$$

$$= 162{\cdot}1$$

ஆகவே, மாதச் சம்பளங்களின் கூட்டுச் சராசரி = 162·1

மாதிரி 2

1941ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணிப்பின்படி, 10 நகரங்களின் மக்கள்தொகை விவரங்களைக் கீழே காண்கின்றோம் :

2488, 1490, 277, 733, 522, 672, 591, 407, 387, 391.

கூட்டுச் சராசரியைக் கணக்கிடு.

தீர்வு :

கூட்டுச் சராசரிச் சூத்திரம் $= \bar{x} = \frac{\Sigma x_i}{n}$

இங்கு Σ கூட்டலைக் குறிக்கிறது.

x = உறுப்புகளின் அளவு.

n = உறுப்புகளின் எண்ணிக்கை.

ஆகவே, கூட்டுச் சராசரி $\bar{x}$ =

$$\frac{2488+1490+277+733+522+672+591+407+387+391}{10}$$

$$= \frac{7958}{10}$$

$$= 795{\cdot}8$$

ஆகையால், 10 நகரங்களின் மக்கள்தொகையின் கூட்டுச் சராசரி = **795·8**

மாதிரி 3

கீழ்க்கண்ட புள்ளிவிவரத்துக்குக் கூட்டுச் சராசரியைக் காண்

வரிசை எண்	1	2	3	4	5	6	7	8	9	10
மதிப்பு எண்கள்	25	30	20	15	15	35	40	25	45	50

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

வரிசை எண்	மதிப்பு எண்கள் x	விலக்கம் dx $(= x - 35)$
1	25	−10
2	30	− 5
3	20	−15
4	15	−20
5	15	−20
6	35	0
7	40	5
8	25	−10
9	45	10
10	50	15
$n = 10$	$\Sigma x = 300$	$\Sigma dx = -50$

நேரடி முறை :

$$\text{கூட்டுச் சராசரிச் சூத்திரம்} = x = \frac{\Sigma x_i}{n}$$

$$= \frac{300}{10}$$

$$= 30 \text{ மதிப்பெண்கள்}$$

சுருக்கு முறை :

$$\text{கூட்டுச் சராசரிச் சூத்திரம்} = \overline{x} = A + \frac{\Sigma dx}{n}$$

$$= 35 + \left(\frac{-50}{10}\right)$$

$$= (35-5)$$

$$= 30 \text{ மதிப்பெண்கள்}$$

(குறிப்பு : $\overline{x}$ = கூட்டுச் சராசரி ; A = ஊகச் சராசரி = 35)

மாதிரி 4

ஓரிடத்தில் வசிக்கும் 10 குடும்பங்களின் மாத வருமானத்தைக் கீழ் வரும் பட்டியல் தருகிறது.

குடும்பம்	*A*	*B*	*C*	*D*	*E*	*F*	*G*	*H*	*I*	*J*
வருமானம்	85	70	10	75	500	8	42	250	40	36

கூட்டுச் சராசரியை, (1) நேரடி முறை, (2) சுருக்கு முறை மூலம் கணக்கிடுக.

(பி.காம்.—ஆக்ரா—1945)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

குடும்பங்கள்	வருமானம் x	ஊகச் சராசரி ($A=100$)யிலிருந்து விலக்கம் dx
A	85	—15
B	70	—30
C	10	—90
D	75	—25
E	500	400
F	8	—92
G	42	—58
H	250	150
I	40	—60
J	36	—64
	$\Sigma x_i = 1116$	$\Sigma dx = 116$

(i) நேரடி முறை :

$$\text{கூட்டுச் சராசரிச் சூத்திரம்} = \bar{x} = \frac{\Sigma x_i}{n}$$

$$= \frac{1116}{10}$$

$$= \text{ரூ. } 111{\cdot}6$$

(ii) சுருக்கு முறை :

$$\text{கூட்டுச் சராசரி} \quad \bar{x} = A + \frac{\Sigma dx}{n}$$

$$= 100 + \left(\frac{116}{10}\right)$$

$$= 100 + 11{\cdot}6$$

$$= 111{\cdot}6$$

ஆகவே, குடும்பத்தின் மாத வருமானம் = ரூ. 111·6

மாதிரி 5

ஒரு தொழிற்சாலையில் பணி புரியும் 10 தொழிலாளர்களின் மாத ஊதியம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுச் சராசரியை, (i) நேரடி முறை, (ii) சுருக்கு முறை ஆகியவற்றின் மூலம் காண்.

தொழிலாளர்கள்	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ
மாத ஊதியம் (ரூபாயில்)	240	245	235	243	247	260	261	249	268	242

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

தொழிலாளர்கள்	மாத ஊதியம் (ரூபாயில்) x	ஊகச் சாரசரி (A 247) யிலிருந்து விலக்கம் dx
அ	240	— 7
ஆ	245	— 2
இ	235	—12
ஈ	243	— 4
உ	247	0
ஊ	260	13
எ	261	14
ஏ	249	2
ஐ	268	21
ஒ	242	— 5
$n=10$	2490	$\Sigma dx=20$

(i) நேரடி முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x_i}{n}$

$$= \frac{2490}{10}$$

$$= 249$$

(ii) சுருக்கு முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma lx}{n}$

$$= 247 + \frac{20}{10}$$

$$= 247+2$$

$$= 249$$

ஆகவே, தொழிலாளர்களின் மாத ஊதியத்தின் கூட்டுச் சராசரி = ரூ. **249.**

மாதிரி 6

கீழ்க்கண்ட பட்டியல் 25 மாணவர்கள் அடங்கிய குழு ஒன்று பொருளாதாரம், அரசியல் என்ற இரு பாடங்களில், ஒரு வகுப்புத் தேர்வில் எடுத்த மதிப்பெண்களைத் தருகிறது. கூட்டுச் சராசரி கணக்கிட்டு ஒப்பிடுக.

வரிசை எண்	பொருளாதாரம்	அரசியல்	வரிசை எண்	பொருளாதாரம்	அரசியல்
1	29	36	13	46	80
2	65	30	14	47	44
3	33	38	15	60	85
4	45	39	16	30	20
5	51	64	17	32	32
6	72	50	18	52	25
7	48	46	19	54	55
8	33	15	20	56	28
9	42	42	21	58	53
10	25	10	22	49	35
11	28	72	23	38	40
12	35	33	24	40	62
			25	46	58

(எம். ஏ. சென்னை—1947)

தீர்வு :

பொருளாதாரம் அரசியல் ஆகிய பாடங்களின் கூட்டுச் சராசரி காணல் :

வரிசை எண்	பொருளாதாரம்		அரசியல்	
	மதிப் பெண்கள் (x)	ஊகச் சராசரி (A=40) யிலிருந்து விலக்கம் dx	மதிப் பெண்கள் (y)	ஊகச் சராசரி (B=40) யிலிருந்து விலக்கம் dy
1	29	−11	36	− 4
2	65	25	30	−10
3	33	− 7	38	− 2
4	45	5	39	− 1
5	51	11	65	25
6	72	32	50	10
7	48	8	46	6
8	33	− 7	15	−25
9	42	2	42	2
10	25	−15	10	−30
11	28	−12	72	32
12	35	− 5	33	− 7
13	46	6	80	40
14	47	7	44	4
15	60	20	85	45
16	30	−10	20	−20
17	32	− 8	32	− 8
18	52	12	25	−15
19	54	14	55	15
20	56	16	28	−12
21	58	18	53	13
22	49	9	35	− 5
23	38	− 2	40	0
24	40	0	62	22
25	46	6	58	18
$n=25$	$1114=\Sigma x$	$\Sigma dx=114$	$\Sigma y=1093$	$\Sigma dy=103$

(i) நேரடி முறை :

பொருளாதாரப் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி

$$\bar{x} = \frac{\Sigma x}{n}$$

$$= \frac{1114}{25}$$

$$= \mathbf{44{\cdot}56}$$ **மதிப்பெண்கள்**

அரசியல் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி

$$\bar{y} = \frac{\Sigma y}{n}$$

$$= \frac{1093}{25}$$

$$= \mathbf{43{\cdot}72}$$ **மதிப்பெண்கள்.**

(ii) சுருக்கு முறை :

பொருளாதாரப் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி

$$\bar{x} = A + \frac{\Sigma dx}{n}$$

$$= 40 + \frac{114}{25}$$

$$= 40 + 4{\cdot}56$$

$$= \mathbf{44{\cdot}56}$$ **மதிப்பெண்கள்**

அரசியல் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி

$$\bar{y} = B + \frac{\Sigma dy}{n}$$

$$= 40 + \frac{93}{25}$$

$$= 40 + 3{\cdot}72$$

$$= \mathbf{43{\cdot}72}$$ **மதிப்பெண்கள்**

ஆகவே,

பொருளாதாரப் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி } = **44·56** மதிப்பெண்கள்

அரசியல் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி } = **43·72** மதிப்பெண்கள்

மாதிரி 7

(i) நேரடி முறை (ii) சுருக்கு முறை ஆகியவற்றில் கீழ்க் கண்ட பரவலுக்குக் கூட்டுச் சராசரி காண்.

மாறி x	5	10	15	20	25	30	35	40	45	50
அலைவெண் (f)	20	43	75	67	72	45	39	9	8	6

(பி.சி.எஸ்—1954)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

மாறி (x)	அலை வெண் (f)	பெருக்கல் (fx)	ஊகச் சராசரி $(A=25)$ யிலிருந்து விலக்கம் $dx(=x-25)$	படி விலக்கம் $\left(d'x=\frac{dx}{5}\right)$ விலக்கங்கள் $(c=5)$ ஆல் வகுக்கப் படுகிறது	பெருக்கல் fdx
5	20	100	—20	—4	—80
10	43	430	—15	—3	—129
15	75	1125	—10	—2	—150
20	67	1340	—5	—1	—67
25	72	1800	0	0	0
30	45	1350	5	1	45
35	39	1365	10	2	78
40	9	360	15	3	27
45	8	360	20	4	32
50	6	300	25	5	30
	$\Sigma f = 384$	5380			$\Sigma fd'x = 214$

(i) நேரடி முறை :

கூட்டுச் சராசரி

$$\bar{x} = \frac{\Sigma f dx}{\Sigma f}$$

$$= \frac{\Sigma f dx}{n}$$

$$= \frac{8530}{384}$$

$$= \mathbf{22 \cdot 2}$$

சுருக்கு முறை :

$$\bar{x} = A + \frac{\Sigma f dx}{n} \times C$$

$$= 25 + \frac{214}{384} \times 5$$

$$= 25 \frac{214}{384} \times 5$$

$$= 25 - 2 \cdot 8$$

$$= \mathbf{22 \cdot 2}$$

மாதிரி 8

கீழ்க்கண்ட பட்டியல் ஒரு விற்பனை நிலையத்தில் ஒரு வாரம் விற்பனையான காலணிகளின் அளவுகளைத் தருகிறது.

(i) நேரடி முறை, (ii) சுருக்க முறை ஆகியவற்றில் கூட்டுச் சராசரி அளவைக் கணக்கிடுக.

காலணிகளின் அளவு	4 5	5	5·5	6	6·5	7	7·5	8	8·5	9	9·5	10	10·5	11
ஜோடிகளின் எண்ணிக்கை	1	2	4	5	15	30	60	95	82	75	44	25	15	4

(எம். ஏ. கல்கத்தா—1936)

தீர்வு :

(i) நேரடி முறை :

கூட்டுச் சராசரிச் சூத்திரம் $= \bar{x} = \frac{\Sigma fx}{\Sigma f}$

$$= \frac{\Sigma fx}{n}$$

இங்கு, $x =$ மாறி ; $f =$ அலைவெண் ; $n = \Sigma f =$ அலைவெண் கூடுதல்; $\Sigma fx =$ பெருக்கலின் கூடுதல்

(ii) சுருக்க முறை :

$$\text{கூட்டுச் சராசரிச் சூத்திரம்} = \bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$$

இங்கு, A = ஊகச் சராசரி; f = அலைவெண் ; $n = \Sigma f$ = அலைவெண் கூடுதல்; $dx = (x - A)$ ஊகச் சராசரியிலிருந்து விலக்கம்

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

காலணி அளவு (x)	சோடிகளின் எண்ணிக்கை (f)	பெருக்கல் (fx)	ஊகச் சராசரி $(A = 7{\cdot}5)$ யிலிருந்து விலக்கம் (dx)	விலக்கங்களின் பெருக்கல் (fdx)
4·5	1	4·5	—3	—3
5	2	10	—2·5	—5
5·5	4	22	—2	—8
6	5	30	—1·5	—1·5
6·5	15	97·5	—1	—15
7	30	210	—0·5	—15
7·5	60	450	0	0
8	95	760	0·5	47·5
8·5	82	697	1	82
9	75	675	1·5	112·5
9·5	44	418	2	88
10	25	250	2·5	62·5
10·5	15	157·5	3	45
11	4	44	3·5	14
	$\Sigma f = 457 = n$	$\Sigma fx = 3825{\cdot}5$		$\Sigma fdx = 398$

(i) நேரடி முறை :

$$\text{கூட்டுச் சராசரி } \bar{x} = \frac{\Sigma fx}{n} = \frac{3825{\cdot}5}{457} = 8{\cdot}37$$

(ii) சுருக்கு முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f dx}{x}$

$= 7{\cdot}5 + \frac{398}{457}$

$= 7{\cdot}5 + 87$

$= 8{\cdot}37$

மாதிரி 9

$x =$ நகரசபைச் சொத்து வரியின் சதவீதம் ,

$f =$ இம் முறைப்படி வரி விதிக்கும் நகரசபைகளின் எண்ணிக்கை என இருக்கும் கீழ்க்கண்ட பரவலின் கூட்டுச் சராசரியைக் காண்.

x	5—6	6—7	7—8	8—9	9—10	10—11	11—12
f	10	22	39	21	15	9	4

(பி. ஏ- சென்னை-1971)

தீர்வு : கூட்டுச் சராசரி கணக்கிடல் :

பிரிவுகள்	மத்திய மதிப்பு x	f	ஊகச் சராசரி ($A=8{\cdot}5$) யிலிருந்து விலக்கம் dx	பெருக்கல்
5 —6	5·5	10	—3	—30
6 —7	6·5	22	—2	—44
7 —8	7·5	39	—1	—39
8 —9	8·5	21	0	0
9—10	9·5	15	1	15
10—11	10·5	9	2	18
11—12	11·5	4	3	12
		$\Sigma f = 120 = n$		$\Sigma f dx = -68$

கூட்டுச் சராசரி காணும் சூத்திரம் $= \bar{x} = A + \frac{\Sigma f dx}{n}$

$= 8{\cdot}5 + \frac{-68}{120}$

$= 8{\cdot}5 - 5.566$

$= \mathbf{2{\cdot}84}$

மாதிரி 10

கீழ்க்கண்ட முயற்சித் தேர்வின் முடிவுகளின் பரவலுக்குக் கூட்டுச் சராசரி காண்.

சரியான விடைகளின் எண்ணிக்கை	0—5	6—11	12—17	18—23	24—29	30—35
மாணவர்களின் எண்ணிக்கை	2	13	28	49	38	10

(பி. எஸ்ஸி.-சென்னை-1947)

தீர்வு : கூட்டுச் சராசரி கணக்கிடல்:

பிரிவு கள்	மத்திய மதிப்பு (x)	அலை வெண் (f)	பெருக் கல் $(f \times x)$	ஊகச் சராசரி $(A = 145)$ லிருந்து விலக்கம் dx	படி விலக்கம் $d'x$ $\left(= \frac{dx}{6}\right)$	பெருக் கல் $fd'x$
0—5	2·5	2	5·0	—12	— 2	— 4
6—11	8·5	13	110·5	— 6	— 1	—13
12—17	14·5	28	406·0	0	0	0
18—23	20·5	49	1004·5	6	1	49
24—29	26·5	38	1007 0	12	2	76
30—35	32·5	10	325·0	18	3	30
		140	2858.0			138

(i) நேரடி முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma f x}{n}$

$= \frac{2858}{140}$

$= 20{\cdot}414$ (தோராயமாக)

(ii) சுருக்க முறை :

$$\text{கூட்டுச் சராசரி } \bar{x} = A + \frac{\Sigma fd'x}{n} \times C$$

$$= 14{\cdot}5 + \frac{138}{140} \times C$$

$$= 14{\cdot}5 + 5{\cdot}914$$

$$= \mathbf{20{\cdot}414} \text{ (தோராயமாக)}$$

மாதிரி 11

கீழ்க்கண்ட அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரி காண்.

பிரிவு	10-15	15-20	20-25	25-30	30-35	35-40	40-45
அலைவெண்	7	19	43	52	40	15	3

(பி. எஸ்ஸி-சென்னை-1972.)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

பிரிவு	மத்திய மதிப்பு (x)	அலைவெண் (f)	பெருக்கல் $f \times x$	ஊகச் சராசரி ($A = 27{\cdot}5$) யிலிருந்து விலக்கம் dx	படி விலக்கம் $d'x$ $\left(= \frac{dx}{5}\right)$	பெருக்கல் $fd'x$
10—15	12·5	7	87·5	—15	—3	—21
15—20	17·5	19	332·5	—10	—2	—38
20—25	22·5	43	967·5	— 5	—1	—42
25—30	27·5	52	1430·0	0	0	0
30—35	32·5	40	1300·0	5	1	40
35—40	37·5	15	562·5	10	2	30
40—45	43·5	3	127·5	15	3	9
		$n = 179$	4807·5			$\Sigma fd'x = -23$

(i) நேரடி முறை :

$$\text{கூட்டுச் சராசரி } x = \frac{\Sigma fx}{n}$$

$$= \frac{4807{\cdot}5}{179}$$

$$= \mathbf{26{\cdot}86}$$

(ii) சுருக்கு முறை :

$$\text{கூட்டுச் சராசரி } \bar{x} = A + \frac{\Sigma fd'x}{n} \times C$$

$$= 27{\cdot}5 + \frac{-29}{179} \times 5$$

$$= 27{\cdot}5 - 0{\cdot}64$$

$$= \mathbf{26{\cdot}86}$$

மாதிரி 12

கீழ்க்கண்ட பட்டியல் ஒரு தொழிற்சாலையில் ஒரு தொழிலாளர் குழுவின் வயதுப் பரவலைத் தருகிறது.

வயது	20—25	25—30	30—35	35—40
தொழிலாளர்களின் எண்ணிக்கை	25	35	55	90
வயது	40—45	45—50	50—55	55—60
தொழிலாளர்களின் எண்ணிக்கை	75	59	41	20

மேற்கண்ட அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரியைக் காண்.

(பி. ஏ. சென்னை-1972.)

தீர்வு :

வயது	மத்திய மதிப்பு x	அலை வெண் f	பெருக்கல் fx	ஊகச் சராசரி $(A=37{\cdot}5)$ யிலிருந்து விலக்கம் dx	படி விலக்கம் $d'x$ $\left(=\frac{dx}{5}\right)$	பெருக்கல் $fd'x$
20—25	22·5	25	562·5	—15	—3	—75
25—30	27·5	35	962·5	—10	—2	—70
30—35	32·5	55	1787·5	— 5	—1	—55
35—40	37·5	90	3375·0	0	0	0
40—45	42·5	75	3187·5	5	1	75
45—50	47·5	59	2802·5	10	2	118
50—55	52·5	41	2152·5	15	3	123
55—60	57·5	20	1150·0	20	4	80
மொத்தம்		400	15980·0			196

(i) நேரடி முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma fx}{n}$

$= \frac{15980{\cdot}0}{400}$

$= \mathbf{39{\cdot}95}$

(ii) சுருக்கு முறை :

கூட்டுச் சராசரி $x = A + \frac{\Sigma fd'x}{n} \times C$

$= 37{\cdot}5 + \frac{196}{400} \times 5$

$= 37{\cdot}5 + 2{\cdot}45$

$= \mathbf{39{\cdot}95}$

ஆகவே தொழிலாளர்களின்
கூட்டுச் சராசரி வயது = 39·95 ஆண்டுகள்,

மாதிரி 13

கீழ்க்கண்ட அலைவெண் பரவல் 100 மனிதர்களின் வயதைக் குறிக்கிறது. கூட்டுச் சராசரி காண்.

வயது (சென்ற பிறந்த நாள்படி)	15—20	20—25	25—30	30—35	35—40	40—45
எண்ணிக்கை	4	20	38	24	10	4

(எம். ஏ.அண்ணாமலை-1962)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் ;

பிரிவு இடைவெளி	மத்திய மதிப்பு (x)	எண்ணிக்கை (f)	ஊகச் சராசரி $(A=27{\cdot}5)$ யிலிருந்து விலக்கம் dx	படி விலக்கம் $d'x$ $\left(=\frac{dx}{5}\right)$	பெருக்கல் $fd'x$
15—20	17·5	4	—10	—2	— 8
20—25	22·5	20	— 5	—1	—20
35—30	27·5	38	0	0	0
30 – 35	32·5	24	5	1	24
35—40	37·5	10	10	2	20
40—45	42·5	4	15	3	12
		$n=100$			$\Sigma fd'x=28$

$$\text{கூட்டுச் சராசரி } x = A + \frac{\Sigma fd'x}{n} \times C$$

$$= 27{\cdot}5+\frac{28}{100} \times C$$

$$= 27{\cdot}5 + \frac{140}{100}$$

$$= 27{\cdot}5 + 1{\cdot}4$$

$$= 28{\cdot}9$$ ஆண்டுகள்

ஆகவே கூட்டுச்

சராசரி வயது = 28·9 ஆண்டுகள்

மாதிரி 14

கீழ்க்கண்ட பட்டியலுக்குக் கூட்டுச் சராசரியைச் சுருக்க முறையில் காண்.

மாறி (x)	20	19	18	17	16	15	14	13	12	11
அலைவெண் (f)	1	2	4	8	11	10	7	4	2	1

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

மாறி (x)	அலைவெண் (f)	விலக்கம் (dx)	பெருக்கல் (fdx)
20	1	5	5
19	2	4	8
18	4	3	12
17	8	2	16
16	11	1	11
15	10	0	0
14	7	− 1	− 7
13	4	− 2	− 8
12	2	− 3	− 6
11	1	− 4	− 4
	$n = 50$		27

$$\text{கூட்டுச் சராசரி } \bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$$

$$= 15 + \frac{27}{50}$$

$$= 15 + 0{\cdot}54$$

$$= 15{\cdot}54 \quad \text{(தோராயமாக)}$$

மாதிரி 15

கீழ்க் காணும் கரும்பு விளைச்சலின் (ஏக்கருக்கு—டன்னில்) அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரி காண்.

பிரிவு இடைவெளி (x)	35—40	40—45	45—50	50—55	55—60
அலைவெண் (f)	7	8	12	26	32
பிரிவு இடைவெளி (x)	60—65	65—70	70—75	75—80	80—85
அலைவெண் (f)	42	42	15	17	9

(எம்.ஏ.—இராஜஸ்தான்—1949)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

பிரிவு இடைவெளி	மத்திய மதிப்பு (x)	அலைவெண் (f)	ஊகச் சராசரி (A = 57·5) யிலிருந்து விலக்கம் dx	பெருக்கல் f dx
35—40	37·5	7	—20	—140
40—45	42·5	8	—15	—120
45—50	47·5	12	—10	—120
50—55	52·5	26	— 5	—130
55—60	57·5	32	0	0

பிரிவு இடைவெளி	மத்திய மதிப்பு (x)	அலைவெண் (f)	ஊகச் சராசரி $(A = 57{\cdot}5)$ யிலிருந்து விலக்கம் dx	பெருக்கல் $fd'x$
60—65	62·5	42	5	210
65—70	67·5	42	10	420
70—75	72·5	15	15	225
75—80	77·5	17	20	340
80—85	82·5	9	25	225
		$n = 210$		$\Sigma\, fdx = 910$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \dfrac{\Sigma\, fdx}{n}$

$$= 57{\cdot}5 + \frac{910}{210}$$

$$= 57{\cdot}5 + 4{\cdot}33$$

$$= 61{\cdot}83$$ (தோராயமாக)

மாதிரி 16

794 கார்ன் பயிர்களின் நீளப் பரவல் கீழே தரப்பட்டுள்ளது.

நீளம் (அங்குலத்தில்)	4·0	4·5	5	5·5	6	6·5	7
கார்ன்களின் எண்ணிக்கை	1	1	8	33	70	110	170
நீளம் (அங்குலத்தில்)	7·5	8	8·5	9	9·5	10	
கார்ன்களின் எண்ணிக்கை	172	124	64	32	10	2	

இப் பரவலின் கூட்டுச் சராசரி காண். (சென்னை—பல்கலை)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல்:

நீளம் (அங்குலத்தில்) (x)	கார்களின் எண்ணிக்கை (f)	ஊகச் சராசரி $(A=7\cdot0)$ யிலிருந்து விலக்கம் (dx)	படி விலக்கம் $d'x$ $\left(d'x = \frac{dx}{\cdot5}\right)$	பெருக்கல் $fd'x$
4·0	1	−3·0	−6	− 6
4·5	1	−2·5	−5	− 5
5·0	8	−2·0	−4	− 32
5·5	33	−1·5	−3	− 99
6·0	70	−1·0	−2	−140
6·5	110	−0·5	−1	−110
7·0	170	0	0	0
7·5	172	0·5	1	172
8·0	124	1·0	2	248
8·5	61	1·5	3	183
9·0	32	2·0	4	128
9·5	10	2·5	5	50
10·0	2	3·0	6	12
	$n = 794$			$\Sigma fd'x = 401$

கூட்டுச் சராசரி $\overline{x} = A + \frac{\Sigma f d' x}{n} \times C$

$$= 7{\cdot}0 + \frac{401}{794} \times 0{\cdot}5$$

$$= 7{\cdot}0 + 0{\cdot}25$$

$$= 7{\cdot}25$$

மாதிரி 17

கீழ் உள்ள புள்ளி விவர அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரியைக் காண்.

பிரிவு இடைவெளி	அலைவெண்
155—157	4
158—160	8
161—163	26
164—166	53
167—169	89
170—172	62
173—175	48
176—178	14
179—181	6

(பி.ஏ.-மதுரை-1970)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

பிரிவு இடைவெளி	மூடிய பிரிவு இடைவெளி	மத்திய மதிப்பு x	அலைவெண் (f)	பெருக்கல் fx	ஊகச் சராசரி $(A=168)$ யிலிருந்து விலக்கம் dx	படி விலக்கம் $d'x$ $\left(=\frac{dx}{2}\right)$	பெருக்கல் $fd'x$
155—157	154·5—157·5	156	4	624	—8	—4	—16
158—160	157·5—160·5	159	8	1272	—6	—3	—24
161—163	160·5—163·5	162	26	4212	—4	—2	—52
164—166	163·5—166·5	165	53	8745	—2	—1	—53
167—169	166·5—169·5	168	89	14952	0	0	0
170—172	169·5—172·5	171	62	10602	2	1	62
173—175	172·5—175·5	174	48	8352	4	2	96
176—178	175 5—178·5	177	14	2478	6	3	42
179—181	178·5—181·5	180	6	1080	8	4	24
			$n=310$	52317			$\Sigma fd'x = 79$

(i) நேரடி முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma fx}{n}$

$= \frac{52317}{310}$

$= 168{\cdot}76$

(ii) சுருக்க முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd\,x}{n} \times C$

$= 168 + \frac{79}{310} \times 3$

$= 168 + {\cdot}76$

$= 168{\cdot}76$

மாதிரி 18

509 வேலையாட்களின் வாரக் கூலியின் ரேண்டம் மாதிரியின் அலைவெண் பரவலைக் கீழ்க் காணும் பட்டியல் தருகிறது. வாரக் கூலியின் கூட்டுச் சராசரியைக் காண்.

வாரக் கூலி	10—12	12—	14—	16—
வேலையாட்களின் எண்ணிக்கை	3	6	10	15
வாரக் கூலி	18—	20—	22—	24—
வேலையாட்களின் எண்ணிக்கை	24	42	75	70
வாரக் கூலி	26—	28—	30—	32—
வேலையாட்களின் எண்ணிக்கை	79	55	36	26
வாரக் கூலி	34—	36—	38—	40—42
வேலையாட்களின் எண்ணிக்கை	19	13	9	7

(ஐ. ஏ.எஸ்—1948)

தீர்வு :

வாரக் கூலியின் கூட்டுச் சராசரியைச் சுருக்கு முறையில் கணக்கிடல் :

வாரக் கூலி	மத்திய மதிப்பு (x)	வேலையாட்களின் எண்ணிக்கை (f)	ஊகச் சராசரி $(A=27)$ யிலிருந்து விலக்கம் (dx)	பெருக்கல் $(f\ dx)$
10—12	11	3	—16	— 48
12—14	13	6	—14	— 84
14—16	15	10	—12	—120
16—18	17	15	—10	—150
18—20	19	24	— 8	—192
20—22	21	42	— 6	—252
22—24	23	75	— 4	—300
24—26	25	90	— 2	—180
26—28	27	79	0	0
28—30	29	55	2	110
30—32	31	36	4	144
32—34	33	26	6	156
34—36	35	19	8	152
36—38	37	13	10	130
38—40	39	9	12	108
40—42	41	7	14	98
		$n=509$		$\Sigma f\ dx = —428$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$= 27 + \frac{-428}{509}$

$= 27 - 0{\cdot}84$

$= 26{\cdot}16$

ஆகவே வாரக் கூலியின் கூட்டுச் சராசரி = **26·16**

(தோராயமாக)

மாதிரி 19

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரியைக் காண்.

பிரிவு (x)	அலைவெண் (f)
10—10·9	2
11—11·9	9
12—12·9	27
13—13·9	79
14—14·9	85
15—15·9	44
16—16 9	26
17—17·9	18
18—18 9	5

(பி.எஸ்ஸி.—சென்னை 1969)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

பிரிவு (x)	மூடிய பிரிவு	மத்திய மதிப்பு x	அலைவெண் f	ஊகச் சராசரி $(A = 14.45)$ யிலிருந்து விலக்கம் dx	பெருக்கல் (fdx)
10—10·9	9·95—10·95	10·45	2	— 4	— 8
11—11·9	10·95—11·95	11·45	9	— 3	—27
12—12·9	11·95—12·95	12·45	27	— 2	—54
13—13 9	12·95—13·95	13·45	79	— 1	—79
14—14·9	13·95— 4·95	14·45	85	0	0
15—15·9	14·95—15·95	15·45	44	1	44
16—16·9	15·95—16·95	16·45	26	2	52
17—17·9	16·95—17·95	17·45	18	3	54
18—18·9	17·95—18·95	18·45	5	4	20
			295		— 2

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$$= 14.45 + \frac{-2}{295}$$

$$= \mathbf{14.44322}$$

மாதிரி 20

கீழ்க் காணும் பட்டியலுக்குக் கூட்டுச் சராசரி காண்.

மதிப்பெண்கள்	1—5	6—10	11—15	16—20	21—25
மாணவர்கள் எண்ணிக்கை	7	10	16	32	24

மதிப்பெண்கள்	26—30	31—35	36—40	41—45
மாணவர்கள் எண்ணிக்கை	18	10	5	1

(பி.காம்—சென்னை-1951)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

மதிப் பெண்கள்	மூடிய மதிப் பெண்கள்	மத்திய மதிப்பு (x)	மாண வர்கள் எண் ணிக்கை (f)	படி விலக்கம் $d'x$	பெருக் கல் $fd'x$
1— 5	0·5— 5·5	3	7	—4	—28
6—10	5·5—10·5	8	10	—3	—30
11—15	10·5—15·5	13	16	—2	—32
16—20	15·5—20·5	18	32	—1	—32
21—25	20·5—25·5	23	24	0	0
26—30	25·5—30·5	28	18	1	18
31—35	30·5—35·5	33	10	2	20
36—40	35·5—40·5	38	5	3	15
41—45	40 5—45·5	43	1	4	4
			$n=123$		$\Sigma fd'x = -65$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd'x}{n} \times C$

$$= 23 + \frac{-65}{123} \times 5$$

$$= 23 + \frac{-325}{123}$$

$$= 23 - 2{\cdot}6$$

$$= 20{\cdot}4$$

ஆகவே, கூட்டுச் சராசரி $\bar{x} = 20{\cdot}4$

மாதிரி 21

கீழ்க் காணும் பட்டியல் ஒரு நாட்டில் ஓரிடத்தில் குழந்தைகள் நடக்கத் துவங்கும் வயதினைத் தருகிறது. இப் பரவலுக்குக் கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக.

வயது மாதங்களில்	8—8·9	9—9·9	10—10·9	11—11·9	12—12·9
குழந்தைகளின் எண்ணிக்கை	1	9	20	29	60
வயது மாதங்களில்	13—13·9	14—14·9	15—15·9	16—16·9	17—17·9
குழந்தைகளின் எண்ணிக்கை	32	30	14	8	1

இப்பரவலின் கூட்டுச் சராசரி காண். (சென்னை-பல்கலை)

தீர்வு : கூட்டுச் சராசரி கணக்கிடல் :

வயது மாதங்களில்	வயது மாதங்களில்	மத்திய மதிப்பு (x)	குழந்தைகளின் எண்ணிக்கை (f)	விலக்கம் dx $(=x-12{\cdot}45)$	பெருக்கல் fdx
8— 8·9	7·95— 8·95	8·45	1	—4	— 4
9— 9·9	8·95— 9·95	9·45	9	—3	—27
10—10·9	9·95—10·95	10·45	20	—2	—40
11—11·9	10·95—11·95	11·45	29	—1	—29
12—12·9	11·95—12·95	12·45	60	0	0
13—13·9	12·95—13·95	13·45	32	1	32
14—14·9	13·95—14·95	14·45	30	2	60
15—15·9	14·95—15·95	15·45	14	3	42
16—16·9	15·95—16·95	16·45	8	4	32
17—17·9	16·95—17·95	17·45	1	5	5
			$n = 204$		$\Sigma fdx = 71$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$$= 12.45 + \frac{71}{204}$$

$$= 12.45 + 0.348$$

$$= 12.798$$

மாதிரி 22

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரி காண்.

வருவாய் (மணிக்கு-சென்டுகளில்)		வேலையாட்களின் எண்ணிக்கை
27·5-க்கு மேல்	32·5-க்குக் கீழ்	120
32·5 ,, ,,	37·5 ,, ,,	152
37·5 ,, ,,	42·5 ,, ,,	170
42·5 ,, ,,	47·5 ,, ,,	214
47·5 ,, ,,	52·5 ,, ,,	410
52·5 ,, ,,	57·5 ,, ,,	429
57·5 ,, ,,	62·5 ,, ,,	568
62·5 ,, ,,	67·5 ,, ,,	650
67·5 ,, ,,	72·5 ,, ,,	795
72·5 ,, ,,	77·5 ,, ,,	915
77·5 ,, ,,	82·5 ,, ,,	745
82·5 ,, ,,	87·5 ,, ,,	530
87·5 ,, ,,	92·5 ,, ,,	259
92·5 ,, ,,	97·5 ,, ,,	152
97·5 ,, ,,	102·5 ,, ,,	107
102·5 ,, ,,	107·5 ,, ,,	50
107·5 ,, ,,	112·5 ,, ,,	25
மொத்தம்		6291

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

வருவாய் (ஒரு மணிக்கு சென்டுகளில்)	மத்திய மதிப்பு (x)	வேலை யாட்களின் எண்ணிக்கை (f)	ஊகச் சராசரி (A – 55) யிலிருந்து விலக்கம் dx	பெருக்கல் fdx
27·5 — 32·5	30	120	—5	—600
32·5 — 37·5	35	152	—4	— 608
37·5 — 42·5	40	170	—3	—510
42·5 — 47·5	45	214	—2	—428
47·5 — 52·5	50	410	– 1	—410
52·5 — 57·5	55	429	0	0
57·5 — 62·5	60	568	1	568
62·5 — 67·5	65	650	2	1300
67·5 — 72·5	70	795	3	2385
72·5 — 77·5	75	915	4	3660
77·5 — 82·5	80	745	5	3725
82·5 — 87·5	85	530	6	3180
87·5 — 92·5	90	259	7	1813
92·5 — 97·5	95	152	8	1216
97·5 — 102·5	100	107	9	963
102·5 — 107·5	105	50	10	500
107·5 — 112·5	110	25	11	275
		$n = 6291$		$\Sigma fdx = 17029$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$= 55 + \frac{17029}{6291} \times 5$

$= 55 + 13{\cdot}53$

$= 68{\cdot}53$ செண்டுகள் (தோராயமாக)

மாதிரி 23

கீழ்க் காணும் குவி அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக :

மதிப்பெண்கள்	மாணவர் எண்ணிக்கை
0 அல்லது 0-க்கு மேல்	40
10 அல்லது 10-க்கு மேல்	36
20 அல்லது 20-க்கு மேல்	28
30 அல்லது 30-க்கு மேல்	15
40 அல்லது 40-க்கு மேல்	5

தீர்வு :

முதலில் சாதாரண அலைவெண் பரவலாக மாற்றுதல் :

குவி அலைவெண் பரவல்		சாதாரண அலைவெண் பரவல்	
மதிப்பெண்கள்	மாணவர்களின் எண்ணிக்கை	மதிப்பெண்களின் பிரிவு	மாணவர்களின் எண்ணிக்கை
0 அல்லது 0-க்கும் மேல்	40	0—10	4
10 அல்லது 10-க்கும் மேல்	36	10—20	8
20 அல்லது 20-க்கும் மேல்	28	20—30	13
30 அல்லது 30-க்கும் மேல்	15	30—40	10
40 அல்லது 40-க்கும் மேல்	5	40—50	5

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

மதிப் பெண்கள்	மத்திய மதிப்பு x	அலைவெண் f	ஊகச் சராசரி ($A=25$) யிலிருந்து விலக்கம் dx	பெருக்கல் $f\,dx$
0 —10	5	4	—20	—80
10 —20	15	8	—10	—80
20 —30	25	13	0	0
30 —40	35	10	10	100
40 —50	45	5	20	100
		$n=40$		$\Sigma fdx=40$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$$= 25 + \frac{40}{40}$$

$$= 25 + 1$$

$= 26$ **மதிப்பெண்கள்**

மாதிரி 24

கீழ் வரும் புள்ளி விவரங்களுக்குக் கூட்டுச் சராசரி காண் :

வாரச் செலவு (ரூபாயில்)	மாணவர்கள்
5-க்குக் கீழ்	6
10-க்குக் கீழ்	16
15-க்குக் கீழ்	28
20-க்குக் கீழ்	38
25-க்குக் கீழ்	46

தீர்வு :

முதலில் சாதாரண அலைவெண் பரவலாக மாற்ற வேண்டும். பின்னர், முன்பு கணக்கிட்டபடி தேவையான கூட்டுச் சராசரியைக் கணக்கிடலாம்,

கூட்டுச் சராசரியைக் கணக்கிடல் :

வாரச் செலவுப் பிரிவு (ரூபாயில்)	அலைவெண் (f)	மத்திய மதிப்பு (x)	ஊகச் சராசரி ($A = 12{\cdot}5$) யிலிருந்து விலக்கம் dx	பெருக்கல் fdx
0— 5	6	2·5	—10	— 60
5—10	16— 6 = 10	7·5	— 5	— 50
10—15	28—16 = 12	12·5	0	0
15—20	38—28 = 10	17·5	5	50
20—25	46—38 = 8	22·5	10	80
	$n = 46$			$\Sigma fdx = 20$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$$= 12{\cdot}5 + \frac{20}{46}$$

$$= 12{\cdot}5 + 0{\cdot}43$$

$$= 12{\cdot}93$$

ஆகவே, வாரச் செலவின் கூட்டுச் சராசரி = ரூ. **12·93**
(தோராயமாக)

மாதிரி 25

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்குக் கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக.

வருமானம்	எண்ணிக்கை
ரூ. 20-க்கு மேல் 30-க்குக் கீழ்	69
ரூ. 30-க்கு மேல் 40-க்குக் கீழ்	167
ரூ. 40-க்கு மேல் 50-க்குக் கீழ்	207
ரூ 50-க்கு மேல் 60-க்குக் கீழ்	65
ரூ 60-க்கு மேல் 70-க்குக் கீழ்	58
ரூ. 70-க்கு மேல் 80-க்குக் கீழ்	27
ரூ. 80-ம் அதற்கு மேலும்	7
மொத்தம்	600

(பி. காம்-சென்னை-1952)

தீர்வு : கூட்டுச் சராசரி கணக்கிடல் :

வருமானம் (ரூபாயில்)	மத்திய மதிப்பு (x)	அலைவெண் (f)	ஊகச் சராசரி ($A=55$) யிலிருந்து விலக்கம் dx	படி விலக்கம் $d'x$ $\left(=\frac{dx}{10}\right)$	பெருக்கல் $fd'x$
20—30	25	69	—30	—3	—207
30—40	35	167	—20	—2	—334
40—50	45	207	—10	—1	—207
5)-60	55	65	0	0	0
60—70	65	58	10	1	58
70—80	75	27	20	2	54
80-க்கு மேல்	85	7	3)	3	21
		$n=600$			$\Sigma fd'x = -615$

$$\text{கூட்டுச் சராசரி } \bar{x} = A + \frac{\Sigma fd'x}{n} \times C$$

$$= 55 + \frac{-615}{600} \times 10$$

$$= 55 - 10{\cdot}25$$

$$= \mathbf{44{\cdot}75} \text{ ரூபாய்கள்}$$

மாதிரி 26

கீழ்க் காணும் பட்டியலின்படி, மாணவர்கள் எடுத்த கூட்டுச் சராசரி மதிப்பெண்களைக் கணக்கிடுக.

மதிப்பெண்கள்	மாணவர்கள் எண்ணிக்கை	மதிப்பெண்கள்	மாணவர்கள் எண்ணிக்கை
0-க்கு மேல்	80	60-க்கு மேல்	28
10 ,, ,,	77	70 ,, ,,	16
20 ,, ,,	72	80 ,, ,,	10
30 ,, ,,	65	90 ,, ,,	8
40 ,, ,,	55	100 ,, ,,	0
50 ,, ,,	43		

தீர்வு :

முதலில் 0–10 ; 10–20 ; 20–30 ;......என இருக்கும்படி மதிப்பெண்களைப் பிரிவுபடுத்திக் கொள்ளவேண்டும். 0-க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றவர்களின் எண்ணிக்கை 80. ஆனால் 10-க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றவர்களின் எண்ணிக்கை 77. ஆகவே, 0—10 என்ற பிரிவிற்குள் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 80—77 3 என்பதாகும். இதுபோல், 10—20 மதிப்பெண்கள் பெற்றவர்கள் எண்ணிக்கை 77—72=5 என்பதாகும். இதுபோல, சாதாரண அலைவெண் பரவல் கணக்கிட்டு, கூட்டுச் சராசரி காணவேண்டும்.

மதிப்பெண்கள்	அலைவெண் (f)	மத்திய மதிப்பு	ஊகச் சராசரி $(A=55)$ லிருந்து விலக்கம் dx	படி விலக்கம் $d'x$ $\left(=\frac{dx}{10}\right)$	பெருக்கல் $fd'x$
0 — 10	80 — 77 = 3	5	— 50	— 5	— 15
10 — 20	77 — 72 = 5	15	— 40	— 4	— 20
20 — 30	72 — 65 = 7	25	— 30	— 3	— 21
30 — 40	65 — 55 = 10	35	— 20	— 2	— 20
40 — 50	55 — 43 = 12	45	— 10	— 1	— 12
50 — 60	43 — 28 = 15	55	0	0	0
60 — 70	28 — 16 = 12	65	10	1	12
70 — 80	16 — 10 = 6	75	20	2	12
80 — 90	10 — 8 = 2	85	30	3	6
90 — 100	8 — 0 = 8	95	40	4	32
	$N = 80$				$\Sigma fd'x = -26$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f d' x}{n} \times C$

$= 55 + \frac{-26}{80} \times 10$

$= 55 - 3{\cdot}25$

$= 51{\cdot}75$ மதிப்பெண்கள்

ஆகவே, மாணவர்கள் எடுக்கும் கூட்டுச் சராசரி மதிப்பெண்கள் $\}$ = 51·75 மதிப்பெண்கள்

மாதிரி 27

கீழ்க் காணும் புள்ளி விவரங்களைக் கொண்டு விடுபட்ட எண்ணைக் கண்டுபிடி.

மதிப் பெண்கள்	5	6	7	8	12	—	15	17	17	18
மாண வர்கள்	3	10	5	10	12	15	11	8	5	1

கூட்டுச் சராசரி மதிப்பெண் = 11·6625

தீர்வு :

மதிப்பெண்கள் (m)	மாணவர்கள் (f)	mf
5	3	15
6	10	60
7	5	35
8	10	80
12	12	144
—	15	—
15	11	165
17	8	136
17	5	85
18	1	18
மொத்தம்	80	738

80 மாணவர்களின் கூட்டுச் சராசரி மதிப்பெண்கள் = 11·6625

∴ 80 மாணவர்களின் மொத்த மதிப்பெண்கள் = 11·6625 × 80

= 933

(80—15) மாணவர்களின் மொத்த மதிப்பெண்கள் = 738

∴ 15 மாணவர்களின் மொத்த மதிப்பெண்கள் = 933—738

= 195

∴ **1 மாணவனின் மொத்த மதிப்பெண்** = **195/15 = 13**

விடுபட்ட மதிப்பெண் = 13 மதிப்பெண்கள்

மாதிரி 28

கீழ்க் காணும் அலைவெண் பரவலில் ஐந்தாவது அலைவெண் தெரியவில்லை. கூட்டுச் சராசரி 106 எனத் தெரிகிறது. தெரியாத அலைவெண்ணைக் கணக்கிடுக.

ரூபாய்	அலைவெண்	ரூபாய்	அலைவெண்
50—60	1	100—110	115
60—70	6	110—120	75
70—80	20	120—130	52
80—90	41	130—140	21
90—100	?	140—150	15

(கர்னாடகா பல்கலை)

தீர்வு :

தெரியாத அலைவெண்ணைக் கண்டு பிடித்தல் :

பிரிவு	மத்திய மதிப்பு x	அலைவெண் f	fx
50— 60	55	1	55
60— 70	65	6	390
70— 80	75	20	1500
80— 90	85	41	3485
90—100	95	X	$95X$
100—110	105	155	16275
110—120	115	75	8625
120—130	125	52	6500
130—140	135	21	2835
140—150	145	15	2175
மொத்தம்		$386+X$	$41840+95X$

கூட்டுச் சராசரி $\bar{x} = \dfrac{\Sigma fx}{\Sigma f}$

இங்கு,

$\bar{x} = 160; \quad \Sigma f = 386+X;$

$\Sigma fx = 41840+95X$

X-ன் மதிப்பைக் கணக்கிட்டு அறியவேண்டும்.

ஆகவே, $106 = \dfrac{41840+95X}{386+X}$

அல்லது, $106 \times (386+X) = 41840+95X$

அல்லது, $106X - 95X = 41840-40916$

அல்லது, $11X = 924$

$$X = \frac{924}{11}$$

$$= 84$$

ஆகவே, தெரியாத அலைவெண்ணின் மதிப்பு

$$X = 84$$

மாதிரி 29

ஒரு தொழிற்சாலையில் தினக் கூலியாக 30 தொழிலாளர்கள் வாங்கிய கூலி விவரம் கீழே தரப்பட்டுள்ளது. 20 புதிய காசுகளை இடை வெளியாகக் கொண்ட பிரிவுகளைக் கொண்டே ஓர் அலை வெண் பரவலை உண்டாக்கு. பின்பு ஒரு தொழிலாளிக்குக் கொடுக்கும் கூட்டுச் சராசரி தினக் கூலியைக் கணக்கிடுக. தினக் கூலி புதிய காசுகளில் தரப்பட்டுள்ளது.

140, 160, 160, 140, 220, 130, 150, 240, 120, 230,
140, 200, 170, 210, 180, 180, 190, 200, 170, 160,
160, 110, 120, 210, 200, 170, 180, 190, 220, 230,

தீர்வு ;

வருவாய்ப் பிரிவு	அலைவெண் குறிகள்	அலைவெண்
110—130	𝍷𝍷𝍷	3
130—150	𝍷𝍷𝍷𝍷	4
150—170	𝍸	5
170—190	𝍸 𝍷	6
190—210	𝍸	5
210—230	𝍷𝍷𝍷𝍷	4
230—250	𝍷𝍷𝍷	3
	மொத்தம்	30

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

கூலி (புதிய காசுகளில்)	கூலி யாட்கள் எண்ணிக்கை (f)	மத்திய மதிப்பு (x)	பெருக்கல் (fx)	ஊகச் சராசரி $(A=180)$ யிலிருந்து விலக்கம் (dx)	பெருக்கல் (fdx)
110—130	3	120	360	—60	—180
130—150	4	140	560	—40	—160
150—170	5	160	800	—20	—100
170—190	6	180	1080	0	0
190—210	5	200	1000	20	100
210—230	4	220	880	40	160
230—250	3	240	720	60	180
	$n=30$		$\Sigma fx = 5400$		$\Sigma fdx = 0$

(i) நேரடி முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma fx}{n}$

$= \frac{5400}{30}$

$=$ 180 புதிய காசுகள்

(ii) சுருக்கு முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$= 180+0$

$=$ 1 1 (புதிய காசுகள்

ஆகவே, தினக் கூலியின் கூட்டுச் சராசரி = ரூ. 1·80 காசுகள்

மாதிரி 30

ஒரு வகுப்பில் 'அ' பிரிவிலுள்ள 25 மாணவர்களின் கூட்டுச் சராசரி உயரம் 61 அங்குலங்கள். அதே வகுப்பில் 'ஆ' பிரிவிலுள்ள

35 மாணவர்களின் கூட்டுச் சராசரி உயரம் 58 அங்குலங்களாகும். ஒன்று சேர்க்கப்பட்ட அவ் வகுப்பின் 60 மாணவர்களின் கூட்டுச் சராசரி உயரத்தைக் காண்.

தீர்வு :

அ, ஆ பிரிவுகளை ஒன்று சேர்த்தபின் ஒரே வகுப்பு மாணவர்களின் உயரத்தின் கூட்டுச் சராசரி காணல் :

$$\text{கூட்டுச் சராசரி } \overline{x} = \frac{n_1\overline{x_1}+n_2\overline{x_2}}{n_1+n_2}$$

இங்கு, $\overline{x}$ = ஒன்று சேர்க்கப்பட்ட வகுப்பு மாணவர்களின் சராசரி உயரம்

$\overline{x_1}$ = 'அ' பிரிவு மாணவர்களின் உயரம்

$\overline{x_2}$ = 'ஆ' பிரிவு மாணவர்களின் சராசரி உயரம்

n_1 = 'அ' பிரிவில் மாணவர்களின் எண்ணிக்கை

n_2 = 'ஆ' பிரிவில் மாணவர்களின் எண்ணிக்கை

இக் கணக்கில்,

$n_1 = 25;\quad n_2 = 35;$

$\overline{x_1} = 61;\quad \overline{x_2} = 58.$

ஆகவே, ஒன்று சேர்த்தபின் மாணவர்களின் கூட்டுச் சராசரி உயரம் $\overline{x} = \dfrac{(25\times 61)+(35\times 58)}{25+35}$

$= \dfrac{3555}{70}$

$= 59{\cdot}25$

ஒன்று சேர்த்தபின் 60 மாணவர்களின் கூட்டுச் சராசரி உயரம் = 59·25 அங்குலங்கள்

மாதிரி 31

200 மாணவர்களின் சராசரி மதிப்பெண் 47. வேறு 300 மாணவர்களின் சராசரி மதிப்பெண் 52. அந்த 500 மாணவர்களின் சராசரி மதிப்பெண்ணைக் கணக்கிடுக.

தீர்வு :

இங்கு, $n_1 = 200,\quad n_2 = 300$

$\overline{x_1} = 47,\quad \overline{x_2} = 52$

ஆகவே,

மொத்த மாணவர்களின் மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி காணும் சூத்திரம் $\bar{x} = \dfrac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2}{n_1 + n_2}$

$$= \frac{(200 \times 47) + (300 \times 52)}{200 + 300}$$

$$= \frac{9400 + 15600}{500}$$

$$= \frac{25000}{500}$$

$$= \mathbf{50}$$

ஆகவே,

மொத்த மாணவர்களின் சராசரி மதிப்பெண் = **50 ஆகும்.**

மாதிரி 32

60 பேர் கொண்ட காலைப் பிரிவும், 40 பேர் கொண்ட மாலைப் பிரிவும் உடைய ஒரு தொழிற்சாலையின் மொத்த 100 பேர்களின் கூட்டுச் சராசரிக் கூலி ரூ. 38 ஆகும் காலைப் பிரிவில் வேலை செய்யும் 60 தொழிலாளர்களின் கூட்டுச் சராசரிக் கூலி ரூ 40 என்றால், மாலைப் பிரிவில் வேலை செய்யும் 40 தொழிலாளர்களின் கூட்டுச் சராசரிக் கூலி என்ன ?

தீர்வு :

இங்கு $n_1 = 60$; $n_2 = 40$; $\bar{x}_1 = 40$; $\bar{x} = 38$; $\bar{x}_2$ = ?

கூட்டுச் சராசரி சூத்திரம் $= \bar{x} = \dfrac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2}{n_1 + n_2}$

ஆகவே, $38 = \dfrac{(60 \times 40) + (40 \times \bar{x}_2)}{60 + 40}$

அல்லது $100 \times 38 = (60 \times 40) + (40 \times \bar{x}_2)$

$$40\bar{x}_2 = 3800 - 2400$$

$$= 1400$$

$$\bar{x}_2 = \frac{1400}{40}$$

$$= \mathbf{35.}$$

ஆகவே, மாலைப் பிரிவில் வேலை செய்யும் 40 தொழிலாளர்களின் கூட்டுச் சராசரிக் கூலி = ரூ 35 ஆகும்.

மாதிரி 33

ஒரு குறிப்பிட்ட தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளியின் இரத்த பாக்டீரியாக் கிருமிகள் எண்ணிக்கை 4 நாள்களில் 2000-லிருந்து 16000 ஆகக் கூடியது. சராசரிச் சதவீதக் கூடுதலைக் கணக்கிடுக.

தீர்வு :

சராசரிச் சதவீத உயர்வை 'x' எனக் கொள்க.

முதல் நாளின்(ஆரம்ப நாளில்) கிருமிகளின் எண்ணிக்கை $= 2000$

இந்நாளில் உயர்வு $= 2000\,x$ (வசதிக்காக இங்கு 100 ஆல் வகுக்கப்படவில்லை)

முதல் நாள் முடிவில் மொத்த எண்ணிக்கை $= 2000 \times 2000x$

$= 2000\,(1+x)$

இரண்டாவது நாள் முடிவில் மொத்த எண்ணிக்கை $= 2000\,(1+x) + 2000\,(1+x) \times x$

$= 2000\,(1+x)^2$

மூன்றாவது நாள் முடிவில் மொத்த எண்ணிக்கை $= 2000\,(1+x)^3$

நான்காவது நாள் முடிவில் மொத்த எண்ணிக்கை $= 2000\,(1+x)^4$

ஆகவே, $2000\,(1+x)^4 = 16000$ அல்லது

$$(1+x)^4 = 8$$

$$\therefore\ (1+x) = \sqrt[4]{8}$$

$$= \frac{(\log 8)}{4}$$ — ன் எதிர் மடக்கை

$$= 1{\cdot}682$$

ஆகவே $x = 1{\cdot}682 - 1$

$= 0{\cdot}682$

$\therefore$ சராசரிச் சதவீத உயர்வு $= 68{\cdot}2\%$ / நாளுக்கு.

இரண்டாவது முறை :

கீழ்க் காணும் சூத்திரம் மூலம் மேற்கண்ட கணக்கைக் கணக்கிடலாம்.

$$r = \sqrt[n]{\frac{p_n}{p_o}} - 1$$

இங்கு r = வீதம்

N = நாள்கள் எண்ணிக்கை

p_o = ஆரம்பகால எண்ணிக்கை

p_n = கடைசி நாளில் எண்ணிக்கை

கணக்கில் கொடுக்கப்பட்ட மதிப்புகளைப் பிரதியிட்ட பின்பு

$$r = \left[\frac{16000}{2000}\right]^{\frac{1}{4}} - 1$$

$$= \sqrt[4]{8} - 1$$

$$= 1{\cdot}682 - 1$$

$$= 0{\cdot}682$$

$\therefore$ சராசரிச் சதவீத உயர்வு $= 68{\cdot}2\%$ /நாளுக்கு.

மாதிரி 34

கூட்டுச் சராசரி மதிப்பு 52 எனவும், பெருக்குச் சராசரி 46 எனவும் இருக்கும் இரண்டு எண்களின் மதிப்புகளைக் கணக்கிடவும்.

தீர்வு :

x, y என்பவை காணவேண்டிய இரு எண்களாக இருக்கட்டும்.

ஆகவே,

$$\frac{x+y}{2} = 52$$

$$x+y = 104$$

மேலும் $\sqrt{x \times y} = 46$

அல்லது $x \times y = 2116$

மேலும் $(x+y)^2 = (104)^2$

அல்லது $x^2+y^2+2xy = 10816$

மேலும் $x^2+y^2+2xy-4xy = 10816-4(2116)$

$$x^2-2xy+y^2 = 10816-8464 = 2352$$

$$(x-y)^2 = 2352$$

$$(x-y) = \sqrt{2352}$$

$$x-y = 48{\cdot}5$$

$$x+y = 104{\cdot}0$$

அல்லது $2x = 152{\cdot}5$

ஆகவே, $x = 76{\cdot}25$

$$y = 27{\cdot}75$$

மாதிரி 35

ஒரு நிறுவனத்தின் 30 வேலையாட்களின் மாதச் சம்பளத்தைக் (ரூபாயில்) கீழ் வரும் பட்டியல் தருகிறது :

139, 126, 114, 100, 88, 62, 77, 99, 103, 104,
144, 148, 63, 69, 148, 132, 118, 142, 116, 123,
95, 80, 85, 106, 123, 133, 140, 134, 108, 129.

ரூபாய்கள் 10, 15, 20, 25, 30, 35 என்று இலாப இனமாக (Bonus) வேலையாட்களுக்குக் கீழ்க் கண்ட முறைப்படி தரப்படுகிறது :

ரூ. 60-க்கு மேல் ரூ. 75-க்குக் கீழ்

ரூ. 75-க்கு மேல் ரூ. 90-க்குக் கீழ்

....

ரூ. 135-க்கு மேல் ரூ. 150-க்குக் கீழ்

அந் நிறுவனம் வேலையாட்களுக்குக் கொடுத்த இலாப இனமின் கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக.

(பி.காம்.காசி பல்கலை)

தீர்வு :

முதலில் மேலே தரப்பட்டுள்ள விவரங்களுக்குச் சம்பளப் பிரிவுப்படி வேலையாட்களைப் பிரிக்க வேண்டும்.

விவரம்	வேலையாட்களின் எண்ணிக்கை	கொடுக்கப்பட்ட இலாப இனம் (ரூபாயில்)
ரூ. 60-க்கு மேல் ஆனால் ரூ.75-க்கு கீழ்	3	10
ரூ. 75 ,, ,, ,, ரூ. 90 ,, ,,	4	15
ரூ. 90 ,, ,, ,, ரூ. 105 ,, ,,	5	20
ரூ. 105 ,, ,, ,, ரூ. 120 ,, ,,	5	25
ரூ. 120 ,, ,, ,, ரூ. 135 ,, ,,	7	30
ரூ. 135 ,, ,, ,, ரூ. 150 ,, ,,	6	35
மொத்தம்	30	

கொடுக்கப்பட்ட இலாப இனமுக்குக் கூட்டுச் சராசரி கணக்கிடல் :

கொடுக்கப்பட்ட இலாப இனம் (x)	வேலையாட்களின் எண்ணிக்கை (f)	பெருக்கல் fx
10	3	30
15	4	60
20	5	100
25	5	125
30	7	210
35	6	210
மொத்தம்	$n = 30$	$\Sigma fx = 735$

கூட்டுச் சராசரி காணும் சூத்திரம் $\bar{x} = \frac{\Sigma fx}{n}$

$= \frac{735}{30}$

ரூ. 24·5

ஆகவே, கொடுக்கப்பட்ட இலாப இனுமின் கூட்டுச் சராசரி } = ரூ. 24·5

மாதிரி 36

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரியைக் கணக்கிட்டு, சார்லியர் சோதனை மூலம் சரி பார்.

பிரிவு இடைவெளி	0—5	5—10	10—15	15—20	20—25	25—30
அலைவெண்	3	4	8	10	7	5

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

பிரிவு இடைவெளி	மத்திய மதிப்பு (x)	அலை வெண் (f)	ஊகச் சராசரி $(A=12{\cdot}5)$ யிலிருந்து விலக்கம் dx	$(dx+1)$	பெருக்கல் fdx	பெருக்கல் $f(dx+1)$
0— 5	2·5	3	— 10	—9	—30	—27
5—10	7·5	4	— 5	—4	—20	—16
10—15	12·5	8	0	1	0	8
15—20	17·5	10	5	6	50	60
20—25	22·5	7	10	11	70	77
25—30	27·5	5	15	16	75	80
		$\Sigma f = 37$			$\Sigma fdx = 145$	$\Sigma f(dx+1) = 182$

$$\text{கூட்டுச் சராசரி காணும் சூத்திரம்} = A + \frac{\Sigma f dx}{n}$$

$$= 12{\cdot}5 + \frac{145}{37}$$

$$= 12{\cdot}5 + 3{\cdot}91$$

$$= 16{\cdot}41$$

சார்லியர் சோதனை :

$$f(dx+1) = f\,dx + f$$

$$\Sigma f(dx+1) = \Sigma f\,dx + \Sigma f$$

$$\Sigma [f(dx+1)] - \Sigma fd = \Sigma f$$ (இங்கு $\Sigma f = n$ = மொத்த அலைவெண்)

இங்கு, $\Sigma [f(dx+1)] = 182$

$\Sigma (f\,dx) = 145$

$\Sigma (f) = 37$

ஆதலால், $182 - 147 = 37$ (மொத்த அலைவெண்கள்). எனவே, சார்லியர் சோதனை மூலம் கூட்டுச் சராசரி கணக்கிட்ட முறை சரி எனக் காண்கிறோம்.

மாதிரி 37

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்குக் கூட்டல் முறையில் கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக.

பிரிவு இடைவெளிகள்	அலைவெண்	பிரிவு இடைவெளிகள்	அலைவெண்
20—21	8	25—26	25
21—22	10	26—27	16
22—23	11	27—28	9
23—24	16	28—29	6
24—25	20	மொத்தம்	121

தீர்வு :

கூட்டல் முறையில் (Summation Method) கூட்டுச் சாரசரி கணக்கிடல் :

பிரிவு இடைவெளி	அலை வெண்	குவி அலை வெண்
20—21	8	8
21—22	10	18
22—23	11	29
23—24	16	45
24—25	20	65
25—26	25	90
26—27	16	106
27—28	9	115
28—29	6	121
மொத்தம்	121	597

கூட்டல் முறையில் கூட்டுச் சராசரி

காணும் சூத்திரம் $\bar{x} = M - C\,(F_1 - 1)$

இங்கு M = கடைசி இடைவெளிப் பிரிவின் மத்திய மதிப்பு

C = இடைவெளித் தூரம்

f_1 = குவி அலைவெண்களின் கூட்டலை, அலை வெண் கூடுதலால் வகுத்துக் கிடைக்கும் மதிப்பு.

கூட்டுச் சராசரி $\bar{x} = M - C\,(F_1 - 1)$

$$= 28{\cdot}5 - 1\left(\frac{597}{121} - 1\right)$$

$$= 28{\cdot}5 - (4{\cdot}9 - 1)$$

$$= 28{\cdot}5 - 3{\cdot}9$$

$$= 24{\cdot}6$$

மாதிரி 38

கீழ்க் கண்ட அலைவெண் பரவலுக்கு, (i) சுருக்க முறையில் (ii) கூட்டல் முறையில் கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக.

மதிப்பெண்கள்	அலைவெண்	மதிப்பெண்கள்	அலைவெண்
10—25	6	55—70	26
25—40	20	70—85	3
40—55	44	85—100	1

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

மதிப் பெண்கள்	மத்திய மதிப்பு (x)	அலை வெண் (f)	குவி அலை வெண் $(c.f)$	ஊகச் சராசரி $(A=47{\cdot}5)$ யிலிருந்து விலக்கம் dx	பெருக் கல் $f\ dx$
10— 25	17·5	6	6	—30	—180
25— 40	32·5	20	26	—15	—300
40— 55	47·5	44	70	0	0
55— 70	62 5	26	96	15	390
70— 85	77·5	3	99	30	90
85—100	92·5	1	100	45	45
		$n=100$	397		$\Sigma fdx = 45$

சுருக்க முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f\ dx}{n}$

$= 47{\cdot}5 + \frac{45}{100}$

$= 47{\cdot}5 + 0{\cdot}45$

$= 47{\cdot}95$ மதிப்பெண்கள் (தோராயமாக)

கூட்டல் முறை :

கூட்டுச் சராசரி $\bar{x} = M - C(F_1 - 1)$

$$= 92.5 - 15\left(\frac{397}{100} - 1\right)$$

$$= 92.5 - 15(3.97 - 1)$$

$$= 92.5 - (15 \times 2.97)$$

$$= 92.5 - 44.55$$

$= 47.95$ மதிப்பெண்கள் (தோராயமாக)

மாதிரி 39

கூட்டுச் சராசரியிலிருந்து எடுக்கப்பட்ட தனி அம்சங்களின் விலக்கக் கூடுதல் பூச்சியமாகும் எனக் காட்டு.

தீர்வு :

(A) தனித்த தொகுதி :

இங்கு, $\Sigma(x_i - \bar{x}) = 0$ எனக் காட்டவேண்டும்.

கூட்டுச் சராசரி சூத்திரம் $\bar{x} = \frac{\Sigma x_i}{n}$ ஆகும்.

ஆகவே, $\Sigma(x_i - \bar{x}) = \Sigma x_i - \Sigma \bar{x}$

$$= \Sigma x_i - n\, x$$

$$= \Sigma x_i - n \times \frac{\Sigma x_i}{n}$$

$$= \Sigma x_i - \Sigma x_i$$

$$= 0$$

(B) தொடர் தொகுதி : அலைவெண் பரவலுக்கு :

கூட்டுச் சராசரி சூத்திரம் $\bar{x} = \frac{\Sigma f_i x_i}{n}$

இங்கு, $\Sigma f_i(x_i - \bar{x}) = 0$ எனக் காட்டவேண்டும்,

$$\text{ஆகவே, } \Sigma f_i (x_i - \overline{x}) = \Sigma f_i x_i - \Sigma f_i \overline{x}$$
$$= \Sigma f_i x_i - N\overline{x} \quad (\because \Sigma f_i = N)$$
$$= \Sigma f_i x_i - N \frac{\Sigma f_i x_i}{N}$$
$$= \Sigma f_i x_i - \Sigma f_i x_i$$
$$= 0$$

ஆகவே, கூட்டுச் சராசரியிலிருந்து எடுக்கப்பட்ட தனி அம்சங்களின் விலக்கக் கூடுதல் பூச்சியமாகும் என நிரூபிக்கப்பட்டு விட்டது.

மாதிரி 40

u, v என்ற இரு மாறிகளில், ஒவ்வொரு i-க்கும் u_i என்பதற்கு ஈடானது v_i என்பதாகும். ஒரு புதிய மாறி $Z = au + bv$ என்பது கண்டால், $\overline{Z} = a\,\overline{u} + b\,\overline{v}$ எனக் காட்டுக.

தீர்வு :

ஒவ்வொரு u, v மாறிகள் n என்ற எண்ணிக்கையில் இருக்கட்டும்.

இங்கு $Z_i = au_i + bv_i$ என்பதாகும்.

$$\text{ஆகவே, } \sum_{r=1}^{n} Z_i = a \sum_{r=1}^{n} u_i + b \sum_{r=1}^{n} v_i$$

இரண்டு பக்கங்களையும் n ஆல் வகுத்தால்

$$\frac{\sum\limits_{r=1}^{n} Z_i}{n} = \frac{a \sum\limits_{r=1}^{n} u_i}{n} + \frac{b \sum\limits_{r=1}^{n} v_i}{n}$$

அதாவது $\overline{Z} = a\,\overline{u} + b\,\overline{v}$

எனவே, $Z = a_1 u_1 + a_2 u_2 + a_3 u_3 + \ldots\ldots + a_m u_m$ என இருந்தால்,

$$\bar{Z} = a_1 \bar{u}_1 + a_2 \bar{u}_2 + a_3 \bar{u}_3 + \ldots\ldots + a_m \bar{u}_m$$ என

அடைகிறோம்.

எனவே கேட்டது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

நிறையிட்ட கூட்டுச் சராசரி
(Weighted Arithmetic Mean)

மாதிரி 41

கீழ்க் கண்ட பட்டியலிலுள்ள புள்ளி விவரங்களுக்கு,

(i) நிறையிடாத கூட்டுச் சராசரியை 3 ஆம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள விலைகளுக்குக் காண்.

(ii) பயன்படுத்தப்பட்ட பொருள்களின் அளவைக் கொண்டு நிறையிட்ட கூட்டுச் சராசரியைக் காண்.

இரண்டு சராசரி விலைகளும் வித்தியாசமாக இருக்கக் காரணம் என்ன ?

(1) உணவுப் பொருள்களின் பெயர்கள்	(2) பயன் படுத்தப்பட்ட உணவு அளவுகள்	(3) விலை (ரூபாயில் - மணங்கிற்கு)
மாவு	11·5 மணங்கு	5·8
நெய்	5·6 ,,	58·4
சர்க்கரை	0·28 ,,	8·2
உருளைக்கிழங்கு	0 16 ,,	2·5
எண்ணெய்	0·35 ,,	20·0

(எம். ஏ. — கல்கத்தா - 1947)

தீர்வு :

சாதாரண, நிறையிட்ட கூட்டுச் சராசரிகளைக் கணக்கிடல் :

உணவுப் பொருள்களின் பெயர்கள்	பயன்படுத்தப் பட்ட உணவு அளவுகள் (மணங்கில்) (w)	விலை (ரூபாயில் —மணங்கிற்கு) (x)	பெருக்கல் (xw)
மாவு	11·5	5·8	66·7
நெய்	5·6	58·4	327·04
சர்க்கரை	0 28	8·2	2·296
உருளைக்கிழங்கு	0·16	2·5	0·4
எண்ணெய்	0·35	20·0	7·0
$n = 5$	$\Sigma w = 17{\cdot}89$	$\Sigma x = 94{\cdot}9$	$\Sigma xw = 403{\cdot}436$

சாதாரணக் கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$$= \frac{94{\cdot}9}{5}$$

$$= \text{ரூ } 18{\cdot}98$$

நிறையிட்ட கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma\, xw}{\Sigma\, w}$

$$= \frac{403{\cdot}436}{17{\cdot}89}$$

$$= \text{ரூ. } 22{\cdot}55$$

இங்கு, சாதாரணக் கூட்டுச் சராசரி கணக்கிடும்பொழுது, எல்லாப் பொருள்களுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுத்துக் கணக்கிடப்பட்டது. ஆனால், நிறையிட்ட கூட்டுச் சராசரி கணக்கிடும் பொழுது, எடைகள் அப்பொருள்களின் சார்பு முக்கியத்துவத்திற்குத் தகுந்தாற்போல் கொடுக்கப்பட்டு, சராசரி கணக்கிடப் பட்டுள்ளது. இதன் காரணமாகவே இரண்டு சராசரி விலைகளும் வித்தியாசப்படுவதைக் காணலாம்.

மாதிரி 42

எடைகளும், அந்த எண்களுக்குச் சமமாக இருக்கும், முதல் n இயற்கை எண்களின் நிறையிட்ட கூட்டுச் சராசரியைக் கணக்கிடு.

தீர்வு :

நிறையிட்ட கூட்டுச் சராசரி காணல் :

$$\bar{x} = \frac{1.1+2.2+3.3+\dots\dots\dots+n.n}{1+2+3+\dots\dots\dots+n}$$

$$= \frac{\Sigma n^2}{\Sigma n}$$

$$= \frac{n(n+1)(2n+1)}{6} \Big/ \frac{n(n+1)}{2}$$

$$= \frac{2n+1}{3}$$

மாதிரி 43

ஒரு மாணவன் ஒரு தேர்வில் கீழ்க்கண்ட சதவீத மதிப்பெண் களைப் பெறுகிறான் :

ஆங்கிலம் —75 புள்ளியியல் —60 கணக்கு —59
பௌதிகம் —55 இரசாயனம் —63

எடைகள் 2, 1, 3, 3, 1 என்று பாடங்களுக்கு முறையே கொடுத்து, நிறையிட்ட கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக. சாதாரண கூட்டுச் சராசரியையும் காண்.

தீர்வு :

கூட்டுச் சராசரி, நிறையிட்ட கூட்டுச் சராசரி காணல் :

பாடம்	சதவீத மதிப் பெண்கள் (x)	எடை (w)	பெருக்கல் (xw)
ஆங்கிலம்	75	2	150
புள்ளியியல்	60	1	60
கணக்கு	59	3	177
பௌதிகம்	55	3	165
இரசாயனம்	63	1	63
மொத்தம்	312	10	615

நிறையிட்ட கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma xw}{\Sigma w}$

$= \frac{615}{10}$

$= 61{\cdot}5$ மதிப்பெண்கள்

சாதாரணக் கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$= \frac{312}{5}$

$= 62{\cdot}4$ மதிப்பெண்கள்

மாதிரி 44

கீழ்வரும் விவரங்களுக்கு நிறையிட்ட கூட்டுச் சராசரியைக் காண்.

பண்டம்	நுகர் அளவு (கிலோவில்)	1 கிலோ விலை (ரூபாயில்)
A	11·50	5·80
B	5·60	58·40
C	0·25	8·20
D	0.15	2·50
E	0·35	20·00

தீர்வு :-

நிறையிட்ட கூட்டுச் சராசரி கணக்கிடல் :

பண்டம்	நுகர் அளவு (கிலோவில்) (w)	1 கிலோ விலை (ரூபாயில்) (x)	பெருக்கல் (xw)
A	11·50	5·80	66·70
B	5·60	58·40	327·04
C	0·25	8·20	2·05
D	0·15	2·50	0·375
E	0·35	20·00	7·00
	17·85		403·165

நிறையிட்ட கூட்டுச் சராசரி $\bar{x} = \dfrac{\Sigma xw}{\Sigma w}$

$$= \frac{403 \cdot 165}{17 \cdot 85}$$

$$= \mathbf{22 \cdot 58}$$

மாதிரி 45

கீழ்க் காணும் பட்டியலுக்கு

(1) சாதாரணக் கூட்டுச் சராசரி (2) நிறையிட்ட கூட்டுச் சராசரி ஆகிய இரண்டையும் கணக்கிடுக.

வரிசை எண்	பதவி	மாதச் சம்பளம் (x)	தகுதியின் பலம் (w)
1	பதிவு பெற்ற அலுவலர்கள்	1500	10
2	பதிவு பெறாத அலுவலர்கள்	800	20
3	முதல் வகுப்பு எழுத்தர்கள்	500	70
4	இரண்டாம் வகுப்பு எழுத்தர்கள்	250	100
5	கடைநிலை ஊழியர்கள்	100	150

தீர்வு :

சாதாரண நிறையிட்ட சராசரிகளைக் கணக்கிடல் :

வரிசை எண்	பதவி	மாதச் சம்பளம் (x)	தகுதியின் பலம் (w)	பெருக்சல் (xw)
1	பதிவு பெற்ற அலுவலர்கள்	1500	0	15000
2	பதிவு பெறாத அலுவலர்கள்	800	20	16000
3	முதல் வகுப்பு எழுத்தர்கள்	500	70	35000
4	இரண்டாம் வகுப்பு எழுத்தர்கள்	250	100	25000
5	கடைநிலை ஊழியர்கள்	100	150	15000
$n = 5$	மொத்தம்	$\Sigma x = 3150$	$\Sigma w = 350$	$\Sigma xw = 106000$

(i) சாதாரணக் கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$$= \frac{3150}{5}$$

$$= \text{ரூ. } 630$$

(ii) நிறையிட்ட கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma xw}{\Sigma w}$

$$= \frac{106000}{350}$$

$$= \text{ரூ. } 303$$ (தோராயமாக)

மாதிரி 46

கீழ்க் காணும் பட்டியலைக் கொண்டு,

(i) சாதாரணக் கூட்டுச் சராசரி

(ii) நிறையிட்ட கூட்டுச் சராசரி

ஆகியவற்றை 'அ' 'ஆ' ஆகிய இரண்டு நகரங்களிலுள்ள ஆசிரியர்களின் சம்பளத்திற்குக் கணக்கிடுக.

பள்ளிக்கூடங்கள்	'அ' நகர்		'ஆ' நகர்	
	ஆசிரியர் எண்ணிக்கை	சம்பள விதம்	ஆசிரியர் எண்ணிக்கை	சம்பள விதம்
நகராட்சிப் பள்ளிகள்	23	30	25	40
அரசினர் பள்ளிகள்	30	35	30	50
உதவி பெறும் பள்ளிகள்	20	28	15	30
உதவி பெறுத பள்ளிகள்	15	25	10	25
இரவுப் பள்ளிகள்	12	30	10	30

தீர்வு : கூட்டுச் சராசரி கணக்கிடல் :

பள்ளிக் கூடங்கள்	'அ' நகர்			'ஆ' நகர்		
	ஆசிரியர் எண்ணிக்கை (w)	சம்பள விதம் (x)	பெருக்கல் (xw)	ஆசிரியர் எண்ணிக்கை (w)	சம்பள விதம் (x)	பெருக்கல் (xw)
நகராட்சிப் பள்ளிகள்	23	30	690	25	40	1000
அரசினர் பள்ளிகள்	30	35	1050	30	50	1500
உதவி பெறும் பள்ளிகள்	20	28	560	15	30	450
உதவி பெறுத பள்ளிகள்	15	25	375	10	25	250
இரவுப் பள்ளிகள்	12	30	360	10	30	300
	100	148	3035	90	175	3500

நகர் 'அ' :

$$\text{சாதாரணக் கூட்டுச் சராசரி } \bar{x} = \frac{\Sigma x}{n}$$

$$= \frac{148}{5}$$

$$= \text{ரூ. } 29{\cdot}6$$

நிறையிட்ட கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma xw}{\Sigma w}$

$= \frac{3035}{100}$

$=$ ரூ. 30·35

நகர் 'ஆ':

சாதாரணக் கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$= \frac{175}{5}$

$=$ ரூ. 35

நிறையிட்ட கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma xw}{\Sigma w}$

$= \frac{3500}{90}$

$=$ ரூ. 38·9

மாதிரி 47

(i) கீழ்க் காணும் பட்டியல், மூன்று பல்கலைக் கழகங்களில் 1957-ம் வருடத் தேர்வு முடிவுகளைத் தருகிறது. எந்தப் பல்கலைக் கழகம் உயர்வானது?

தேர்வுகள்	பல்கலைக் கழக தேர்வு முடிவுகளின் சதவீதம்		
	அ	ஆ	இ
M.A.	80	70	70
M.Sc.	65	70	60
B.A.	70	80	70
B.Sc.	60	70	80
B.Com.	75	60	70

(ii) பாடத் திட்டம், பாடமுறை, வசதிகள், மாணவர் எண்ணிக்கை போன்றவற்றைக் கணக்கிட்டு, கீழ்க் கண்ட நிறைகள் மேற்கண்ட பல்கலைக் கழகங்களின் மாறுபட்ட தேர்வுத் தொடர்களுக்குக் கொடுக்கப்பட்டனவெனில், அப் பல்கலைக் கழகங்களின் தேர்வு முடிவுகளின் நிறையிட்ட கூட்டுச் சராசரியைக் கணக்கிட்டு ஒப்பிடுக.

தேர்வுகள்	பல்கலைக் கழக தேர்வு முடிவுகளின் நிறை		
	அ	ஆ	இ
M.A.	3	3	5
M.Sc.	2	3	5
B.A.	10	15	20
B. Sc.	6	8	10
B. Com.	4	6	10

சாதாரணக் கூட்டுச் சராசரி :

$$\text{‘அ’ பல்கலைக் கழகத்தில்} = \frac{80+65+70+60+75}{5}$$

$$= 70\%$$

$$\text{‘ஆ’ பல்கலைக் கழகத்தில்} = \frac{70+70+80+70+60}{5}$$

$$= 70\%$$

$$\text{‘இ’ பல்கலைக் கழகத்தில்} = \frac{70+60+70+80+60}{5}$$

$$= 70\%$$

இங்கு, சாதாரணக், கூட்டுச் சராசரி மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் ஒரே அளவாக இருப்பதால், அ, ஆ, இ பல்கலைக் கழகங்களின் படிப்பின் திட்ட அளவைப் பற்றி ஒரு மாற்றத்தையும் காட்டவில்லை. ஆகவே, இங்கு கொடுக்கப்பட்ட எடைகளைக் கொண்டு, கூட்டுச் சராசரி காணவேண்டும்.

(ii) நிறையிட்ட கூட்டுச் சராசரி கணக்கிடல்

'அ' பல்கலைக் கழகம் :

நிறையிட்ட கூட்டுச் சராசரி கணக்கிடல்:

தேர்வுகள்	x_1	w_1	$(x_1 \times w_1)$
M.A.	80	3	240
M.Sc.	65	2	130
B.A.	70	15	700
B.Sc.	60	6	360
B.Com.	75	4	300
		25	1730

$$\text{நிறையிட்ட கூட்டுச் சராசரி } \bar{x}_1 = \frac{\Sigma x_1 w_1}{\Sigma w_1}$$

$$= \frac{1730}{25}$$

$$= 69{\cdot}2\%$$

'ஆ' பல்கலைக் கழகம் :

நிறையிட்ட கூட்டுச் சராசரி கணக்கிடல்:

தேர்வுகள்	x_2	w_2	$x_2 \times w_2$
M.A.	70	3	210
M.Sc.	70	3	210
B.A.	80	15	1200
B.Sc.	70	8	560
B.Com.	60	6	360
		35	2540

நிறையிட்ட கூட்டுச் சராசரி $\overline{x_2} = \frac{\Sigma x_2 w_2}{\Sigma w_2}$

$= \frac{2540}{35}$

$= 75 \cdot 57\%$

'இ' பல்கலைக் கழகம் :

நிறையிட்ட கூட்டுச் சராசரி கணக்கிடல் :

தேர்வுகள்	x_3	w_3	$x_3 \times w_3$
M.A.	70	5	35
M.Sc.	60	5	300
B.A.	70	20	1400
B·Sc.	80	10	800
B.Co n.	70	10	700
		50	3550

நிறையிட்ட கூட்டுச் சராசரி $\overline{x_3} = \frac{\Sigma x_3 w_3}{\Sigma w_3}$

$= \frac{3550}{50}$

$= 71\%$

கொடுக்கப்பட்ட எடைகளைக் கொண்டு கூட்டுச் சராசரி கணக்கிட்டதில் 'ஆ' பல்கலைக் கழகம் படிப்பில் உயர் திட்டத்தைக் கொண்டுள்ளது எனக் காண்கிறோம்.

மாதிரி 48

கீழ்க்கண்ட பட்டியல் ஓர் அச்சுக்கூடத்தில் செலவாகிய தாள்களின் எடையையும் விலையையும் கொடுக்கிறது. கீழ்க்காணும் இரண்டு வருடங்களில் நிறையிட்ட கூட்டுச் சராசரிகளுக்கு இடையே உள்ள வித்தியாசத்தைக் கணக்கிடுக.

விவரம்	பவுண்டின் விலை		நுகர் அளவு டன்களில்	
	1942	1943	1942	1943
வெள்ளை	0— 7—2	0— 8—6	17	110
பழுப்பு நிறம்	0— 6—6	0— 7—6	6	80
மற்றவை	0—13—0	0—15—0	14	10

(பி.காம்.—காசி—1950)

தீர்வு :

நிறையிட்ட கூட்டுச் சராசரி கணக்கிடல் :

தாள்கள்	1942			1943		
	விலை (x)	அளவு (w)	பெருக்கல் (xw)	விலை (y)	அளவு (v)	பெருக்கல் (yv)
வெள்ளை	0— 7—2	17	0— 8—6	0— 8—6	11·5	0— 1—9
பழுப்பு	0— 6—6	6	0— 7—6	0— 7—6	8·5	3—15—9
மற்றவை	0—13—0	14	0—15—0	0—15—0	10	9— 6—0
		37	21—6—10		30	19—7—6

1942-ம் ஆண்டு :

விலையின் நிறையிட்ட கூட்டுச் சராசரி $\overline{x}$ $= \dfrac{\text{ரூ. } 21—6—10}{37}$

$=$ ரூ. 0—9—3

1943-ம் ஆண்டு :

விலையின் நிறையிட்ட கூட்டுச் சராசரி $\overline{x}$ $= \dfrac{\text{ரூ. } 19—9—6}{30}$

$=$ ரூ. 0—10—2

இறப்பு, பிறப்பு ....வீதம் பற்றிய மாதிரிகள்.

மாதிரி 49

கீழ்க் காணும் உள்ளூர் மக்கள் தொகைப் புள்ளி விவரங்களுக்குத் தரப்படுத்தப்பட்ட, தரப்படுத்தப்படாத இறப்பு வீதங்களைக்

கணக்கிடுக. பின்பு அவற்றைத் தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகையின் தரப்படுத்தப்படாத இறப்பு வீதத்துடன் ஒப்பிடுக.

வயதுப் பிரிவு (ஆண்டுகளில்)	தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகை		உள்ளூர் மக்கள் தொகை	
	மக்கள்தொகை	இறப்பு	மக்கள்தொகை	இறப்பு
0— 10	600	18	400	16
10— 20	1000	5	1500	6
20— 60	3000	24	2400	24
60—100	400	20	700	21
மொத்தம்	5000	67	5000	67

(பி. காம்.—1960)

தீர்வு :

தரப்படுத்தப்படாத, தரப்படுத்தப்பட்ட இறப்பு வீதங்கள் கணக்கிடல் :

வயதுப் பிரிவு (ஆண்டுகளில்)	தரப்படுத்தப்பட்ட மக்கள்			உள்ளூர் மக்கள் தொகை		
	மக்கள் தொகை	இறப்பு	1000 பேருக்கு இறப்பு வீதம்	மக்கள் தொகை	இறப்பு	1000 பேருக்கு இறப்பு வீதம்
0— 10	600	18	30	400	16	40
10— 20	1000	5	5	1500	6	4
20— 60	3000	24	8	2400	24	10
60—100	400	20	50	700	21	30
மொத்தம்	5000	67	13·4	5000	67	13·4

உள்ளூர் மக்கள் தொகைக்கு, தரப்படுத்தப்படாத இறப்பு வீதம்

$$= \frac{(400 \times 40) + (1500 \times 4) + (2400 \times 10) + (700 \times 30)}{600 + 1000 + 3000 + 400}$$

$$= \frac{67000}{5000}$$

$$= 13 \cdot 4$$

தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகைக்கு, தரப்படுத்தப்படாத இறப்பு வீதம்

$$= \frac{(600 \times 30) + (1000 \times 5) + (3000 \times 8) + (400 \times 50)}{600 + 1000 + 3000 + 400}$$

$$= \frac{67000}{5000}$$

$$= 13 \cdot 4$$

உள்ளூர் மக்கள் தொகையின் தரப்படுத்தப்பட்ட இறப்பு வீதம்

$$= \frac{(600 \times 40) + (1000 \times 4) + (3000 \times 10) + (400 \times 30)}{600 + 1000 + 3000 + 400}$$

$$= \frac{70000}{500}$$

$$= 14$$

மாதிரி 50

(1) தரப்படுத்தப்பட்ட வயதுப் பரவலுக்கு உனது நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டும்,

(2) நீ வசிக்கும் உள்ளூர் நிர்வாகப் பரப்பை எடுத்துக் கொண்டும், மக்கள் தொகை, வேலையற்றோர் எண்ணிக்கை ஆகியவற்றின் புள்ளி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

6

	வயது (ஆண்டுகளில்)				
	15—30	30—45	45—60	60—	மொத்தம்
தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகை :	250	350	300	100	1000
வயதுப் பிரிவு : வேலையற்றோர் வீதத்தின் சதவீதம்	5	8	12	15	—
உள்ளூர் மக்கள் தொகை :	800	300	350	50	1000
வேலையற்றோர் வீதத்தின் வயதுப் பிரிவு சதவீதம்	4	9	12	20	—

(பி. சி. எஸ். —1956)

தீர்வு :

தரப்படுத்தப்படாத வேலையற்றோர் வீதத்தைக் கணக்கிடல் :

வயது	தரப்படுத்தப்பட்டுள்ள மக்கள் தொகை		உள்ளூர் மக்கள்தொகை	
	மக்கள் தொகை	வேலையற்றோர் வீதம் (சதவீதத்தில்)	மக்கள் தொகை	வேலையற்றோர் வீதம் (சதவீதத்தில்)
15—30	250	5	300	4
30—45	350	8	300	9
45—60	300	12	350	12
60—	100	5	50	20
	1000		1000	

(1) நாடு முழுமைக்கும் தரப்படுத்தப்பட்ட வேலையற்றோர் வீதம்

$$= \frac{(250 \times 5)+(350 \times 8)+(300 \times 12)+(100 \times 15)}{(250 + 350 + 300 + 100)}$$

$$= \frac{9150}{1000} = 9{\cdot}15\%$$

(2) உள்ளூர் மக்கள் தொகைக்கு, தரப்படுத்தப்பட்ட வேலையற்றோர் வீதம்

$$= \frac{(250 \times 4) + (350 \times 9) + (300 \times 12) + (100 \times 20)}{(250+350+300+100)}$$

$$= \frac{9750}{1000} = 9{\cdot}75\%$$

(3) உள்ளூர் மக்கள் தொகைக்கு, தரப்படுத்தப்படாத வேலையற்றோர் வீதம்

$$= \frac{(300 \times 4) + (300 \times 9) + (350 \times 12) + (50 \times 20)}{(300 + 300 + 350 + 50)}$$

$$= \frac{9100}{1000} = 9{\cdot}1\%$$

மாதிரி 51

A, *B*, என்ற கல்லூரிகளின் தேர்வு முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன. எந்தக் கல்லூரி உயர்வானது எனக் கூறு.

தேர்வுகள்	கல்லூரி *A*		கல்லூரி *B*	
	எழுதியவர்கள்	தேறியவர்கள்	எழுதியவர்கள்	தேறியவர்கள்
M. A.	30	25	100	80
M. Com.	50	45	120	95
B. A.	200	150	100	70
B. Com.	120	75	80	50
மொத்தம்	400	295	400	285

(எம். காம்,—வெங்கடேசுவரா)

தீர்வு :

தேர்வுகள்	கல்லூரி *A*		கல்லூரி *B*	
	எழுதியவர்கள்	தேறியவர்கள் (சதவீதத்தில்)	எழுதியவர்கள்	தேறியவர்கள் (சதவீதத்தில்)
M. A.	30	83·33	100	80
M. Com.	50	90	120	79·17
B. A.	200	75	100	70
B. Com.	120	62·5	80	62·5
மொத்தம்	400		400	

கல்லூரி '*A*'-ல் தேறியவர்களின் சதவீதம்

$$= \frac{(30\times83\cdot33)+(50\times90)+(200\times75)+(120\times62\cdot5)}{400}$$

$=73\cdot75\%$

கல்லூரி '*B*'-ல் தேறியவர்களின் சதவீதம்.

$$= \frac{(100\times80)+(120\times79\cdot17)+(100\times70)+(80\times62\cdot5)}{400}$$

$= 73\cdot75\%$

கல்லூரி '*B*'-ன் தரப்படுத்தப்பட்ட தேறியவர்களின் சதவீதம்

$$= \frac{(20\times80)+(50\times79\cdot17)+(200\times70)+(120\times62\cdot5)}{400}$$

$= 69\cdot646\%$

ஆகவே, கல்லூரி '*A*' உயர்வானது எனக் காண்கிறோம்.

மாதிரி 52

கீழ்க் காணும் இரண்டு இடங்களின் இறப்பு வீதப் புள்ளி விவரங்களைக் கொண்டு எந்த இடத்தில் இருப்பவர்கள் அதிக உடல் நலம் உடையவர்கள் எனக் காட்டு.

வயது (ஆண்டுகளில்)	'அ' நகர் (தரப்படுத்தப்பட்டது)		'ஆ' நகர் (உள்ளூர்)	
	மக்கள்தொகை	இறப்பு	மக்கள்தொகை	இறப்பு
0—10	15,000	375	10,000	300
10—30	50,000	250	52,000	312
30—70	1,20,000	840	1,26,000	1008
70-க்கு மேல்	15,000	975	12,000	840

(புள்ளியியல் - கோசும், சௌத்ரியும் - ப. 181)

தீர்வு :

வயது (ஆண்டுகளில்)	'அ' நகர்-தரப்படுத்தப்பட்டது			'ஆ' நகர் உள்ளூர்		
	மக்கள் தொகை	இறப்பு	1000 பேருக்கு இறப்பு வீதம்	மக்கள் தொகை	இறப்பு	1000 பேருக்கு இறப்பு வீதம்
0—10	15,000	375	25	10,000	300	30
10—30	50,000	250	5	52,000	312	6
30—70	1,20,000	840	7	1,26,000	1008	8
70-க்கு மேல்	15,000	975	65	12,000	840	70
	2,00,000			2,00,000		

(1) 'அ' நகரின் தரப்படுத்தப்படாத இறப்பு வீதம்

$$= \frac{(15{,}000 \times 25)+(50{,}000 \times 5)+(1{,}20{,}000 \times 7)+(15{,}000 \times 65)}{(15{,}000+50{,}000+1{,}20{,}000+15{,}000)}$$

$$= \frac{24,40,000}{2,00,000}$$

= 12·2 இறப்பு (1000 பேருக்கு) (தோராயமாக)

(2) 'ஆ' நகரின் தரப்படுத்தப்படாத இறப்பு வீதம்

$$= \frac{(10,000 \times 30)+(52,000 \times 6)+(1,26,000 \times 8)+(12,000 \times 70)}{(10,000+52,000+1,26,000+12,000)}$$

$$= \frac{24,60,000}{2,00,000}$$

= 12·3 இறப்பு (1000 பேருக்கு) (தோராயமாக)

ஆகவே, 'அ' நகரத்தினர், 'ஆ' நகரத்தினரை விட உடல் நலம் மிக்கவர்கள் எனக் காண்கிறோம்.

மாதிரி 53

கீழ்க் காணும் பட்டியலுக்கு, '*A*', '*B*' என்ற நகரங்களின் தரப் படுத்தப்படாத இறப்பு வீதத்தைக் காண். மேலும் '*B*' நகருடன் ஒப்பிட்டு, '*A*' நகரின் இறப்பு வீதத்தைக் கணக்கிடு. இந்த இரண்டு நகரங்களில் எந்த நகரில் இருப்பவர்கள் சிறந்த உடல் நலத்துடன் திகழ்கிறார்கள் என்று கண்டுபிடி.

வயது ஆண்டு களில்	நகர் '*A*'		நகர் '*B*'	
	மக்கள் தொகை (ஆயிரங்களில்)	இறப்பு	மக்கள் தொகை (ஆயிரங்களில்)	இறப்பு
0— 5	25	550	10	220
5—15	40	280	15	105
15—35	60	720	20	240
35-க்கு மேல்	15	525	15	525

தீர்வு :

பொது இறப்பு விதத்தைக் கணக்கிடல் :

வயதுப் பிரிவு (ஆண்டு களில்)	'A' நகர்			'B' நகர்'		
	மக்கள் தொகை (ஆயிரத்தில்)	இறப்பு	இறப்பு விதம் (1000 பேருக்கு)	மக்கள் தொகை (ஆயிரத்தில்)	இறப்பு	இறப்பு விதம் (1000 பேருக்கு)
0— 5	25	550	22	10	220	22
5 — 15	40	280	7	15	105	7
15—35	60	720	12	20	240	12
35-க்கு மேல்	15	525	35	15	525	35
மொத்தம்	140	2075	14·8	60	1090	18·1

(1) நகர் 'A'-ன் பொது இறப்பு விதம் (நிறையிட்ட கூட்டுச் சராசரி)

$$= \frac{(25 \times 22) + (40 \times 7) + (60 \times 12) + (15 \times 35)}{(25 + 40 + 60 + 15)}$$

$$= \frac{2075}{140}$$

$$= 14{\cdot}8$$

(2) நகர் 'B'-ன் பொது இறப்பு விதம் (நிறையிட்ட கூட்டுச் சராசரி)

$$= \frac{(10 \times 22) + (15 \times 7) + (20 \times 12) + (15 \times 35)}{(10 + 15 + 20 + 15)}$$

$$= \frac{1090}{60}$$

$$= 18{\cdot}1$$

(3) நகர் 'B'யுடன் ஒப்பிடப்பட்ட நகர் 'A'-ன் தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகையின் இறப்பு விதம்

$$= \frac{(22 \times 10) + (7 \times 15) + (12 \times 20) + (35 \times 15)}{(10 + 15 + 20 + 15)}$$

$$= \frac{1090}{60}$$

$$= 18 \cdot 1$$

ஆகவே, இரண்டு நகரங்களிலும் வசிப்பவர்கள் சமமான உடல் நலம் பெற்றவர்கள் எனக் காண்கிறோம்.

மாதிரி 54

கீழ்க் கண்ட இரண்டு இடங்களில் வசிப்பவர்களுள் எந்த இடத்தில் வசிப்பவர்கள் இறப்பு வீதம் அதிகமுடையவர்களாக இருக்கிறார்கள் எனக் கண்டுபிடி.

வயது (ஆண்டுகளில்)	நகர் *I*		நகர் *II*	
	மக்கள் தொகை	இறப்பு	மக்கள் தொகை	இறப்பு
20—40	5,10,000	2050	2,95,000	1000
40—60	2,45,000	2550	3,40,000	2750
60-க்கு மேல்	20,000	1200	50,000	3000

(புள்ளியியல் - ரூபேயும் அகர்வாலும் - ப. 114)

தீர்வு :

வயது (ஆண்டுகளில்)	நகர் *I*			நகர் *II*		
	மக்கள் தொகை	இறப்பு	இறப்பு வீதம் (1000 பேருக்கு)	மக்கள் தொகை	இறப்பு	இறப்பு வீதம் (1000 பேருக்கு)
20—40	5,10,000	2050	5	2,95,000	1000	3
40—60	2,45,000	2550	10	3,40,000	2750	8
60-க்கு மேல்	20,000	1200	60	50,000	3000	60
	7,75,000	5,800	8·0	6,85,000	6750	9·6

(1) நகர் *I*-ன் தரப்படுத்தப்படாத மக்கள் தொகையின் இறப்பு வீதம் (நிறையிட்ட கூட்டுச் சராசரி)

$$= \frac{(5,10,000 \times 5) + (2,45,000 \times 10) + (20,000 \times 60)}{5,10,000 + 2,45,000 + 20,000}$$

$$= \frac{62,00,000}{7,75,000}$$

= 8·0 (ஆயிரத்திற்கு) (தோராயமாக)

(2) நகர் *II*-ன் தரப்படுத்தப்படாத இறப்பு வீதம் (நிறையிட்ட கூட்டுச் சராசரி)

$$= \frac{(2,95,000 \times 3) + (3,40,000 \times 8) + (50,000 \times 60)}{(2,95,000 + 3,40,000 + 50,000)}$$

$$= \frac{66,10,000}{6,85,000}$$

= 9·6 (ஆயிரத்திற்கு) (தோராயமாக)

ஆகவே, நகர் *II*-ல் வசிப்பவர்கள் நகர் *I*-ல் வசிப்பவர்களை விட இறப்பு வீதம் அதிகமுடையவர்கள் எனக் காண்கிறோம்.

மாதிரி 55

கீழ்க் காணும் பரவலுக்கு, தரப்படுத்தப்படாத, தரப்படுத்தப் பட்ட இறப்பு வீதங்களைக் கணக்கிட்டு, உள்ளூர் மக்கள் தொகை, உயரிய அல்லது குறைந்த இறப்பு வீதத்தைக் கொண்டுள்ளதா எனக் காட்டு.

வயதுப் பிரிவு (ஆண்டு களில்)	தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகை		உள்ளூர் மக்கள் தொகை	
	மக்கள் தொகை	இறப்பு	மக்கள் தொகை	இறப்பு
0—5	6,000	150	2,500	63
5—15	10,000	20	12,500	25
15—65	12,500	50	20,000	80
65-க்குமேல்	4,000	160	5,000	200

(புள்ளியியல் - கோசும், சௌத்ரியும் - ப - 181)

தீர்வு :

வயதுப் பிரிவு ஆண்டு களில்	தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகை			உள்ளூர் மக்கள் தொகை		
	மக்கள் தொகை	இறப்பு	இறப்பு வீதம் (1000 பேருக்கு)	மக்கள் தொகை	இறப்பு	இறப்பு வீதம் (1000 பேருக்கு)
0— 5	6,000	150	25	2,500	63	25·2
5—15	10,000	20	2	12,500	25	2
15—65	12,500	50	4	20,000	80	4
65-க்கு மேல்	4,000	160	40	5,000	200	40
மொத்தம்	32,500		11·69	40,000		9·2

(1) தரப்படுத்தப்பட்ட மக்களின் தரப்படுத்தப்படாத இறப்பு வீதம்

$$= \frac{(6,000 \times 25)+(10,000 \times 2)+(12,500 \times 4)+(4,000 \times 40)}{6,000 + 10,000 + 12,500 + 4,000}$$

$$= \frac{3,80,000}{32,500}$$

= 11·69 (ஆயிரம் பேருக்கு) (தோராயமாக)

(2) உள்ளூர் மக்கள் தொகைக்கு, தரப்படுத்தப்படாத இறப்பு வீதம்

$$= \frac{(2,500 \times 25{\cdot}2)+(12,500 \times 2)+(20,000 \times 4)+(5,000 \times 40)}{2,500 + 2,500 + 20,000 + 5000}$$

$$= \frac{3,68,000}{40,000}$$

= 9·2 (ஆயிரம் பேருக்கு) (தோராயமாக)

(3) உள்ளூர் மக்கள் தொகைக்கு, தரப்படுத்தப்பட்ட இறப்பு வீதம்

$$= \frac{(6,000 \times 25{\cdot}2)+(10,000 \times 2)+(12,500 \times 4)+(4,000 \times 40)}{(6,000 + 10,000 + 12,500 + 4,000)}$$

$$= \frac{4,51,200}{32,500}$$

= 13·8 (ஆயிரம் பேருக்கு) (தோராயமாக)

(4) தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகைக்கு, தரப்படுத்தப் பட்ட இறப்பு வீதம்

$$= \frac{(2,500 \times 25)+(12,500 \times 2)+(20,000 \times 4)+(5,000 \times 40)}{(2,500 + 12,500 + 20,000 + 5,000)}$$

$$= \frac{3,67,500}{40,000}$$

$= 9{\cdot}18$ (ஆயிரம் பேருக்கு) (தோராயமாக)

ஆகவே, தரப்படுத்தப்பட்ட மக்கள் தொகைப் பிரிவில் வசிக்கும் மக்கள் உள்ளூர் மக்களை விட உடல் நலம் மிக்கவர்களாக விளங்குகிறார்கள் எனக் காண்கிறோம்.

இடை நிலை
(MEDIAN)

மாதிரி 56

கீழ்க் காணும் எண்களின் இடை நிலையைக் காண்.

135, 125, 133, 150, 137, 135, 133, 135, 130.

தீர்வு :

ஏறு வரிசை மதிப்பில் மேற்கண்ட எண்களை எழுதினால் :

125, 130, 133, 133, 135, 135, 135, 137, 150.

இடைநிலை $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{9+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 5$ ஆவது உறுப்பின் மதிப்பு

ஆகவே, இடை நிலை $= 5$ ஆவது உறுப்பின் மதிப்பு.

$= 135$

மாதிரி 57

ஒரு தேர்வில் 10 மாணவர்கள் வாங்கிய மதிப்பெண்கள் கீழே தரப்பட்டுள்ளன.

32, 36, 24, 40, 28, 21, 45, 51, 22, 42.

(i) இடை நிலை (ii) முதல் கால்மானம் (iii) மூன்றாவது கால்மானம் (iv) மூன்றாவது ஐமானம் (v) ஐந்தாவது எண் மானம் (vi) எட்டாவது பத்துமானம் (vii) அறுபத்தியொன்றாவது நூற்றுமானம் ஆகியவற்றைக் காண்.

தீர்வு :

10 மாணவர்கள் எடுத்த மதிப்பெண்களை ஏறு வரிசையில் எழுதினால் :

வரிசை எண்	மதிப்பெண்கள்	வரிசை எண்	மதிப்பெண்கள்
1	21	6	36
2	22	7	40
3	24	8	42
4	28	9	45
5	32	10	51

(1) இடைநிலை

$M_e = \left(\frac{n+1}{2}\right)$ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{10+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 5{\cdot}5$ ஆவது உறுப்பிட் மதிப்பு

$= 5$ ஆவது உறுப்பின் மதிப்பு $+ 0{\cdot}5$ (6 ஆவது உறுப்பு மதிப்பு $-$ 5ஆவது உறுப்பின் மதிப்பு)

$= 32 + 0{\cdot}5\ (36 - 32)$

$= 32 + 2$

$= 34$ மதிப்பெண்கள்

(2) முதல் கால்மானம்

$Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{10+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= (2{\cdot}75)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$=$ 2 ஆவது உறுப்பு மதிப்பு $+ 0{\cdot}75$ (3 ஆவது உறுப்பு மதிப்பு—2 ஆவது உறுப்பு மதிப்பு)

$= 22 + 0{\cdot}75\ (24 - 22)$

$= 22 + 1{\cdot}5$

$= 23{\cdot}5$ மதிப்பெண்கள்.

(3) மூன்றாவது கால்மானம் :

$Q_3 = \left(\frac{3(n+1)}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{10+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 8{\cdot}25$ ஆவது உறுப்பின் மதிப்பு

$=$ 8 ஆவது உறுப்பின் மதிப்பு $+ 0{\cdot}25$ (9 ஆவது உறுப்பின் மதிப்பு—8ஆவது உறுப்பின் மதிப்பு)

$= 42 + 0{\cdot}25\ (35 - 32)$

$= 42 + 0{\cdot}75$

$= 42{\cdot}75$ மதிப்பெண்கள்

(4) மூன்றாவது ஐமானம் :

$Qu_3 = \left[\frac{3(n+1)}{5}\right]$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left[\frac{3(10+1)}{5}\right]$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 6{\cdot}6$ ஆவது உறுப்பின் மதிப்பு

$=$ 6 ஆவது உறுப்பின் மதிப்பு$+0\ 6$ (7ஆவது உறுப்பின் மதிப்பு—6 ஆவது உறுப்பின் மதிப்பு)

$= 36 + 0{\cdot}6\ (40 - 36)$

$- 36 + 2{\cdot}4$

$= {\cdot}38{\cdot}4$ மதிப்பெண்கள்

(5) ஐந்தாவது எண்மானம் :

$$O_5 = \left[\frac{5(n+1)}{8}\right]$$ ஆவது உறுப்பின் மதிப்பு

$$= \left[\frac{5(10+1)}{8}\right]$$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 6\frac{7}{8}$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 6$ ஆவது உறுப்பு மதிப்பு $+ \frac{7}{8}$ (7ஆவது உறுப்பின் மதிப்பு —6ஆவது உறுப்பின் மதிப்பு)

$= 36 + (\frac{7}{8} \times 4)$

$= 39{\cdot}5$ மதிப்பெண்கள்

(6) எட்டாவது பத்துமானம்

$$D_8 = \left[\frac{8(n+1)}{10}\right]$$ ஆவது உறுப்பின் மதிப்பு

$$= \left[\frac{8(10+1)}{10}\right]$$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 8{\cdot}8$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 8$ஆவது உறுப்பின் மதிப்பு$+0{\cdot}8$ (9ஆவது உறுப்பின் மதிப்பு—8ஆவது உறுப்பின் மதிப்பு)

$= 42 + 0{\cdot}8\ (45 - 42)$

$= 42 + 2{\cdot}4$

$= 44{\cdot}4$ மதிப்பெண்கள்

(7) அறுபத்தி யொன்றுவது நூறுமானம்

$$P_{61} = \left[\frac{61(n+1)}{100}\right]$$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 6{\cdot}71$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 36 + 0{\cdot}71\ (40 - 36)$

$= 36 + 2{\cdot}84$

$= 38{\cdot}84$ மதிப்பெண்கள்

மாதிரி 58

நியூயார்க் நகரில் முக்கிய வீதியில் ஒருவர் நடந்து செல்லும் பொழுது ஒவ்வொரு கட்டடங்களிலும் கண்டறிந்த மாடிகளின் எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

5, 4, 3, 4, 5, 4, 3, 4, 5, 20, 5, 6, 32, 8, 27.

இடைநிலை கணக்கிடுக.

(பி.எஸ்ஸி.-சென்னை—1972)

தீர்வு :

ஏறுவரிசையில் மாடிகளின் எண்ணிக்கையை எழுதினால் :

3, 3, 4, 4, 4, 4, 5, 5, 5, 5, 6, 8, 20, 27 32.

இடைநிலை

$$M_e = \left(\frac{n+1}{2}\right) \text{ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= \left(\frac{15+1}{2}\right) \text{ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= 8\text{ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= 5 \text{ மாடித் தரைகள்}$$

மாதிரி 59 :

பம்பாயிலுள்ள பங்கு வியாபார நிறுவனத்தின் சில பங்குகளைக் கவனித்த பொழுது, கீழ்க்காணும் விலைகள் காணப் பட்டன :

$100\frac{5}{16}$;	$100\frac{3}{8}$;	$100\frac{1}{4}$;	$100\frac{5}{16}$;
$100\frac{3}{16}$;	$100\frac{1}{4}$;	$100\frac{3}{8}$;	$100\frac{9}{32}$;
$100\frac{11}{32}$;	$100\frac{1}{16}$;	$100\frac{1}{8}$;	100 ;
$99\frac{7}{8}$;	$99\frac{9}{32}$;	$99\frac{11}{32}$;	$99\frac{3}{8}$;
$99\frac{1}{4}$.			

இடைநிலையைக் கணக்கிடுக.

(பி. காம் - காசி - 1957)

தீர்வு :

ஏறு வரிசையில் எழுதப்பட்ட விலைகள் :

உறுப்புகளின் எண்	விலை	உறுப்புகளின் எண்	விலை
1	$99\frac{1}{4}$	10	$100\frac{1}{4}$
2	$99\frac{9}{32}$	11	$100\frac{1}{4}$
3	$99\frac{11}{32}$	12	$100\frac{9}{32}$
4	$99\frac{3}{8}$	13	$100\frac{5}{16}$
5	$99\frac{7}{8}$	14	$100\frac{5}{16}$
6	100	15	$100\frac{11}{32}$
7	$100\frac{1}{16}$	16	$100\frac{3}{8}$
8	$100\frac{1}{8}$	17	$100\frac{3}{8}$
9	$100\frac{3}{16}$		

இடைநிலை $M_e = \left(\frac{x+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{17+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 9$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 100\frac{3}{16}$

ஆகவே இடைநிலை பங்கு விலை = ரூ. $100\frac{3}{16}$

மாதிரி 60

1961 ஆவது ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பின்படி 10 நகரங்களின் மக்கள் தொகை (ஆயிரத்தில்) கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

2000, 1180, 1785, 1500, 560, 782, 1209, 385, 1125, 222.

இடைநிலை காண்.

தீர்வு :

10 நகரங்களின் மக்கள் தொகைக் கணிப்பை ஏறு வரிசையில் எழுதினால்

222, 385, 560, 782, 1123, 1180, 1200, 1500, 1785, 2000 ஆகும்.

$$\text{இடைநிலை } M_e = \left(\frac{n+1}{2}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= \left(\frac{10+1}{2}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= 5{\cdot}5 \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$5{\cdot}5 \text{ ஆவது உறுப்பின் மதிப்பு} = \frac{(1123+1180)}{2} \text{ ஆயிரங்கள்}$$

$$= 1151{\cdot}5 \text{ ஆயிரங்கள்}$$

மாதிரி 61

ஒரு தொலைபேசி மாற்று நிலையத்தில் 45 தொடர்ந்த கூப்பிடுகளுக்கு இடைப்பட்ட அரை நிமிட அளவு இடைவெளிகளின் 44 எண்கள் கீழே தரப்பட்டுள்ளன.

6, 1, 16, 19, 13, 9, 2, 2 1, 28, 7, 48, 16, 3, 15, 2, 2, 2, 8, 1, 1, 2, 12, 1, 10, 7, 8, 4, 26, 15, 3, 3, 5, 9, 8, 11, 40, 18, 1, 1, 31, 5, 14, 16.

இடைவெளி எண்களின் இடை நிலையைக் காண்.

(எம்.ஏ. - ஆக்ரா.)

தீர்வு :

கொடுக்கப்பட்ட எண்கள் ஏறு வரிசை மதிப்பில் எழுதப் பட்டால்,

1, 1, 1, 1, 1, 1, 1, 2, 2, 2, 2. 2, 2, 3, 3, 3, 4, 5, 5, 6, 7, 7, 8, 8, 8, 9, 9, 10, 11, 12, 13, 14, 15,15, 16, 16, 16, 18, 19, 26, 28, 31, 40, 48.

$$\text{இடைநிலை } M_e = \left(\frac{n+1}{2}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$= \left(\frac{44+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

= 22·5 ஆவது உறுப்பின் மதிப்பு

22·5 ஆவது உறுப்பின் மதிப்பு

$= \frac{\text{22 ஆவது உறுப்பின் மதிப்பு} + \text{23 ஆவது உறுப்பின் மதிப்பு}}{2}$

$= \frac{7+8}{2}$

= 7·5 அரை நிமிடங்கள்

ஆகவே, இடைநிலை = 7·5 அரை நிமிடங்கள்

(அல்லது)

= 3·75 நிமிடங்கள்

மாதிரி 62

கீழ்க் காணும் பட்டியல் 25 மாணவர்கள் ஒரு தேர்வில் கணித, ஆங்கிலப் பாடங்களில் எடுத்த மதிப்பெண்களைத் தருகிறது.

மாணவரின் வரிசை எண்	கணிதத்தில் மதிப்பெண்	ஆங்கிலத்தில் மதிப்பெண்	மாணவரின் வரிசை எண்	கணிதத்தில் மதிப்பெண்	ஆங்கிலத்தில் மதிப்பெண்
1	29	36	14	47	44
2	65	30	15	60	85
3	33	38	16	30	20
4	45	39	17	32	32
5	51	64	18	52	25
6	72	50	19	54	55
7	48	46	20	56	28
8	33	15	21	58	53
9	42	42	22	49	35
10	25	10	23	38	40
11	28	72	24	40	62
12	35	33	25	46	58
13	46	80			

எந்தப் பாடத்தில் மாணவர்களின் அறிவு அதிகமாக இருக்கிறது ?

தீர்வு :

கணித, ஆங்கிலப் பாடங்களில் இடைநிலை காணல் :

வரிசை எண்	கணிதத்தில் மதிப்பெண்	ஆங்கிலத்தில் மதிப்பெண்	வரிசை எண்	கணிதத்தில் மதிப்பெண்	ஆங்கிலத்தில் மதிப்பெண்
1	25	10	14	46	42
2	28	15	15	47	44
3	29	20	16	48	46
4	30	25	17	49	50
5	32	28	18	51	53
6	33	30	19	52	55
7	33	32	20	54	58
8	35	33	21	56	62
9	38	35	22	58	64
10	40	36	23	60	72
11	42	38	24	63	80
12	45	39	25	72	85
13	46	40			

கணிதப் பாடத்தில் இடைநிலை மதிப்பெண் $\Big\} = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{25+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 13$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 46$ மதிப்பெண்கள்

ஆங்கிலப் பாடத்தில் இடைநிலை மதிப்பெண் $\Big\} = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$$= \left(\frac{25+1}{2}\right) \text{ஆவது உறுப்பின் மதிப்பு}$$

= 13 ஆவது உறுப்பின் மதிப்பு

= 40 மதிப்பெண்கள்

கணிதப் பாடத்தில் இடைநிலை மதிப்பெண் 46 ஆகவும், ஆங்கிலப் பாடத்தில் இடைநிலை மதிப்பெண் 40 ஆகவும் இருப்பதால் மாணவர்களின் அறிவுத் திறன் கணக்கில் அதிகமாக இருக்கிறது எனக் காண்கிறோம்.

மாதிரி 63

கீழ்க் காணும் பட்டியல் 20 மாணவர்களைக் கொண்ட குழு ஒன்று ஆங்கிலம், இந்திப் பாடங்களில் பெற்ற மதிப்பெண்களைத் தருகிறது.

மாணவர் எண்	ஆங்கிலத்தில் மதிப்பெண்	இந்தியில் மதிப்பெண்	மாணவர் எண்	ஆங்கிலத்தில் மதிப்பெண்	இந்தியில் மதிப்பெண்
1	53	58	11	25	10
2	54	55	12	42	42
3	52	25	13	33	15
4	32	32	14	48	46
5	30	26	15	72	50
6	60	85	16	51	64
7	47	44	17	45	39
8	46	80	18	33	38
9	35	33	19	65	30
10	28	72	20	29	36

எந்தப் பாட்டத்தில் மாணவர்களின் அறிவுத் திறன் அதிகமாயுள்ளது எனக் காண்.

(எம். ஏ.—பஞ்சாப்—செப்டம்பர் 1951)

தீர்வு :

இடைநிலை மதிப்பெண்களைக் கணக்கிட்டு ஒப்பிடுதல் :

வரிசை எண்	ஆங்கில மதிப்பெண்	இந்தி மதிப்பெண்
1	25	10
2	28	15
3	29	25
4	30	26
5	32	30
6	33	32
7	33	33
8	35	36
9	42	38
10	45	39
11	46	42
12	47	44
13	48	46
14	51	50
15	52	55
16	53	58
17	54	64
18	60	72
19	65	80
20	72	85

ஆங்கிலத்தில் இடைநிலை மதிப்பெண்கள் $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{20+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 10{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

$$= \frac{10\text{ஆவது உறுப்பின் மதிப்பு}+11\text{ஆவது உறுப்பின் மதிப்பு}}{2}$$

$$= \left(\frac{45+46}{2}\right)$$

= 45·5 மதிப்பெண்கள்.

இந்தியில் இடை நிலை மதிப்பெண் $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{20+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

= 10·5 ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{39+42}{2}\right)$

= **40·5 மதிப்பெண்கள்**

மாதிரி 64

16 மாணவ மாணவியர் குழுக்களுக்கு ஒரு பொது அறிவுப் போட்டி வைத்து, அதில் அவர்கள் எடுத்த மதிப்பெண்கள் கீழே தரப்பட்டுள்ளன

வரிசை எண்	மாணவரின் மதிப்பெண்கள்	மாணவியரின் மதிப்பெண்கள்	வரிசை எண்	மாணவரின் மதிப்பெண்கள்	மாணவியரின் மதிப்பெண்கள்
1	15	10	9	55	63
2	35	30	10	56	69
3	43	45	11	60	70
4	46	52	12	64	72
5	48	55	13	71	74
6	48	58	14	75	75
7	49	61	15	80	75
8	50	61	16	85	90
			மொத்தம்	880	960

மாணவரா, மாணவியரா, யார் அதிக அறிவு படைத்தவர் எனக் காண்பி. (எம். ஏ.—1954)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

மாணவர் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$= \frac{880}{16}$

$= 55$ மதிப்பெண்கள்

மாணவியர் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி $y = \frac{\Sigma y}{n}$

$= \frac{960}{16}$

$= 60$ மதிப்பெண்கள்

இடைநிலை கணக்கிடல் :

கொடுக்கப்பட்ட மதிப்பெண்கள் ஏறுவரிசையில் இருப்பதால் இடைநிலையைச் சுலபமாகக் கணக்கிடலாம்.

மாணவர்கள் எடுத்த மதிப்பெண்களின் இடைநிலை

$= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{16+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 8{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \frac{8\text{ஆவது உறுப்பின் மதிப்பு} + 9\text{ஆவது உறுப்பின் மதிப்பு}}{2}$

$= \frac{50+55}{2}$

$= 52{\cdot}5$ மதிப்பெண்கள்

மாணவியர் எடுத்த மதிப்பெண்களின் இடைநிலை

$= 8{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{61+63}{2}\right)$

$= 62$ மதிப்பெண்கள்

ஆகவே, மாணவியரின் கூட்டுச் சராசரி மதிப்பெண்கள், இடைநிலை மதிப்பெண்கள் முறையே மாணவர்களின் கூட்டுச் சராசரி மதிப்பெண்கள், இடைநிலை மதிப்பெண்களைவிட அதிகமாக இருப்பதால் மாணவியர், மாணவர்களை விட அதிக அறிவு படைத்தவர்கள் எனக் காண்கிறோம்.

மாதிரி 65

மாதிரி 6-ல் கொடுக்கப்பட்ட பட்டியலிலுள்ள 25 மாணவர்கள் பொருளாதாரம் அரசியல் பாடங்களில் பெற்ற மதிப்பெண்களுக்கு இடைநிலையைக் கண்டு, ஒப்பிட்டு எந்தப் பாடத்தில் மாணவர்கள் அதிக அறிவு படைத்தவர்களாக இருக்கிறார்கள் எனக் காட்டுக.

தீர்வு :

இடைநிலைகளைக் கணக்கிடல் : (மதிப்பெண்கள் இறங்கு வரிசை மதிப்பில் எழுதப்பட்டுள்ளது.)

வரிசை எண்	பொருளாதாரத்தில் மதிப்பெண்	அரசியலில் மதிப்பெண்	வரிசை எண்	பொருளாதாரத்தில் மதிப்பெண்	அரசியலில் மதிப்பெண்
1	72	85	14	45	39
2	65	80	15	42	38
3	60	72	16	40	36
4	58	64	17	38	35
5	56	62	18	35	33
6	54	58	19	33	32
7	52	55	20	33	30
8	51	53	21	32	28
9	49	50	22	30	25
10	48	46	23	29	20
11	47	44	24	28	15
12	46	42	25	25	10
13	46	40			

பொருளாதாரப் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் இடைநிலை M_e $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{25+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 13$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 46$ மதிப்பெண்கள்

அரசியல் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் இடைநிலை M_e $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{25+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 13$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 40$ மதிப்பெண்கள்

இங்கு, பொருளாதாரப் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் இடைநிலை, அரசியல் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் இடைநிலையை விட அதிகமாக இருப்பதால், மாணவர்கள் பொருளாதாரப் பாடத்தில் அதிக அறிவு படைத்தவர்களாகத் திகழ்கிறார்கள் எனக் காண்கிறோம்.

மாதிரி 66

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு இடைநிலையைக் காண் :

கூலி (ரூபாயில்)	0—10	10—20	20—30	30—40	40—50
கூலியாட்களின் எண்ணிக்கை	22	38	46	35	20

தீர்வு :

இடைநிலை காணல் :

கூலி (ரூபாயில்)	கூலியாட்களின் எண்ணிக்கை	குவி அலைவெண்
0—10	22	22
10—20	38	60
20—30	46	106
30—40	35	141
40—50	20	161

இடைநிலை காணும் சூத்திரம் $M_e = l_1 + \dfrac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$

$$= 20 + \frac{\frac{(161+1)}{2} - 60}{46} \times 10$$

$$= 20 + \frac{21 \times 10}{46}$$

= ரூ. 24·57

இடைநிலைக் கூலி = ரூ. **24·57**

மாதிரி 67

கீழ்க் காணும் பட்டியலை மாற்றியமைத்து இடைநிலையைக் கணக்கிடுக.

அளவுகள்	10—15	15—17·5	17·5—20	20—30
அலைவெண்	10	15	17	25
அளவுகள்	30—35	35—40	40—40-க்கு மேல்	
அலைவெண்	28	30	40	

(பி.காம்.—அலகாபாத்—1942)

தீர்வு :

பல வழிகளில் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலை மாற்றி அமைக்கலாம். ஒரே இடைவெளியுடைய பிரிவுகளை அமைப்பதன் பொருட்டு மேற்கண்ட பட்டியலைக் கீழ்க் கண்டவாறு மாற்றியமைக்கிறோம்.

I அளவு	II அலைவெண்	III குவி அலைவெண்
10—20	10+15+17=42	42
20—30	25	67
30—40	58	125
40—50	40	165
	$n = 165$	

இடைநிலை M_e $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{165+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 83$ ஆவது உறுப்பின் மதிப்பு

83 ஆவது உறுப்பு (30—40) என்ற பிரிவிற்குள் விழுகிறது.

இடைநிலை காணும் சூத்திரம்
$$M_e = l_1 + \frac{\frac{(n+1)}{2} - m}{f} \times C$$

$$= 30 + \frac{83-67}{58} \times 10$$

$$= 30 + \frac{160}{58}$$

$$= 30 + 2{\cdot}75$$

$$= 32{\cdot}75$$

இடைநிலை அளவு $= $ **32·75** (தோராயமாக)

மாதிரி 68

கீழ்க் காணும் பரவல் பட்டியலில் சில தொழிலாளர்களின் மாத வருமானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து அவர்களின் இடைநிலை வருமானத்தைக் காண்.

மாத வருமானம் (ரூபாய்)	எண்ணிக்கை	மாத வருமானம் (ரூபாய்)	எண்ணிக்கை
100-க்குக் கீழ்	28	350—399	52
100—149	34	400—449	43
150—199	69	450—499	28
200 249	72	500—549	19
250—299	78	550ம்—550க்கு	14
300—349	63	மேலேயும்	

(பி.ஏ.—சென்னை—1971)

தீர்வு :

முதலில் குவி அலைவெண் கண்டு, பின் இடைநிலை கணக்கிடுவோம்.

மாத வருமானம் (ரூபாயில்) x	எண்ணிக்கை f	குவி எண்ணிக்கை $c.f.$
—100	28	28
100—149	34	62
150—199	69	131
200—249	72	203
250—299	78	281
300—349	63	344
350—399	52	396
400—449	43	439
450—499	28	467
500—549	19	486
550—	14	500
	500	

இடைநிலை வருமானம் $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது

$\left(\frac{500+1}{2}\right)$ ஆவது அல்லது 250·05 ஆவது உறுப்பின் மதிப்பு

250·5ஆவது உறுப்பு, 249·5—299·5 என்ற பிரிவில் வருகிறது.

$$\text{ஆகவே, இடைநிலை} = l_0 + \frac{\left(\frac{n+1}{2}\right) - C}{f} \times h$$

$$= 249{\cdot}5 + \frac{250{\cdot}5 - 203}{78} \times 50$$

$$= 249{\cdot}5 + 30{\cdot}45$$

$$= \text{ரூ. } 279{\cdot}95$$

மாதிரி 69

கீழ்க் காணும் பட்டியலிலுள்ள ஒரு சோதனைத் தேர்வின் முடிவுகளின் அலைவெண் பரவலுக்கு இடைநிலையைக் காண்.

சரியான விடைகளின் எண்ணிக்கைப் பிரிவு	0—5	6—11	12—17	18—23	24—29	30—35
மாணவர்களின் எண்ணிக்கை	2	13	28	49	38	10

(பி. எஸ்ஸி. – சென்னை—1972)

தீர்வு :

குவி அலைவெண் பட்டியல் :

பிரிவு	அலை வெண் f	குவி அலைவெண் $C.f$
0— 5	2	2
6—11	13	15
12—17	28	43
18—23	49	93
24—29	38	130
30—35	10	140
	140	

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{140\times 1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 70{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

(70·5) ஆவது உறுப்பு 17·5—23·5 பிரிவில் வருகிறது.

ஆகவே, இடைநிலை $M_e = 17{\cdot}5 + \frac{70{\cdot}5 - 43}{49} \times 6$

$= 17{\cdot}5 + \frac{27{\cdot}5 \times 6}{49}$

$= 17{\cdot}5 + 3{\cdot}37$

$= \mathbf{20{\cdot}87}$

மாதிரி 70

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு இடைநிலை காண் :

பிரிவு இடைவெளி	155—157	158—160	161—163	164—166	167—169
அலைவெண்	4	8	26	53	89
பிரிவு இடைவெளி	170—172	173—175	176—178	179—181	
அலைவெண்	62	48	14	6	

(பி. ஏ. - மதுரை—1970)

தீர்வு :

முதலில் குவி அலைவெண் கண்டு, பின் இடைநிலை கணக்கிடுகிறோம்.

பிரிவு	அலைவெண் f	குவி அலைவெண் cf
155—157	4	4
158—160	8	12
161—163	26	38
164—166	53	91
167—169	89	180
170—172	62	242
173—175	48	290
176—178	14	304
179—181	6	310
	310	

இடைநிலை $M_e = \left(\dfrac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\dfrac{310+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 155{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

155·5 ஆவது உறுப்பு 166·5—169·5 பிரிவில் விழுகிறது.

ஆகவே இடைநிலை $M_e = l_o + \dfrac{\left(\dfrac{n+1}{2}\right) - C}{f} \times h$

$$= 166{\cdot}5 + \frac{155{\cdot}5 - 91}{89} \times 3$$

$$= 166{\cdot}5 + \frac{64{\cdot}5 \times 3}{89}$$

$$= 166{\cdot}5 + 2{\cdot}1742$$

$$= 168{\cdot}6742$$

மாதிரி 71

கீழ்க் காணும் பட்டியல் ஒரு தொழிற்சாலையில் வேலை பார்க்கும் வேலையாட்களின் பரவலைத் தருகிறது. இடைநிலையைக் கணக்கிடுக.

வயதுப் பிரிவு	20—25	25—30	30—35	35—40
வேலையாட்களின் எண்ணிக்கை	25	35	55	90
வயதுப் பிரிவு	40—45	45—50	50—55	55—60
வேலையாட்களின் எண்ணிக்கை	75	59	41	20

(பி.ஏ.-சென்னை-1972.)

தீர்வு :

முதலில் குவி அலைவெண் கண்டு, பின்பு இடைநிலை காண வேண்டும்.

வயது	அலைவெண்	குவி அலைவெண்
20—25	25	25
25—30	35	60
30—35	55	115
35—40	90	205
40—45	75	280
45—50	59	339
50—55	41	380
55—60	20	400
	400	

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{400+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 200{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

200·5 ஆவது உறுப்பு 35—40 என்ற பிரிவில் விழுகிறது.

ஆகவே, இடைநிலை $= 35 + \frac{200.5 - 115}{90} \times 5$

$= 35 + \frac{85.5 \times 5}{90}$

$= 35 + 4.75$

$= \mathbf{39.75}$

மாதிரி 72

கீழ்க் காணும் பட்டியலுக்கு அலைவெண் பரவலுக்கு இடைநிலை காண்.

பிரிவு x	10—10·9	11—11·9	12—12·9	13—13·9	14—14·9
அலைவெண் f	2	9	27	79	85
பிரிவு x	15—15·9	16—16·9	17—17·9	18—18·9	
அலைவெண் f	44	26	18	5	

(பி. எஸ்ஸி.—சென்னை—1969)

தீர்வு :

குவி அலைவெண் பட்டியல் :

பிரிவு	அலைவெண் f	குவி அலைவெண் $c.f$
10—10 9	2	2
11 11·9	9	11
12—12·9	27	38
13—13·9	79	117
14—14·9	85	202
15—15·9	44	246
16—16·9	26	272
17—17·9	18	290
18—18·9	5	295
மொத்தம்	295	

$$\text{இடை நிலை} = \left(\frac{n+1}{2}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= \left(\frac{295+1}{2}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= 148 \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

148 ஆவது உறுப்பு (13·95—14·95) என்ற பிரிவில் விழுகிறது. ஆகவே,

$$\text{இடைநிலை } M_e = 13·95 + \frac{148-117}{85} \times 1$$

$$= 13·95 + \frac{31 \times 1}{85}$$

$$= 13·95 + 0·365$$

$$= 14·315$$

மாதிரி 73

கீழ்க் காணும் பரவல் 136 மனிதர்களின் 10 ஆண்டு வயதுப் பிரிவுகள் ஆகும். பரவலுக்குச் சரியாகப் பொருந்தும் ஏதாவது ஒரு மைய நிலைப்போக்கு அளவைக் கணக்கிடுக.

வயதுப் பிரிவு	0–9	10—19	20—29	30–39
மனிதர்களின் எண்ணிக்கை	48	26	27	11
வயதுப் பிரிவு	40—49	50–59	60—69	70-ம் அதற்கு மேலும்
மனிதர்களின் எண்ணிக்கை	13	4	3	4

(எம்·ஏ. சென்னை..1960)

தீர்வு :

மேற்கண்ட பரவல் உயரிய அளவில் கோட்டமுடையதாக இருப்பதைக் காண்கிறோம். இருபக்கக் கடைசி மதிப்புகள் கூட்டுச் சராசரி மதிப்பை மாற்றுவதாலும்; இயல் நிலைப் பரவலுக்கு மட்டுமே முகடு உயர்ந்த அளவில் மையநிலைப் போக்கு அளவாக இருப்பதாலும் இங்கே தரப்பட்ட அலைவெண் பரவலுக்கு இடைநிலைச் சராசரியே பொருத்தமான மைய நிலைப் போக்கு அளவாகும். மேற்கண்ட பரவல் உயரிய அளவில் கோட்டமுடையதாக இருப்பதாலும், இடைவெளியற்றதாக இருப்பதாலும், இடைவெளி உடையதாக மாற்ற இடைநிலையைக் கணக்கிடுகிறோம்.

வயதுப் பிரிவு	ஆட்களின் எண்ணிக்கை f	குவி அலைவெண் $c.f$
0— 9·5	48	48
9·5—19·5	26	74
19·5—29·5	27	101
29·5—39·5	11	112
39·5—49·5	13	125
49·5—59·5	4	129
59·5—69·5	3	132
69·5-ம் அதற்கு மேலும்	4	136
	$n = 136$	

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{136+1}{2}\right)$ ஆவது

அல்லது (68·5) ஆவது உறுப்பின் வயதாகும்.

(68·5) ஆவது உறுப்பின் வயது (9·5—19·5) என்ற பிரிவில் விழுகிறது.

$$\text{ஆகவே இடைநிலை } M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$$

$$= 9{\cdot}5 + \frac{68{\cdot}5 - 48}{26} \times 10$$

$$= 17{\cdot}4 \text{ வயது (தோராயமாக)}$$

மாதிரி 74

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு இடைநிலையைக் காண்.

பிரிவு இடைவெளி	100—104	105—109	110—114	115—119
அலைவெண்	4	14	60	138
பிரிவு இடைவெளி	120—124	125—129	130—134	135—139
அலைவெண்	206	298	380	450
பிரிவு இடைவெளி	140—144	145—149	150—154	155—159
அலைவெண்	500	430	260	128
பிரிவு இடைவெளி	160—164	165—169	170—174	மொத்தம்
அலைவெண்	66	28	12	2974

(ஐ. ஏ. & ஏ. எஸ்.)

தீர்வு :

இடைநிலை கணக்கிடல் :

மாற்றியமைக்கப்பட்ட பிரிவு இடைவெளி	அலைவெண் f	குவி அலை வெண் $c.f$
99·5—104·5	4	4
104·5—109·5	14	18
109·5—114·5	60	78
114·5—119·5	138	216
119·5—124·5	206	422
124·5—129·5	298	720
129·5—134·5	380	1100
134·5—139·5	450	1550
139·5—144·5	500	2050
144·5—149·5	430	2480
149·5—154·5	260	2740
154·5—159·5	128	2868
159·5—164·5	66	2934
164·5—169·5	28	2962
169·5—174·5	12	2974

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{29\cdot74+1}{2}\right)$ ஆவது அல்லது (1487·5) ஆவது உறுப்பின் மதிப்பு.

இங்கு, 1487·5 ஆவது உறுப்பின் மதிப்பு (134·5—139·5) என்ற பிரிவில் விழுகிறது.

$$\text{ஆகவே, இடைநிலை } M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$$

$$= 134{\cdot}5 + \frac{(1487{\cdot}5 - 1100)}{450} \times 5$$

$$= 134{\cdot}5 + \frac{387{\cdot}5 \times 5}{450}$$

$$= 138{\cdot}8$$

ஆகையால், இங்கு இடை நிலை மதிப்பு = 138·8 எனக் காண் கிறோம்.

மாதிரி 75

கீழ்க் காணும் பட்டியலிலுள்ள புள்ளி விவரங்களுக்கு,

(i) இடைநிலை, (ii) கால்மான விலக்கங்கள் ஆகியவற்றைக் காண்.

கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் சதவீத எல்லைகள்	இந்தியாவிலுள்ள ஆலைகள் (1935-36)	கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் சதவீத எல்லைகள்	இந்தியாவிலுள்ள ஆலைகள் (1935-36)
8·0—8·2	2	9·4— 9·6	10
8·2—8·4	5	9·6— 9·8	7
8·4—8·6	4	9·8—10·0	6
8·6—8·8	11	10·0—10·2	3
8·8—9·0	11	10·2—10·4	1
9·0—9·2	11	10·4—10·6	1
9·2—9·4	13		
		மொத்தம்	85

(எம்.ஏ.-பஞ்சாப்.1943)

தீர்வு

முதலில் குவி அலைவெண் கண்டுபிடித்து, பின்னர் இடைநிலையைக் கணக்கிடுகிறோம்.

கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் சதவீத எல்லைகள்	அலைகளின் எண்ணிக்கை -அலைவெண்-	குவி அலைவெண்
8·0 — 8·2	2	2
8·2 — 8·4	5	7
8·4 — 8·6	4	11
8·6 — 8·8	11	22
8 8 — 9·0	11	33
9·0 — 9·2	11	44
9·2 — 9·4	13	57
9·4 — 9·6	10	67
9·6 — 9·8	7	74
9·8 — 10·0	6	80
10·0 — 10·2	3	83
10·2 — 10·4	1	84
10·4 — 10·6	1	85

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left[\frac{85+1}{2}\right]$ ஆவது

அல்லது 43 ஆவது ஆலையில் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் சதவீத அளவு.

43 ஆவது ஆலை (9·0—9·2) என்ற பிரிவின் கீழ் வருகிறது.

ஆகவே,

$$\text{இடைநிலை } M_e = l_1 + \frac{\left[\frac{n+1}{2}\right] - m}{f} \times C$$

$$= 9{\cdot}0 + \frac{43-33}{11} \times 0{\cdot}2$$

$$= 9{\cdot}0 + \frac{2}{11}$$

$$= 9{\cdot}18\%$$

முதல் கால்மானம் $= \left(\frac{n+1}{4}\right)$ஆவது அல்லது

$\left(\frac{85+1}{4}\right)$ஆவது உறுப்பின் மதிப்பு

= 21·5 ஆவது ஆலையில் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் சத வீத அளவு.

(21·5)ஆவது ஆலை (8·6—8·8) என்ற பிரிவின் கீழ் வருகிறது. ஆகவே,

$$Q_1 = l_1 + \frac{\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$$

$$= 8{\cdot}6 + \frac{21{\cdot}5 - 11}{11} \times 0{\cdot}2$$

$$= 8{\cdot}6 + \frac{10{\cdot}5 \times 0{\cdot}2}{11}$$

$$= 8{\cdot}79\%$$

மூன்றாவது கால்மானம் } $Q_3 = 3\left(\frac{n+1}{4}\right)$ஆவது அல்லது

$3\left(\frac{85+1}{4}\right)$ஆவது அல்லது

64·5ஆவது ஆலையிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் சதவீத அளவு.

(64·5)ஆவது ஆலை (9·4—9·6) என்ற பிரிவின் கீழ் வருகிறது.

$$Q_3 = l_1 + \frac{3\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$$

$$= 9{\cdot}4 + \frac{64{\cdot}5-57}{10} \times 0{\cdot}2$$

$$= 9{\cdot}4 + \frac{(7{\cdot}5 \times 0{\cdot}2)}{10}$$

$$= 9{\cdot}55\%$$

காலமான விலக்கம் $= \frac{Q_3 - Q_1}{2}$

$$= \frac{9{\cdot}55-8{\cdot}79}{2}$$

$$= \frac{0{\cdot}76}{2}$$

$$= 0{\cdot}38$$

மாதிரி 76

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு

(i) கூட்டுச் சராசரி

(ii) முதல், மூன்றாவது காலமானங்கள்

(iii) ஏழாவது, ஐந்தாவது, நாலாவது பத்துமானங்கள்

(iv) ஐந்தாவது அறுமானம்

(v) மூன்றாவது, ஏழாவது ஐந்தாவது எண்மானங்கள்

(vi) 15ஆவது, 10ஆவது, 20ஆவது, 60ஆவது, 90ஆவது நூறு மானங்கள் ஆகியவற்றைக் காண்.

வருவாய்	வேலையாட்கள்	வருவாய்	வேலையாட்கள்
24	3	32	79
25	6	33	55
26	10	34	36
27	15	35	26
28	24	36	19
29	42	37	13
30	75	38	8
31	90		

தீர்வு :

வருவாய் x	வேலை யாட்கள் f	குவி அலைவெண் $c.f$	ஊகச் சராசரியி ($A=31$)லிருந்து விலக்கம் dx	பெருக்கல் fdx
24	3	3	−7	−21
25	6	9	−6	−36
26	10	19	−5	−50
27	15	34	−4	−60
28	24	58	−3	−72
29	42	100	−2	−84
30	75	175	−1	−75
31	90	265	0	0
32	79	344	1	79
33	55	399	2	110
34	36	435	3	108
35	26	461	4	104
36	19	480	5	95
37	13	493	6	78
38	8	501	7	56
	$n=501$			$\Sigma fdx = 232$

(1) கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$$= 31 + \frac{232}{501}$$

$$= 31 + 0{\cdot}46$$

$$= 31{\cdot}46 \quad \text{(தோராயமாக)}$$

(ii) கால்மானங்கள் :

$$Q_1 = \left(\frac{n+1}{4}\right) \text{ ஆவது அல்லது } \left(\frac{50+1}{4}\right) \text{ ஆவது}$$

அல்லது (125·5) ஆவது உறுப்பின் அளவு

= 30 (தோராயமாக)

$$Q_3 = 3\left(\frac{n+1}{4}\right) \text{ஆவது அல்லது } \left[30\ \frac{(501+1)}{4}\right]$$

ஆவது அல்லது (376·5) ஆவது உறுப்பின் அளவு

= 33 (தோராயமாக)

(iii) பத்துமானங்கள் :

$$D_7 = 7\left[\left(\frac{n+1}{10}\right)\right] \text{ஆவது அல்லது} \left[7\ \frac{(501+1)}{10}\right]\text{ஆவது}$$

அல்லது (351·4) ஆவது உறுப்பின் அளவு

= 33 (தோராயமாக)

$$D_5 = \left[5\left(\frac{n+1}{10}\right)\right] \text{ஆவது அல்லது} \left[5\ \frac{(501+1)}{10}\right]\text{ஆவது}$$

= அல்லது (251) ஆவது உறுப்பின் அளவு

= 31 (தோராயமாக)

$$D_4 = \left[4\ \frac{(n+1)}{10}\right] \text{ஆவது அல்லது} \left[4\ \frac{(501+1)}{10}\right]$$

ஆவது அல்லது (200·8) ஆவது உறுப்பின் அளவு

= 31 (தோராயமாக)

(iv) அறுமானம் :

$$H_5 = \left[5\left(\frac{n+1}{6}\right)\right] \text{ஆவது அல்லது} \left[5\ \frac{(501+1)}{6}\right]$$

ஆவது அல்லது (418·3) ஆவது உறுப்பின் அளவு

= 34 (தோராயமாக)

(v) எண்மானங்கள் :

$O_3 = \left[3\,\frac{(n+1)}{8} \right]$ ஆவது அல்லது $\left[3 \times \frac{(501+1)}{8} \right]$

ஆவது அல்லது $(188{\cdot}2)$ ஆவது உறுப்பின் அளவு

$= \mathbf{31}$ (தோராயமாக)

$O_7 = \left[7 \left(\frac{n+1}{8} \right) \right]$ ஆவது அல்லது $\left[7\,\frac{(501+1)}{8} \right.$

ஆவது அல்லது $(439{\cdot}2)$ ஆவது உறுப்பின் அளவு

$= \mathbf{35}$ (தோராயமாக)

$O_5 = \left[5 \left(\frac{n+1}{8} \right) \right]$ ஆவது அல்லது $\left[5\,\frac{(501+1)}{8} \right]$

ஆவது அல்லது $(313{\cdot}7)$ ஆவது உறுப்பின் அளவு

$= \mathbf{32}$ (தோராயமாக)

(vi) நூற்றுமானங்கள் :

$P_{15} = \left[15 \left(\frac{n+1}{100} \right) \right]$ ஆவது அல்லது $\left[15 \times \frac{(501+1)}{100} \right]$

ஆவது அல்லது $(75{\cdot}3)$ ஆவது உறுப்பின் அளவு

$= \mathbf{29}$ (தோராயமாக)

$P_{10} = \left[10 \left(\frac{n+1}{100} \right) \right]$ ஆவது அல்லது $\left[10 \left(\frac{501+1}{100} \right) \right]$

ஆவது அல்லது $(50{\cdot}2)$ ஆவது உறுப்பின் அளவு

$= \mathbf{28}$ (தோராயமாக)

$P_{20} = \left[20 \left(\frac{n+1}{100} \right) \right]$ ஆவது அல்லது $\left[20 \left(\frac{501+1}{100} \right) \right]$

ஆவது அல்லது $(100{\cdot}4)$ ஆவது உறுப்பின் அளவு

$= \mathbf{30}$ (தோராயமாக)

$P_{40} = \left[40 \left(\frac{n+1}{100} \right) \right]$ ஆவது அல்லது $(200{\cdot}8)$ ஆவது உறுப்பின் அளவு

$= \mathbf{31}$ (தோராயமாக)

$$P_{60} = \left[60\left(\frac{n+1}{100}\right)\right]\text{ஆவது அல்லது } (301\cdot2)\text{ஆவது உறுப்பின் அளவு}$$

$$= 32 \text{ (தோராயமாக)}$$

$$P_{90} = \left[90\left(\frac{n+1}{100}\right)\right]\text{ஆவது அல்லது } (451\cdot8)\text{ஆவது உறுப்பின் அளவு}$$

$$= 35 \text{ (தோராயமாக)}$$

மாதிரி 77

கீழ்க் காணும் பட்டியல் இந்தியாவின் ஒரு பகுதியிலுள்ள ஆண், பெண் மக்கள் தொகையின் அலைவெண் பரவலைத் தருகிறது. இடைநிலையையும் கால்மான வயதுகளையும் காண்.

வயதுப் பிரிவு	ஆண்	பெண்
0— 9	2756	2787
10—19	2124	2032
20 –29	1677	1724
30—39	1481	1485
40—49	1021	1022
50—59	610	579
60—69	245	269
70—79	67	78
80—89	16	20
90—99	3	4
மொத்தம்	10,000	10,000

(ஐ. சி. எஸ். —1938)

தீர்வு :

இடைவெளி விட்ட பிரிவுகளை இடைவெளி அற்ற பிரிவுகளாக மாற்றி இடைநிலை கால்மானங்கள் காணவேண்டும்,

பிரிவு	ஆண்		பெண்	
	அலை வெண் f	குவி அலைவெண் $c.f$	அலை வெண் f	குவி அலைவெண் $c.f$
0— 9·5	2756	2756	2787	2787
9·5—19·5	2124	4880	2032	4819
19·5—29·5	1677	6557	1728	6543
29·5—39·5	1481	8038	1485	8028
39·5—49·5	1021	9059	1022	9050
49·5—59·5	610	9669	579	9629
59·5—69·5	245	9914	269	9898
69·5—79·5	67	9981	78	9976
79·5—89·5	16	9997	20	9996
89·5—99·5	3	10,000	4	10,000
	10,000		10,000	10,000

ஆண்கள் :

இடைநிலை $M_e = l_1 + \dfrac{\left(\dfrac{n+1}{2}\right) - m}{f} \times C$

$= 19{\cdot}5 + \dfrac{5000{\cdot}5 - 4880}{1677} \times 10$

$= 20{\cdot}22$ ஆண்டுகள்

முதல் கால்மானம் $Q_1 = l_1 + \dfrac{\left(\dfrac{n+1}{4}\right) - m}{l} \times C$

$= 0 + \dfrac{2500{\cdot}25 - 0}{2756} \times 10$

$= 9{\cdot}01$ ஆண்டுகள்

$$Q_3 = l_1 + \frac{3\left(\frac{n+1}{4}\right) - m}{l} \times C$$

$$= 29{\cdot}5 + \frac{7500{\cdot}75 - 6557}{1481} \times 10$$

$$= \mathbf{35{\cdot}87} \text{ ஆண்டுகள்}$$

பெண்கள் :

இடைநிலை $M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$

$$= 19{\cdot}5 + \frac{5000{\cdot}5 - 4819}{1724} \times 10$$

$$\mathbf{20{\cdot}55} \text{ ஆண்டுகள்}$$

கால்மானங்கள் $Q_1 = l_1 + \frac{\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$

$$= 0 + \frac{2500{\cdot}25 - 0}{2787} \times 10$$

$$= \mathbf{8{\cdot}9} \text{ ஆண்டுகள்}$$

$$Q_3 = l_1 + \frac{3\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$$

$$= 29{\cdot}5 + \frac{7500{\cdot}75 - 6543}{1485} \times 10$$

$$= \mathbf{35{\cdot}47} \text{ ஆண்டுகள்}$$

மாதிரி 78

(i) இடைநிலை

(ii) கால்மானங்கள்

(iii) ஆறுவது பத்துமானம்

(iv) எழுபதாவது நூற்றுமானம்

ஆகியவற்றைக் கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்குக் கணக்கிடுக.

80	70	60	50	40	30	20	10	-க்குக் குறைவான மதிப்பெண்கள்
100	90	80	60	32	20	13	5	மாணவர்கள் எண்ணிக்கை

(பி.காம் — இராஜஸ்தான் —1951)

தீர்வு :

கொடுக்கப்பட்ட பட்டியலைச் சாதாரண அலைவெண் பரவலாக மாற்றவேண்டும். பின், தேவைப்பட்டவைகளைக் கணக்கிடலாம்.

இடைவெளிப் பிரிவு	அலைவெண் f	குவி அலைவெண் $c.f.$
0—10	5 — 0 = 5	5
10—20	13 — 5 = 8	13
20—30	20 — 1 ÷ 37	20
30—40	32 —20 = 12	32
40—50	60 —32 = 28	60
50—60	80 —60 = 20	80
60—70	90 —80 = 10	90
70—80	100 —90 = 10	100

இடைநிலை :

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{100+1}{2}\right)$ ஆவது

அல்லது (505)ஆவது உறுப்பின் மதிப்பு

(250·5)ஆவது மதிப்பு (40—50) என்ற பிரிவு இடைவெளியில் விழுகிறது.

$$\text{ஆகவே, } M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$$

$$= 40 + \frac{50{\cdot}5 - 32}{28} \times 10$$

$$= \mathbf{46{\cdot}6} \text{ மதிப்பெண்கள்}$$

(ii) கால்மானங்கள் :

முதல் கால்மானம் $Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது அல்லது $\left(\frac{100+1}{2}\right)$

ஆவது அல்லது (25·25) ஆவது உறுப்பின் மதிப்பெண்.

(252·5) ஆவது உறுப்பின் மதிப்பெண் (30—40) என்ற இடை வெளிப் பிரிவில் விழுகிறது.

ஆகவே,
$$Q_1 = l_1 + \frac{\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$$

$$= 30 + \frac{25{\cdot}25 - 20}{12} \times 10$$

$$= 34{\cdot}3 \text{ மதிப்பெண்கள்}$$

மூன்றுவது கால்மானம் $Q_3 = \left[3\left(\frac{n+1}{4}\right) \right]$

அல்லது $\left[3\left(\frac{100+1}{4}\right) \right]$ ஆவது

அல்லது (75·75) ஆவது உறுப்பின் மதிப்பாகும்.

(75·75) ஆவது உறுப்பின் மதிப்பெண் (50—60) என்ற இடை வெளிப் பிரிவில் விழுகிறது.

ஆகவே, $Q_3 = l_1 + \frac{3\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$

$$= 50 + \frac{(75{\cdot}75 - 60)}{20} \times 10$$

$$= 57{\cdot}875 \text{ மதிப்பெண்கள்}$$

(iii) பத்துமானம் :

ஆறுவது பத்துமானம் $D_6 = \left[6\left(\frac{n+1}{10}\right) \right]$ ஆவது அல்லது

$\left[6\left(\frac{100+1}{10}\right) \right]$ ஆவது அல்லது (60·6) ஆவது உறுப்பின் மதிப்பெண் ஆகும்.

(60·6) ஆவது உறுப்பின் மதிப்பெண் (50—60) என்ற இடைவெளிப் பிரிவில் விழுகிறது.

ஆகவே,
$$D_6 = l_1 + \frac{6\left(\frac{n+1}{10}\right) - m}{f} \times C$$
$$= 50 + \frac{60{\cdot}6-60}{20} \times 10$$
$$= 50{\cdot}3 \text{ மதிப்பெண்கள்}$$

(iv) நூற்றுமானம் :

70 ஆவது நூற்றுமானம் $= \left[70 \times \frac{(n+1)}{100} \right]$ ஆவது அல்லது

$\left[70\,\frac{(100+1)}{100} \right]$ ஆவது அல்லது (70·70) ஆவது உறுப்பின் மதிப்பாகும்.

(70·70) ஆவது உறுப்பின் மதிப்பு (50—60) என்ற இடைவெளிப் பிரிவில் விழுகிறது.

ஆகவே,
$$P_{70} = l_1 + \frac{70\left(\frac{n+1}{100}\right) - m}{f} \times C$$
$$= 50 + \frac{(70{\cdot}70-60)}{20} \times 10$$
$$= 55{\cdot}35 \text{ மதிப்பெண்கள்.}$$

மாதிரி 79

கீழ்க் காணும் பட்டியலில் உள்ள அலைவெண் பரவலுக்கு இடைநிலை, கால்மானங்கள் ஆகியவைகளைக் கணக்கிடுக.

வருமானம்	ஆட்களின் எண்ணிக்கை	வருமானம்	ஆட்களின் எண்ணிக்கை
ரூ. 30-க்குக் கீழ்	69	ரூ. 60-க்கு மேல் ரூ. 70-க்குக் கீழ்	58
ரூ. 30-க்கு மேல் ரூ. 40-க்குக் கீழ்	167	ரூ. 70-க்கு மேல் 80-க்குக் கீழ்	27
ரூ. 40-க்கு மேல் ரூ. 50-க்குக் கீழ்	207	ரூ. 80-க்கு மேல்	10
ரூ. 50-க்கு மேல் ரூ. 60-க்குக் கீழ்	65		
		மொத்தம்	603

(பி. காம்.—பம்பாய்—1942)

தீர்வு :

குவி அலைவெண் பரவல் கணக்கிட்டு இடைநிலை, கால்மானங்கள் ஆகியவைகளைக் கணக்கிடுகிறோம்.

வருமானம்	அலைவெண் f	குவி அலைவெண் $c.f$
ரூ. 30-க்குக் கீழ்	69	69
ரூ. 30—ரூ. 40	167	236
ரூ. 40—ரூ. 50	207	443
ரூ. 50—ரூ. 60	65	508
ரூ. 60—ரூ. 70	58	566
ரூ. 70—ரூ. 80	27	593
ரூ. 80-க்கு மேல்	10	603
	$n = 603$	

இடைநிலை : $$M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$$

$$= 40 + \frac{302+236}{207} \times 10$$

$$= 43{\cdot}2 \quad (\text{தோராயமாக})$$

காலமானங்கள் :

$Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது அல்லது $\left(\frac{603+1}{4}\right)$ ஆவது அல்லது (151) ஆவது ஆளின் வருமானம்.

(151) ஆவது ஆளின் வருமானம் (30—40) என்ற பிரிவில் விழுகிறது.

ஆகவே, $$Q_1 = l_1 + \frac{\left(\frac{n+1}{4}\right) - m}{f} \times C$$

$$= 30 + \frac{(151-69)}{167} \times 10$$

$$= 30 + \frac{82 \times 10}{167}$$

$$= 34{\cdot}9$$

ஆதலால் முதல் காலமான வருமானம் = ரூ. 34·9 (தோராயமாக)

மூன்றாவது காலமானம் $Q_3 = \left[3\left(\frac{n+1}{4}\right)\right]$ ஆவது அல்லது $\left[3\left(\frac{603+1}{4}\right)\right]$ ஆவது அல்லது (453) ஆவது ஆளின் வருமானம்.
453 ஆவது ஆளின் வருமானம் (50—60) என்ற பிரிவின் கீழ் வருகிறது.

ஆகவே, $$Q_3 = l_1 + \frac{\left[3\left(\frac{n+1}{4}\right)\right] - m}{f} \times C$$

$$= 50 + \frac{453-443}{65} \times 10$$

$$= 50 + \frac{10 \times 10}{65}$$

$$= 51{\cdot}5 \quad (\text{தோராயமாக})$$

ஆதலால் மூன்றாவது காலமான வருமானம் = ரூ. 51·5 (தோராயமாக)

மாதிரி 80

கீழ்க் காணும் பட்டியலுக்கு இடைநிலையைக் கணக்கிடுக.

கூலி (ரூபாயில்)	வேலையாட்களின் எண்ணிக்கை
100-க்கு மேல்	5
90-க்கு மேல்	17
80-க்கு மேல்	37
70-க்கு மேல்	43
60-க்கு மேல்	49
50-க்கு மேல்	49
40-க்கு மேல்	51

தீர்வு :

மேற்கண்ட பட்டியலைக் குவி அலைவெண் பரவலாக எழுதி இடைநிலையைக் காண்கிறோம்.

கூலி (ரூபாயில்)	அலைவெண் f	குவி அலைவெண் $c.f$
100-க்கு மேல்	5	5
90 — 100	12	17
80 — 90	20	37
70 — 80	6	43
60 — 70	6	49
50 — 60	0	49
40 — 50	2	51
	$n = 51$	

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{61+1}{2}\right)$ ஆவது அல்லது 26ஆவது வேலையாள் வாங்கும் கூலி. 26 ஆவது வேலையாள் வாங்கும் கூலி (80—90) என்ற கூலிப் பிரிவில் விழுகிறது.

இங்கு ஏறுவரிசையில் எழுதுவதற்குப் பதிலாக இறங்கு வரிசையில் உறுப்புகளை எழுதியுள்ளோம். ஆகவே, கீழ்க் கண்டவாறு சூத்திரத்தை மாற்றி எழுதி இடைநிலையைக் கணக்கிடுகிறோம்.

$$\text{இடைநிலை } M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$$

$$= 80 + \frac{[26-(51-37)]}{20} \times 10$$

$$= 80 + \frac{12 \times 10}{20}$$

= ரூ. 86

முகடு
(Mode)

மாதிரி 81

கீழ்க் காணும் எண்களின் முகட்டு எண்ணைக் கணக்கிடு.

32, 35, 32, 33, 35, 35, 36, 34 35, 33, 35, 32, 35, 37, 31.

தீர்வு :

கொடுத்த எண்களை ஏறுவரிசை மதிப்பில் எழுதினால்

31, 32, 32, 32, 33, 33, 34, 35, 35, 35, 35, 35, 35, 36, 37.

ஆகும்.

மேற்கண்ட வரிசையில் '35' என்ற எண் 6 தடவை வருகிறது. வேறு எந்த எண்ணும் 6 முறை வரவில்லை. ஆகவே, இங்கு முகட்டு எண் 35 எனக் கொள்கின்றோம்.

மாதிரி 82

கீழ்க் காணும் எண்களுக்கு முகட்டு எண்ணைக் கணக்கிடுக.

25, 15, 23, 40, 27, 25, 23, 25, 20. (எம். காம்.—ஆக்ரா.—1954)

தீர்வு :

ஏறுவரிசை மதிப்பில் மேற்கண்ட எண்களை எழுதினால்

15, 20, 23, 23, 25, 25, 25, 27, 40 ஆகும்.

இங்கு அதிகத் தடவை வரும் எண் '25' ஆகும். அதாவது, மற்ற எண்களை விட '25' ஒன்றுதான் கூடிய 3 தடவை வருகிறது. ஆகவே, இங்கு முகட்டு எண் '25' ஆகும்.

மாதிரி 83

கீழ்க் காணும் வரிசையில் முகட்டு அளவைக் கணக்கிடுக.

உறுப்பின் அளவு	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
அலைவெண்	3	8	10	12	16	14	10	8	17	5	4	1

(*பி. காம்.—நாக்பூர்*—1945)

தீர்வு:

கொடுக்கப்பட்ட பரவலில் உறுப்பு அளவு 10 *என்பதன் அலைவெண் அதிகமாக வருகிறது. அதே நேரத்தில்,* 9,11 *என்ற பக்கத்து உறுப்பு அளவுகளின் அலைவெண்கள் முறையே* 8,5 *என்பன உறுப்பு அளவு* '10' *ஐ முகட்டு அளவாக இருப்பதற்கு அதிக உதவி செய்யவில்லை. இங்கு* '6' *என்ற உறுப்பு அளவின் அலைவெண்* 16 *ஐ முகட்டு அளவை அலைவெண்ணாகக் கொள்வதற்கு அதன் பக்கத்து அலைவெண்கள் மிகவும் உதவி செய்கின்றன. இச் சிக்கலில் நல்ல தீர்வு கண்டு உண்மையான முகட்டு அளவைக் கணக்கிடத் தொகுதிசேர் முறையைப் பயன்படுத்துகிறோம்.*

தொகுதிசேர் முறையைப் பயன்படுத்தி முகடு காணல்

தொகுதிசேர் பட்டியல்

உறுப்பு அளவு	அலைவெண் I	II	III	IV	V	VI
2	3	11		21		
3	8		18		30	
4	10	22				38
5	12		28	42		
6	16	30			40	
7	14		24			32
8	10	18		35		
9	8		25		30	
10	17	22				26
11	5		9	10		
12	4	5				
13	1					

மேற்கண்ட பட்டியல் கீழ்க் காணும் முறைப்படி அமைக்கப் பட்டது.

முதல் அலைவெண்ணிலிருந்து ஆரம்பித்து *I* ஆவது பத்தியில் கொடுக்கப்பட்ட அலைவெண்கள் இரண்டு இரண்டாகக் கூட்டப் பட்டு *II* ஆம் பத்தியில் எழுதப்பட்டுள்ளது. முதல் அலை வெண்ணை விட்டு விட்டு *I* ஆவது பத்தியிலுள்ள மீத அலை வெண்களை இரண்டு இரண்டாகக் கூட்டி *III*ஆம் பத்தியில் எழுதப் பட்டுள்ளது. முதல் அலைவெண்ணிலிருந்து ஆரம்பித்து, *I* ஆம் பத்தியில் கொடுக்கப்பட்ட அலைவெண்களை மூன்று மூன்றாகக் கூட்டி *IV* ஆவது பத்தியில் எழுதப்பட்டுள்ளது. அதேபோல், முதல் அலைவெண்ணை விட்டுவிட்டு, *I* ஆவது பத்தியிலுள்ள மற்றைய அலைவெண்களை மூன்று மூன்றாகக் கூட்டி *V* ஆவது பத்தியில் எழுதப் பட்டுள்ளது பின் இரண்டு முதல் அலைவெண்களை *I* ஆம் பத்தியில் விட்டுவிட்டு, மீத அலைவெண்கள், மூன்று மூன்றாகக் கூட்டி *VI* ஆம் பத்தியில் எழுதப்பட்டுள்ளது. இவைகள் யாவற் றிலும் அதிக அலைவெண் கூடுதல் தடித்த எழுத்துக்களில் எழுதப் பட்டுள்ளது.

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்திகள்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட உறுப்புகளின் அளவு
I	10
II	6, 7
III	5, 6,
IV	5, 6, 7
V	6, 7, 8
VI	4, 5, 6

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் '6' என்ற உறுப்பு அளவு அதிக எண்ணிக்கையில் (5 தடவை) வருகிறது எனத் தெரி கிறது.

ஆகவே, இங்கு '6' என்பதே முகட்டு அளவாகும்.

மாதிரி 84

கீழ்க் காணும் வரிசைக்கு முகட்டைக் கணக்கிடுக.

அளவு	அலைவெண்	அளவு	அலைவெண்
5	48	13	52
6	52	14	41
7	56	15	57
8	60	16	63
9	63	17	52
10	57	18	48
11	55	19	40
12	50		

(பி. காம்.—அலகாபாத்—1943)

தீர்வு :

தொகுதிசேர் முறையில் முகடு காணல் :

தொகுதிசேர் பட்டியல்

அளவு	அலைவெண் I	II	III	VI	V	VI
5	48	100		156		
6	52		108		168	
7	56	116				**179**
8	60		**123**	**180**		
9	**63**	**120**			175	
10	57		112			162
11	55	105		157		
12	50		102		143	
13	52	93				150
14	41		98	161		
15	57	**120**			172	
16	**63**		115			163
17	52	100		140		
18	48		88			
19	40					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்திகள்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட உறுப்புகளின் அளவு
I	9, 16.
II	9, 10, 15, 16
III	8, 9
IV	8, 9, 10
V	9, 10, 11
VI	7, 8, 9

மேற்கண்ட பகுப்பாய்வு பட்டியலின் மூலம் '9' என்ற உறுப்பு அளவு அதிக எண்ணிக்கையில் (6 தடவைகள்) வருகிறது.

ஆகவே, இங்கு '9' என்பதே முகட்டு அளவாகும்.

மாதிரி 85

கீழ்க் காணும் பட்டியலுக்கு முகட்டைக் கணக்கிடுக.

உறுப்பு அளவு	அலை வெண்	உறுப்பு அளவு	அலை வெண்
4	2	9	14
5	5	10	14
6	8	11	15
7	9	12	11
8	12	13	13

தீர்வு :

தொகுதி சேர் முறைப்படி முகடு கணக்கிடல் :

தொகுதிசேர் பட்டியல்

உறுப்பு அளவு	அலைவெண் I	II	III	IV	V	VI
4	2	7		15		
5	5		13		22	
6	8	17				29
7	9		21	35		
8	12	26			40	
9	14		28			43
10	14	29		40		
11	15		26		39	
12	11	24				
13	13					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்திகள்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட உறுப்புகளின் அளவு
I	11
II	10, 11
III	9, 10
IV	10, 11, 12
V	8, 9, 10
VI	9, 10, 11

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் '10' என்ற உறுப்பு அளவு அதிக எண்ணிக்கையில் (5 தடவை) வருகிறது எனத் தெரிகிறது.

ஆகவே, இங்கு '10' என்பதே முகட்டு அளவாகும்.

மாதிரி 86

கீழ்க் கண்ட வரிசைக்கு முகடு காண்.

உயரம்	அலைவெண்	உயரம்	அலை வெண்
5′ 6″	1	5′ 11″	1
5′ 7″	2	6′ 0″	2
5′ 8″	4	6′ 1″	1
5′ 9″	3	6′ 3″	1
5′ 10″	2	6′ 3″	1

(எம். ஏ-ஆக்ரா-1937)

தீர்வு :

தொகுதி சேர் முறையில் முகடு கணக்கிடல் :

தொகுதிசேர் பட்டியல்

உயரம் (அங்குலத்தில்)	அலைவெண்					
	I	II	III	IV	V	VI
66	1	3 (66–67)		7 (66–68)		
67	2		6 (67–68)		9 (67–69)	9 (67–69)
68	4	7 (68–69)				
69	3		5 (69–70)	6 (69–71)		
70	2	3 (70–71)			5 (70–72)	
71	1		3 (71–72)			
72	2	3 (72–73)		4 (72–74)		4 (72–74)
73	1		2 (73–74)		4 (73–75)	
74	1	2 (74–75)				
75	1					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்திகள்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட உறுப்புகளின் அளவு
I	68
II	68, 69
III	67, 68
Vi	66, 67, 68
V	67, 68, 69
IV	68, 69, 70,

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் '68' என்ற உறுப்பு அளவு அதிக எண்ணிக்கையில் (5 தடவைகள்) வருகிறது.

ஆகவே, இங்கு '68' அல்லது 5/ 8// என்னும் உயர அளவே முகட்டு அளவாகும்.

மாதிரி 87

கீழ்க் காணும் வரிசையில் முகட்டு அளவைத் தொகுதி சேர் முறையில் காண்.

உறுப்பின் அளவு	1	2	3	4	5	6	7	8	9
அலைவெண்	14	12	15	16	15	16	14	14	15

(சென்னை—பல்கலை.)

தீர்வு :

தொகுதிசேர் முறையில் முகடு காணல்.

தொகுதிசேர் பட்டியல்

உறுப்புகளின் அளவு	அலைவெண்					
	I	II	III	IV	V	VI
1	14	26				
2	12		27	41		
3	15	31			43	
4	16		31			46
5	15	31		47		
6	16		30		45	
7	14	28				44
8	14		29	43		
9	15					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்திகள்	அதிர அலைவெண் கூடுதலைக் கொண்ட உறுப்புகளின் அளவு
I	4, 6
II	3, 4, 5, 6
III	4, 5
IV	4, 5, 6
V	5, 6, 7
VI	3, 4, 5

முதல் 1-வது பத்தியிலுள்ள அலைவெண்களை விட்டுவிட்டு மீதமுள்ள பத்திகளில் பகுப்பாய்வின் மூலம் '5' என்ற உறுப்பளவு அதிக எண்ணிக்கையில் (5 தடவை) வருகிறது. ஆகவே, இங்கு '5' என்பதே முகட்டு அளவாகும். இது பரவலில் பார்த்த அளவில் கண்டறிய இயலாமல் இருப்பதைக் கவனிக்கலாம்.

மாதிரி 38

தொகுதிசேர் முறையின்படி கீழ்க் காணும் பட்டியலுக்கு முகட்டு அளவைக் கணக்கிடுக.

அளவு	அலைவெண்	அளவு	அலைவெண்
1	52	8	52
2	56	9	41
3	60	10	57
4	63	11	63
5	57	12	52
6	55	13	48
7	50		

(அண்ணாமலை-பல்கலை)

தீர்வு :

அளவு	அலைவெண்					
	I	II	III	IV	V	VI
1	52	108				
2	56		116	168		
3	60	**123**			**179**	
4	**63**		**120**			**180**
5	57	112		**175**		
6	55		105		162	
7	50	102				157
8	52		93	143		
9	41	98			150	
10	57		**120**			161
11	**63**	115		172		
12	52		100		163	
13	48					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்திகள்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட உறுப்புகளின் அளவு												
I				4							11		
II			3	4									
III				4	5								
IV				4	5	6							
V		2	3	4									
VI			3	4	5								

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் '4' என்ற அளவு அதிக எண்ணிக்கையில் (6 தடவை) வருகிறது. ஆகவே இங்கு அளவு '4' என்பதே முகட்டு அளவாகும்.

மாதிரி 89

கீழ்க் காணும் பட்டியல் ஒரு தொழிற் சாலையின் ஆயிரம் கூலியாட்களின் தினக் கூலிப் பரவலைத் தருகிறது. முகட்டுக் கூலியைக் கணக்கிடுக.

தினக்கூலி (காசுகளில்)	கூலியாட்கள் எண்ணிக்கை	தினக்கூலி (காசுகளில்)	கூலியாட்கள் எண்ணிக்கை
20	3	140	204
40	13	160	139
60	43	180	69
80	102	200	25
100	175	220	6
120	220	240	1
		மொத்தம்	1000

(எம். ஏ.—அலகாபாத்)

தீர்வு :

தொகுதிசேர் முறையில் முகடு காணல் :

தொகுதிசேர் பட்டியல்

தினக் கூலி (காசுகளில்)	அலைவெண்					
	I	II	III	IV	V	VI
20	3	16		59		
40	13		56		158	
60	43	145				320
80	102		277	497		
100	175	395			599	
120	**220**		**424**			**563**
140	204	343		412		
160	139		208		233	
180	69	94				100
200	25		31	32		
220	6	7				
240	1					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்திகள்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட உறுப்புகளின் கூலிகள் (காசுகளில்)
I	120
II	100, 120
III	120, 140
IV	80, 100, 120
V	100, 120, 140
VI	120, 140, 160

முன்கண்ட பகுப்பாய்வுப் பட்டியல் மூலம் '120' காசுகள் என்ற தினக்கூலி அதிக எண்ணிக்கையில் (6 தடவை) வருகிறது. ஆகவே, இங்கு 120 காசுகள் அல்லது 1 ரூபாய் 20 காசுகள் என்னும் தினக் கூலியே முகட்டு அளவாகும்.

மாதிரி 90

கீழ்க்காணும் அலைவெண் பரவலுக்கு முகடு காண்.

பிரிவு	0—7	7—14	14—21	21—28	28—35	35—42	42—49
அலை வெண்	19	25	36	72	51	43	28

தீர்வு :

இங்கு அதிக அலைவெண் = 72 ஆகும்.

இந்த அலைவெண் (21—28) என்ற பிரிவின்கீழ் வருவதாகும்.

முதல் சூத்திரம் :

$$\text{முகடு காணும் சூத்திரம் } M_0 = l_1 + \frac{f_2}{f_1 + f_2} \times C$$

ஆகவே,

$$M_0 = 21 + \frac{51}{36+51} \times 7$$

$$= 25{\cdot}103$$

இங்கு, l_1 = முகட்டுப் பிரிவின் கீழ் எல்லை = 21

f_1 = முகட்டுப் பிரிவிற்கு முந்தைய பிரிவின் அலைவெண் = 36

f_2 = முகட்டுப் பிரிவிற்குப் பிந்தைய பிரிவின் அலைவெண் = 51

C = இடைவெளிப் பிரிவு = 7 ஆகும்.

பொதுவாகப் பயன்படுத்தப்படும் இரண்டாவது சூத்திரம் :

$$M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

இங்கு, l_1 = முகட்டுப் பிரிவின் கீழ் எல்லை

f_m = முகட்டுப் பிரிவின் அலைவெண்

f_1 = முகட்டுப் பிரிவிற்கு முந்தைய பிரிவின் அலைவெண்

f_2 = முகட்டுப் பிரிவிற்குப் பிந்தைய பிரிவின் அலைவெண்

C = பிரிவு இடைவெளி.

ஆகவே, முகடு $M_o = 21 + \frac{72-36}{144-36-51} \times 7$

$= 21 + 4 \cdot 4$

$= 25 \cdot 4$

மாதிரி 91

கீழ்க்காணும் புள்ளி விவரங்களுக்கு முகட்டுச் சம்பளத்தைக் காண்.

வாரச் சம்பளம்				சம்பளம் வாங்கு பவர் எண்ணிக்கை
S. d.		S. d.		
12—6	- லிருந்து	17—6	வரை	4
17—6	,,	22—6	,,	44
22—6	,,	27—6	,,	38
27—6	,,	32—6	,,	28
32—6	,,	37—6	,,	6
37—6	,,	42—6	,,	8
42—6	,,	47—6	,,	12
47—6	,,	52—6	,,	2
52—6	,,	57—6	,,	2

(பி.காம்—ராஜஸ்தான்—1949)

தீர்வு :

இங்கு உயர் அளவு அலைவெண் 44 ஆகும்.

அலைவெண் 44-ன் முகட்டுப் பிரிவு $17\frac{1}{2}$—$22\frac{1}{2}$ என்பதாகும்.

இங்கு, $l_1 = 17\frac{1}{2} = \frac{35}{2}$ s.

$l_2 = 22\frac{1}{2} = \frac{45}{2}$ s.

$f_m = 44$

$f_1 = 4$

$f_2 = 38$

$C = 5$ ஆகும்.

ஆகவே, முகடு $M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$

$$= \frac{35}{2} + \frac{(44-4)}{(2\times 44)-4-38} \times 5$$

$$= \frac{35}{2} + \frac{(40\times 5)}{46}$$

$$= s.\ 21\frac{39}{46}$$

ஆகையால் முகடு $= s.\ \mathbf{21\frac{39}{46}}$

மாதிரி 92

கீழ்க்காணும் பட்டியலின் புள்ளி விவரங்களுக்கு முகடு காண்.

மதிப்பெண்கள்	1—5	6—10	11—15	16—20	21—25
மாணவர் எண்ணிக்கை	7	10	16	32	24
மதிப்பெண்கள்	26—30	31—35	36—40	41—45	—
மாணவர் எண்ணிக்கை	18	10	5	1	—

(பி.காம்.—அண்ணுமலே—1963)

தீர்வு :

இங்கு உயர் அளவு அலைவெண் 32 ஆகும். அலைவெண் 32-ன் முகட்டுப் பிரிவு 16—20 என்பதாகும்.

இங்கு, $l_1 = 15\cdot5$; $l_2 = 20\cdot5$

$f_m = 32$; $f_1 = 16$

$f_2 = 24$; $C = 4$

ஆகவே, முகடு $M_0 = l_1 + \dfrac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$

$$= 15\cdot5 + \frac{32-16}{64-16-24} \times 5$$

$$= 15\cdot5 + \frac{(16\times5)}{24} = 18\cdot83$$

$= \mathbf{18\cdot83}$ மதிப்பெண்கள் (தோராயமாக)

மாதிரி 93

கீழ்க்காணும் அலைவெண் பரவலுக்கு முகடு காண்.

பிரிவு	20—	21—	22—	23—	24—	25—	26—	27—	28—29
அலை வெண்	8	10	11	16	20	25	16	9	6

(எம்.ஏ.—அண்ணாமலை)

தீர்வு :

இங்கு உயர் அளவு அலைவெண் 25 ஆகும். அலைவெண் 25-ன் முகட்டுப் பிரிவு (25—26) என்பதாகும்.

இங்கு $l_1 = 25$

$f_m = 25$

$f_1 = 20$

$f_2 = 16$

$C = 1$

ஆகவே,

$$\text{முகடு } M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

$$= 25 + \frac{25-20}{50-20-16} \times 1$$

$$= 25 + \frac{(5\times1)}{14}$$

$$= 25 + 0{\cdot}35$$

$$= \mathbf{25{\cdot}35}$$ (தோராயமாக)

மாதிரி 94

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு முகடு காண்.

மதிப்பெண்கள்	2—4	4—6	6—8	8—10
மாணவர்கள் எண்ணிக்கை	20	40	20	10

தீர்வு :

I. முகடு காணும் முதல் சூத்திரம் :

$$\text{முகடு } M_0 = l_1 + \frac{f_2}{f_1+f_2} \times C$$

$$= 4 + \frac{30}{20+30} \times 2$$

$$= \mathbf{5{\cdot}4}$$ மதிப்பெண்கள் (தோராயமாக)

மேற்கண்ட பரவலுக்கு,

$$\text{இடைநிலை } M_e = \frac{11}{2}$$

$$\text{கூட்டுச் சராசரி } \bar{x} = \frac{28}{5}$$

II. முகடு காணும் இரண்டாவது சூத்திரம் :

முகடு M_0 = 3 இடைநிலை — 2 கூட்டுச் சராசரி

$$= (3\times 11\tfrac{1}{2}) - \left(2\times \frac{28}{5}\right)$$

$$= \frac{33}{2} - \frac{56}{5}$$

$$= \mathbf{5{\cdot}3}$$ மதிப்பெண்கள் (தோராயமாக)

III. பொதுவாகப் பயன்படுத்தப்படும் மூன்றாவது சூத்திரம் :

முகடு $M_o = l_1 + \dfrac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$

$= 4 + \dfrac{40-20}{80-20-30} \times 2$

$= 4 + \dfrac{20}{30} \times 2$

$= 4 + 1{\cdot}33$

$=$ **5.33** மதிப்பெண்கள் (தோராயமாக)

மாதிரி 95

கீழ்க் காணும் பட்டியல் 30 பி. காம். மாணவர்கள் வகுப்புத் தேர்வில் புள்ளியியல் பாடத்தில் வாங்கிய மதிப்பெண்களைத் தருகிறது.

(i) முகடு, (ii) இடைநிலை, (iii) கால்மானங்கள் ஆகியவற்றின் மதிப்புகளைக் கணக்கிடுக.

பதிவு எண்	மதிப் பெண்கள்	பதிவு எண்	மதிப் பெண்கள்	பதிவு எண்	மதிப் பெண்கள்
1	33	11	40	21	26
2	32	12	17	22	33
3	55	13	44	23	44
4	47	14	48	24	48
5	21	15	62	25	52
6	50	16	24	26	38
7	27	17	33	27	58
8	12	18	42	28	37
9	68	19	38	29	38
10	49	20	45	30	35

(பி.காம்.—அலகாபாத்—1938)

தீர்வு :

(i) தொகுதிசேர் முறையில் முகடு காணல் :

தொகுதிசேர் பட்டியல்

பதிவு எண்	அலைவெண்					
	I	II	III	IV	V	VI
1	33	65				
2	32		87	120		
3	55	102			134	
4	47		68			123
5	21	71		118		
6	50		77		98	
7	27	39				89
8	12		80	107		
9	**68**	**117**			129	
10	49		89			**157**
11	40	57		106		
12	17		61		101	
13	44	92				109
14	48		**110**	**154**		
15	62	86			134	
16	24		57			119
17	33	75		99		
18	42		80		113	
19	38	83				127
20	45		71	109		
21	26	59			104	
22	33		77			103
23	44	92		125		
24	48		100		**144**	
25	52	82				130
26	30		88	140		
27	58	95			**125**	
28	37		75			133
29	38	73		110		
30	35					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்தி எண்கள்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட உறுப்புகளின் பதிவு எண்கள்
I	9
II	9, 10
III	14, 15
IV	13, 14, 15
V	23, 24, 25
VI	9, 10, 11

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் பதிவு எண் '9' என்பதே அதிக எண்ணிக்கையில் (3 தடவை) வருகிறது. ஆகவே, இங்கு '9' என்பதே முகட்டுப் பதிவு எண் ஆகும்.

(ii) இடைநிலை காணல் :

வரிசை எண்	மதிப்பெண்கள்	வரிசை எண்	மதிப்பெண்கள்	வரிசை எண்	மதிப்பெண்கள்
1	12	11	33	21	47
2	17	12	35	22	48
3	21	13	37	23	48
4	24	14	38	24	49
5	26	15	38	25	50
6	27	16	40	26	52
7	30	17	42	27	55
8	32	18	44	28	58
9	33	19	44	29	62
10	33	20	45	30	68

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{30+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 15{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \dfrac{\text{15 ஆவது உறுப்பின் மதிப்பெண் + 16 ஆவது உறுப்பின் மதிப்பெண்}}{2}$

$= \dfrac{38+40}{2}$

= **39** மதிப்பெண்கள்

(iii) கால்மானங்கள் :

$Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது அல்லது $\left(\frac{30+1}{4}\right)$ ஆவது அல்லது (7·75) ஆவது உறுப்பின் மதிப்பு

= 7 ஆவது உறுப்பின் மதிப்பெண் + 0·75 (8ஆவது உறுப்பின் மதிப்பெண்—7 ஆவது உறுப்பின் மதிப்பெண்)

$= 30+0{\cdot}75\ (32-30)$

$= 30+(0{\cdot}75 \times 2)$

$= 30+1{\cdot}5$

= **31·5** மதிப்பெண்கள்

$Q_3 = 3\left(\frac{n+1}{4}\right)$ ஆவது அல்லது $\left[3\left(\frac{30+1}{4}\right)\right]$ ஆவது அல்லது (23·25) ஆவது உறுப்பின் மதிப்பெண்ணுகும்.

= 23 ஆவது உறுப்பின் மதிப்பெண் + 0·25 (24 ஆவது உறுப்பின் மதிப்பெண்—23 ஆவது உறுப்பின் மதிப்பெண்)

$= 33+0{\cdot}25\ (49-48)$

= **33·25** மதிப்பெண்கள்.

மாதிரி 96

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு முகடு காண்.

உறுப்பின் அளவு	0—5	5—10	10—15	15—20	20—25
அலைவெண்	20	24	32	28	20

உறுப்பின் அளவு	25—30	30—35	35—40	40—45
அலைவெண்	16	37	10	8

(பி.காம். — சென்னை)

தீர்வு :

தொகுதிசேர் முறையில் முகட்டுப் பிரிவைக் கணக்கிடல் :

தொகுதிசேர் பட்டியல்

பிரிவு இடைவெளி	அலைவெண்					
	I	II	III	IV	V	VI
0— 5	20	44		**76**		
5—10	24		**56**		**84**	
10—15	32	**60**				**80**
15—20	28		48	64		
20—25	20	36			73	
25—30	16		53			63
30—35	**37**	47		55		
35—40	10		18			
40—45	8					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்திகள்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட பிரிவுகள்					
I						(30—35)
II			(10—15)	(15—20)		
III		(5—10)	(10—15)			
IV	(0—5)	(5—10)	(10—15)			
V		(5—10)	(10—15)	(15—20)		
VI			(10—15)	(15—20)	(20—25)	
	1	3	5	3	1	1

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் பிரிவு (10—15) என்பதே அதிக எண்ணிக்கையில் (5 தடவைகள்) வருகிறது எனத் தெரிகிறது.

ஆகவே, இங்கு (10—15) என்பதே முகட்டுப் பிரிவாகும்.

$$\text{முகடு } M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

$$= 10 + \frac{32-24}{64-24-28} \times 5$$

$$= 10 + \frac{8 \times 5}{12}$$

$$= 10 + 3{\cdot}33$$

$$= 13{\cdot}33 \text{ (தோராயமாக)}$$

மாதிரி 97

(i) கீழ்க்காணும் அலைவெண் பரவலுக்கு முகடு காண்.

வயது	20—25	25—30	30—35	35—40
அலை வெண்	50	70	80	180
வயது	40—45	45—50	50—55	55—60
அலைவெண்	150	120	70	50

(ii) ஒரு சுமாரான கோட்டமுடைய வரிசையின் முகடு, கூட்டுச் சராசரிகள் முறையே 16, 20·2 அங்குலங்களாக இருந்தால் அவ்வரிசையின் மிகவும் பொருத்தமான இடை நிலையைக் காண்.

(பி.காம்.—டெல்லி—1960)

தீர்வு :

(i) தொகுதிசேர் முறையில் முகட்டுப் பிரிவைக் கணக்கிடல் :

தொகுதிசேர் பட்டியல்

பிரிவு இடை வெளி	அலைவெண் I	II	III	IV	V	VI
20—25	50	} 120 (20—30)				
25—30	70		} 150 (25—35)	} 200 (20—35)		
30—35	80	} 260 (30—40)			} 330 (25—40)	
35—40	180		} **330** (35—45)			} **410** (30—45)
40—45	150	} **270** (40—50)		} **450** (35—50)		
45—50	120		} 190 (45—55)		} **340** (40—55)	
50—55	70	} 120 (50—60)				} 240 (45—60)
55—60	50					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்தி எண்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட பிரிவுகள்				
I		35—40			
II			40—45	45—50	
III		35—40	40—45		
IV		35—40	40—45	45—50	
V			40—45	45—50	50—55
VI	30—35	35—40	40—45		
	1	4	5	3	1

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் பிரிவு '40—45' என்பதே அதிக எண்ணிக்கையில் (5 முறை) வருகிறது. ஆகவே இங்கு '40—45' என்பதே முகட்டுப் பிரிவாகும்.

ஆகவே, முகட்டுப் பிரிவு = **'40—45'**

முதல் சூத்திரம் :

$$\text{முகடு } M_0 = l_1 + \frac{f_2}{f_1+f_2} \times C$$

$$= 40 + \frac{120}{180+120} \times 5$$

$$= 40 + \frac{120 \times 5}{300}$$

= 42 ஆண்டுகள்

இரண்டாவது சூத்திரம் :

$$\text{முகடு } M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

$$= 40 + \frac{150-80}{300-180-120} \times 5$$

$$= 40 + \frac{30 \times 5}{0}$$

இங்கு, $\frac{30 \times 5}{0}$ என்பது, '0' ஆல் வகுப்பது கூடாது என்பதால் முதல் சூத்திரத்தின் மூலம் முன்பே கண்டுபிடித்துள்ள மதிப்பை முகட்டு மதிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக, $M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$ என்னும் சூத்திரம் f_m ஆனது f_1, f_2 ஆகியவைகளை விட அதிகமாக இருக்கும்பொழுது தான் கையாளப்படல் வேண்டும்.

பொதுவாக, பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் வரும் f_m ஐ இச் சூத்திரத்திற்குப் பயன்படுத்துவதில்லை.

எனவே, இச் சூத்திரத்தைப் பகுப்பாய்வுப் பட்டியலின்றி, இக் கணக்கில் பயன்படுத்தினால் கிடைக்கும் முகட்டின் வேறு மதிப்பு கீழ்வருமாறு :

$$M_0 = 35 + \frac{180-80}{360-80-150} \times 5$$

$$= 35 + \frac{500}{130}$$

$$= 35 + 3{\cdot}84$$

$$= 38{\cdot}84$$

$\therefore$ முகடு M_0 = **38·84** (இரண்டாவது சூத்திரம் மூலம்)

(ii) சுமாரான கோட்டமுடைய வரிசையின் கூட்டுச் சராசரி, இடைநிலை, முகடு ஆகிய மையநிலைப் போக்குச் சராசரி அளவைகளின் சார்பு காட்டும் சூத்திரம் :

முகடு M_0 = 3 இடைநிலை — 2 கூட்டுச் சராசரி

i.e., $M_0 = 3\,M_e - 2\bar{x}$

ஆகவே, 16 = 3 இடைநிலை—2 (20·2)

(கணக்கில் கொடுக்கப்பட்டதன்படி)

16 = 3 இடைநிலை—40·4

(அல்லது) 3 இடைநிலை = 16+40·4

= 56·4

∴ இடைநிலை $= \frac{56·4}{3}$

= **18·8** அங்குலங்கள்

மாதிரி 98

கீழே தரப்பட்டுள்ள குவி அலைவெண் பரவலை, சாதாரண அலைவெண் பரவலாக மாற்றியமைத்து,

(கூட்டுச் சராசரி—முகடு) = 3 (கூட்டுச் சராசரி—இடைநிலை) என்ற அனுபவநிலைச் சூத்திரத்தைப் பயன்படுத்தி முகட்டின் மதிப்பைக் காண்.

வருகை தராத நாட்களின் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை	வருகை தராத நாட்களின் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை
5-க்குக் கீழ்	29	30-க்குக் கீழ்	644
10-க்குக் கீழ்	224	35-க்குக் கீழ்	650
15-க்குக் கீழ்	465	40-க்குக் கீழ்	653
20-க்குக் கீழ்	582	45-க்குக் கீழ்	655
25-க்குக் கீழ்	634		

(பி.காம்—பம்பாய்—1940)

(பி.காம்—லக்னோ—1947)

தீர்வு :

கூட்டுச் சராசரி, இடைநிலை கணக்கிடல் :

பிரிவு	மத்திய மதிப்பு (x)	குவி அலை வெண் $c.f$	அலைவெண் (f)	படி விலக்கம் $d'x$ $\left(=\frac{x-12\cdot5}{5}\right)$	பெருக்கல் $fd'x$
0—5	2·5	29	29—0 = 29	—2	—58
5—10	7·5	224	224—29 = 195	—1	—195
10—15	12·5	465	465—224 = 241	0	0
15—20	17·5	582	582—465 = 117	1	117
20—25	22·5	634	634—582 = 52	2	104
25—30	27·5	644	644—634 = 10	3	30
30—35	32·5	650	650—644 = 6	4	24
35—40	37·5	653	653—650 = 3	5	15
40—45	42·5	655	655—653 = 2	6	12
			$n = 655$		$\Sigma fd'x = 49$

கூட்டுச் சராசரி :

$$\bar{x} = A + \frac{\Sigma fd'x}{n} \times C$$

$$= 12\cdot5 + \frac{49}{655} \times 5$$

$$= 12\cdot5 + 0\cdot4$$

$$= 12\cdot9 \text{ (தோராயமாக)}$$

இடைநிலை :

$M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{655+1}{2}\right)$ ஆவது அல்லது 328 ஆவது உறுப்பின் மதிப்பு

328 ஆவது உறுப்பின் மதிப்பு '10—15' என்ற பிரிவில் விழுகிறது.

$$\text{ஆகவே, இடைநிலை } M_e = l_1 + \frac{\frac{n+1}{2} - m}{f} \times C$$

$$= 10 + \frac{328-224}{241} \times 5$$

$$= 10 + 2{\cdot}2$$

$$= \mathbf{12{\cdot}2} \quad (\text{தோராயமாக})$$

முகடு :

முகடு காணும் அநுபவநிலைச் சூத்திரம் :

(கூட்டுச் சராசரி—முகடு) = 3 (கூட்டுச் சராசரி—இடைநிலை)

(அல்லது) 12·9 – முகடு = 3 (12·9—12·2)

முகடு = 12·9—2·1

= 10·8

ஆகவே, வருகை தராத நாள்களின் முகட்டு அளவு = **10·8** நாள்கள்

மாதிரி 99

கீழ்க் காணும் அலைவெண் பரவலின் முகட்டுப் பிரிவைத் தொகுதி சேர் முறைப்படி நிச்சயம் செய்துகொண்டு, பின்பு முகட்டு மதிப்பைக் காண்.

அலைவு	2—4	4—6	6—8	8—10	10—12	12—14	14—16
அலை வெண்	9	27	45	54	42	30	9

தீர்வு :

தொகுதி சேர் முறையில் முகட்டுப் பிரிவைக் கணக்கிடல்;

தொகுதிசேர் பட்டியல்

பிரிவு	அலைவெண் I	II	III	IV	V	VI
2—4	9	36		81		
4—6	27		72		126	
6—8	45	**99**				**141**
8—10	**54**		**96**	**126**		
10—12	42	72			81	
12—14	30		39			
14—16	9					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்தி எண்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட பிரிவுகள்				
I			8—10		
II		6—8	8—10		
III			8—10	10—12	
IV			8—10	10—12	12—14
V	4—6	6—8	8—10		
VI		6—8	8—10	10—12	
	1	3	6	3	1

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலம் பிரிவு '8—10' என்பதே அதிக எண்ணிக்கையில் (6 தடவை) வருகிறது எனத் தெரிகிறது. ஆகவே இங்கு '8—10' என்பதே முகட்டுப் பிரிவு எனக் கொள்ளலாம். ஆகவே,

முகட்டுப் பிரிவு = '8—10' ஆகும்.

முகட்டு மதிப்பைக் கணக்கிடல் :

முகடு $$M_o = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

$$= 8 + \frac{54-45}{108-45-42} \times 2$$

$$= 8 + \frac{9 \times 2}{21}$$

$$= \mathbf{8 \cdot 857}.$$

மாதிரி 100

கீழ்க் காணும் வயது அலைவெண் பரவல், பாட்னு பல்கலைக் கழகத்தில் 1937-ம் ஆண்டில், மெட்ரிக்குலேஷன், இன்டர்மீடியட் ஆகிய தேர்வுகள் எழுதிய மாணவர்களின் பரவலைத் தருகிறது.

வயது (ஆண்டு களில்)	12—	13—	14—	15—	—16	17—
மெட்ரிக் குலேஷன்	5	48	189	303	522	980
இன்டர் மீடியட்	—	—	—	5	45	87
வயது (ஆண்டு களில்	18—	19—	20—	21—	22—23	மொத் தம்
மெட்ரிக் குலேஷன்	981	794	515	474	—	4811
இன்டர் மீடியட்	127	150	155	127	175	871

மெட்ரிக்குலேசன் தேர்வு எழுதிய மாணவர்களின்,

(i) இடைநிலை (ii) முகட்டு வயதுகளைக் கணக்கிட்டு, அவற்றை இன்டர்மீடியட் தேர்வு எழுதிய மாணவர்கள் வயதுடன் ஒப்பிட்டுக் காட்டுக.

(எம்.ஏ-பாட்னு—1940)

தீர்வு

மெட்ரிக்குலேஷன், இன்டர்மீடியட் தேர்வு எழுதியவர்களின் இடைநிலை வயது கணக்கிடல் :

வயது ஆண்டு களில்	மெட்ரிக்குலேஷன்		இன்டர்மீடியட்	
	அலை வெண் (f)	குவி அலை வெண் $(c. f)$	அலை வெண் (f)	குவி அலை வெண் $(c. f)$
12—13	5	5	—	—
13—14	48	53	—	—
14 - 15	189	242	—	—
15—16	303	545	5	5
16—17	522	1067	45	50
17—18	980	2047	87	137
18—19	981	3028	127	264
19—20	794	3822	150	414
20—21	515	4337	155	569
21—22	474	4811	127	696
22—23	—	4811	175	871

இடைநிலைகள்

மெட்ரிக்குலேஷன் எழுதியவர்கள் :

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{4811+1}{2}\right)$ ஆவது அல்லது (2406) ஆவது உறுப்பு மதிப்பு. (2406) ஆவது உறுப்பு மதிப்பு '18—19' என்ற பிரிவில் விழுகிறது.

$$\text{ஆகவே,} \quad M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right)-m}{f} \times C$$

$$= 18 + \frac{2406-980}{981} \times 1$$

$$= 18 + 1{\cdot}4$$

$$= \mathbf{19{\cdot}4}$$ **ஆண்டுகள்** (தோராயமாக)

இன்டர்மீடியட் எழுதியவர்கள் :

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{871+1}{2}\right)$ ஆவது அல்லது (436)ஆவது உறுப்பு மதிப்பு. 436 ஆவது உறுப்பு மதிப்பு '20 –21' என்ற பிரிவில் விழுகிறது.

ஆகவே $$M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$$

$$= 20 + \frac{(436-414)}{155} \times 1$$

$$= 20 + 0{\cdot}14$$

$$= \mathbf{20{\cdot}14}$$ **ஆண்டுகள்** (தோராயமாக)

முகடுகள்

மெட்ரிக்குலேஷன் :

பார்த்த அளவிலேயே முகட்டுப் பிரிவு '18—19' எனக் காண்கிறோம்.

ஆகவே $$M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

$$= 18 + \frac{981-980}{1962-980-764} \times 1$$

$$= \mathbf{18{\cdot}005}$$ **ஆண்டுகள்** (தோராயமாக)

இன்டர் மீடியட் :

இங்கு முகட்டுப் பிரிவை முதலில் தொகுதிசேர் முறையில் காணவேண்டும்.

தொகுதிசேர் பட்டியல்

வயது (ஆண்டு களில்)	அலைவெண்					
	I	II	III	IV	V	VI
12—13	—					
13-14	—					
14—15	—					
15—16	5	50		137		
16—17	45		132		259	
17—18	87	214				364
18—19	127		277	**432**		
19—20	150	305			**432**	
20—21	155		**282**			**457**
21—22	127	302				
22—23	**175**					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்தி எண்	அதிக அலைவெண் கூடுதலைக் கொண்ட பிரிவுகள்				
I					22—23
II		19—20	20—21		
III			20—21	21—22	
IV	18—19	19—20	20—21		
V		19—20	20—21	21—22	
VI			20—21	21—22	22—23
	1	3	5	3	2

மேற்கண்ட பகுப்பாய்வுப் பட்டியலின் மூலப் பிரிவு '20—21' என்பதே அதிக எண்ணிக்கையில் (5 தடவை) வந்துள்ளது எனத் தெரிகிறது. ஆகவே, இங்கு '20—21' என்பதே முகட்டுப் பிரிவாகும்.

ஆகவே, முகடு $M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$

$$= 20 + \frac{155-150}{310-155-127} \times 1$$

$$= 20 + \frac{5}{28}$$

$$= 20 + 0{\cdot}18$$

= **20·18** ஆண்டுகள் (தோராயமாக)

பெருக்குச் சராசரி
(Geometric Mean)

மாதிரி 101

4, 8, 16 என்ற எண்களின் பெருக்குச் சராசரி என்ன?

தீர்வு :

4, 8, 16 என்ற எண்களின் பெருக்குச் சராசரி

$$\text{G.M.} = (4 \times 8 \times 16)^{\frac{1}{3}}$$

$$= (8 \times 8 \times 8)^{\frac{1}{3}}$$

$$= \mathbf{8.}$$

மாதிரி 102

கீழ்க் காணும் எண்களின் பெருக்குச் சராசரியைக் காண் :

4·5, 250·5, 12·0, 119·5, 30·0, 42·0, 75·0, 35·4

தீர்வு :

x	$\log x$
4·5	0·6532
250·5	2·3979
12·0	1·0792
119·5	2·0792
30·0	1·4771
42·0	1·6232
75·0	1·8751
35·4	1·5490
$n = 8$	12·7339

$$G = \left(\frac{\Sigma \log x_i}{n}\right)\text{-ன் எதிர் மடக்கை}$$

$$= \left(\frac{12{\cdot}7339}{8}\right)\text{-ன் எதிர் மடக்கை}$$

$$= 1{\cdot}6\text{-ன் எதிர் மடக்கை} = \mathbf{39{\cdot}81}$$

மாதிரி 103

கீழே 14 குடும்பங்களின் ஆண்டு வருமானம் ரூபாயில் தரப்பட்டுள்ளது. பெருக்குச் சராசரியைக் கணக்கிடுக.

180, 250, 490, 120, 1400, 7000, 1050

150, 360, 100, 80, 200, 500, 240.

தீர்வு :

பெருக்குச் சராசரி கணக்கிடல் :

ஆண்டு வருமானம் (ரூபாயில்) x	$\log x$	ஆண்டு வருமானம் (ரூபாயில்) x	$\log x$
180	2·2553	150	2·1761
240	2·3979	360	2·5563
490	2·6902	100	2·0000
120	2·0792	80	1·9031
1,400	3·1461	200	2·3010
7,000	3·8451	500	2·6990
1,050	3·0212	240	2·3802
		$n = 14$	$\Sigma \log x = 35{\cdot}4507$

பெருக்குச் சராசரி $G = \dfrac{\Sigma \log x}{n}$ -ன் எதிர் மடக்கை

$$= \frac{34 \cdot 4507}{14}\text{ -ன் எதிர் மடக்கை}$$

= 2·5322 -ன் எதிர் மடக்கை

= 340·6

ஆண்டு வருமானத்தின் பெருக்குச் சராசரி = ரூ. **340·6**

மாதிரி 104

20 குடும்பங்களின் மாத வருவாய் ரூபாய்களில் கீழ் வருமாறு :

2000, 35, 400, 15, 40, 1500, 300, 6, 901, 250, 20, 12, 450, 10, 150, 8, 25, 30, 1200, 60.

(பி.காம்.—அண்ணுமலை)

(பி.காம்.—அலகாபாத்—1941)

தீர்வு :

x	$\log x$	x	$\log x$
2000	3·3010	20	1·3010
35	1·5441	12	1·0792
400	2·6021	450	2·6532
15	1·1761	10	1·0000
40	1·6021	150	2·1761
1500	3·1761	8	0·9031
300	2·4771	25	1·3979
6	0·7782	30	1·4771
901	2·9547	1200	3·0792
250	2·3979	60	1·7782
		$n = 20$	38·8544

பெருக்குச் சராசரி $G = \dfrac{\Sigma \log x}{n}$ -ன் எதிர் மடக்கை

$= \dfrac{38{\cdot}8544}{20}$ -ன் எதிர் மடக்கை

= 1·94272 -ன் எதிர் மடக்கை

= ரூ. **87·64**

மாதிரி 105

'இந்திய இம்பீரியல் வங்கி'யின் பங்குகளின் சந்தை மதிப்பு 4, சனவரி 1933-லிருந்து 30 டிசம்பர் 1933 வரை கீழே கொடுக்கப் பட்டுள்ளது. (வாங்கிய மதிப்பு ரூ. 500)

1235,	1235,	1236·5,	1261·5,	1266·5
1166,	1190,	1176,	1160,	1186
1221·5,	1220,	1234,	1230,	1235
1236·5,	1232·5,	1251·5,	1244,	1231·5
1216·5,	1216·5,	1221·5,	1221·5,	1205
1184,	1196,	1212·5,	1207,	1192
1195,	1206,	1201,	1196,	1198
1208·5,	1202·5,	1234·5,	1234·5,	1225
1230,	1220,	1220·5,	1220·5,	1240
1252·5,	1246,	1246·5,	1246·5,	1230·5

(i) கூட்டுச் சராசரி, (ii) பெருக்குச் சராசரி

ஆகியவற்றை மேற்கண்ட வரிசைக்குக் காண்.

(புள்ளியியல்—கோசும், சௌதிரியும்.ப. 152)

தீர்வு :

கூட்டுச் சராசரி கணக்கிடல் :

1235	1235	1236·5	1261·5	1266·5
1166	1190	1176	1160	1186
1221·5	1220	1234	1230	1235
1236·5	1232·5	1251·5	1244	1231·5
1216·5	1216·5	1221·5	1221·5	1205
1184	1196	1212·5	1207	1192
1195	1206	1201	1196	1198
1208·5	1202·5	1234·5	1234·5	1225
1230	1220	1220·5	1220·5	1240
1252·5	1246	1246·5	1246·5	1230·5
12145·5	12164·5	12234·5	12221·5	12189·5

மொத்தம் $= 60955{\cdot}5$

கூட்டுச் சராசரி $= \dfrac{60955{\cdot}5}{50}$

$= \mathbf{1219{\cdot}11}$

பெருக்குச் சராசரி கணக்கிடல் :

log x				
3·0916	3·0916	3·0923	3·1011	3·1028
3·0667	3·0755	3·0704	3·0645	3·0741
3·0871	3·0864	3·0903	3·0899	3·0916
3·0924	3·0910	3·0976	3·0948	3·0906
3·0853	3·0853	3·0871	3·0871	3·0810
3·0340	3·0777	3·0839	3·0817	3·0762
3·0773	3·0812	3·0795	3·0777	3·0784
3·0823	3·0802	3·0917	3·0917	3·0882
3·0899	3·0864	3·0867	3·0867	3·0934
3·0979	3·0955	3·0959	3·0959	3·0902
30·8045	30·8508	30·8754	30·8711	30·8665

$\Sigma \log x = 154{\cdot}2683$

பெருக்குச் சராசரி $G = \dfrac{\Sigma \log x}{n}$ -ன் எதிர் மடக்கை

$= \dfrac{154{\cdot}2683}{50}$ -ன் எதிர் மடக்கை

$= 3{\cdot}085366$ -ன் எதிர் மடக்கை

$= 1217$

ஆகவே $G = \mathbf{1217}$

மாதிரி 106

மூன்று கடைகளை மேற்பார்வையிடும் ஒருவர் A என்ற கடையில் 125 சதவீதமும், B என்ற கடையில் 75 சதவீதமும், C என்ற கடையில் 70 சதவீதமும், விற்பனை அதிகமாகியிருக்கிறதெனக் கண்டார். ஆகவே, வியாபாரம் சராசரி 90 சதவீதம் அதிகமாகியிருக்கிறதென முடிவு செய்தார். இது சரியா? இல்லையேல், சரியான முடிவுக்கு வர, அவருக்கு நீவிர் என்ன முறையில் சராசரி கணக்கிட்டுக் கொடுப்பீர்?

(பி. ஏ.—மதுரை—1972)

தீர்வு :

(1) கூட்டுச் சராசரி

கூட்டுச் சாாசரி முறையில் A, B, C என்ற மூன்று கடைகளின், சராசரி வியாபார அதிகரிப்பு $= \dfrac{125+75+70}{3}$

$= 90$ **சதவீதம்**

(2) பெருக்குச் சராசரி

பெருக்குச் சராசரி முறையில் A, B, C என்ற மூன்று கடைகளின், சராசரி வியாபார அதிகரிப்பு $= \{125 \times 75 \times 70\}^{\frac{1}{3}}$

$= \left\{ \dfrac{\log 125 + \log 75 + \log 70}{3} \right\}$-ன் எதிர் மடக்கை

$= \left\{ \dfrac{1{\cdot}8451 + 1{\cdot}8751 + 2{\cdot}0969}{3} \right\}$-ன் எதிர் மடக்கை

$= \dfrac{5{\cdot}8171}{3}$ -ன் எதிர் மடக்கை

$= 86{\cdot}90$ **சதவீதம்.**

(3) இசைச் சராசரி

இசைச் சராசரி முறையில் A, B, C என்ற மூன்று கடைகளின், சராசரி வியாபார அதிகரிப்பு $= \dfrac{3}{\frac{1}{125} + \frac{1}{75} + \frac{1}{70}}$

$$= \frac{3}{\cdot 01429 + \cdot 01333 + 0\cdot 00800}$$

$$= \frac{1}{0\cdot 0119}$$

$$= \mathbf{84\cdot 22}$$

இங்குப் பெருக்குச் சராசரியே, மற்றையச் சராசரிகளை விடப் பொருத்தமான சராசரியாகும்.

நிறையிட்ட பெருக்குச் சராசரி

மாதிரி 107

கீழ்க் காணும் பொருள்களின் 1939-ம் ஆண்டுச் சார்பு விலைகளின் (அடிப்படை ஆண்டு 1938—விலை ரூ. 100) நிறையிட்ட பெருக்குச் சராசரியைக் கணக்கிடுக.

பொருள்கள்	சார்பு விலை	எடைகள்
தானியம்	128·8	1385
பருத்தி	62·4	819
வைக்கோல்	117·7	842
கோதுமை	99·0	561
ஓட் தானியம்	130·9	408
உருளைக்கிழங்கு	143·5	194
சர்க்கரை	125-6	142
பார்லி	150·2	100
புகையிலை	101·1	103
கம்பு	116·2	25
அரிசி	117·5	17
எண்ணெய் வித்துக்கள்	78 7	29

நிறையிடாச் சராசரியிலிருந்து இது எங்ஙனம் வேறுபடுகிறது?

(பி. காம்.—அலகாபாத்—1943)

தீர்வு :

சாதாரண நிறையிட்ட பெருக்குச் சராசரி கணக்கிடல் :

பொருள்கள்	சார்பு விலை (x)	எடை (f)	$\log x$	$f \log x$
தானியம்	128·8	1385	2·1106	2923·1810
பருத்தி	62·4	819	1·7952	1470·2688
வைக்கோல்	117·7	842	2·0119	1764·5398
கோதுமை	99·0	561	1·9956	1119·5316
ஓட் தானியம்	130·9	408	2·1173	863·8584
உருளைக்கிழங்கு	143·5	194	2·1553	418·1282
சர்க்கரை	125·6	142	2·1004	298·2568
பார்லி	150·2	100	2·1761	217·6100
புகையிலை	101·1	103	2·0043	206·4429
கம்பு	116·2	25	2·0645	51·6125
அரிசி	117·5	17	2·0719	35·2233
எண்ணெய் வித்துக்கள்	78·7	29	1·8960	54·9840
$n = 12$	மொத்தம்	$\Sigma f = 4625$	$\Sigma \log x = 24·5581$	$\Sigma f \log x = 9423·6263$

(i) நிறையிட்ட பெருக்குச் சராசரி :

$$G.W = \left(\frac{\Sigma f \log x}{\Sigma f}\right) \text{-ன் எதிர்மடக்கை}$$

$$= \left(\frac{9423·6263}{4625}\right) \text{-ன் எதிர்மடக்கை}$$

$$= 2·0375\text{-ன் எதிர்மடக்கை}$$

$$= 109·14$$

(ii) சாதாரணப் பெருக்குச் சராசரி :

$$G = \left(\frac{\Sigma \log x}{n}\right) \text{-ன் எதிர்மடக்கை}$$

$$= \left(\frac{24 \cdot 5581}{12}\right) \text{-ன் எதிர்மடக்கை}$$

$$= 2 \cdot 0465 \text{ -ன் எதிர்மடக்கை}$$

$$= 111 \cdot 3$$

இரண்டு பெருக்குச் சராசரிகளையும் ஒப்பிட்டு வித்தியாசம் காணலாம்.

மாதிரி 108

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்குப் பெருக்குச் சராசரி காண்.

பிரிவு	0—10	10—20	20—30	30—40	மொத்தம்
அலைவெண்	5	8	3	4	20

பெருக்குச் சராசரி கணக்கிடல் :

பிரிவு	மத்திய மதிப்பு (x)	அலைவெண் (f)	மடக்கை $\log x$	பெருக்கல் $f \log x$
0—10	5	5	0·6990	3·4950
10—20	15	8	1·1761	9·4088
20—30	25	3	1·3979	4·1937
30—40	35	4	1·5441	6·1764
மொத்தம்		$\Sigma f = 20$		$\Sigma f \log x = 23 \cdot 2739.$

பெருக்கல் சராசரி $G = \left(\frac{\Sigma f \log x}{\Sigma f}\right)$-ன் எதிர் மடக்கை

$= \left(\frac{23 \cdot 2739}{20}\right)$-ன் எதிர் மடக்கை

$= 1 \cdot 1637$-ன் எதிர் மடக்கை

$= 14 \cdot 58$ (தோராயமாக)

மாதிரி 109

கீழ்க் காணும் பட்டியலில் தரப்பட்ட 564 பிள்ளைகளின் எடைகளின் (பவுண்டில்) பரவலுக்குப் பெருக்குச் சராசரியைக் கணக்கிடுக.

எடை (பவுண்டில்)	99·5—	104·5—	109·5—	114·5—	119·5—	124·5—
பிள்ளைகளின் எண்ணிக்கை	24	30	45	65	72	84
எடை (பவுண்டில்)	129·5—	134·5—	139 5—	144·5—	149·5—154·5	
பிள்ளைகளின் எண்ணிக்கை	124	58	22	32	8	

தீர்வு :

பெருக்குச் சராசரி கணக்கிடல் :

எடை (பவுண்டில்)	மத்திய மதிப்பு (x)	பிள்ளைகளின் எண்ணிக்கை (f)	மடக்கை $\log x$	பெருக்கல் $f \log x$
99·5—104·5	102	24	2·0086	48·2064
104·5—109 5	107	30	2·0294	60·8820
109·5—114·5	112	45	2·0492	92·2140
114·5—119·5	117	65	2·0682	134·4330
119·5—124·5	122	72	2·0804	149·7888
124·5—129·5	127	84	2·1038	176·7192
129·5—134·5	132	124	2·1206	262·9544
134·5—139·5	137	58	2·1376	123·9808
139·5—144·5	142	22	2·1523	47·3506
144·5—149·5	147	32	2·1673	69·3536
149·5—154·5	152	8	2·1818	17 4544
	மொத்தம்	$\Sigma f = 564$		$\Sigma f \log x = 1183·3372$

பெருக்குச் சராசரி

$$G = \left(\frac{\Sigma f \log x}{\Sigma f}\right) \text{-ன் எதிர் மடக்கை}$$

$$= \left(\frac{1183·3372}{564}\right) \text{-ன் எதிர் மடக்கை}$$

= 2·0981-ன் எதிர் மடக்கை

= 125·3

மாதிரி 110

கீழ்க் காணும் பட்டியல் உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஒரு கிராமத்தின் வெவ்வேறு இனத்தவரின் குடும்ப வருமானத்தைத் தருகிறது.

(i) நிறையிட்ட கூட்டுச் சராசரி

(ii) நிறையிட்ட பெருக்குச் சராசரி

(iii) நிறையிட்ட இசைச் சராசரி

ஆகியவற்றைக் கணக்கிட்டு, எந்தச் சராசரி இங்குப் பொருத்த மாக இருக்கிறது எனக் கூறு.

மக்கள் இனம்	குடும்பங்களின் எண்ணிக்கை	ஒவ்வொரு குடும்ப வருமானம் (ரூபாயில்)
நிலச்சுவான்தார்	1	1000
உழவர்கள்	50	80
நிலமற்ற கூலியாட்கள்	25	40
லேவாதேவித் தொழில் செய்வோர்	2	750
பள்ளி ஆசிரியர்கள்	3	100
கடை வைத்திருப்பவர்கள்	4	150
தச்சர்கள்	3	120
நெசவாளிகள்	5	60

(எம்.ஏ. —ஆக்ரா—1949)

நிறையிட்ட (i) கூட்டல் (ii) பெருக்கல் (iii) இசைச் சராசரிகளைக் காணல் :

இனம்	w	x	xw	$\log x$	$w \log x$	$\frac{1}{x}$	$\frac{w}{x}$
நிலச்சுவான்தார்	1	1000	1000	3·0000	3·0000	0·0010	·0010
உழவர்கள்	50	80	4000	1·9031	95·1550	0·0125	·6250
நிலமற்ற கூலியாட்கள்	25	40	1000	1·6021	40·0525	0·0250	·6250
வேவாதேவித் தொழில் புரிவோர்	2	750	1500	2·8751	5·7502	0·0013	·0026
பள்ளி ஆசிரியர்கள்	3	100	300	2·0000	6·0000	0·0100	·0300
கடை வைத்திருப்பவர்கள்	4	150	600	2·1761	8·7044	0·0067	·0268
தச்சர்கள்	3	120	360	2·0792	6·2376	0·0083	·0249
நெசவாளிகள்	5	60	300	1·7782	8·8910	0·0167	·0835
மொத்தம்	$\Sigma w = 93$		$\Sigma xw =$ 9060		$\Sigma w \log x$ 173·7907		$\Sigma \frac{w}{x} =$ 1.4188

(i) நிறையிட்ட கூட்டுச் சராசரி :

$$\bar{x}_w = \frac{\Sigma x w}{\Sigma w} = \frac{9060}{93} = \mathbf{97 \cdot 4}$$

(ii) நிறையிட்ட பெருக்குச் சராசரி } $G \cdot W = \left[\frac{\Sigma (w \log x)}{\Sigma w}\right]$-ன் எதிர் மடக்கை

$= \left[\frac{173 \cdot 7907}{93}\right]$-ன் எதிர் மடக்கை

$= 1 \cdot 8687$-ன் எதிர் மடக்கை

$= \mathbf{73 \cdot 96}$

(iii) நிறையிட்ட இசைச் சராசரி } $H.W = \left[\frac{\Sigma \left(\frac{f}{w}\right)}{n}\right]$-ன் தலைகீழ்ப் பின்னம்

$= \left[\frac{1 \cdot 4188}{93}\right]$-ன் தலைகீழ்ப் பின்னம்

$= \frac{93}{1 \cdot 4188} = \mathbf{65 \cdot 36}$

மேற்கண்ட சராசரிகளில், பெருக்குச் சராசரி கொடுத்த கணக்கிற்குப் பொருத்தமானதாக விளங்குகிறது.

இசைச் சராசரி
(Harmonic Mean)

மாதிரி 111

கீழ்க் காணும் எண்களுக்கு இசைச் சராசரி கணக்கிடுக.

(a) 6, 8, 10 (b) 4, 8, 16

(c) 2, 4, 8

தீர்வு :

(*a*) இசைச் சராசரி :

$$H = \frac{n}{\frac{1}{x_1} + \frac{1}{x_2} + \frac{1}{x_3}}$$

$$= \frac{3}{\frac{1}{6} + \frac{1}{8} + \frac{1}{10}}$$

$$= \frac{3}{\left(\frac{25+15+12}{20}\right)}$$

$$= \frac{360}{47}$$

$$= 7\tfrac{31}{47}$$

(*b*) இசைச் சராசரி :

$$H = \frac{n}{\frac{1}{x_1} + \frac{1}{x_2} + \frac{1}{x_3}}$$

$$= \frac{3}{\frac{1}{4} + \frac{1}{8} + \frac{1}{16}}$$

$$= \frac{3}{0{\cdot}25 + 0{\cdot}125 + 0{\cdot}0625}$$

$$= \frac{3}{0{\cdot}4375}$$

$$= \frac{4{\cdot}8}{7}$$

$$= 6{\cdot}855$$

(*c*) இசைச் சராசரி :

$$H = \frac{n}{\frac{1}{x_1} + \frac{1}{x_2} + \frac{1}{x_3}}$$

$$= \frac{3}{0.5+0.25+0.125}$$

$$= \frac{3}{0.875}$$

$$= \frac{27}{7}$$

$$= \mathbf{3.428}$$

மாதிரி 112

கீழ்க் காணும் வரிசைக்கு இசைச் சராசரியைக் காண்.

32, 35, 36, 37, 39, 41, 43, 47, 48.

தீர்வு :

உறுப்புகளின் அளவு (x)	தலைகீழ்ப் பின்னம் $\frac{1}{x}$
32	0·03125
35	0·02857
36	0·02778
37	0·02703
39	0·02564
41	0·02439
43	0·02326
47	0·02128
48	0·02083
$n = 9$	0·23003

இசைச் சராசரி $H = \dfrac{n}{\Sigma \frac{1}{x}}$

$$= \frac{9}{0.23003} = \mathbf{39.3} \quad \text{(தோராயமாக)}$$

மாதிரி 113

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு இசைச் சராசரி காண்.

பிரிவு	2—4	4—6	6—8	8—10
அலைவெண்	20	40	30	10

தீர்வு :

பிரிவு	மத்திய மதிப்பு x	அலை வெண் f	தலைகீழ்ப் பின்னம் $\frac{1}{x}$	$f \times \frac{1}{x}$
2— 4	3	20	0·3333	6·666
4— 6	5	40	0·2000	8·000
6— 8	7	30	0·1428	4·284
8—10	9	10	0·1111	1·111
		100		20·061

இசைச் சராசரி

$$H = \frac{n}{\Sigma\left(f \times \frac{1}{x}\right)}$$

$$= \frac{100}{20{\cdot}061}$$

$$= \mathbf{4{\cdot}985}$$

மாதிரி 114

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு இசைச் சராசரியைக் காண்.

பிரிவு	40—50	50—60	60—70	70—80	80—90	90—100
அலை வெண்	19	52	36	72	51	43

தீர்வு :

பிரிவு	மத்திய மதிப்பு (x)	அலைவெண் (f)	தலைகீழ்ப் பின்னம் $\frac{1}{x}$	$\frac{f}{x}$
40 — 50	45	19	0·0222	0·4218
50 — 60	55	25	0·0182	0·4550
60 — 70	65	36	0 0154	0·5544
70 — 80	75	72	0·0133	0·9576
80 — 90	85	51	0·0118	0·6018
90 —100	95	43	0·0105	0·4515
		246		3·4421

இசைச் சராசரி :

$$H = \frac{\Sigma f}{\Sigma\left(\frac{f}{x}\right)}$$

$$= \frac{246}{3 \cdot 4421}$$

$$= 71 \cdot 4$$

மாதிரி 115

ஓரிடத்தில் வசிக்கும் 10 குடும்பங்களின் மாத வருமானம் கீழே தரப்பட்டுள்ளது :

(i) கூட்டுச் சராசரி (ii) பெருக்குச் சராசரி
(iii) இசைச் சராசரி

ஆகியவற்றைக் கணக்கிடுக. கணக்கிட்ட 3 சராசரிகளில் எந்தச் சராசரி இந்தக் கணக்கிற்குப் பொருந்துகிறது ?

குடும்பம்	*A*	*B*	*C*	*D*	*E*	*F*	*G*	*H*	*I*	*J*
வருமானம்	85	70	10	75	500	8	45	250	40	36

(பி. காம்.—ஆக்ரா—1945)

குடும்பம்	வருமானம் (x)	மடக்கை $\log x$	தலைகீழ்ப் பின்னம் $\frac{1}{x}$
A	85	1·9294	0·0118
B	70	1·8451	0·0143
C	10	1·0000	0·1000
D	75	1·8751	0·0133
E	500	2·6790	0·0050
F	8	0·9031	0·1250
G	42	1·6232	0·0238
H	250	2·3979	0·0040
I	40	1·6021	0·0250
J	36	1·5563	0·0278
$n=10$	$\Sigma x =$ 1116	$\Sigma \log x$ = 17·4312	$\Sigma \frac{1}{x}$ = 0·3470

(i) கூட்டுச் சராசரி

$$\bar{x} = \frac{\Sigma x}{n}$$

$$= \frac{1116}{10}$$

= ரூ. **111·6**

(ii) பெருக்குச் சராசரி

$$G = \left(\frac{\Sigma \log x}{n}\right)$$ -ன் எதிர் மடக்கை

$$= \left(\frac{17{\cdot}4312}{10}\right)$$ -ன் எதிர் மடக்கை

= 1·7431-ன் எதிர் மடக்கை

= ரூ. **55·34**

(iii) இசைச் சராசரி

$$H = \frac{\Sigma\left(\frac{1}{x}\right)}{n} \text{-ன் தலைகீழ்ப் பின்னம்}$$

$$= \frac{n}{\Sigma\left(\frac{1}{x}\right)}$$

$$= \frac{10}{0{\cdot}3470}$$

$$= \text{ரூ. } 28{\cdot}8$$

மேற்கண்ட கணக்கில் பெருக்குச் சராசரி மற்றையச் சராசரிகளை விடச் சரியாகப் பொருந்துகிறது எனக் காண்கிறோம்.

மாதிரி 116

முதல் 30 கிலோ மீட்டர் தூரத்தை மணிக்கு 15 கி.மீ. வேகத்திலும், இரண்டாவது 30 கிலோ மீட்டர் தூரத்தை மணிக்கு 20 கி. மீ. வேகத்திலும், மூன்றாவது 30 கிலோ மீட்டர் தூரத்தை மணிக்கு 25 கி. மீ. வேகத்திலும் ஒரு கார் கடந்தால், காரின் சராசரி வேகத்தைக் கணக்கிடுக.

தீர்வு :

இங்கு, கார் சென்ற மொத்தத் தூரத்தின் சராசரி வேகத்தைக் கணக்கிட, இசைச் சராசரியைக் கணக்கிட வேண்டும். ஆகவே,

$$\text{இசைச் சராசரி } H = \frac{n}{\frac{1}{x_1} + \frac{1}{x_2} + \frac{1}{x_3}}$$

$$= \frac{3}{\frac{1}{15} + \frac{1}{20} + \frac{1}{25}}$$

$$= \frac{3}{0{\cdot}06667 + 0{\cdot}05000 + 0{\cdot}04000}$$

$$= \frac{3}{0{\cdot}15667}$$

$$= 19{\cdot}15 \text{ கி. மீ./மணிக்கு}$$

காரின் வேகம் $= 19{\cdot}15$ கி. மீ./மணிக்கு.

மாதிரி 117

(a) முதல் ஒரு மைலை மணிக்கு 10 மைல் வேகத்திலும், இரண்டாவது மைலை மணிக்கு 8 மைல் வேகத்திலும், மூன்றாவது மைலை மணிக்கு 6 மைல் வேகத்திலும் ஒருவர் குதிரைச் சவாரி மூலம் கடந்தால் அவருடைய சராசரி வேகமென்ன ?

(b) முதல் பத்தாண்டுகளில் 20% ஏற்றமும்; இரண்டாவது பத்தாண்டுகளில் 25% ஏற்றமும்; மூன்றாவது பத்தாண்டுகளில் 44% ஏற்றமும் என மக்கள் தொகை கூடினால் சராசரி மக்கள் தொகைக் கூடுதலைக் கண்டுபிடி.

(யூ.ப.ச.க.—1962)

(பி.காம்.—ஆக்ரா—1938)

தீர்வு :

(a) இங்கு, இசைச் சராசரி கணக்கிடலே பொருத்தமான தாகும்.

$$\text{ஆகவே,}\quad H = \frac{3}{\frac{1}{10}+\frac{1}{8}+\frac{1}{6}}$$

$$= \frac{3}{0{\cdot}1+0{\cdot}125+0{\cdot}1666}$$

$$= \frac{3}{0{\cdot}3916}$$

$$= 7{\cdot}662 \text{ மைல்/மணிக்கு}$$

ஆகவே, மணிக்கு வேகம் = **7·662 மைல்.**

(b) இங்குப் பெருக்கல் சராசரியே பொருத்தமானதாகும்.

$$\text{ஆகவே,}\quad G = \left[\frac{(\log 20+\log 25+\log 44)}{3}\right]\text{-ன் எதிர் மடக்கை}$$

$$= \left(\frac{4{\cdot}3424}{3}\right)\text{-ன் எதிர் மடக்கை}$$

$$= 1{\cdot}4474\text{-ன் எதிர் மடக்கை}$$

$$= 28{\cdot}02\%$$

ஆகவே, மக்கள் தொகை ஏற்றத்தின் சராசரி = **28·02**%

மாதிரி 118

A-லிருந்து B என்ற இடத்திற்கு ஒருவர் மோட்டார் வாகனத்தில் செல்கிறார். B-க்குச் செல்லும்பொழுது அவர் ஒரு மலையில் ஏறிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆதலின் அவர் 1 காலன் காசோலின் எண்ணெய்க்கு 10 மைல் செல்கிறார். திரும்பி வரும்பொழுது ஒரு காலனுக்கு 15 மைல் ஓட்டுகிறார். இசைச் சராசரி கணக்கிட்டு, காலனுக்குச் செல்லும் மைல் தூரத்தைக் காண்.

தீர்வு

A-லிருந்து B-க்கு உள்ள தூரம் 60 மைல் எனக் கொண்டு, இங்கு, இசைச் சராசரி கணக்கிடலே சரியான முறையாகும் எனத் தீர்வு கொள்.

1 காலனுக்குச் செல்லும் தூரத்தின் இசைச் சராசரி $\left.\right\} H = \dfrac{2}{\frac{1}{10}+\frac{1}{15}}$

$$= \frac{2}{0{\cdot}1000+0{\cdot}0666}$$

$$= \frac{2}{0{\cdot}1666}$$

$= 12$ மைல் / காலனுக்கு (தோராயமாக)

இங்கு, கூட்டுச் சராசரி $\bar{x} = 12{\cdot}5$ மைல்/காலனுக்கு.

இங்கு இசைச் சராசரியே பொருத்தமானதாகும்.

மலைக்கு மேலே ஏறும்பொழுது 6 காலன் காசோலினும், மலையிலிருந்து இறங்கும்போது 4 காலன் காசோலினும் செலவாகி இருக்கிறது. ஆகவே, 10 காலன் காசோலின் செலவழித்து 120 மைல் கடந்தார் எனக் கொண்டால் இது ஒரு காலனுக்கு 12 மைல் சென்றதாக ஆகிறது. ஆனால் கூட்டுச் சராசரி $= 12{\cdot}5$. இது தவறான சராசரி என்று தெரிகிறது. ஆகவே, இசைச் சராசரியே இந்தக் கணக்கிற்குப் பொருத்தமானது என முடிவு செய்யலாம்.

மாதிரி 119

மொத்தத் தூரமாகிய 400 கிலோ மீட்டர் இடைவெளியை ஒரு பறக்கும் கப்பல் கீழ்க் காணும் வேகத்தில் கீழ்க் காணும் முறைப்படி

(i) முதல் நூறு கிலோ மீட்டர்களை மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்திலும்,

(ii) இரண்டாவது நூறு கிலோ மீட்டர்களை மணிக்கு 200 கி.மீ. வேகத்திலும்,

(iii) மூன்றாவது நூறு கிலோ மீட்டர்களை மணிக்கு 300 கி.மீ. வேகத்திலும்,

(iv) நான்காவது நூறு கிலோ மீட்டர்களை மணிக்கு 400 கிலோ மீட்டர் வேகத்திலும் பறந்து கடக்கிறது.

பறக்கும் கப்பலின் சராசரி வேகத்தைக் கணக்கிடு.

தீர்வு :

இக் கணக்கில் வேகச் சராசரி காண இசைச் சராசரியைக் கணக்கிடவேண்டும்.

ஆகவே, இசைச் சராசரி $H = \dfrac{n}{\dfrac{1}{x_1}+\dfrac{1}{x_2}+\dfrac{1}{x_3}+\dfrac{1}{x_4}}$

$$= \frac{4}{\frac{1}{100}+\frac{1}{200}+\frac{1}{300}+\frac{1}{400}}$$

$$= \frac{4}{0{\cdot}01+0{\cdot}005+0{\cdot}0033+0{\cdot}0025}$$

$$= \frac{4}{0{\cdot}0208}$$

$$= 192{\cdot}3$$

ஆகையால், பறக்கும் கப்பலின் சராசரி வேகம் = 192·3 கி.மீ./1 மணிக்கு

மாதிரி 120

ஒரு வெப்பமானியில் கண்ட ஒரு தொகுப்பு வாசிப்புகளுக்குக் கூட்டுச் சராசரி கணக்கிடும்பொழுது, சென்டிகிரேடில் வாசித்தாலும் பாரன்ஹீட்டில் வாசித்தாலும் சராசரியில் ஒரு மாற்றமும் காணப்படுவதில்லை. ஆனால், இங்ஙனம் இருவிதமாக வாசித்த முடிவுகளுக்குப் பெருக்குச் சராசரி கணக்கிட்டால் முடிவுகள் வித்தியாசப்படுகின்றன என நிரூபி.

தீர்வு :

கணக்கில் கொண்ட வெப்பமானியின் வாசிப்புகள் எண்ணிக்கை $= n$

சென்டிகிரேடில் வாசித்த டிகிரிகள் $= C_1, C_2, C_3 \ldots \ldots C_n$

பாரன்ஹீட்டில் வாசித்த டிகிரிகள் $= F_1, F_2, F_3 \ldots \ldots F_n$

ஆக இருக்கட்டும்.

இரண்டுக்குமுள்ள சமன்பாடு :

$$F_i = 32 + \frac{9}{5} C_i \; ; \; i = 1, 2, 3 \ldots\ldots\ldots n$$

தற்பொழுது N சென்டி கிரேட் வாசிப்புகளின் கூட்டுச் சாரசரி :

$$\bar{x}_i = \frac{C_1 + C_2 + C_3 + \ldots\ldots\ldots C_n}{n}$$

அதே வாசிப்புகளைப் பாரன்ஹீட்டில் வாசித்து, அதன் கூட்டுச் சராசரி :

$$\bar{x}_F = \frac{F_1 + F_2 + F_3 \ldots\ldots\ldots F_n}{n} = \frac{\sum_{i=1}^{n} F_i}{n}$$

$$= \frac{1}{n} \sum_{i=1}^{n} \left[32 + \frac{9}{5} C_i \right]$$

$$= \frac{1}{n} \left[32n + \frac{9}{5} \sum_{i=1}^{n} C_i \right]$$

$$= 32 + \frac{9}{5} \bar{x}_c$$

ஆகவே $\bar{x}_f = 32 + \frac{9}{5} \bar{x}_c$ என்ற சமன்பாடு சரியாகும்.

பெருக்கல் சராசரி :

சென்டிகிரேட் வாசிப்புகளின் பெருக்கல் சராசரி

$$G_c = (C_1\, C_2\, C_3 \ldots\ldots C_n)^{\frac{1}{n}}$$

அதே டிகிரிகளை பாரன்ஹீட் வாசிப்பில் பெருக்கல் சராசரி $\Big\}$ $G_f = (F_1\, F_2\, F_3 \ldots\ldots F_n)^{\frac{1}{n}}$

$$= \left[\left(32+\frac{9}{5}C_1\right)\left(32+\frac{9}{5}C_2\right)\right.$$

$$\left. \ldots\ldots\left(32+\frac{9}{5}C_n\right)\right]^{\frac{1}{n}}$$

$$= 32\left[\left(1+\frac{9}{160}C_1\right)\left(1+\frac{9}{160}C_2\right)\right.$$

$$\left.\ldots\ldots\left(1+\frac{9}{160}C_n\right)\right]^{\frac{1}{n}}$$

$$= 32\left[\left(1+\frac{9}{160N}C_1+\ldots\ldots\right)\left(1+\frac{9}{160N}C_2\ldots\ldots\right)\right.$$

$$\left.\ldots\ldots\left(1+\frac{9}{160N}C_n\right)\right]$$

$$= 32+\frac{9}{5n}\left(C_1+C_2+\ldots\ldots C_n\right)+\ldots\ldots \neq G_c$$

இங்கு $G_F \neq G_C$ எனக் காண்கிறோம்.

ஆகவே, செண்டிகிரேட், பாரன்ஹீட் வாசிப்புகளின் கூட்டுச் சராசரியில் மாற்றமில்லை என்றும், ஆனால் அவைகளின் பெருக்கல் சராசரிகளுக்கு வித்தியாசம் உண்டு என்றும் கண்டோம்.

மாதிரி 121

ஒரு மாறி $a, ar, ar^2, \ldots\ldots ar^{n-1}$ என்ற மதிப்புகளை எடுத்துக் கொண்டு அவற்றின் அலைவெண்களை முறையே 1, 1, 1,.... .... 1 எனக் கொண்டு அலைவெண் பரவலை ஏற்படுத்தினால்,

(i) கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{a(1-r^n)}{n(1-r)}$ என்றும்,

(ii) பெருக்கல் சராசரி $G = ar^{\left(\frac{n-1}{2}\right)}$ என்றும்

(iii) இசைச் சராசரி $H = \frac{an(1-r)}{1-r^n}\, r^{(n-1)}$

இருக்கின்றன என்று காட்டு.

தீர்வு :

அலைவெண் பரவல்

மாறி (x) : $a \quad ar \quad ar^2 \ldots\ldots\ldots ar^{(n-1)}$

அலைவெண் : $1 \quad 1 \quad 1 \ldots\ldots\ldots 1$

(i) ஆகவே, கூட்டுச் சராசரி $\bar{x}$

$$\bar{x} = \frac{a+ar+ar^2+\ldots\ldots+ar^{n-1}}{n}$$

$$= \frac{a(1-r^n)}{n(1-r)}$$

(ii) ஆகவே, பெருக்குச் சராசரி

$$G = (a \times ar + ar^2 \times \ldots\ldots \times ar^{n-1})^{1/n}$$

$$= a\left(r^{1+2+3+\cdots n-1}\right)^{1/n}$$

$$= ar^{\frac{(n-1)}{2}}$$

(iii) ஆகவே, இசைச் சராசரி

$$\frac{1}{H} = \frac{\frac{1}{a}+\frac{1}{ar}+\frac{1}{ar^2}+\ldots+\frac{1}{ar^{n-1}}}{n}$$

$$= \frac{\frac{1}{a}\left(\frac{1}{r^n}-1\right)}{n\left(\frac{1}{r}-1\right)}$$

$$= \frac{1-r^n}{an(1-r)\,r^{n-1}}$$

ஆகவே, $H = \dfrac{an(1-r)\,r^{n-1}}{1-r^n}$

மாதிரி 122

(i) முதல் இருபது கிலோ மீட்டர்களை 6 கி. மீ. வேகத்திலும்,

(ii) இரண்டாவது இருபது கிலோ மீட்டர்களை 8 கி. மீ. வேகத்திலும்,

(iii) மூன்றுவது இருபது கிலோ மீட்டர்களை 12 கி.மீ. வேகத்திலும்,

(iv) நான்காவது இருபது கிலோ மீட்டர்களை 24 கி. மீ. வேகத்திலும்,

ஒரு மோட்டார் வாகனம் தனது நிலையிலிருந்து புறப்பட்டுக் கடந்தால், அந்த மோட்டாரின் சராசரி வேகம் 12·5 கி.மீ. என்பது தவறுகும். உண்மையான சராசரி வேகம் 9·6 கி. மீ. ஆகும் எனக் காட்டு.

தீர்வு :

மணிக்கு முறையே 6, 8, 12, 24 கி. மீட்டர்கள் வேகத்தில் சென்ருல்,

$$\text{கூட்டுச் சராசரி வேகம்} = \frac{6+8+12+24}{4}$$

$$= 12 \cdot 5 \text{ கி. மீ./மணிக்கு.}$$

$$\text{சராசரி வேகம்} = \frac{\text{மொத்தத் தூரம் பிரயாணம் செய்தது}}{\text{மொத்த நேரம் எடுத்துக் கொண்டது}}$$

என இருப்பதாலும்,

முன் மாதிரிகளில் பார்த்தது போல், இது சரியான சராசரி யாகாது. உண்மையான சராசரி வேகம் காண, இசைச் சராசரியைக் கணக்கிட வேண்டும்.

$$\text{ஆகவே, சராசரி வேகம்} = \frac{4}{\frac{1}{6} + \frac{1}{8} + \frac{1}{12} + \frac{1}{24}}$$

$$= \frac{\frac{1}{5}}{\frac{1}{120} + \frac{1}{160} + \frac{1}{240} + \frac{1}{480}}$$

$$= 9 \cdot 6 \text{ கி.மீ./மணிக்கு.}$$

மாதிரி 123

(i) 1954-ம் ஆண்டில் 5% என்றும்,

(ii) 1955-ம் ஆண்டில் 8% என்றும்,

(iii) 1956-ம் ஆண்டில் 77% என்றும்,

ஒரு நுகர் பொருளின் விலை ஏற்றமடைகிறது என்றால், 1954— 56-ம் ஆண்டுகளில் விலை ஏற்றம் 30% என்பது சரியல்ல; உண்மையான விலை ஏற்றம் 26% ஆகும் என்பதை விளக்கமாகக் கணக்கிட்டு, சாதாரண மனிதனுக்குப் புரியும்படி விளக்கவும்.

(எம்.ஏ.—ஆக்ரா—1962)

தீர்வு :

மேலே கொடுத்துள்ளபடி 1954-ம் ஆண்டுத் துவக்கத்தில் விலை ரூ. 100 என இருந்தால் அவ்வாண்டின் இறுதியில் அப் பொருளின் விலை ரூ. 105 ஆகும்.

அதேபோல், 1955-ம் ஆண்டுத் துவக்க விலை ரூ. 100 என்றால், இறுதி விலை ரூ. 108 ஆகும். 1956-ம் ஆண்டுத் துவக்க விலை ரூ. 100 என்றால் இறுதி விலை ரூ. 177 ஆகும்.

ஆகவே, ஓர் ஆண்டின் துவக்கச் சராசரி விலை ரூ. 100 என்றால் அவ்வாண்டின் இறுதிவிலை காண, 105, 108, 177 என்ற விலைகளின் பெருக்கல் சராசரியைக் காணவேண்டும்.

$$\therefore \quad G = (105 \times 108 \times 177)^{1/3}$$

$$= \left[\frac{(\log 105 + \log 108 + \log 177)}{3}\right]\text{-ன் எதிர் மடக்கை}$$

$$= \left[\frac{2{\cdot}0212 + 2{\cdot}0334 + 2{\cdot}2480}{3}\right]\text{-ன் எதிர் மடக்கை}$$

$$= 2{\cdot}1009 \text{ ன் எதிர் மடக்கை}$$

$$= \text{ரூ. } 126 \quad \text{(தோராயமாக)}$$

ஆகவே சராசரி விலைக் கூடுதல் } = 26% ஆகும்.

விலைகளின்கூட்டுச் சராசரி } $= \left[\frac{(5+8+77)}{3}\right] \%$

$$= \left(\frac{90}{3}\right) \%$$

$$= 30\%$$

ஒவ்வோர் ஆண்டும் விலை ஏற்றம் 30% எனக் கொண்டால்,

$$\left.\begin{array}{r}\text{1956-ம் ஆண்டு இறுதியில்}\\ \text{அப்பொருளின் விலை}\end{array}\right\} = 100 \times \frac{130}{100} \times \frac{130}{100} \times \frac{130}{100}$$

$$= 219{\cdot}7$$

இவ் விலையானது, 1956-ம் ஆண்டின் உண்மையான இறுதி விலை

$$= 100 \times \frac{105}{100} \times \frac{108}{100} \times \frac{177}{100}$$

$$= 200{\cdot}718 \text{ ஐ}$$

விட அதிகமாக இருக்கிறது.

ஆனால், $100 \times \frac{126}{100} \times \frac{126}{100} \times \frac{126}{100}$ என்ற பெருக்குச் சராசரி விலை (200·1) உண்மையான விலை ஏற்றத்துக்குச் (200·7) சமமாக இருக்கிறது. இதனால், இங்குப் பெருக்குச் சராசரி மூலம் கணக்கிடப்படும் சராசரிதான் பொருந்தும் எனக் காண்கிறோம்.

நிறையிட்ட இசைச் சராசரி

மாதிரி 124

கீழே தரப்பட்ட பட்டியலுக்கு,

(i) சாதாரண இசைச் சராசரி

(ii) நிறையிட்ட இசைச் சராசரி

ஆகியவற்றைக் கணக்கிடுக.

உறுப்பின் அளவு	68	85	101	102	108	110	112	113
எடை	1	46	31	1	11	7	23	17
உறுப்பின் அளவு	124	128	143	146	151	153	172	
எடை	9	14	2	4	6	5	2	

(திருவனந்தபுரம் பல்கலை)

தீர்வு :

நிறையிட்ட இசைச் சராசரி கணக்கிடல்:

உறுப்பு அளவு (x)	எடை (w)	தலை கீழ்ப் பின்னம் $\frac{1}{x}$	பெருக்கல் $w \times \frac{1}{x}$
68	1	0·014710	0·014710
85	46	0·011760	0·540960
101	31	0·009901	0·306931
102	1	0·009804	0·009804
108	11	0·009259	0·101849
110	7	0·009091	0·063637
112	23	0·008929	0·205367
113	17	0 008850	0·150450
124	9	0·008065	0·072585
128	14	0·007813	0·109383
143	2	0·006993	0·013986
146	4	0·006849	0·027396
151	6	0·006623	0·039738
153	5	0·006536	0·032686
172	2	0·005814	0·011628
$n = 15$	$\Sigma w = 179$	0·130997	1·701103

(i) சாதாரண இசைச் சராசரி

$$H = \frac{n}{\Sigma\ 1/x}$$

$$= \frac{15}{0{\cdot}130997}$$

$$= 114{\cdot}5$$ (தோராயமாக)

(ii) நிறையிட்ட இசைச் சராசரி

$$Hw = \frac{\Sigma w}{\Sigma \left(\frac{w}{x}\right)}$$

$$= \frac{179}{1 \cdot 701103}$$

$$= \mathbf{105 \cdot 3} \quad \text{(தோராயமாக)}$$

மாதிரி 125

75 கண்டறிந்த புள்ளி விவரங்களின் கூட்டுச் சாரசரி, முகடு, இடைநிலை ஆகியவைகள் முறையே 27,34,29 என இருந்தன. சரியான மதிப்பு 53-க்குப் பதில், தவருக 43 என்ற மதிப்பைக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது என்பது பின்பு கண்டறியப் பட்டது. இப் பிழையைக் கண்டறிந்ததன் மூலம், முன் கணக்கிடப் பட்ட மூன்று சாரசரிகளும் எந்த அளவு தவருக உள்ளன என் பதனைக் கண்டறியவும்.

(எம். ஏ.—டெல்லி-1963)

தீர்வு :

(1) கூட்டுக் சராசரி $\overline{x} = \frac{\Sigma fx}{n}$

அதாவது, $27 = \frac{\Sigma fx}{75}$

$\Sigma fx = 75 \times 27$

$= \mathbf{2025}$

தவருகக் கொண்ட 43 என்ற மதிப்பை 53 ஆக மாற்றிக் கணக்கிட்டால் சரியான $\Sigma fx = 2025 - 43 + 53$

$= 2035$

ஆகவே, சரியான கூட்டுச்சராசரி $\overline{x} = \frac{2035}{27}$

$= \mathbf{27 \cdot 13}$

(2) உண்மையான மதிப்பு $= 53$

தவறுதலான மதிப்பு $= 43$

கணக்கிடப்பட்ட இடைநிலை $= 29$

ஆகவே, இங்கு 43ஐ, 53 ஆக மாற்றிக் கணக்கிடப்படும் இடைநிலையின் மதிப்பும் 29 ஆகவே இருக்கிறது.

(3) 'முகடு' என்பது அடிக்கடி வந்துள்ள எண்ணுகும். ஆகவே, ஓர் எண்ணைத் தவறுதலாகக் கொண்டு கணக்கிட்டதனுல் மட்டும் முகடு மதிப்பு மாறப் போவதில்லை என அறியலாம்.

மாதிரி 126

50 மாணவர்கள் ஒரு தேர்வு எழுதினுர்கள். தேர்வில் வெற்றியடைந்த மாணவர்களின் முடிவின் அலைவெண் கீழே தரப்பட்டுள்ளது.

மதிப்பெண்கள்	4	5	6	7	8	9
மாணவர்களின் எண்ணிக்கை	8	10	9	6	4	3

மொத்த 50 மாணவர்களின் மதிப்பெண்களின் கூட்டுச் சாரசரி 5·16 என்ருல் தேர்வு அடைந்த மாணவர்களின் கூட்டுச் சராசரி காண்.

(பி.காம். — ஆக்ரா—1963)

தீர்வு :

வெற்றியடைந்த மாணவர்கள் எடுத்த மொத்த மதிப்பெண் களின் கூடுதலைக் கணக்கிடல் :

மதிப்பெண் x	அலைவெண் f	பெருக்கல் fx
4	8	32
5	10	50
6	9	54
7	6	42
8	4	32
9	3	27
	40	237

மொத்த மாணவர்கள் எடுத்த மதிப்பெண்களின் கூடுதல்

$$= 50 \times 5 \cdot 16$$

= 258 மதிப்பெண்கள்

வெற்றி பெற்ற 40 மாணவர்கள் எடுத்த மதிப் பெண்களின் கூடுதல் = 237 மதிப்பெண்கள்

ஆகவே, தோல்வியடைந்த 10 மாணவர்கள் எடுத்த மதிப் பெண்களின் கூடுதல்

$$= 258 - 237$$

$$= 21$$

∴ தோல்வியடைந்த மாணவர்கள் எடுத்த மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி

$$= \frac{21}{10}$$

= 2·1 மதிப்பெண்கள்.

மாதிரி 127

கீழ்க் காணும் புள்ளி விவரங்களைச் சாதாரண அலைவெண் பரவல் பட்டியலாக மாற்று.

3 க்குக் குறைவாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் = 5 மாணவர்கள்

6-க்குக் குறைவாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் = 12 மாணவர்கள்

9-க்குக் குறைவாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் = 25 மாணவர்கள்

12-க்குக் குறைவாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் = 33 மாணவர்கள்

(பி.காம்.—ஆக்ரா—1962)

தீர்வு :

சாதாரண அலைவெண் பரவல் பட்டியல் தயாரித்தல் :

மதிப்பெண்கள்	மாணவர்கள் எண்ணிக்கை
0— 3	5
3— 6	12 — 5 = 7
6— 9	25 — 12 = 13
9—12	33 — 25 = 8
	33

மாதிரி 128

சுமாரான கோட்டமுடைய வரிசை எண், முகடு, இடைநிலைகள் முறையே 16", 15·6" என இருந்தால் அவ்வரிசையின் பொதுவாக நிகழக்கூடிய இடைநிலை என்ன ?

(பி.காம்.—சென்னை—1960)

தீர்வு :

அனுபவநிலைச் சூத்திரம் :

முகடு = 3 இடைநிலை — 2 கூட்டுச் சராசரி

அல்லது 16 = 3 இடைநிலை — (2 × 15·6)

3 இடைநிலை = 47·2

$\therefore$ இடைநிலை $= \frac{47 \cdot 2}{3}$

$= 15 \cdot 73''$

மாதிரி 129

15 மாணவர்களின் கூட்டுச் சராசரி எடை 110 பவுண்டுகள். அவர்களுள் 5 மாணவர்களின் கூட்டுச் சராசரி எடை 100 பவுண்டுகள்; அடுத்த 5 மாணவர்களின் கூட்டுச் சராசரி எடை 125 பவுண்டுகள். மீதமுள்ள 5 மாணவர்களின் கூட்டுச் சராசரி எடை என்ன ?

(பி.காம்.—ஆக்ரா—1962)

தீர்வு :

மீதமுள்ள கடைசி 5 மாணவர்களின் கூட்டுச்சராசரி எடை

$$= \frac{n \times \overline{x} - (n_1 \times \overline{x}_1) - (n_2 \times \overline{x}_2)}{n - n_1 - n_2}$$

$$= \frac{(15 \times 110) - (5 \times 100) - (5 \times 125)}{15 - 5 - 5}$$

$$= \frac{1650 - 500 - 625}{4}$$

$$= \frac{525}{5}$$

$= 105$ பவுண்டுகள்

மாதிரி 130

காலனுக்கு 20 மைல் வேகம் என்று முதல் 10 மைல்களும், காலனுக்கு 15 மைல் வேகம் என்று இரண்டாவது 90 மைல்களும் ஒரு மோட்டார் வாகனம் கடந்து சென்றால், காலனுக்குச் சராசரியாகச் செல்லும் மைல்களின் எண்ணிக்கை என்ன ?

(பி. காம்.—திருவனந்தபுரம்—1961)

தீர்வு :

நிறையிட்ட இசைச் சராசரி

$$Hw = \frac{w_1 + w_2}{\frac{w_1}{x_1} + \frac{w_2}{x_2}}$$

$$= \frac{10 + 90}{\frac{10}{20} + \frac{90}{15}}$$

$$= \frac{100}{0 \cdot 5 + 6}$$

$$= \frac{100}{6 \cdot 5}$$

$= 15 \cdot 38$ மைல்கள் (ஒரு காலனுக்கு)

மாதிரி 131

ஒருவர் ஒரு நகரிலிருந்து மற்றொரு நகருக்குச் செல்கிறார் அந்த இரண்டு நகரங்களுக்கும் இடையேயுள்ள தூரம் 4 மைல்கள்.

அவர் மணிக்கு 40 மைல் வேகத்தில் தம்முடைய கார்மூலம் முதல் ஒரு மைலைக் கடக்கிறார். கார் நின்று விடவே, அடுத்த 1·5 மைல்களைக் குதிரை வண்டி மூலம் மணிக்கு 10 மைல் வேகத்தில் கடக்கிறார். மீதமுள்ள தூரத்தைக் குதிரை வண்டியை விட்டுவிட்டு மணிக்கு 4 மைல் வேகத்தில் நடந்து கடக்கிறார். அவருடைய சராசரி வேகத்தைக் கணக்கிடுக.

(பி.காம்.—திருவனந்தபுரம்—1961)

தீர்வு :

அம் மனிதரின் வேகம் காண நிறையிட்ட இசைச் சராசரியைக் கணக்கிட வேண்டும்.

ஆகவே, மனிதரின் வேகம்
$$= \frac{1 + 1{\cdot}5 + 1{\cdot}5}{\left[\left(\frac{1}{40} \times 1\right) + \left(\frac{1}{10} \times 1{\cdot}5\right) + \left(\frac{1}{4} \times 1{\cdot}5\right)\right]}$$

$$= \left(\frac{4}{\frac{1+6+15}{40}}\right)$$

$$= \frac{40 \times 4}{22}$$

$$= \frac{160}{22}$$

$= 7{\cdot}27$ மைல்கள்/மணிக்கு.

மாதிரி 132

100 மாணவர்களின் கூட்டுச் சராசரி மதிப்பெண்கள் 40 எனக் கணக்கிடப்பட்டது. பின்பு 53 என்ற மதிப்பெண் 83 எனத் தவறுதலாகப் பதியப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. சரி செய்யப்பட்ட மதிப்பெண்ணுக்குச் சரியான கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக.

(பி.காம்.—ஆக்ரா—1963)

தீர்வு :

100 மாணவர்கள் எடுத்த மொத்த மதிப்பெண்கள் $= 100 \times 40$

$= 4000$

தவறுதலாகக் கொண்ட மதிப்பெண் $= 83$

சரியாகக் கொள்ளவேண்டிய மதிப்பெண் = 53

ஆகவே, 100 மாணவர்கள் எடுத்த சரியான மொத்த மதிப்பெண்கள் } = 4000—83+43

= 3970

∴ சரி செய்யப்பட்ட பின்பு 100 மாணவர்களின் கூட்டுச் சராசரி மதிப்பெண்கள் } $= \frac{3970}{100}$

= 39·70 மதிப்பெண்கள்

மாதிரி 133

கீழ்க்காணும் அலைவெண் பட்டியலுக்கு இடைநிலை, முகடு ஆகியவற்றைக் காண்.

வருமானம் இரண்டுக்கும் மத்தியில்—ரூபாயில்		ஆட்களின் எண்ணிக்கை
100-க்கும்	200-க்கும்	15
100-க்கும்	300-க்கும்	33
100-க்கும்	400-க்கும்	63
100-க்கும்	500-க்கும்	83
100-க்கும்	600-க்கும்	100

(பி.காம்.—ஆக்ரா—1963)

தீர்வு :

இடைநிலை, முகடு கணக்கிடல்:

வருமானம் (ரூபாயில்)	அலைவெண் f	குவி அலைவெண் $c.f$
100—200	15	15
200—300	18	33
300—400	30	63
400—500	20	83
500—600	17	100

(1) இடைநிலை $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு அல்லது

$\left(\frac{100+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 50{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

(50·5) என்ற உறுப்பின் மதிப்பு '300—400' என்ற பிரிவின் கீழ் வருகிறது.

ஆகவே,
$$M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right)-m}{f} \times C$$

$$= 300 + \frac{505-33}{30} \times 100$$

$$= 300 + \frac{17{\cdot}5 \times 100}{30}$$

= ரூ. 358·33

முகடு,
$$M_o = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

$$= 300 + \frac{30-18}{60-18-20} \times 100$$

$$= 300 + \frac{12 \times 100}{22}$$

$$= 300 + 54{\cdot}55$$

= ரூ. 354·55

மாதிரி 134

கீழ்வரும் பட்டியலில் ஒரு நகரிலுள்ள 600 வீடுகளின் 10% ராண்டம் மாதிரியாகத் தொகுத்தளிக்கப்பட்டவைகளின் மதிப்பும் (100 ரூபாய்களாக) புள்ளி விவரமும் தரப்பட்டுள்ளன.

(*i*) முகடு கணக்கிடுக.

(*ii*) ஒவ்வொரு 100 ரூபாய் மதிப்பிற்கு ஒரு ரூபாய் என்று சீராக ஒவ்வொரு வீட்டிற்கும் வரி போட்டால் வரி வருவாய் எவ்வளவு கிடைக்கும் என மதிப்பிடுக.

(*iii*) வீடுகளின் மதிப்பை ஏறுவரிசையில் எழுதி, குறைந்த மதிப்புடைய 40% வீடுகள் வரி விதிப்பிலிருந்து நீக்கப் பட்டால், வரி நீக்கம் செய்யப்பட வேண்டிய மதிப்பின் அளவு என்ன ?

மதிப்பு (100 ரூபாய் களாக)	0—10	10—20	20—30	30—40	40—50
வீடுகளின் எண்ணிக்கை	42	69	85	103	137
மதிப்பு (100 ரூபாய் களாக)	50—60	60—70	70—80	80—90	
வீடுகளின் எண்ணிக்கை	72	39	31	22	

(சென்னைப் பல்கலை—1944)

தீர்வு :

(1) முகடு $M_o = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$

$$= 40 + \frac{137 - 103}{(2 \times 137) - 103 - 72} \times 10$$

$$= 40 + 3{\cdot}43$$

= 43·43 நூறு ரூபாய்கள்

= ரூ 4,343

வரி வருவாயைக் கணக்கிடல் :

பிரிவு	மத்திய மதிப்பு (x)	அலை வெண் (f)	பெருக்கல் fx	குவி அலை வெண் cf
0—10	5	42	210	42
10—20	15	69	1035	111
20—30	25	85	5221	196
30—40	35	103	3605	299
40—50	45	137	6165	436
50—60	55	72	3960	508
60—70	65	39	2535	547
70—80	75	31	2325	578
80—90	85	22	1870	600
மொத்தம்		600	23,830	

(ii) நூறு ரூபாய் மதிப்பிற்கு 1 ரூபாய் வரி என்ற விகிதத்தில் கொடுக்கப்பட்ட வீடுகள் அனைத்திலிருந்தும் வசூலிக்க வேண்டிய வரி வருவாயின் மொத்தத் தொகை

$$= \Sigma_i fx$$

$$= \textbf{23,830} \text{ ரூபாய்கள்.}$$

(iii) முதல் 40% வீடுகள் [மதிப்பு ஏறுவரிசையில் அமைத்தால்] வரி விலக்குப் பெறவேண்டும். ஆகவே 40 ஆவது நூற்றுமானத்தைக் கணக்கிட வேண்டும்.

40 ஆவது நூற்றுமானம் $P_{40} = \dfrac{40\,(n+1)}{100}$ ஆவது அல்லது $\left[\dfrac{40\,(600+1)}{100}\right]$ ஆவது அல்லது 240·4 ஆவது வீட்டின் மதிப்பு. 240·4 ஆவது வீடு '30—40' என்ற பிரிவில் விழுகிறது.

ஆகவே 40 ஆவது நூற்றுமானம் $P_{40} = l_1 + \dfrac{\dfrac{40(n+1)}{100} - m}{f} \times C$

$$= 30 + \frac{240{\cdot}4 - 196}{103} \times 10$$

$$= 30 + 4{\cdot}31$$

$$= 34{\cdot}31 \text{ (நூறு ரூபாய்கள்)}$$

∴ வரி விலக்கு அளிக்கப்படவேண்டிய வீட்டு மதிப்பு

= ரூ. 3431

மாதிரி 135

ஒரு ராண்டம் மாறியின் வெவ்வேறு மதிப்புகள் : x_1, x_2, x_3 ....x_n ஆகும்; அவைகளின் அலைவெண்கள் முறையே f_1, f_2, f_3, ...f_n ஆகும். $X = ax + b$ எனில், X-ன் கூட்டுச் சராசரி, இடைநிலை, முகடு காண்க.

(சென்னை—பல்கலை)

(i) கூட்டுச் சாரசரி கணக்கிடல் :

இங்கு, $X_i = ax_i + b;\ i = 1, 2, 3, \ldots\ldots\ldots n$

$$\therefore \quad \frac{\sum_{i=1}^{n} f_i X_i}{\sum_{i=1}^{n} f_i} = a\,\frac{\sum_{i=1}^{n} f_i x_i}{\sum_{i=1}^{n} f_i} + \frac{\sum_{i=1}^{n} f_i b}{\sum_{i=1}^{n} f_i}$$

அல்லது $\overline{X} = a\overline{x} + b$ ஆகும்.

$$(\because = \sum_{i=1}^{n} b = b\sum_{i=1}^{n} f_i = b_N \sum_{i=1}^{n} f_i = N)$$

ஆதலால் $\overline{x} = a\,\overline{x} + b$

இங்கு, சாதராண கூட்டுச் சராசரியை ($\overline{x}$ ஐ) x மாறியின் கூட்டுச் சராசரியைக் கணக்கிட்டு $X = ax+b$ என்ற டிரான்ஸ் பர்மேஷனைப் பயன்படுத்திக் கணக்கிட்டுக் கண்டறியலாம்.

(ii) இடைநிலை :

மத்திய உறுப்பிற்குச் சரியான மாறியின் அளவே, இடைநிலை அளவாகும். இங்கு மூலத்தையும் அளவையும் மாற்றி $X = ax + b$ என்ற புதிய மாறியை அமைத்து அதன் இடைநிலையைக் கணக்கிட வேண்டும். இம் மாற்றத்தால், இடைநிலையாகிய மத்திய மதிப்பு அப்படியேதான் இருக்கிறது. ஆகவே, x மாறியின் இடைநிலையை மூலத்தையும் அளவையும் மாற்றி இடைநிலையாகக் கொள்கிறோம்.

ஆதலால், $X_{\text{Median}} = a\,X_{\text{Median}} + b$ ஆகும்.

(iii) முகடு

X-மாறியின் முகட்டை மேற்கண்ட விளக்கத்தின்படி கணக்கிடலாம்.

மாதிரி 136

ஒரு நேர்மறை மாறியின் (positive variate) கூட்டுச் சராசரிக் பெருக்குச் சராசரி, இசைச் சராசரி ஆகியவை முறையே A, G, H எனில், $A \geqslant G \geqslant H$ என, சிறிய உதாரணங்கள் மூலம் மட்டும் நிறுவிக் காட்டு.

(சென்னை—பல்கலை)

தீர்வு :

நேர்மறை மாறியின் உறுப்புகள் எல்லாவற்றின் மதிப்பும் சமமென்றால் $A = G = H$.

நாம் 4, 4 என்ற சம மதிப்புடைய இரண்டு உறுப்புகளை எடுத்துக் கொள்வோம்.

கூட்டுச் சராசரி $= \dfrac{4+4}{2} = \dfrac{8}{2} = 4$

பெருக்குச் சராசரி $= \sqrt{4 \times 4} = 4$

இசைச் சராசரி $= \dfrac{2}{\frac{1}{4} + \frac{1}{4}} = \dfrac{2}{0{\cdot}5} = 4$

ஆகவே, இங்கு $A = G = H$ எனக் காண்கிறோம்.

(ii) மாற்று உறுப்புகளின் மதிப்பு மாற்றமாக இருக்கும் பொழுது

$$A > G > H$$

2, 4, 8 என்ற மதிப்புகளை எடுத்துக் கொள்வோம்.

பின்பு,

கூட்டுச் சாரசரி $A = \frac{\Sigma x}{n}$

$$= \frac{2+4+8}{3}$$

$$= \frac{14}{3} = \mathbf{4{\cdot}67}$$

பெருக்குச் சாரசரி $G = \left\{ x_1 \times x_2 \times \ldots\ldots\ldots \times x_n \right\}^{1/n}$

$$= [2 \times 4 \times 8]^{\frac{1}{3}}$$

$$= (64)^{\frac{1}{3}} = 4$$

இசைச் சாரசரி $H = \dfrac{n}{\dfrac{1}{x_1} + \dfrac{1}{x_2} + \ldots\ldots + \dfrac{1}{x_n}}$

$$= \frac{3}{\frac{1}{2} + \frac{1}{4} + \frac{1}{8}}$$

$$= \frac{3}{7/8}$$

$$= \frac{3 \times 8}{7} = \mathbf{3{\cdot}43}$$

ஆகவே $4{\cdot}57 > 4 > 3{\cdot}43$

அல்லது $A > G > H$

எனக் காண்கிறோம்.

மாதிரி 137

கீழ்க்காணும் அலைவெண் பரவலுக்கு (i) கூட்டுச் சராசரி (ii) இடைநிலை (iii) முகடு

ஆகியவற்றைக் காண்.

பிரிவு	அலைவெண்	பிரிவு	அலைவெண்
1—5	·005	17—21	·326
5—9	·017	21—25	·248
9—13	·080	25—29	·088
13—17	·227	29—33	·009

(திருவனந்தபுரம் பல்கலை)

தீர்வு :

இங்கு, தசம பின்னத்தை 1000 ஆல் பெருக்கி அலைவெண்களை முழு எண்களாக மாற்றிச் சராசரிகள் கணக்கிடல் :

பிரிவு	மத்திய மதிப்பு (x)	அலை வெண் (f)	ஊகச் சராசரி $(A=15)$ யிலிருந்து விலக்கம் dx'	பெருக்கல் fdx'	குவி அலை வெண் $c.f$
1— 5	3	5	—3	—15	5
5— 9	7	17	—2	—34	22
9—13	11	80	—1	—80	102
13—17	15	227	0	0	329
17—21	19	326	1	326	655
21—25	23	248	2	496	903
25—29	27	88	3	264	991
29—33	31	9	4	36	1000
மொத்தம்		1000		993	

(i) கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f dx'}{n} \times C$

$$= 15 + \frac{993}{1000} \times 4$$

$$= 15 + \frac{3972}{1000}$$

$$= 18{\cdot}972$$

(ii) இடை நிலை $M_e = \left(\frac{n+1}{2}\right) r$-ஆவது அல்லது

$\left(\frac{1000+1}{2}\right)$ ஆவது அல்லது 500·5 ஆவது உறுப்பு மதிப்பு

500 5 ஆவது உறுப்பின் மதிப்பு '17—21' என்ற பிரிவில் வருகிறது.

$$\text{ஆகவே இடைநிலை } M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - m}{f} \times C$$

$$= 17 + \frac{500{\cdot}5 - 329}{326} \times 4$$

$$= 19{\cdot}1 \text{ (தோராயமாக)}$$

$$\text{(iii) முகடு } M_0 = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

$$= 17 \times \frac{326 - 227}{652 - 227 - 248} \times 4$$

$$= 19{\cdot}24 \text{ (தோராயமாக)}$$

மாதிரி 138

ஒரு தொழிற்சாலையில் ஒரு குறிப்பிட்ட அளவு (ஓர் அலகு வேலையை)

(i) A என்பவர் 4 நிமிடங்களிலும்

(ii) B என்பவர் 5 நிமிடங்களிலும்

(iii) C என்பவர் 6 நிமிடங்களிலும்

(iv) D என்பவர் 10 நிமிடங்களிலும்

(v) E என்பவர் 12 நிமிடங்களிலும் முடித்தால்,

(a) மேற்கண்டவர்கள் நிமிடத்திற்குச் செய்து முடிக்கும் சராசரி வேலை அளவுகளின் (அலகுகளில்) எண்ணிக்கையைக் கணக்கிடவும்.

(b) இவ் வீதத்தில் 6 மணிகள் வேலை நேரம் கொண்ட ஒரு நாளில் இவர்கள் எத்தனை அலகு வேலைகளை முடிப்பார்கள்?

(எம்.ஏ.—சென்னை—1961)

தீர்வு :

(a) ஓர் அளவு (அலகு) வேலையை முடிக்க எடுத்துக்கொண்ட சராசரி நேரம் மேற்கண்டவர்கள் எடுக்கும் நேரங்களின் இசைச் சராசரி மூலம் கணக்கிடப்பட வேண்டும்.

$$\text{இசைச் சராசரி} = \frac{n}{\frac{1}{x_1} + \frac{1}{x_2} + \ldots\ldots \frac{1}{x_n}}$$

$$= 5/\tfrac{48}{60}$$

$$= 6\tfrac{1}{4} \text{ நிமிடங்கள்}$$

(1 அலகு வேலைக்கு)

ஓர் அலகு வேலை முடிய தேவைப்படும் நேரம் $= 6\frac{1}{4}$ நிமிடங்கள்

ஆகவே,

ஒரு நிமிடத்திற்கு முடிக்கப்படும் சராசரி வேலையின் அலகு $= 1/6\frac{1}{4}$

$= 1/\frac{25}{4}$

$= 4/25$

$= 0{\cdot}16$

(b) ஓர் அலகு வேலை முடியத் தேவைப்படும் சராசரி நேரம் $= 6\frac{1}{4}$ நிமிடங்கள்

6 மணி கொண்ட ஒரு நாள் $= 360$ நிமிடங்கள்

5 வேலையாட்கள் எடுத்துக் கொள்ளும் நேரம் (ஒரு நாளில் 6 மணி நேரம்) $= 360$ நிமிடங்கள் $\times 5$

$= 1800$ நிமிடங்கள்

ஆகவே,

$$\left.\begin{array}{r}\text{1800 நிமிடங்களில் ஆகும்}\\ \text{வேலைகளின் எண்ணிக்கை}\\ \text{(அலகுகளில்)}\end{array}\right\} = \frac{1800}{6\frac{1}{4}}$$

$$= \frac{1800 \times 4}{25}$$

$$= \mathbf{288} \text{ (அலகுகள்)}$$

ஒரு நாளில் (6 மணிகள் வேலை நேரம் கொண்ட ஒரு நாள்) மேற்கண்ட A, B, C, D, E என்ற ஐந்து வேலையாட்கள் முடிக்கும் வேலை அலகுகளின் எண்ணிக்கை = **288** (அலகுகள்)

மாதிரி 139

ஒரு நிறுவனத்தில் 285 ஆட்கள் வேலை செய்கின்றனர். அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 100 லிருந்து ரூ. 200 வரை தரப்படுகிறது. ஒவ்வோர் இரண்டு ஆண்டுகளிலும் அவர்கள் ரூ. 20 ஐச் சம்பள உயர்வாகப் பெறுகிறுர்கள். கீழேயுள்ள வருவாய்ப் பட்டியலுக்கு

(i) கூட்டுச் சராசரி *(ii)* இடைநிலை *(iii)* முகடு ஆகியவற்றைக் கண்டுபிடி.

(iv) மொத்த மாதச் சம்பளக் கூடுதலையும் காண்.

வருவாய்ப் பட்டியல்

வருவாய் (ரூபாயில்)	வேலையாட்கள் எண்ணிக்கை
ரூ. 200 அல்லது அதற்குக் குறைவாக	20
ரூ. 180 அல்லது அதற்குக் குறைவாக	265
ரூ. 160 அல்லது அதற்குக் குறைவாக	225
ரூ. 140 அல்லது அதற்குக் குறைவாக	150
ரூ. 120 அல்லது அதற்குக் குறைவாக	90
ரூ. 100 அல்லது அதற்குக் குறைவாக	40

(சென்னைப் பல்கலை)

(நாகபுரி—1942)

தீர்வு :

இங்கு ரூ. 100, ரூ, 120, ரூ. 140, ரூ. 160, ரூ. 180, ரூ. 200 என்று ஆட்கள் சம்பளம் வாங்குகின்றார்கள். இடைப்பட்ட ரூபாய்ச் சம்பளம் ஒருவரும் வாங்கவில்லை. ஆகவே இப் பட்டியல் ஒரு தொடர்ச்சியற்ற குவி அலைவெண் பரவலைத் தருகிறது. சாதாரணத் தொடர்ச்சியற்ற அலைவெண் பரவலாக மாற்றி, கேட்டிருக்கும் சராசரிகளையும், மொத்த மாதச் சம்பளப் பட்டுவாடா ரூபாயையும் கணக்கிடுகிறோம்.

தொடர்ச்சியற்ற தொகுதிப் பரவல்

சம்பளம் (ரூபாயில்) (x)	ஆட்கள் எண்ணிக்கை (f)	பெருக்கல் $f \times x$	குவி அலைவெண் $c.f$
100	40	4,000	40
120	50	6,000	90
140	60	8,400	150
160	75	12,000	225
180	40	7,200	265
200	20	4,000	285
மொத்தம்	285	41,600	

(i) கூட்டுச் சராசரிச் சம்பளம் $\bar{x} = \frac{\Sigma fx}{n}$

$$= \frac{41600}{285}$$

$$= \text{ரூ. } 145{\cdot}96$$

(ii) முகட்டுச் சம்பளம் M_o = ரூ. 160

(iii) இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{285+1}{2}\right)$ ஆவது அல்லது 143 ஆவது உறுப்பின் மதிப்பு

(143) ஆவது ஆளின் சம்பளம் = ரூ. 40

ஆகவே, இடைநிலைச் சம்பளம் = ரூ. 140

(iv) ஒவ்வொரு மாதமும் சம்பளமாகக் கொடுக்கும் மொத்த ரூபாய்கள் $\Big\} = \Sigma fx$

= ரூ. 41,600

2. பரவல் அளவைகள்
(Measures of Dispersion)

ஒரு குறிப்பிட்ட மதிப்பு இடைவெளியில் வகுப்புகள் அல்லது அலைவெண்கள் (சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள்) சிதறி அல்லது பரவி அமைதலை, பரவல் (Dispersion) என்கிறோம்.

அப்பரவல் அளவை அல்லது சிதறல் அளவை அளந்தறியப் பயன்படுத்தப்படும் அளவை முறைகளை, பரவல் அளவைகள் (Measures of Dispersion) என்று அழைக்கிறோம். பரவல் அளவைகளின் முக்கிய அளவைகள் கீழ் வருமாறு :

(1) **வீச்சு முறை** (Range method)

(2) **அரை இடைக் கால்மான வீச்சு** (Semi inter quartile Range)

(அல்லது)

கால்மான விலக்கம் (Quartile deviation)

(3) **சராசரி விலக்கம்** Average deviation)

(4) **திட்ட விலக்கம்** (Standard deviation)

சூத்திரங்கள் (Formulae) :

(1) வீச்சு (Range)

ஒரு வரிசையிலுள்ள மிகப் பெரிய உறுப்புக்கும், மிகச் சிறிய உறுப்புக்கும் இடையேயுள்ள வித்தியாசமே வீச்சு எனப்படுகிறது. ஒரு வரிசையின் எண்களை ஏறு வரிசை மதிப்பிலோ அல்லது இறங்கு வரிசை மதிப்பிலோ வரிசைப்படுத்தினால், குறைந்த, கூடிய உறுப்புகள் முதலும் கடைசியுமான இடங்களைப் பெறுகின்றன. இந்த இரு கடைசி உறுப்புகளின் வித்தியாசமே வீச்சு (Range) எனப்படும்.

$$\text{அரை வீச்சு} = \frac{\text{பெரிய உறுப்பு} - \text{சிறிய உறுப்பு}}{2}$$

$$\text{வீச்சுக் கெழு} = \frac{\text{பெரிய உறுப்பு} - \text{சிறிய உறுப்பு}}{\text{பெரிய உறுப்பு} + \text{சிறிய உறுப்பு}}$$

(கொடுக்கப்பட்ட மதிப்புகளில்)

(2) கால்மான விலக்கம் அல்லது அரை இடைக் கால்மான வீச்சு

கால்மான விலக்கம் (Q. D) $= \frac{Q_3 - Q_1}{2}$ (வெறும் அளவு)

இங்கு Q_1 = முதல் கால்மானம்

Q_3 = மூன்றாவது கால்மானம்

கால்மான விலக்கக் கெழு $= \frac{Q_3 - Q_1}{Q_3 + Q_1}$

(3) சராசரி விலக்கம்
(Mean or Average Deviation)

கூட்டுச் சராசரியிலிருந்து அல்லது இடைநிலையில் இருந்து அல்லது முகட்டிலிருந்து கிடைக்கும் உறுப்புகள் அல்லது அலைவெண்களின் விலக்கங்களின் கூட்டுச் சராசரியே சராசரி விலக்கமாகும்.

(a) சராசரி விலக்கம் $\delta_{\bar{x}}$ (கூட்டுச் சராசரி $\bar{x}$-லிருந்து)

$$= \frac{\Sigma |d_{\bar{x}}|}{n}$$

இங்கு n என்பது புள்ளி விவரங்களின் எண்ணிக்கையாகும்.

சராசரி விலக்கக் கெழு (கூட்டுச் சராசரி $\bar{x}$-லிருந்து) $= \frac{\delta_{\bar{x}}}{\bar{x}}$

(b) சராசரி விலக்கம் $[\delta_{M_e}]$ (இடைநிலை M_e-லிருந்து

$$= \frac{\Sigma |d_{M_e}|}{n}$$

இங்கு, n என்பது புள்ளி விவரங்களின் (உறுப்புகளின்) எண்ணிக்கையாகும்.

சராசரி விலக்கக் கெழு (இடை நிலையிலிருந்து)

$$= \frac{\delta_{M_e}}{M_e}$$

இங்கு, M_e என்பது இடைநிலையாகும்.

(c) சராசரி விலக்கம் δ_{M_o} (முகட்டடியிலிருந்து)

$$= \frac{\Sigma \mid d_{M_o} \mid}{n}$$

இங்கு, n என்பது புள்ளி விவரங்களின் எண்ணிக்கையாகும்.

M_o என்பது முகடாகும்.

சராசரி விலக்கக் கெழு (முகட்டிலிருந்து)

$$= \frac{\delta_{M_o}}{M_0}$$

இங்கு, M_0 என்பது முகடாகும்.

தொடர்ச்சியற்ற தொகுதியின் சராசரி விலக்கம்

$$= \frac{\Sigma f \mid d \mid}{\Sigma f}$$

இங்கு, $|d|$ = எடுத்துக்கொண்ட சராசரியில் இருந்து நேரிடைக் குறி கொண்டு, கணக்கிடப்படுகின்ற விலக்கங்களாகும்.

சராசரி விலக்கத்தை முதல் மோமெண்ட் பரவல் எண் எனக் கூறலாம்.

சுருக்கு வழி முறையில் சராசரி விலக்கம் கணக்கிடல் :

இங்கு,

m = கூட்டுச் சராசரி அல்லது இடைநிலை அல்லது முகடு.

p = எடுத்துக்கொண்ட சராசரிக்குக் குறைவான உறுப்புகளின் எண்ணிக்கை

S_1 = எடுத்துக்கொண்ட சராசரிக்குக் குறைவான உறுப்புகளின் கூட்டல்.

q = எடுத்துக்கொண்ட சராசரிக்கு அதிகமான உறுப்புகளின் எண்ணிக்கை.

S_1 = எடுத்துக்கொண்ட சராசரிக்கு அதிகமான உறுப்புகளின் கூட்டல்

எனக் கொண்டால்,

m-லிருந்து கண்ட சராசரி விலக்கம்

$$= \frac{S_2 - S_1 + m\ (p - q)}{n}$$

இடைநிலையிலிருந்து சராசரி விலக்கம் கணக்கிடப்படும் பொழுது $p = q$ என இருக்கிறது. ஆகவே, இடைநிலையிலிருந்து கணக்கிடப்படும் சராசரி விலக்கம்

$$= \frac{S_2 - S_1}{n}$$

கூட்டுச் சராசரி அல்லது இடைநிலை அல்லது முகட்டிலிருந்து கணக்கிடப்படும் (தொடர்ச்சியற்ற அல்லது தொடர் தொகுதி) சராசரி விலக்கம்

$$= \frac{\Sigma f d_x + \text{மொத்தப் பிழை}}{n}$$

கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கக் கெழு

$$= \frac{\text{சராசரி விலக்கம் (கூட்டுச் சராசரியிலிருந்து)}}{\text{கூட்டுச் சராசரி}}$$

இடை நிலையிலிருந்து கிடைத்த சராசரி விலக்கக் கெழு

$$= \frac{\text{சராசரி விலக்கம் (இடை நிலையிலிருந்து)}}{\text{இடை நிலை}}$$

முகட்டிலிருந்து கிடைத்த சராசரி விலக்கக் கெழு

$$= \frac{\text{சராசரி விலக்கம் (முகட்டிலிருந்து)}}{\text{முகடு}}$$

(4) திட்ட விலக்கம் (Standard Deviation)

திட்ட விலக்கம், கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் வர்க்கச் சராசரியின் வர்க்கமூலம் ஆகும். தொகுதி

யின் சராசரிக்கும், உறுப்பு மதிப்புகளுக்குமிடையேயுள்ள நேரிடை, எதிரிடை ஆகிய வித்தியாசங்களை வர்க்கப்படுத்திஞல் அனைத்தும் நேரிடை மதிப்புகளாகிவிடும். இவற்றைச் சராசரிப்படுத்தி வர்க்க மூலம் கண்டால் கிடைப்பது திட்ட விலக்கமாகும்.

$$\text{திட்ட விலக்கம் } \sigma = \sqrt{\frac{\Sigma(x-\bar{x})^2}{n}}$$

இங்கு,

n = வரிசையில் கொடுக்கப்பட்ட உறுப்புகளின் எண்ணிக்கை

$\bar{x}$ = கூட்டுச் சராசரி

ஊகச் சராசரி A-லிருந்து கிடைத்த விளக்கங்களை d எனக் குறித்தால் மேற்கண்ட சூத்திரத்தைக் கீழ்க் காணுமாறு எழுதலாம்.

$$\sigma = \sqrt{\frac{\Sigma d^2}{n} - (\bar{x}-A)^2}$$

$$= \sqrt{\frac{\Sigma d^2}{n} - \left(\frac{\Sigma d}{n}\right)^2} \quad \text{(சுருக்கு முறை)}$$

தொடர் வரிசை

$$\sigma = \sqrt{\frac{\Sigma f(x-\bar{x})^2}{\Sigma f}} \quad \text{(நேர் முறை)}$$

$$\sigma = \sqrt{\frac{\Sigma f d^2}{\Sigma f} - (\bar{x}-A)^2}$$

$$= \sqrt{\frac{\Sigma f d^2}{\Sigma f} - \left(\frac{\Sigma f d}{\Sigma f}\right)^2} \quad \text{(சுருக்கு முறை)}$$

கொடுக்கப்பட்ட அலைவெண் பரவலில் பிரிவு இடைவெளிகளின் இடையே உள்ள இடைவெளிகள் சமமாக இருந்தால் திட்ட விலக்கம் கணக்கிடும்பொழுது படிவிலக்க முறையையே (Step (Deviation Method) பயன்படுத்துகிறோம்.

$$\text{ஆகவே, } \sigma = c \times \sqrt{\frac{\Sigma f d'^2}{\Sigma f} - \left(\frac{\Sigma f d'}{\Sigma f}\right)^2} \quad \text{(படி விலக்க முறை)}$$

இங்கு,

c = சீரான பிரிவுகளின் இடைவெளியின் மதிப்பு

$$d' = \frac{d}{c} = \frac{(x-A)}{c}$$

A = ஊகச் சராசரி (origin)

சார்லியர் சோதனை :

இதை, திட்ட விலக்கத்தைப் பிழையின்றிக் கணக்கிடப் பயன்படுத்துகிறோம்.

$$\Sigma f(dx+1)^2 - \Sigma f dx^2 - 2\Sigma f dx = N$$

மாறுவிகிதக் கெழு :

மாறுவிகிதக் கெழு காணலை முதலில் 'பேராசிரியர் கார்ல் பியர்சன்தான் பயன்படுத்தினார். இதைச் 'சராசரியின் சதவீத மாறுபாடு' எனக் கூறினார்.

$$\text{மாறுவிகிதக் கெழு} = \frac{\text{திட்ட விலக்கம்}}{\text{கூட்டுச் சராசரி}} \times 100$$

மாறுபாடு அல்லது இரண்டாவது விலக்க விசைப் பெருக்கச் சராசரி (Moments) = (திட்ட விலக்கம்)$^2 = \sigma^2$

$$= \frac{\Sigma f d^2}{n}$$

ஆகவே, மாறுபாடு என்பது திட்ட விலக்கத்தின் வர்க்கமாகும். அல்லது இதைக் கூட்டுச் சராசரியின் மேற்கண்ட இரண்டாவது மோமெண்ட் எனவும் கொள்ளலாம்.

ஒன்று சேர்ந்த வரிசைகளின் அல்லது பொதுத் திட்ட விலக்கம் :

இங்கு,

σ_{12} = இரண்டு வரிசைகள் கலந்த ஒரே வரிசையின் திட்ட விலக்கம்

σ_1 = முதல் வரிசையின் திட்ட விலக்கம்

σ_2 = இரண்டாம் வரிசையின் திட்ட விலக்கம்

$\bar{x}_1$ = முதல் வரிசையின் கூட்டுச் சராசரி

$\bar{x}_2$ = இரண்டாம் வரிசையின் கூட்டுச் சராசரி

$\bar{x}$ = ஒன்று சேர்ந்த வரிசைகளின் கூட்டுச் சராசரி

$$= \frac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2}{n_1 + n_2}$$

n_1 = முதல் வரிசை உறுப்புகளின் எண்ணிக்கை

n_2 = இரண்டாம் வரிசை உறுப்புகளின் எண்ணிக்கை எனக் கொண்டால்

$$\sigma = \sigma_{12} = \sqrt{\frac{n_1\sigma_1^2 + n_1(\bar{x}_1 - \bar{x})^2 + n_2\sigma_2^2 + n_2(\bar{x}_2 - \bar{x})^2}{n_1 + n_2}}$$

ஆகும்.

இதன்படி,

$n_1\ n_2\ n_3 \ldots$ முறையே ஒவ்வொரு வரிசைகளின் உறுப்புகளின் எண்ணிக்கை

$\sigma_1\ \sigma_2\ \sigma_3 \ldots$ முறையே ஒவ்வொரு வரிசைகளின் திட்ட விலக்கங்கள்

$d_1\ d_2\ d_3 \ldots$ முறையே ஒவ்வொரு வரிசைகளின் கூட்டுச் சராசரிக்கும் பொதுக் கூட்டுச் சராசரிக்கும் உள்ள வித்தியாசங்கள்

எனக் கொண்டால்,

பொதுத் திட்ட விலக்கம் $= \sigma =$

$$\sqrt{\frac{n_1\sigma_1^2 + n_2\sigma_2^2 + n_3\sigma_3^2 \ldots\ldots + n_1d_1^2 + n_2d_2^2 + n_3d_3^2 \ldots\ldots}{n_1 + n_2 + n_3 + \ldots\ldots}}$$

எடுத்துக்கொண்ட இரு மாதிரிகளின் தனித் தனியாகக் கண்டறிந்த உறுப்புகளின் எண்ணிக்கை முறையே n_1, n_2-க்கள் சமமாகவும், இரு கூட்டுச் சராசரிகளும் முறையே $\bar{x}_1$, $\bar{x}_2$-க்கள் சமமாகவும் இருந்தால்,

இரு மாதிரிகளின் பொதுத் திட்ட விலக்கம்

$$\sigma_{12} = \sqrt{\frac{\sigma_1^2 + \sigma_2^2}{2}}$$

கினியின் சராசரி விலக்கங்கள் :

கொடுக்கப்பட்ட சராசரியிலிருந்து விலக்கங்களை அளப்பதற்குப் பதிலாக, கினி என்பவர் கொடுக்கப்பட்ட ஜோடி மாறிகளுக்கு இடையேயுள்ள வித்தியாசங்களின் கூட்டுச் சராசரியைத்

கணக்கிட்டார். இம்முறையில் ஒரு நல்ல பரவல் அளவையைக் கணக்கிடலாம் என்று கூறினார்.

கினியின் விலக்கங்களின் சராசரி $= \frac{g}{m}$.

இங்கு,

g = கொடுக்கப்பட்ட ஜோடி மாறிகளின் விலக்க மொத்தம்

m = விலக்கங்களின் மொத்த எண்ணிக்கை.

$\frac{1}{2} N(N-1)$ = மொத்த விலக்கங்களின் எண்ணிக்கை,

மாடுலஸ் (Modulus) $= \sqrt{\frac{2\,\Sigma f dx^2}{n}} = \sigma\sqrt{2}$

திட்டம் (Precision) $= \frac{1}{\sqrt{\frac{2\,\Sigma f dx^2}{n}}}$

$$= \frac{1}{\sigma\sqrt{2}}$$

$$= \frac{1}{\text{மாடுலஸ்}}$$

ஏற்றயிறக்கம் $= \frac{2\,\Sigma f dx^2}{n}$ (மாடுலசின் வர்க்கம்)

பரவல் அளவைகளுக்கு இடையிலான உறவுகள் :

(இயல் நிலைப் பரவலுக்கு மட்டும்)

(1) சராசரிப் பரவல் $= \frac{4}{5}$ திட்ட விலக்கம்

(2) கூட்டுச் சராசரி $\pm \sigma$ = 67% உறுப்புகள்

(3) கூட்டுச் சராசரி $\pm 2\sigma$ = 95% உறுப்புகள்

(4) கூட்டுச் சராசரி $\pm 3\sigma$ = 99% உறுப்புகள்

(5) வீச்சு = 4 அல்லது 5 மடங்கு திட்ட விலக்கம்

(6) கால்மான விலக்கம் $= \frac{2}{3}$ திட்ட விலக்கம்

(7) கால்மான விலக்கம் $= \frac{5}{6}$ சராசரி விலக்கம்

(8) இடைநிலை $\pm$ கால்மான விலக்கம் $\}$ = 50% உறுப்புகள்

(9) ஊகப் பிழை = $0{\cdot}6745\sigma$

(10) கூட்டுச் சராசரி $\pm$ 2 ஊகப் பிழை $\}$ = 50% உறுப்புகள்

(11) கூட்டுச் சராசரி $\pm$ 3 ஊகப் பிழை $\}$ = 99% உறுப்புகள்

(12) ஊகப் பிழை = கால்மான விலக்கம் அல்லது $\frac{2}{3}\sigma$

வீச்சு
(Range)

மாதிரி 140

ஒரு குழுவிலுள்ள ஒன்பது பேர்களின் ஆண்டு வருவாய்கள் கீழ் வருமாறு : அக்குழுவின் வீச்சு என்ன ?

ரூபாய்கள் 7520, 6530, 5020, 6230, 7320, 8200, 7800, 5750, 6900.

தீர்வு :

வீச்சு = மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு — மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு.

$\therefore$ வீச்சு = ரூ. 8500 – ரூ. 5000 = ரூ. 3500 ஆகும்.

மாதிரி 141

கீழ் உள்ளவை ஒரு மாணவர் ஏழு பாடங்களில் எடுத்த மதிப்பெண்களாகும். வீச்சுப் பரவலையும், வீச்சுக் செழுவையும் கணிக்கவும்.

மதிப்பெண்கள் : 55, 65, 43, 35, 20, 75, 80.

தீர்வு :

வீச்சு = மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு — மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு.

$\therefore$ வீச்சு = 80—20 = 60 (மதிப்பெண்கள்)

$$\text{வீச்சுக் கெழு} = \frac{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} - \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} + \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}$$

$$= \frac{80-20}{80+20} = \frac{60}{100} = \frac{3}{5}$$

$$= 0{\cdot}6$$

மாதிரி 142

கீழ்க் காணும் பரவலுக்கு வீச்சையும் வீச்சுக் கெழுவையும் காண்க.

கூலி (ரூபாயில்)	வேலையாட்களின் எண்ணிக்கை	கூலி (ரூபாயில்)	வேலையாட்களின் எண்ணிக்கை
5	35	10	72
6	45	11	65
7	55	12	50
8	47	13	35
9	58	14	25

தீர்வு :

வீச்சு = மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு—மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு.

$\therefore$ வீச்சு $= 15-5=10.$

$$\text{வீச்சுக் கெழு} = \frac{\text{மிகப் பெரிய உறுப்புன் மதிப்பு} - \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} + \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}$$

$$\therefore \text{வீச்சுக் கெழு} = \frac{15-5}{15+5} = \frac{10}{20} = 0{\cdot}5$$

மாதிரி 143

கீழ்க் காணும் அட்டவணையிலிருந்து வீச்சையும் வீச்சுக் கெழுவையும் காண்க.

மதிப்பெண்கள்	மாணவர்களின் எண்ணிக்கை	மதிப்பெண்கள்	மாணவர்கள் எண்ணிக்கை
10	26	15	310
11	201	16	80
12	673	17	13
13	100	18	1
14	739		

தீர்வு ;

வீச்சு = மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு – மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு

∴ வீச்சு = $18 - 10 = 8$

$$\text{வீச்சுக் கெழு} = \frac{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} - \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} + \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}$$

$$\therefore \text{வீச்சுக் கெழு} = \frac{18-10}{18+10} = \frac{8}{28}$$

$= 0{\cdot}28$ (தோராயமாக)

மாதிரி 144

200 மாணவர்களின் மதிப்பெண்களைக் கொடுக்கும் கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு வீச்சையும் வீச்சுக் கெழுவையும் கணக்கிடு.

மதிப்பெண்கள்	5—15	15—25	25—35	35—45
மாணவர்கள் எண்ணிக்கை	3	12	23	35
மதிப்பெண்கள்	45—55	55—65	65—75	75—85
மாணவர்கள் எண்ணிக்கை	65	30	23	10

தீர்வு :

வீச்சு = மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு — மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு

∴ வீச்சு = 85—15 = 70.

$$\text{வீச்சுக் கெழு} = \frac{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} - \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} + \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}$$

$$\therefore \text{வீச்சுக் கெழு} = \frac{85-15}{85+15} = \frac{70}{100} = \frac{7}{10}$$

$$= 0{\cdot}7.$$

மாதிரி 145

கீழ்க் காணும் அட்டவணை 100 மனிதர்களின் எடைகளைத் தருகிறது. பரவலையும் பரவல் கெழுவையும் வீச்சு முறையில் கணக்கிடு.

மனிதர்களின் எடை (பவுண்டில்)		மனிதர்களின் எடை (பவுண்டில்)	
பிரிவு இடைவெளி	அலைவெண்	பிரிவு இடைவெளி	அலைவெண்
85— 95	4	145—155	17
95—105	13	155 - 165	9
105—115	8	165—175	8
115—125	10	175—185	2
125—135	9		
135—145	16		100

தீர்வு :

எடை (பவுண்டில்)	மத்திய மதிப்பு	அலைவெண்
85— 95	90	4
95—105	100	13
105—115	110	8
115—125	120	14
125—135	130	9
135—145	140	16
145—155	150	17
155—165	160	9
165—175	170	8
175—185	180	2 | 100

வீச்சு = மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு — மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு

∴ வீச்சு (பரவல்) 185—85 = 100.

வீச்சுக்கெழு

$$= \frac{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} - \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}{\text{மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு} + \text{மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு}}$$

$$\therefore \text{ வீச்சுக் கெழு} = \frac{185-85}{185+85} = \frac{100}{270} = \frac{10}{27}$$

$$= 0{\cdot}27.$$

மாதிரி 146

கீழ்க் காணும் அட்டவணையிலிருந்து வீச்சின் சார்புப் பரவல்களைக் கணக்கிடு.

மதிப்பெண்கள்	10—20	20—30	30—40	40—50
அலைவெண்கள்	5	8	15	7
மதிப்பெண்கள்	50—60	60—70	70—80	
அலைவெண்கள்	3	1	1	

தீர்வு:

மதிப் பெண்கள்	மத்திய மதிப்பு (x_i)	அலை வெண் (f)	குவி அலைவெண் $(c.f)$	$f\,x$
10—20	15	5	5	75
20—30	25	8	13	200
30—40	35	15	28	525
40—50	45	7	35	315
50—60	55	3	38	165
60—70	65	1	39	65
70—80	75	1	40	75
		$n=40$		$\Sigma fx=1420$

$$\bar{x} = \frac{\Sigma fx}{n} = \frac{1420}{40} = 35{\cdot}5$$

$$\text{இடைநிலை எண்} = \frac{n+1}{2} = \frac{40+1}{2} = 20{\cdot}5$$

இந்த எண் (30—40) என்ற பிரிவில் விழுகிறது.

$$\text{இடைநிலை} = l_1 + \frac{\left[\frac{(n+1)}{2} - c\right]}{f} \times i$$

$$= 30 + \frac{[20 \cdot 5 - 13]}{15} \times 10$$

$$= 30 + \frac{7 \cdot 5}{15} \times 10$$

$$= 35$$

மேற்கண்ட பரவலில் 15 என்பதே உயர்ந்த அளவு (பலமுறை நிகழ்கின்ற) அலைவெண் ஆகும். ஆதலால் (30—40) என்பதே முகட்டுப் பிரிவாகும்.

$$\text{முகட்டுச் சூத்திரம் } M_0 = l_1 + \frac{f_1 - f_0}{(2f_1 - f_0 - f_2)} \times i$$

$$= 30 + \frac{(15-8)}{(30-8-7)} \times 10$$

$$= 30 + \frac{7}{15} \times 10$$

$$= 34 \cdot 7 \text{ (தோராயமாக)}$$

வீச்சு = மிகப் பெரிய உறுப்பின் மதிப்பு—மிகச் சிறிய உறுப்பின் மதிப்பு

$$= 80 - 10 = 70.$$

வீச்சின் சார்புப் பரவல் அளவைகள் :

(1) கூட்டுச் சராசரி $\overline{x}$ -லிருந்து கணக்கிட்ட வீச்சின் சார்பு அளவை

$$= \frac{(80-10)}{35 \cdot 5} = \frac{70}{35 \cdot 5} = 1 \cdot 97.$$

(2) இரு மடங்குக் கூட்டுச் சராசரி $(2\overline{x})$ யிலிருந்து கணக்கிட்ட வீச்சின் சார்பு அளவை

$$= \frac{80-10}{2 \times 35 \cdot 5} = \frac{70}{71} = 0 \cdot 986$$

(3) இடைநிலை (M_e) யிலிருந்து கண்ட வீச்சுச் சார்பு அளவை

$$= \frac{80-10}{35} = \frac{70}{35} = 2$$

(4) முகட்டிலிருந்து (M_o) கண்ட வீச்சுச் சார்பு அளவை

$$= \frac{80-10}{34 \cdot 7} = \frac{70}{34 \cdot 7} = 2 \cdot 02$$

(5) இறுதி நிலை மதிப்புகளின் மொத்தத்திலிருந்து கண்ட வீச்சுச் சார்பு அளவை (அல்லது வீச்சுக் கெழு)

$$= \frac{80-10}{80+10} = \frac{70}{90} = \mathbf{0 \cdot 78}.$$

கால்மான விலக்கம் அல்லது அரையிடைக் கால்மான வீச்சு (Quartile Deviation or Semi inter-quartile Range)

மாதிரி 147

கீழ் வரும் ஏழு மாணவர்களின் மதிப்பெண்களுக்கு, கால்மான விலக்கம், கால்மான விலக்கக் கெழு ஆகியவற்றைக் காண். மதிப்பெண்கள் : 65, 45, 49, 42, 54, 51, 59.

தீர்வு :

கால்மான விலக்கம் காணல் :

வரிசைப்படுத்தப்பட்ட மதிப்பெண்கள்
42
45
49
51
54
59
65

முதல் கால்மான விலக்கம் $Q_1 = \frac{(n+1)}{4}$

$$= \frac{7+1}{4}$$

$$= \frac{8}{4}$$

= 2 ஆவது உறுப்பின் மதிப்பு = 45 மதிப்பெண்கள்

2 ஆவது கால்மான விலக்கம் $Q_2 = M_e$ $\Big\} = \frac{n+1}{2} = \frac{7+1}{2}$

= 4 ஆவது உறுப்பின் மதிப்பு = 51 மதிப்பெண்கள்

3 ஆவது கால்மான விலக்கம் $\Big\} Q_3 = \frac{3 \times (n+1)}{4}$

$$= \frac{8 \times 3}{4} = \frac{24}{4}$$

6 ஆவது உறுப்பின் மதிப்பு = 59 மதிப்பெண்கள்

கால்மான விலக்கம் $Q.\ D. = \frac{Q_3 - Q_1}{2}$

$= \frac{59-45}{2} = \frac{14}{2}$

$= 7.$

$\therefore$ கால்மான விலக்கம் = 7 மதிப்பெண்கள்.

கால்மான விலக்கக் கெழு $= \frac{Q_3 - Q_1}{Q_3 + Q_1}$

$= \frac{59-45}{59+45} = \frac{14}{104}$

$= 0{\cdot}134.$

$\therefore$ கால்மான விலக்கக் கெழு = 0·13.

மாதிரி 148

கீழ்க் காணும் 22 மாணவர்கள் புள்ளியியல் பாடத்தில் எடுத்துள்ள மதிப்பெண்களுக்குக் கால்மான விலக்கத்தைக் காண்.

20, 27, 40, 47, 10, 14, 30, 1, 42, 95, 55,
35, 91, 22, 7, 38, 44, 49, 95, 65, 52, 73

தீர்வு :

மேற்கண்ட மதிப்புகளை ஏறு வரிசையில் எழுதினால்

1, 7, 10, 14, 20, 22, 27, 30, 35, 38, 40,
42, 44, 47, 49, 52, 55, 65, 73, 91, 95, 95

என அமையும்.

இங்கு மொத்த மாணவர்களின் எண்ணிக்கை $n = 22$ ஆகும்.

முதல் கால்மான எண் $= \frac{n+1}{4}$ ஆவது மாணவனின் மதிப்பெண்

$= \left(\frac{22+1}{4}\right)$ ஆவது அல்லது $5\frac{3}{4}$ மாணவனின் மதிப்பெண்

$\therefore\ Q_1 = 20 + \frac{3}{4} \times (22-20)$

$= 21{\cdot}5.$

மூன்றாவது

கால்மான எண் $= \frac{3}{4} \times (n+1)$ ஆவது மாணவனின் மதிப்பெண்

$= \frac{3}{4} \times (22+1) = \frac{69}{4}$

$= 17{\cdot}25$ ஆவது மாணவனின் மதிப்பெண்

$\therefore \; Q_3 = 55 + \frac{1}{4} \times (65-55)$

$= 57{\cdot}5$

கால்மான விலக்கம் $= \frac{Q_3 - Q_1}{2}$

$\therefore$ கால்மான விலக்கம் $= \frac{57{\cdot}5 - 21{\cdot}5}{2}$

$= \mathbf{18.}$

மாதிரி 149

அரையிடைக் கால்மான வீச்சையும், கால்மானக் கெழுவையும் கீழ்க் காணும் அட்டவணைக்குக் கணக்கிடு :

தீர்வு :

வயது (வருடங்களில்)	உறுப்பினர்களின் எண்ணிக்கை	குவி அலைவெண்
20	3	3
30	61	64
40	132	196
50	153	349
60	140	489
70	51	540
80	3	543

முதல் கால்மானம்

$Q_1 = \frac{n+1}{4}$ ஆவது உறுப்பின் மதிப்பு $= \left(\frac{543+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு (அல்லது)

136 ஆவது உறுப்பினரின் வயது $= 40$ வருடங்கள்

மூன்றாவது கால்மானம்

$$Q_3 = \frac{3(n+1)}{4}$$ ஆவது உறுப்பின் மதிப்பு

அல்லது $3\left(\frac{543+1}{4}\right)$ அல்லது 408

ஆவது உறுப்பினரின் வயது

$= 60$ வருடங்கள்.

அரையிடைக்

கால்மான வீச்சு $= \dfrac{Q_3 - Q_1}{2}$

$$= \frac{60-40}{2} = 10.$$

கால்மான

விலக்கக் கெழு $= \dfrac{Q_3 - Q_1}{Q_3 + Q_1}$

$$= \frac{60-40}{60+40}$$

$$= \frac{20}{100}$$

$$= 0{\cdot}2$$

மாதிரி 150 :

கீழ்க் காணும் அட்டவணையிலுள்ள விவரங்களுக்கு அரையிடைக் கால்மான வீச்சையும் அதனின் கால்மான விலக்கக் கெழுவையும் காண்.

மதிப் பெண்கள்	மாணவர்களின் எண்ணிக்கை	மதிப் பெண்கள்	மாணவர்களின் எண்ணிக்கை
0—4	4	8—12	12
4—6	6	12—18	7
6—8	8	18— 20	2

தீர்வு :

குவி அலைவெண் அட்டவணை

மதிப்பெண்கள்	அலைவெண்	குவி அலைவெண்
0—4	4	4
4—6	6	10
6—8	8	18
8—12	12	30
12—18	7	37
18—20	2	39
	$n = 39$	

முதல் கால்மானம் $Q_1 = \frac{(n+1)}{4}$ ஆவது மாணவனின் மதிப்பெண்

$= \left(\frac{39+1}{4}\right)$ ஆவது அல்லது 10ஆவது மாணவனின் மதிப்பெண்

10 ஆவது மாணவன் (4—6) என்ற பிரிவில் இருக்கின்றான்.

முதல் கால்மானச் சூத்திரம் $Q_1 = l_1 + \dfrac{\frac{(n+1)}{4} - c}{f} \times i$

$$Q_1 = 4 + \frac{(10-4)}{6} \times (6-4)$$

$= 4+2=6$ மதிப்பெண்கள்

மூன்றாவது கால்மானம் $= 3\left(\frac{n+1}{4}\right)$ ஆவது மாணவனின் மதிப்பெண்

$= 3 \times \frac{40}{4} = 30$ஆவது மாணவனின் மதிப்பெண்

30 ஆவது மாணவனின் மதிப்பெண் (8 – 12) என்ற பிரிவில் இருக்கிறது.

$$\therefore \text{மூன்றாவது கால்மானச் சூத்திரம்} = l_1 + \frac{3\left(\frac{n+1}{4}\right) - C}{f} \times i$$

$$Q_3 = 8 + \frac{(30-18)}{12} \times (12-8)$$

$$= 8+4 = 12 \text{ மதிப்பெண்கள்.}$$

$$\text{அரையிடைக் கால்மான வீச்சு} = \frac{Q_3 - Q_1}{2}$$

$$= \frac{12-6}{2} = 3 \text{ மதிப்பெண்கள்}$$

$$\text{கால்மான விலக்கக் கெழு} = \frac{Q_3 - Q_1}{Q_3 + Q_1}$$

$$= \frac{12-6}{12+6} = \frac{6}{18} = \frac{1}{3}$$

$$= 0{\cdot}33 \text{ மதிப்பெண்கள்.}$$

மாதிரி 151

கீழ்க் காணும் பரவலுக்குக் கால்மானங்களையும், கால்மான விலக்கத்தையும் கணக்கிடுக :

வயது x	அலைவெண் f	வயது x	அலைவெண் f
0— 5	1720	40—45	514
5—10	1331	45—50	393
10—15	1223	50—55	335
15—20	930	55—60	235
20—25	864	60—65	187
25—30	754	65—70	97
30—35	709	70—அதற்கு மேல்	120
35—40	587		

(அண்ணாமலை —1942

தீர்வு :

குவி அலைவெண் பரவல் கண்டு கணக்கிடுக :

வயது x	அலைவெண் f	குவி அலைவெண் $c.f$
0—5	1720	1720
5—10	1331	3051
10—15	1223	4274
15—20	930	5204
20—25	864	6068
25—30	754	6822
30—35	709	7531
35—40	587	8118
40—45	514	8632
45—50	393	9025
50—55	335	9360
55—60	235	9595
60—65	187	9782
65—70	97	9879
70—அதற்கு மேல்	120	9999

இப் பட்டியலில் $n = 9999$

$$\therefore \left(\frac{n+1}{4}\right) = \frac{10000}{4} = 2500$$

$$3\left(\frac{n+1}{4}\right) = \frac{30000}{4} = 7500$$

ஆகவே 2500 என்ற எண் (5—10) என்ற பிரிவில் விழுகிறது.

முதல் கால்மானச் சூத்திரம் $Q_1 = l_1 + \dfrac{\left(\frac{n+1}{4}\right) - C}{f} \times i$

$$Q_1 = 5 + \frac{(2500-1720)}{1331} \times 5$$

$$= 7{\cdot}9$$

இங்கு 7500 என்ற எண் (30—35) என்ற பிரிவில் விழுகிறது.

ஆகவே, மூன்றாவது கால்மானம் $Q_3 = l_1 + \dfrac{3\left(\dfrac{n+1}{4}\right) - c}{f} \times i$

$$Q_3 = 30 + \frac{(7500-6822)}{709} \times 5$$

$$= \mathbf{34{\cdot}8}$$

கால்மானவிலக்கச் சூத்திரம் $Q.D. = \dfrac{Q_3 - Q_1}{2}$

$$\therefore Q.D. = \frac{34{\cdot}8-7{\cdot}9}{2}$$

$$= \mathbf{13{\cdot}45}$$

மாதிரி 152

பின்வரும் வாரச் சம்பள நிகழ்வெண் பவரலில் கால்மான இடைவெளிப் பாதியை ($Q{\cdot}D.$) காண்க :

வாரச் சம்பளம் (ரூபாயில்)	40—43	43—46	46—49	49—52
அலைவெண்	4	15	27	36
வாரச் சம்பளம் (ரூபாயில்)	52—55	55—58	58—61	61—64
அலைவெண்	24	18	9	7

(பி·ஏ.—மதுரை—1971)

தீர்வு :

கால்மான இடைவெளிப் பாதியைக் கணித்தல் :

வாரச் சம்பளம் (ரூபாயில்)	அலைவெண் f	திரள் அலைவெண் $c.f$
40—43	4	4
43—46	15	19
46—49	27	46
49—52	36	82
52—55	24	106
55—58	18	124
58—61	9	133
61—64	7	140

முதல்

கால்மானம் $Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{140+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= (35 \cdot 25)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$(35 \cdot 25)$ ஆவது உறுப்பு $(46-47)$ என்ற பிரிவின் கீழ் வருகிறது.

ஆகவே, முதல் கால்மானம் $Q_1 = l_1 + \dfrac{\left(\frac{n+1}{4}\right) - C}{f} \times i$

$$= 46 + \frac{35 \cdot 25 - 19}{27} \times 3$$

$$= 46 + \frac{16 \cdot 25 \times 3}{27}$$

$= 47 \cdot 08$ (தோராயமாக)

மூன்றும்

$$\text{கால்மானம் } Q_3 = 3\left(\frac{n+1}{4}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= 3\left(\frac{140+1}{4}\right) \text{ ஆவது உறுப்பின் மதிப்பு}$$

$$= 105{\cdot}75\text{-ஆவது உறுப்பின் மதிப்பு}$$

105·75-ஆவது உறுப்பு (52—55) என்ற பிரிவின் கீழ் வருகிறது.

ஆகவே, மூன்றும்

$$\text{கால்மானம் } Q_3 = 52 + \frac{105{\cdot}75-82}{24} \times 3$$

$$= 52 + \frac{23{\cdot}75 \times 3}{24}$$

$$= 52 + 2{\cdot}97$$

$$= \mathbf{54{\cdot}97}$$

கால்மான இடை

$$\text{வெளிப் பாதி } Q_1 D = \frac{Q_3 - Q_1}{2}$$

$$= \frac{54{\cdot}97 - 47{\cdot}8}{2}$$

$$= \mathbf{3{\cdot}585}$$

மாதிரி 153

ஒரு சமயத்தில் இங்கிலாந்து நாட்டின் பார்லிமெண்டில் பிரபுக்கள் சபையில் இருந்தவர்களின் வயதுப் பரவல் வருமாறு :

மைய ஆண்டுகள் x	20	30	40	50	60	70	80
அலைவெண் f	3	61	132	153	140	51	2

திட்ட விலக்கத்தையும், கால்மான விலக்கத்தையும் கணக்கிடுக.

(சென்னைப் பல்கலை)

தீர்வு :

திட்ட விலக்கத்தையும், கால்மான விலக்கத்தையும் கணக்கிடல் :

x	f	குவி அலை வெண் $c.f$	ஊகச் சராசரி ($A=50$) யிலிருந்து படி விலக்கம் $d'x$	$fd'x$	$fd'x^2$
20	3	3	−3	−9	27
30	61	64	−2	−122	244
40	132	196	−1	−132	132
50	153	349	0	0	0
60	140	489	1	140	140
70	51	540	2	102	204
80	2	542	3	6	18
மொத்தம்	542			−15	765

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma fd'x^2}{\Sigma f} - \left(\frac{\Sigma fd'x}{\Sigma f}\right)} \times C$

$= \sqrt{\frac{765}{542} - \left(\frac{15}{542}\right)} \times 10$

$= 11{\cdot}6$ (தோராயமாக)

கால்மான விலக்கம் கணக்கிடல் :

முதல் கால்மானம் $Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{765+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 136$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 50$ வயது.

மூன்றும்

கால்மானம் $Q_3 = 3\left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 3\left(\frac{765+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 408$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 60$ வயது.

ஆகவே, கால்மான விலக்கம் $Q.D. = \frac{Q_3-Q_1}{2}$

$= \frac{60-50}{2}$

$= 5.$

மாதிரி 154

கீழ்க் காணும் அட்டவணையில் தரப்பட்ட கூலிகளுக்குக் கால் மான விலக்கத்தையும் கால்மான விலக்கக் கெழுவையும் கணக் கிடுக.

கூலி (ரூபாயில்)	30—32	32—34	34—36	36—38
கூலியாட்கள்	12	18	16	14

கூலி (ரூபாயில்)	38—40	40—42	42—44
கூலியாட்கள்	12	8	6

(ஆக்ரா—எம்.எஸ்ஸி.—1949)

தீர்வு :

கால்மான விலக்கத்தையும் கால்மான விலக்கக் கெழுவையும் கணக்கிடல் :

கூலி (ரூபாயில்)	கூலியாட்கள் f	குவி அலைவெண் $c.f$
30—32	12	12
32—34	18	30
34—36	16	46
36—38	14	60
38—40	12	72
40—42	8	80
42—44	6	86
	$n=86$	

முதல் கால்மான எண் $= \left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{86+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 21{\cdot}75$ ஆவது உறுப்பின் மதிப்பு

21·75 என்ற எண் (32—34) என்ற பிரிவில் விழுகிறது.

முதல் கால்மானச் சூத்திரம் $Q_1 = l_1 + \dfrac{\frac{n+1}{4} - C}{f} \times i$

$$= 32 + \frac{(21{\cdot}75-12)}{18} \times 2$$

$$= 32 + \frac{9.75}{18} \times 2$$

$$= 32 + 1.08.$$

$$= \mathbf{33.08.}$$

மூன்றாவது கால்மான எண் $= 3\left(\frac{n+1}{4}\right) = 3 \times \frac{(86+1)}{4}$

$$= 65.25$$

இந்த எண் (38—40) என்ற பிரிவில் விழுகிறது.

மூன்றாவது கால்மானச் சூத்திரம் $Q_3 = l_1 + \dfrac{3\left(\frac{n+1}{4}\right) - C}{f} \times i$

$$Q_3 = 38 + \frac{65.25 - 16}{12} \times 2$$

$$= 38 + \frac{5.25}{12} \times 2$$

$$= 38 + 0.875$$

$$= \mathbf{38.875}$$

கால்மான விலக்கம் $Q.D.$ $= \dfrac{Q_3 - Q_1}{2}$

$$= \frac{38.875 - 33.08}{2}$$

$$= \frac{5.795}{2} = 2.897$$

கால்மான விலக்கக் கெழு $= \dfrac{Q_3 - Q_1}{Q_3 + Q_1}$

$$= \frac{38.875 - 33.08}{38.875 + 33.08}$$

$$= \frac{5.795}{71.955}$$

$$= \mathbf{0.08.}$$

மாதிரி 155

கீழ்க் காணும் பரவலுக்குக் கால்மான விலக்கத்தைக் கண்டு பிடிக்கவும்.

வயது (x)	11	12	13	14	15	16	17	18
மாணவர்களின் எண்ணிக்கை (f)	3	9	28	39	25	10	7	4

(பி. ஏ.—சென்னை—1971)

தீர்வு :

கால்மான விலக்கத்தைக் கணக்கிடல் :

வயது	வயதுப் பிரிவு	மாணவர்களின் எண்ணிக்கை f	குவி எண்ணிக்கை $c.f.$
11	10·5—11·5	3	3
12	11·5—12·5	9	12
13	12·5—13·5	28	40
14	13·5—14·5	39	79
15	14·5—15·5	25	104
16	15·5—16·5	10	114
17	16·5—17·5	7	121
18	17.5—18·5	4	125

முதல் கால்மானம் $Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது மாணவனின் வயது

$= \left(\frac{125+1}{4}\right)$ ஆவது மாணவனின் வயது

$= 31·5$ ஆவது மாணவனின் வயது

31·5 ஆவது மாணவன் (12·5—13·5) என்ற பிரிவு வயதில் இருக்கிறான்.

ஆகவே, முதல் கால்மானம் $Q_1 = l_1 + \dfrac{\left(\frac{n+1}{4}\right) - C}{f} \times i$

$= 12{\cdot}5 + \dfrac{(31{\cdot}5 - 12)}{28} \times 1$

$= 12{\cdot}5 + \dfrac{19{\cdot}5}{28}$

$= 12{\cdot}5 + 0{\cdot}696$

$= 13{\cdot}196.$

மூன்றாவது கால்மானம் $Q_3 = 3\left(\frac{n+1}{4}\right)$ ஆவது மாணவனின் வயது

$= 3\left(\frac{125+1}{4}\right)$ ஆவது மாணவனின் வயது

$= 94{\cdot}5$ ஆவது மாணவனின் வயது

94·5ஆவது மாணவனின் வயது (14·5—15·5) ஆவது பிரிவு வயதில் இருக்கிறது.

ஆகவே, மூன்றாவது கால்மானம் $Q_3 = l_1 + \dfrac{3\left(\frac{n+1}{4}\right) - C}{f} \times i$

$= 14{\cdot}5 + \dfrac{(94{\cdot}5 - 79)}{25} \times 1$

$= 14{\cdot}5 + \dfrac{15{\cdot}5}{25}$

$= 14{\cdot}5 + 0{\cdot}62$

$= 15{\cdot}12.$

கால்மான விலக்கச் சூத்திரம் $Q.D. = \dfrac{Q_3 - Q_1}{2}$

$$\therefore \text{ கால்மான விலக்கம் } Q.D. = \frac{15 \cdot 12 - 13 \cdot 196}{2} = \frac{1 \cdot 924}{2} = 0 \cdot 962.$$

மாதிரி 156

கீழ்க் காணும் விவரங்களுக்குக் கால்மான விலக்கத்தையும் கால்மான விலக்கக் கெழுவையும் காண்.

மாதக் கூலி (ரூபாயில்)	கூலி சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை	மாதக் கூலி (ரூபாயில்)	கூலி சம்பாதிப்பவர்களின் எண்ணிக்கை
12·5—17·5	2	37·5—42·5	4
17 5—22·5	22	42·5—47·5	6
22·5—27 5	19	47·5—52·5	1
27·5—32·5	14	52·5—57·5	1
32·5—37·5	3		

(பயிற்சிக் கணக்கு—சியாவுதீன்)

தீர்வு :

மாதக் கூலி (ரூபாயில்)	மத்திய மதிப்பு x	அலைவெண் f	குவி அலைவெண் $c.f$
12·5—17·5	15	2	2
17·5—22·5	20	22	24
22·5—27·5	25	19	43
27·5—32·5	30	14	57
32·5—37·5	35	3	60
37·5—42·5	40	4	64
42·5—47·5	45	6	70
47·5—52·5	50	1	71
52·5—57·5	55	1	72
		$n=72$	

முதல் கால்மான எண் $=\left(\frac{n+1}{4}\right)$ஆவது உறுப்பின் மதிப்பு

$=\frac{72+1}{4}=(18\cdot25)$ஆவது உறுப்பின் மதிப்பு

முதல் கால்மானம் $Q_1=l_1+\frac{\left(\frac{n+1}{4}\right)-C}{f}\times i$

இங்கு, l_1 = முதல் கால்மானப் பிரிவின் கீழ் எல்லையாகும்.

i = பிரிவு இடைவெளி.

f = Q_1 பிரிவின் அலைவெண்.

n = மொத்த அலைவெண்.

C = Q_1 பிரிவுக்கு முன் பிரிவு வரை உள்ள அலைவெண்களின் குவி அலைவெண் ஆகும்.

∴ முதல் கால்மானம் $Q_1=17\cdot5+\frac{(18\cdot25-2)}{22}\times5$

$=17\cdot5+\frac{16\cdot25}{22}\times5$

$=21\cdot19$ (தோராயமாக)

மூன்றுவது கால்மான எண் $=\frac{3}{4}(n+1)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$=\frac{3}{4}(72+1)=\left(\frac{219}{4}\right)$ஆவது அல்லது

(54·75) ஆவது உறுப்பின் மதிப்பு

மூன்றுவது கால்மானச்

சூத்திரம் $=l_1+\frac{[\frac{3}{4}(n+1)-C]}{f}\times i$

$$\therefore Q_3 = 27{\cdot}5 + \frac{(54{\cdot}75 - 43)}{14} \times 5$$

$$= 27{\cdot}5 + \frac{11{\cdot}75}{14} \times 5$$

$$= 31{\cdot}69 \text{ (தோராயமாக)}$$

கால்மான விலக்கம் $Q \cdot D. = \frac{Q_3 - Q_1}{2}$

$$= \frac{31{\cdot}69 - 21{\cdot}19}{2}$$

$$= \frac{10{\cdot}5}{2} = 5{\cdot}25 \text{ (தோராயமாக)}$$

கால்மான விலக்கக் கெழு $= \frac{Q_3 - Q_1}{Q_3 + Q_1}$

$$= \frac{(31{\cdot}69 - 21{\cdot}19)}{(31{\cdot}69 + 21{\cdot}19)}$$

$$= \frac{10{\cdot}5}{52{\cdot}88}$$

$$= 0{\cdot}19 \text{ (தோராயமாக)}$$

சராசரி விலக்கம்
(Mean Deviation)

மாதிரி 157

கீழ்க் காணும் 10 மதிப்பெண்களுக்குச் சராசரி விலக்கங்களை முறையே (1) கூட்டுச் சராசரியிலிருந்து (2) இடை நிலையிலிருந்து (3) முகட்டிலிருந்து கணக்கிடுக.

மதிப்பெண்கள் : 20 22 27 30 31
32 40 40 40 48.

தீர்வு :

(1) முதலில் கூட்டுச் சராசரியைக் கணக்கிட்டு, பின் அதிலிருந்து சராசரி விலக்கத்தைக் காண்கிறோம்.

வரிசை எண்	மதிப்பெண்கள் (x)	சராசரி (33) யிலிருந்து விலக்கம் (குறிகள் கணக்கிடாமல்) $\|dx\|$
1	20	13
2	22	11
3	27	6
4	30	3
5	31	2
6	32	1
7	40	7
8	40	7
9	40	7
10	48	15
$n=10$	$\Sigma x=330$	$\Sigma\|dx\|=72$

கூட்டுச் சராசரி $(\bar{x}) = \dfrac{\Sigma x_i}{n}$

$$= \frac{330}{10} = 10.$$

கூட்டுச் சாரசரி $\bar{x}$ யிலிருந்து

$$\text{சராசரி விலக்கம்} = \frac{\Sigma|dx|}{n}$$

$$= \frac{72}{10} = 7 \cdot 2.$$

சுருக்கு வழி :

இங்கு உறுப்புகளை ஏறுவரிசையில் ஏற்கெனவே அமைத்து விட்டோம்.

p = 33ஐ விடக் குறைவான உறுப்புகளின் எண்ணிக்கை $=6$

q = 33ஐ விடப் பெரிய உறுப்புகளின் எண்ணிக்கை $=4$

S_1 = 33ஐ விடக் குறைவான உறுப்புகளின் கூட்டல் தொகை

$= 20+22+27+30+31+32$

$= 162.$

S_2 = 33ஐ விடப் பெரிய உறுப்புகளின் கூட்டல் தொகை

$= 40+40+40+48$

$= 168.$

∴ கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிட்ட சராசரி விலக்கம்

$$= \frac{S_2 - S_1 + \bar{x}(p-q)}{n}$$

$$= \frac{168-162+33\,(6-4)}{10}$$

$$= \frac{6+66}{10} = \frac{72}{10}$$

= 7·2 மதிப்பெண்கள்.

(2) முதலில் இடைநிலையைக் கணக்கிட்டு, பின் அதிலிருந்து சராசரி விலக்கத்தைக் கணக்கிடல் :

வரிசை எண்	மதிப்பெண்கள் (x)	இடைநிலை 31·5-லிருந்து விலக்கம் $\lvert dM_e \rvert$ (குறிகள் கணக்கிடாமல்)
1	20	11·5
2	22	9·5
3	27	4·5
4	30	1·5
5	31	0·5
6	32	0·5
7	40	8·5
8	40	8·5
9	40	8·5
10	48	16·5
$n = 10$		70·0

இங்கு, $\Sigma|d_{Me}| = 70{\cdot}0$

இடைநிலை $M_e = \frac{N+1}{2} = \frac{10+1}{2} = 5{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

5 ஆவது உறுப்பின் மதிப்பு $= 31$
6 ஆவது உறுப்பின் மதிப்பு $= 32$

$$63$$

சராசரி $= \frac{63}{2} = 31{\cdot}5$

∴ இடைநிலை $M_e = 31{\cdot}5$

∴ இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$$= \frac{\Sigma|d_{Me}|}{n}$$

$$= \frac{70{\cdot}0}{10} = 7$$ மதிப்பெண்கள்.

சுருக்கு வழி :

இங்கு $p = q$ (இடைநிலையிலிருந்து கணக்கிட்டதால்)

$S_1 = 31{\cdot}5$ஐ விடக் குறைவான உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 20+22+27+30+31$

$= 130.$

$S_2 = 31{\cdot}5$ஐ விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 32+40+40+40+48$

$= 200$

இடைநிலை $(31{\cdot}5)$-லிருந்து சராசரி விலக்கம் $= \frac{S_2 - S_1}{n}$

ஆகவே, இடைநிலையிலிருந்து சராசரி

விலக்கம் $\delta_{M_e} = \frac{200-130}{10}$

$= \frac{70}{10} = 7{\cdot}0$ மதிப்பெண்கள்

(3) இங்கு 40 மூன்று தடவை மூன்று உறுப்புகளின் மதிப்புகளாக வந்துள்ளது. ஆகவே, இங்கு முகடு $=40$.

சராசரி விலக்கம் முகட்டிலிருந்து கணக்கிடல் :

வரிசை எண்	மதிப்பெண்கள் x	முகட்டி (40)-லிருந்து விலக்கம் $\|d_{Me}\|$ (குறிகள் கணக்கிடாமல்)
1	20	20
2	22	18
3	27	13
4	30	10
5	31	9
6	32	8
7	40	0
8	40	0
9	40	0
10	48	8
$n = 10$		86

இங்கு $\Sigma|d_{M_o}| = 86$

$\therefore$ முகட்டி (40)-லிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் $= \dfrac{\Sigma|d_{M_o}|}{n}$

$= \dfrac{86}{10}$

$= 8{\cdot}6$ மதிப்பெண்கள்,

சுருக்கு வழி :

p = 40ஐ விடக் குறைவான உறுப்புகளின் எண்ணிக்கை = 6

q = 40ஐ விடப் பெரிய உறுப்புக்களின் எண்ணிக்கை = 1

S_1 = 40ஐ விடக் குறைவான உறுப்புக்களின் கூட்டுத் தொகை

$= 20+22+27+30+31+32$

$= 162.$

S_2 = 40ஐ விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 48.$

முகட்டி (40)லிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$$= \frac{S_2 - S_1 + M_o\,(p-q)}{n}$$

$$= \frac{48-162+40\,(6-1)}{10}$$

$$= \frac{-114+40\times 5}{10}$$

$$= \frac{200-114}{10}$$

$$= \frac{86}{10}$$

= 8·6 மதிப்பெண்கள்.

மாதிரி 158

கீழ்க் காண்பவற்றிற்கு (1) சராசரி விலக்கம்

(2) இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

ஆகியவற்றைக் கணக்கிடு.

வரிசை	1	2	3	4	5
வருமானம் (டாலர்களில்)	25·00	22·00	31·00	18·00	29·00

தீர்வு :

(1) கூட்டுச் சராசரியிலிருந்து சராசரி விலக்கம் கணக்கிடல் : முதலில் வருமானத்தை ஏறு வரிசையில் எழுதவேண்டும்.

வரிசை எண்	வருமானம் (டாலரில்) (x)	சராசரி (25)-யிலிருந்து விலக்கம் $\lvert d\bar{x}\rvert$ (குறிகள் கணக்கிடாமல்)
4	18·00	7·00
2	22·00	3·00
1	25·00	0
5	29·00	4·00
3	31·00	6·00
$n = 5$	125·00	20 00

(1) கூட்டுச் சராசரி $= \dfrac{\Sigma x_1}{n}$

$$= \frac{5}{125{\cdot}00}$$

$= 25{\cdot}00$ டாலர்கள்

கூட்டுச் சராசரியி லிருந்து விலக்கம் $= \dfrac{\Sigma \lvert d\bar{x}\rvert}{n}$

$$= \frac{20{\cdot}00}{5}$$

$= 4{\cdot}00$ டாலர்கள்

(2) மேற்கண்ட கணக்கில் இடைநிலை

$= \dfrac{(n+1)}{2}$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \dfrac{(5+1)}{2}$ ஆவது உறுப்பின் மதிப்பு

$\therefore$ 3 ஆவது உறுப்பின் மதிப்பு $= 25{\cdot}00$ டாலர்கள்.

∴ இடைநிலை = 25·00 டாலர்கள்.

இங்கு, கூட்டுச் சராசரி = இடை நிலை = 25·00.

ஆகவே கூட்டுச் சராசரி (25·00)யிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் = இடை நிலை (25·00) யிலிருந்து கணிக்கப்பட்ட சராசரி விலக்கம்

= **4·00 டாலர்கள்.**

மாதிரி 159

சுருக்கு வழியில் கீழ்க் காண்பவற்றிற்குச் சராசரி விலக்கத்தைக் காண்.

மதிப்பெண்கள்	0—10	10—20	20—30	30—40	40—50
அலைவெண்கள் f	2	8	10	4	1

(பி. காம்—சென்னை—1961)

தீர்வு :

சராசரி விலக்கத்தைக் கணக்கிடல் :

மதிப்பெண்கள்	மத்திய மதிப்பு (x)	அலைவெண் (f)	$f \times x$	ஊகச் சராசரி (25) யிலிருந்து விலக்கம் (d) (குறிகள் கணக்கிடாமல்	$(f \times dx)$ (குறிகள் கணக்கிடாமல்)
0—10	5	2	10	20	40
10—20	15	8	120	10	80
20—30	25	10	250	0	0
30—40	35	4	140	10	40
40—50	45	1	45	20	20
		$\Sigma f = 25$	$\Sigma fx = 565$		$\Sigma f d x = 180$

கூட்டுச் சராசரி $= \frac{\Sigma fx}{x}$

$= \frac{565}{25}$

$= \mathbf{22 \cdot 6}$.

சராசரி விலக்கம் $= \frac{\Sigma f dx + (\bar{x} - A) \times (S_1 - S_2)}{n}$

$= \frac{180 + (25 - 22 \cdot 6) \times (15 - 10)}{25}$

$= \frac{180 + 12}{25} = \frac{192}{25}$

$= \mathbf{7 \cdot 7}$

மாதிரி 160

கீழ்க் காணும் அட்டவணையில் தந்துள்ள 50 கல்லூரி மாணவர்களின் காலாட்படை ஆல்பா மதிப்பெண்களின் பரவலுக்கு

(1) கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

(2) இடை நிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் ஆகியவற்றைக் கணக்கிடு.

மதிப்பெண்கள்	அலைவெண்கள்
140—150	4
150—160	6
160—170	10
170—180	18
180—190	9
190—200	3
மொத்தம்	50

(சென்னை—1962)

தீர்வு :

கூட்டுச் சராசரியையும் இடைநிலையையும் கணக்கிடல் :

மதிப் பெண்கள்	மத்திய மதிப்பு x	அலை வெண் f	$f \times x$	குவி அலை வெண் $c.f$
140—150	145	4	580	4
150—160	155	6	930	10
160—170	165	10	1650	20
170—180	175	18	3150	38
180—190	185	9	1665	47
190—200	195	3	585	50
மொத்தம்		50	8560	

கூட்டுச் சராசரி $\bar{x} = \dfrac{\Sigma fx}{\Sigma f}$.

$$= \frac{8560}{50}$$

$$= 171{\cdot}2.$$

இடைநிலை M_e $= l_1 + \dfrac{\left(\dfrac{n+1}{2}\right) - C}{f} \times i$

$$= 170 + \frac{25{\cdot}5 - 20}{18} \times 10$$

$$= 170 + 3{\cdot}055$$

$$= 173{\cdot}056$$

சராசரி விலக்கங்களைக் கணக்கிடல் :

மதிப்பெண்கள் x	அலைவெண் f	சராசரி $\bar{x}=171\cdot2$ லிருந்து விலக்கம் $\|d\bar{x}\|$	இடைநிலை M_e $(=173)$ யிலிருந்து விலக்கம் $\|dM_e\|$	$f\,\|d\bar{x}\|$	$f\,\|dM_e\|$
145	4	26·2	28	104·8	112
155	6	16·2	18	97·2	108
165	10	6·2	8	62·0	80
175	18	3·8	2	68·4	36
185	9	13·8	12	124·2	108
195	3	23·8	22	71·4	66
மொத்தம்	50			528·0	510

கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$$= \frac{\Sigma|fd\bar{x}|}{n}$$

$$= \frac{528\cdot0}{50}$$

$$= 10\cdot56$$

இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$$= \frac{\Sigma|fdM_e|}{n}$$

$$= \frac{510}{50}$$

$$= 10\cdot2.$$

மாதிரி 161

ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் கணவன் மனைவி இருவருக்கிடையே உள்ள வயது வித்தியாசத்தைக் கீழ்க் காணும் விவரங்கள் தருகின்றன. சராசரி விலக்கத்தைக் கணக்கிடுக.

வயது வித்தியாசம் (ஆண்டுகளில்)	0–5	5–10	10–15	15–20
அலைவெண்	449	705	507	281
வயது வித்தியாசம் (ஆண்டுகளில்)	20–25	25–30	30–35	35–40
அலைவெண்	109	52	16	4

(பி.காம்.—பம்பாய்—1936)

தீர்வு :

சராசரி விலக்கத்தைக் கணக்கிடல் :

வயது வித்தியாசம் (ஆண்டுகள்)	மத்திய மதிப்பு (x)	அலைவெண் (f)	சராசரி (7·5) யிலிருந்து படி விலக்கம் dx'	பெருக்கல் fdx'
0—5	2·5	449	—1	—449
5—10	7·5	705	0	0
10—15	12·5	507	1	507
15—20	17·5	281	2	562
20—25	22·5	109	3	327
25—30	27·5	52	4	208
30—35	32·5	16	5	80
35—40	37·5	4	6	24
		2123		1259

கூட்டுச் சராசரி $= A + \frac{\Sigma f dx'}{\Sigma f} \times C$

$= 7{\cdot}5 + \frac{1259}{2123} \times 5$

$= 7{\cdot}5 + 2{\cdot}96$

$= 10{\cdot}5$ (தோராயமாக)

$\Sigma F|dx'|$ $= 449 + 1708 = 2157.$

ஊகச் சராசரி (7·5)யிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் கூட்டல் $= 2157 \times 5 = 10785$

S_1 = உண்மைச் சராசரி (10·5)யை விடக் குறைவான உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 449 + 705$

$= 1154.$

S_2 = உண்மைச் சராசரி (10·5) யை விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 507 + 281 + 109 + 52 + 16 + 4$

$= 969.$

∴ உண்மைச் சராசரி (10·5) யிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் கூட்டுத் தொகை

$= \Sigma f|d'x| \times C + (\bar{x} - 7{\cdot}5)(S_2 - S_1)$

$= 10785 + (10{\cdot}5 - 7{\cdot}5)(1154 - 969)$

$= 10785 + (3 \times 185)$

$= 11340.$

∴ உண்மைச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$= \frac{[\Sigma f\,|d\,x|] \times C + (\bar{x} - A)(S_1 - S_2)}{\Sigma f}$

$= \frac{11340}{2123} = 5{\cdot}3$ (தோராயமாக)

மாதிரி 162

கீழ்க் காணும் அட்டவணையிலிருந்து,

(1) கூட்டுச் சராசரி

(2) பரவலின் முதல் விலக்க விசைப் பெருக்கச் சராசரி (சராசரி விலக்கம்) ஆகியவற்றைக் காண்.

உறுப்பின் அளவு	3—4	4—5	5—6	6—7	7—8	8—9	9—10
அலைவெண்	3	7	22	60	85	32	8

(பி.காம். – சென்னை—1942)

தீர்வு :

(1) கூட்டுச் சராசரியையும் (2) சராசரி விலக்கத்தையும் கணக்கிடல் :

உறுப்பின் அளவு	மத்திய மதிப்பு (x)	அலை வெண் (f)	ஊகச் சராசரி (6·5) யிலிருந்து விலக்கம் (dx)	(fdx)	$\|fdx\|$ (குறிக் கணக் கிடாமல்)
3—4	3·5	3	—3	— 9	9
4—5	4·5	7	—2	—14	14
5—6	5·5	22	—1	—22	22
6—7	6·5	60	0	0	0
7—8	7·5	85	1	85	85
8—9	8·5	32	2	64	64
9—10	9·5	8	3	24	24
		$\Sigma f = 217$		$\Sigma fdx = 128$	$\Sigma\|fdx\| = 218$

கூட்டுச் சராசரி $= A+\frac{\Sigma fdx}{\Sigma F}$

$= 6{\cdot}5 + \frac{128}{217}$

$= 6{\cdot}5+0{\cdot}59$

$=7{\cdot}1$ (தோராயமாக).

ஊகச் சராசரி (6·5) யிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் கூட்டுத் தொகை

$=218.$

S_1 = உண்மைச் சராசரி (7·1) யை விடக் குறைவான உறுப்பு களின் கூட்டுத் தொகை

$=3+7+22+60$

$=92.$

S_2 = உண்மைச் சராசரி (7·1) யை விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 85+32+8=217-92$

$= 125$

ஆதலால் உண்மைச் சராசரி (7·1) யிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் கூட்டுத் தொகை

$= \Sigma|fd\bar{x}|+(x-A)(S_1-S_2)$

$= 218+(7{\cdot}1-6{\cdot}5)(92-125)$

$= 218-(0{\cdot}6\times 33)$

$= \mathbf{198{\cdot}2}.$

∴ உண்மைச் சராசரி (7·1) யிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$= \frac{\Sigma|fdx|+\text{மொத்தப் பிழை}}{n}$

$= \frac{198{\cdot}2}{217}$

$=0{\cdot}91$ (தோராயமாக)

மாதிரி 163

கீழ்க் காணும் அட்டவணையிலிருந்து

(1) இடைநிலை சராசரி விலக்கக் கெழு (2) சராசரி விலக்கக் கெழு ஆகியவற்றைக் காண்க.

உறுப்புகளின் அளவு	4	6	8	10	12	14	16
அலைவெண்	2	4	5	3	2	1	4

(எம். ஏ.—ஆக்ரா—1954)

தீர்வு :

முதலில் இடைநிலையையும், கூட்டுச் சராசரியையும் கணக்கிட வேண்டும்.

உறுப்புகளின் அளவு x	அலைவெண் f	குவி அலைவெண் $c.f$	$f \times x$
4	2	2	8
6	4	6	24
8	5	11	40
10	3	14	30
12	2	16	24
14	1	17	14
16	4	21	64
$n = 7$			204

இடைநிலை $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் அளவு

$= \left(\frac{21+1}{2}\right)$ ஆவது உறுப்பின் அளவு

= 11 ஆவது உறுப்பின் மதிப்பு

= 8.

கூட்டுச் சராசரி $= \dfrac{\Sigma fx}{n}$

$= \dfrac{204}{21}$

= **9·7.**

இடைநிலை விலக்கக் கெழுவையும், சராசரி விலக்கக் கெழுவையும் கணக்கிடல் :

உறுப்பின் அளவு	அலைவெண் (f)	இடைநிலை (8) யிலிருந்து விலக்கம் $\lvert d\,M_e\rvert$ (குறிகள் கணக்கிடாமல்)	சராசரி (9.7) யிலிருந்து dx (குறிகக் கணக்கிடாமல்)	$\lvert fd\,M_e\rvert$	$\lvert f\,d\,\bar{x}\rvert$
4	2	4	5·7	8	11·4
6	4	2	3·7	8	14·8
8	5	0	1·7	0	8·5
10	3	2	0·3	6	0·9
12	2	4	2·3	8	4·6
14	1	6	4·3	6	4·3
16	4	8	6·3	32	25·5
				$\Sigma\lvert fd_{M_e}\rvert = 68$	$\Sigma\lvert fd\bar{x}\rvert = 627$

இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$= \Sigma\lvert fd_{M_e}\rvert$

$= \dfrac{68}{21} = \mathbf{3{\cdot}24}$

∴ இடைநிலை விலக்கக் கெழு

$$= \frac{\text{இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராரி விலக்கம்}}{\text{இடைநிலை}}$$

$$= \frac{3{\cdot}24}{8}$$

$$= \mathbf{0{\cdot}405}$$

கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$$= \frac{\Sigma|fd\bar{x}|}{n}$$

$$= \frac{69{\cdot}7}{21}$$

$$= \mathbf{3{\cdot}32}$$

∴ சராசரி விலக்கக் கெழு

$$= \frac{\text{கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்}}{\text{கூட்டுச் சராசரி}}$$

$$= \frac{3{\cdot}31}{9{\cdot}7}$$

$$= \mathbf{0{\cdot}932}$$

மாதிரி 164

கீழ்க் காணுபவை 18 வீடுகளின் வாடகைகளாகும்.

ரூபாய்	—	பை.	ரூபாய்	—	பை.
6	—	50	6	—	25
5	—	00	3	—	00
5	—	25	9	—	00
5	—	50	4	—	50
5	—	25	4	—	00
4	—	75	3	—	00
4	—	00	3	—	75

5	—	00	5	—	00
4	—	50	3	—	00

மேற்கண்ட வாடகைகளின் இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கங்களைக் காண்.

(பி. காம்—லட்சுமணபுரி—1930)

தீர்வு :

முதலில் உறுப்புகளை ஏறு வரிசை மதிப்பில் அமைப்போம்.

வீட்டு வரிசை எண்	வாடகை (ரூபாய்களில்)	(4 875)லிருந்து விலக்கம் $\|d_{Me}\|$ (குறிகளைக் கணக்கிடாமல்)
1	3·00	1·875
2	3·00	1·875
3	3·00	1 875
4	3·75	1·125
5	4·00	0 875
6	4·00	0·875
7	4·50	0·375
8	4·50	0·375
9	4·75	0·125
10	5·00	0·125
11	5·00	0·125
12	5·00	0·125
13	5·25	0·375
14	5·25	0·375

வீட்டு வரிசை எண்	வாடகை (ரூபாய்களில்)	(4·875)லிருந்து விலக்கம் (d_{M_e}) (குறிகளைக் கணக்கிடாமல்)
15	5·50	0·625
16	6·25	1·375
17	6·50	1·625
18	9·00	4·125
$n = 18$		18·250

இங்கு, $\Sigma|d_{M_e}| = 18{\cdot}250$

இடைநிலை $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

= 9·5 ஆவது உறுப்பின் மதிப்பாகும்.

$= \frac{4{\cdot}75 + 5{\cdot}00}{2} = 4{\cdot}875$ ரூபாய்கள்.

இடைநிலை (4·875)யிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$$= \frac{\Sigma|d_{M_e}|}{n}$$

$$= \frac{18{\cdot}25}{18}$$

= **1·014** ரூபாய்கள்.

சுருக்கு வழி :

S_1 = இடைநிலை (4·875)யை விடச் சிறிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 3{\cdot}0 + 3{\cdot}0 + 3{\cdot}0 + 3{\cdot}75 + 4{\cdot}0 + 4{\cdot}0 + 4{\cdot}5 + 4{\cdot}5 + 4{\cdot}75$

$= 34{\cdot}50$

S_2 = இடைநிலை (4·875)யை விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 5{\cdot}0 + 5{\cdot}0 + 5{\cdot}0 + 5{\cdot}25 + 5{\cdot}25 + 5{\cdot}5 + 6{\cdot}25 + 6{\cdot}5 + 9{\cdot}0$

$= 52{\cdot}75$

இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$$= \frac{S_2 - S_1}{n}$$

$$= \frac{52{\cdot}75 - 35{\cdot}50}{18}$$

$$= \frac{18{\cdot}25}{18}$$

= 1·014 ரூபாய்.

மாதிரி 165

கீழ்க் காணும் அட்டவணை இரண்டு இடங்களில் வசிப்பவர்களின் உணவுக்கான செலவினைக் கொடுக்கிறது :

(1) இடைநிலையிலிருந்து சராசரி விலக்கம்

(2) கூட்டுச் சராசரியிலிருந்து சராசரி விலக்கம் ஆகியவற்றைக் கணக்கிடு.

மாதச் செலவு ரூபாயில்	குடும்பங்களின் எண்ணிக்கை	
	இடம் 'அ'	இடம் 'ஆ'
3—6	28	39
6—9	292	284
9—12	389	401
12—15	212	202
15—18	59	48
18—21	18	21
21—24	2	5

(பி. சி. எஸ்,—1941)

தீர்வு :

கூட்டுச் சராசரியிலிருந்து விலக்கம், இடைநிலையிலிருந்து சராசரி விலக்கம் காணல் :

மாதச் செலவு (ரூபாயில்)	மத்திய மதிப்பு x	ஊகச் சராசரி (10·5) யிலிருந்து படி விலக்கம் dx	இடம் 'அ'			இடம் 'ஆ'		
			அலைவெண் f	பெருக்கல் fdx	குவி அலைவெண் $(c.f)$	அலைவெண் f'	பெருக்கல் $f'dx$	குவி அலைவெண் $(c.f')$
3—6	4·5	—2	28	— 56	28	39	— 78	39
6—9	7·5	—1	292	—292	320	284	—284	323
9—12	10·5	0	389	0	709	401	0	724
12—15	13·5	1	212	212	921	202	202	926
15—18	16·5	2	59	118	980	48	96	974
18—21	19·5	3	18	54	998	21	63	995
21—24	22·5	4	2	8	1000	5	20	100
			100	44		100	19	

இங்கு,

$$\Sigma f = 1000, \qquad \Sigma f dx = 44$$
$$\Sigma f' = 1000, \qquad \Sigma f' dx = 19.$$

இடம் 'அ' :

(1) கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f dx}{\Sigma f} \times C$

$$= 10{\cdot}5 + \frac{44}{1000} \times 3$$

$= 10{\cdot}632$ ரூபாய்கள்.

கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிட்ட சராசரி விலக்கம்

$$= \frac{\Sigma f|dx| \times C + (\bar{x} - A)(S_1 - S_2)}{\Sigma f}$$

$$= \frac{(740 \times 3) \times (10{\cdot}632 - 10{\cdot}5) \times (709 - 291)}{1000}$$

$= 2{\cdot}28$ ரூபாய்கள் (தோராயமாக)

(2) இடைநிலை $M_e = l_1 + \frac{\left(\frac{N+1}{2}\right) - C}{f} \times i$

$$= 9 + \frac{(500{\cdot}5 - 320)}{389} \times 3$$

$= 10{\cdot}388$ ரூபாய்கள்.

இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்

$$= \delta_{M_e}$$

$$= \frac{\Sigma f|dx| \times C + (M_e - A)(S_1 - S_2)}{\Sigma f}$$

$$= \frac{1}{1000}\{(740 \times 3) + (10{\cdot}388 - 10{\cdot}5) \times (320 \times 680)\}$$

$= 2{\cdot}26$ ரூபாய்கள் (தோராயமாக).

இடம் 'ஆ' :

(1) கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f' dx}{\Sigma f} \times C$

$$= 10{\cdot}5 + \frac{19}{1000} \times 3$$

$= 10{\cdot}557$ ரூபாய்கள்.

கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்படும் சராசரி விலக்கம்

$$= \delta_{\bar{x}}$$

$$= \frac{\Sigma f'|dx| \times C + (\bar{x} - A) \times (S_1 - S_2)}{\Sigma f'}$$

$$= \frac{1}{1000} \{(743 \times 3) + (10{\cdot}557 - 10{\cdot}5) \times (724 - 276)\}$$

= **2·25** ரூபாய்கள் (தோராயமாக).

(2) இடைநிலை (M_e)

$$= l_1 + \frac{\left(\frac{N+1}{2}\right) - C}{f} \times i$$

$$= 9 + \frac{500{\cdot}5 - 323}{401} \times 3$$

= **10·394 ரூபாய்கள்.**

இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி வில்க்கம்

$$= \delta_{M_e}$$

$$= \frac{\Sigma f'|dx| \times C + (M_e - A) \times (S_1 - S_2)}{\Sigma f'}$$

$$= \frac{1}{1000} \{(743 \times 3) + (10{\cdot}394 - 10{\cdot}5)(323 - 677)\}$$

= **2·29 ரூபாய்கள்** (தோராயமாக).

மாதிரி 166

கீழ்க் காணும் அட்டவணை வயதடைந்தவர்கள் 228 பேரின் எடையைக் கொடுக்கிறது. இதைக் கொண்டு,

(1) கூட்டுச் சராசரியிலிருந்து சராசரி விலக்கம்

(2) இடைநிலையிலிருந்து சராசரி விலக்கம்

(3) சார்புப் பரவலின் கெழுக்கள்

ஆகியவற்றைக் கணக்கிடுக.

எடை (பவுண்டில்)	அலைவெண்	எடை (பவுண்டில்)	அலைவெண்
80— 90	1	160—170	9
90—100	11	170—180	5
100—110	25	180—190	4
110—120	37	190—200	3
120—130	62	200—210	2
130—140	31	210—220	1
140—150	22		
150—160	15	மொத்தம்	228

தீர்வு :

(1) சராசரி விலக்கம் காணல் :

எடை (பவுண்டில்)	மத்திய மதிப்பு x	அலைவெண் (f)	(135) லிருந்து படி-விலக்கம் (dx)	fdx	$\|f\,dx\|$ (குறிகளைக் கணக்கிடாமல்)
80— 90	85	1	—5	— 5	5
90—100	95	11	—4	—44	44
100—110	105	25	—3	—75	75
110—120	115	37	—2	—74	74
120—130	125	62	—1	—62	62
130—140	135	31	0	0	0
140—150	145	22	1	22	22
150—160	155	15	2	30	30
160—170	165	9	3	27	27
170—180	175	5	4	20	20
180—190	185	4	5	20	20
190—200	195	3	6	18	18
200—210	205	2	7	14	14
210—220	215	1	8	8	8
	மொத்தம்	228			419

கூட்டுச் சராசரி $= A + \frac{\Sigma f d' x}{\Sigma f} \times C$

$= 135 + \left(\frac{-101}{208} \times 10\right)$

$= 135 - 4{\cdot}43.$

$= 130{\cdot}57$ பவுண்டுகள்.

சராசரி விலக்கம் $\delta_{\bar{x}} = \frac{\Sigma |f dx| \times C + (\bar{x} - A)\,[S_1 - S_2]}{n}$

ஊகச் சராசரி (135) யிலிருந்து விலக்கங்களின் கூட்டுத் தொகை

$= \Sigma |f dx| \times C$

$= 419 \times 10$

$= 4190$

S_1 = உண்மைச் சராசரி (130·57) யை விடச் சிறிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 1 + 11 + 25 + 37 + 62$

$= 136$

S_2 = உண்மைச் சராசரி (130·57) யை விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 31 + 22 + 15 + 9 + 5 + 4 + 3 + 2 + 1$

$= 92$

∴ உண்மைச் சராசரி 130·57-லிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் கூட்டுத் தொகை

$= 4190 + 130{\cdot}57(-135)\,(136 - 92)$

$= 4190 - 4{\cdot}43 \times 44$

$= 4190 - 194{\cdot}92$

$= 3995{\cdot}08.$

கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிட்ட சராசரி விலக்கம் $(\delta\bar{x})$

$= \frac{3995{\cdot}08}{228}$

$= 17{\cdot}52$ பவுண்டுகள்.

(2) இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் :

எடை (பவுண்டில்)	மத்திய மதிப் பெண் x_i	அலை வெண் f_i	குவி அலை வெண் $c.f$	(125) லிருந்து விலக்கம் $\mid dx \mid$ (குறிகளைக் கணக்கிடாமல்	$f\mid dx'\mid$ (குறிகள் கணக் கிடாமல்)
80—90	85	1	1	4	4
90—100	95	11	12	3	33
100—110	105	25	37	2	50
110—120	115	37	74	1	37
120—130	125	62	136	0	0
130—140	135	31	167	1	31
140—150	145	22	189	2	44
150—160	155	15	204	3	45
160—170	165	9	213	4	36
170—180	175	5	218	5	25
180—190	185	4	225	6	24
190—200	195	3	225	7	21
200—210	205	2	227	8	16
210—220	215	1	228	9	9
		228			375

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \frac{228+1}{2} = \frac{229}{2} = 114{\cdot}5$-ஆவது உறுப்பின் மதிப்பு

$$\therefore \; M_e = l_1 + \frac{\left(\frac{N+1}{2}\right) - C}{f} \times i$$

$$= 120 + \frac{114{\cdot}5 - 74}{62} \times 10$$

$$= 120 + \frac{40 \cdot 5 \times 10}{62}$$

$$= 120 + 6 \cdot 53$$

$$= \mathbf{126 \cdot 53.}$$

சுருக்கவும் :

இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் (δM_2)

$$= \frac{\Sigma|fd'x| \times 10 + (M_e - A)(S_1 - S_2)}{n}$$

ஊகச் சராசரி (125)யிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் கூட்டுத் தொகை

$$= \Sigma|fdx| \times C$$

$$= 375 \times 10 = 3750.$$

S_1 = இடைநிலை (126·53) யை விடச் சிறிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$$= 1 + 11 + 25 + 37 + 62$$

$$= 136.$$

S_2 = இடைநிலை (126·53) யை விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$$= 31 + 22 + 15 + 9 + 5 + 4 + 3 + 2 + 1$$

$$= 92.$$

இடைநிலை (126·53) யிலிருந்து கணக்கிடப்பட்ட விலக்கங்களின் கூட்டுத் தொகை

$$= 3750 + (126 \cdot 53 - 125)(136 - 92)$$

$$= 3750 + 1 \cdot 53 \times 44$$

$$= 3750 + 67 \cdot 32.$$

$$= \mathbf{3817 \cdot 32.}$$

∴ **இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம்**

$$= \frac{3817 \cdot 22}{228} = \mathbf{16 \cdot 74}$$

(3) (i) **கூட்டுச் சராசரியிலிருந்து கண்ட சராசரி விலக்கக்**

$$\text{கெழு} = \frac{\text{சராசரி விலக்கம்}}{\text{கூட்டுச் சராசரி}} = \frac{17 \cdot 52}{130 \cdot 57} = 0 \cdot 134.$$

(ii) இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கக் கெழு

$$= \frac{(\delta M_e)}{M_e} = \frac{16{\cdot}74}{126{\cdot}53}$$

$$= 0{\cdot}132.$$

மாதிரி 167

கீழ்க் காணும் அட்டவணை 1000 பேர்களின் வயதுப் பரவலைக் கொடுக்கிறது.

(i) கூட்டுச் சராசரியையும் (ii) இடைநிலையையும் கணக்கிடு. பின் அதிலிருந்து (iii) முகட்டையும் மதிப்பிடு.

பின்னர்,

(1) கூட்டுச் சராசரியிலிருந்து சராசரி விலக்கம்
(2) இடைநிலையிலிருந்து சராசரி விலக்கம்
(3) முகட்டிலிருந்து சராசரி விலக்கம்
(4) கூட்டுச் சராசரியிலிருந்து சராசரி விலக்கக் கெழு
(5) இடைநிலையிலிருந்து சராசரி விலக்கக் கெழு
(6) முகட்டிலிருந்து சராசரி விலக்கக் கெழு

ஆகியவற்றைக் கணக்கிடு.

வயது (ஆண்டுகளில்)	அலைவெண் f	வயது (ஆண்டுகளில்)	அலைவெண் f	வயது (ஆண்டுகளில்)	அலைவெண் f
20—25	33	45–50	115	70–75	21
25—30	112	50–55	96	75—80	9
30—35	152	55—60	74	80—85	4
35—40	154	60—65	54		
40—45	136	65—70	37	மொத்தம்	1000

(திருவனந்தபுரம் பல்கலை—1951)

தீர்வு :

(i) கூட்டுச் சராசரியை (ii) இடைநிலையைக் கணக்கிடல் :

பின்பு $\bar{x}$; M_e-லிருந்து (iii) முகட்டை $M_o = 3\,M_e - 2\,\bar{x}$ என்ற சூத்திரம் மூலம் கணக்கிடல் :

(இங்கு M_0 = முகடு M_e = இடைநிலை $\bar{x}$ = கூட்டுச் சராசரி)

வயதுப் பிரிவு (ஆண்டுகளில்)	மத்திய மதிப்பு x	அலைவெண் f	ஊகச் சராசரி (3·75) லிருந்து படிவிலக்கம் dx	பெருக்கல் fdx	குவி அலைவெண் $c.f$
20—25	22·5	33	—3	— 99	33
25—30	27·5	112	—2	—224	145
30—35	32·5	152	—1	—152	297
35—40	37·5	154	0	0	451
40—45	42·5	136	1	136	587 M
45—50	47·5	118	2	236	705
50—55	52·5	96	3	288	801
55—60	57·5	74	4	296	875
60—65	62 5	54	5	270	929
65—70	67·5	37	6	222	966
70—75	72·5	21	7	147	987
75—80	77·5	9	8	72	996
80—85	82 5	4	9	36	1000
		1000		1228	

(i) கூட்டுச் சராசரி :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{\Sigma f} \times C$

$$= 37{\cdot}5 + \frac{1228}{1000} \times 5$$

$$= \mathbf{43{\cdot}64}$$

(ii) இடைநிலை :

இடைநிலை $M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - C}{f} \times i$

$$= 40 + \frac{\frac{1001}{2} - 451}{136} \times 5$$

$$= 40 + \frac{49{\cdot}5 \times 5}{136}$$

$$= \mathbf{41{\cdot}8}$$

(iii) முகடு :

$$\text{முகடு } M_0 = 3\, M_e - 2\, \bar{x}$$

$$= (3 \times 41{\cdot}8) - (2 \times 43{\cdot}64)$$

$$= 125{\cdot}4 - 87{\cdot}28$$

$$= \mathbf{38{\cdot}12.}$$

கூட்டுச் சராசரியிலிருந்து சராசரி விலக்கம், இடைநிலையிலிருந்து சராசரி விலக்கம், முகட்டிலிருந்து சராசரி விலக்கம் ஆகியவற்றைக் கணக்கிடல் :

வயதுப் பிரிவு	மத்திய மதிப்பு x	அலைவெண் f	ஊகச் சராசரி (42.5) யிலிருந்து படி விலக்கம் $\lvert dx \rvert$ (குறிகள் கணக்கிடாமல்)	பெருக்கல் $\lvert fdx \rvert$ (குறிகள் கணக்கிடாமல்)
20—25	22·5	33	4	132
25—30	27·5	112	3	336
30—35	32·5	152	2	304
35—40	37·5	154	1	154
40—45	42·5	136	0	0
45—50	47·5	118	1	118
50—55	52·5	96	2	192
55—60	57·5	72	3	222
60—65	62·5	54	4	216
65—70	67·5	37	5	185
70—75	72·5	21	6	126
75—80	77·5	9	7	63
80—85	82·5	4	8	32
		1000		2080

(1) கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் :

ஊகச் சராசரி 42·5-லிருந்து மொத்த விலக்கம் $= 2080 \times 5$

$= \mathbf{10400}$

S_1 = உண்மைச் சராசரி(43·64)யை விடக் குறைந்த உறுப்பு களின் கூட்டுத் தொகை

$= 33+112+152+154+136 = \mathbf{587}.$

S_2 = உண்மைச் சராசரி (43·64)யை விடப் பெரிய உறுப்பு களின் கூட்டுத் தொகை

$= 1000 - 587 \qquad = \mathbf{413}$

∴ உண்மைச் சராசரி (43·64) யிலிருந்து விலக்கங்களின் கூட்டல்

$= \Sigma f|dx| \times C + (\bar{x} - A) + (S_1 - S_2)$

$= 2080 \times 5 + (43{\cdot}64 - 42{\cdot}5) \times (587 - 413)$

$= \mathbf{10598}.$

∴ உண்மைச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் $\Big\} = \dfrac{10598}{1000}$

$= \mathbf{10{\cdot}598}.$

(2) இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் :

இடைநிலை $= 41{\cdot}8.$

ஊகச் சராசரி (42·5)யிலிருந்து கணக்கிடப்பட்ட மொத்த விலக்கம் $\Big\} = \Sigma f\,|dx| \times C$

$= 2080 \times 5$

$= 10400.$

S_1 = உண்மை இடைநிலை (41·8)யை விடக் குறைவான உறுப் புகளின் கூட்டுத் தொகை

$= 33+112+152+154 \quad = 451$

S_2 = உண்மை இடைநிலை (41·8) யை விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 1000 - 451 \qquad = 549.$

ஆக, உண்மை இடைநிலை (41·8)யிலிருந்து கணக்கிடப்பட்ட மொத்த விலக்கம்

$$= \Sigma f|dx| \times C + (M_e - A) \times (S_1 - S_2)$$
$$= (2080 \times 5) + (41{\cdot}8 - 42{\cdot}5) \times (451 - 549)$$
$$= 10400 + (-0{\cdot}7) + (-98)$$
$$= \mathbf{10468{\cdot}6.}$$

∴ இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் $= \dfrac{10468{\cdot}6}{1000}$

$$= \mathbf{10{\cdot}4686.}$$

(3) முகட்டிலிருந்து கணக்கிடப்படும் சராசரி விலக்கம் :

முகடு $M_0 = 38{\cdot}12.$

ஊகச் சராசரி (42·5)யிலிருந்து மொத்த விலக்கம் $= \Sigma f|dx| \times C$

$$= 2080 \times 5$$
$$= 10400$$

S_1 = உண்மை முகடு 38·12 ஐ விடக் குறைந்த உறுப்புகளின் மொத்தத் தொகை

$= 33 + 112 + 152 + 154 = \mathbf{451}$

S_2 = உண்மை முகடு 38·12 ஐ விடப் பெரிய உறுப்புகளின் கூட்டுத் தொகை

$= 1000 - 451 \qquad = \mathbf{549.}$

ஆக, உண்மை முகடு 38·12-லிருந்து கணக்கிடப்பட்ட மொத்த விலக்கம்

$$= \Sigma f|dx| \times C + (M_o - A) \times (S_1 - S_2)$$
$$= (2080 \times 5) + (38{\cdot}12 - 42{\cdot}5)\ (451 - 549)$$
$$= 10400 + (4{\cdot}8 \times 98)$$
$$= 10870{\cdot}4$$

$\therefore$ முகட்டிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் $= \frac{10870.4}{1000}$

$= 10.8704$

சராசரி விலக்கக் கெழுக்களைக் கணக்கிடல் :

(4) கூட்டுச் சராசரியிலிருந்து சராசரி விலக்கக் கெழு :

கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கக் கெழு $=$ $\frac{\text{கூட்டுச் சராசரியிலிருந்து கணித்த சராசரி விலக்கம்}}{\text{கூட்டுச் சராசரி}}$

$= \frac{10.598}{43.6}$

$= 0.243.$

(5) இடைநிலையிலிருந்து சராசரி விலக்கக் கெழு :

இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கக் கெழு $= \frac{\delta M_e}{M_e}$

$= \frac{10.4686}{41.8}$

$= 0.250.$

(6) முகட்டிலிருந்து சராசரி விலக்கக் கெழு :

முகட்டிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கக் கெழு $= \frac{\delta M_o}{M_o}$

$= \frac{10.8704}{42.5}$

$= 0.256.$

திட்ட விலக்கம்
(Standard Deviation)

மாதிரி 168

கீழ்க் காணும் 10 மாணவர்களின் உயரங்களுக்குத் திட்ட விலக்கம் காண்.

60, 60, 61, 62, 63, 63, 63, 64, 64, 70.

தீர்வு :

திட்ட விலக்கம் கணக்கிடல் :

உயரம் (அங்குலத்தில்) x	கூட்டுச் சாரசரி(63") யிலிருந்து விலக்கம் (d)	விலக்க வர்க்கம் d^2
60	— 3	9
60	— 3	9
61	— 2	4
62	— 1	1
63	0	0
63	0	0
63	0	0
64	1	1
64	1	1
70	7	49
		$\Sigma d^2 = 74$

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x_i}{n}$

$$= \frac{630}{10}$$

$$= 63''$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma (x-\bar{x})^2}{n}} = \sqrt{\frac{\Sigma d^2}{n}}$

$$= \sqrt{\frac{74}{10}} = \sqrt{7 \cdot 4}$$

$$= 2 \cdot 72.$$

சுருக்கு முறை :

உயரம் (அங்குலத்தில்)	ஊகச் சராசரி (62")யிலிருந்து விலக்கம் (dx)	விலக்கங்களின் வர்க்கம் $(dx)^2$
60	— 2	4
60	— 2	4
61	— 1	1
62	0	0
63	1	1
63	1	1
63	1	1
64	2	4
64	2	4
70	8	64
	$\Sigma dx = 10$	$\Sigma (dx)^2 = 84$

திட்ட விலக்கம்
$$= \sqrt{\frac{\Sigma dx^2}{n} - \left(\frac{\Sigma dx}{n}\right)^2}$$
$$= \sqrt{\frac{84}{10} - \left(\frac{10}{10}\right)^2}$$
$$= \sqrt{(8 \cdot 4 - 1)}$$
$$= \sqrt{7 \cdot 4}$$
$$= 2 \cdot 72''$$

மாதிரி 169

கீழே கொடுக்கப்பட்டிருப்பது 10 இரும்புக் கம்பிகளின் நீளங்களைக் குறிக்கிறது. திட்ட விலக்கத்தைக் கணக்கிடு.

நீளங்கள் (அங்குலத்தில்): 77, 73, 75, 70, 72,
76, 75, 72, 74, 76.

தீர்வு :

திட்ட விலக்கம் கணக்கிடல் :

நீளம் (அங்குலத்தில்) (x)	கூட்டுச் சராசரி (74) யிலிருந்து விலக்கம் $x-\bar{x}$	கூட்டுச் சராசரி விலக்க வர்க்கம் $(x-\bar{x})^2$
77	3	9
73	− 1	1
75	1	1
70	− 4	16
72	− 2	4
76	2	4
75	1	1
72	− 2	4
74	0	0
76	2	4
$\Sigma x = 740$	0	$\Sigma (x-\bar{x})^2 = 44$

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$= 740/10$

$= 74''$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma (x-\bar{x})^2}{n}}$

$= \sqrt{\frac{44}{10}}$

$= 2{\cdot}1''$ (தோராயமாக)

மாற்று முறை :

நீளம் (அங்குலத்தில்) x	சராசரி (75)யிலிருந்து விலக்கம் d	விலக்கங்களின் வர்க்கம் d^2
77	2	4
73	— 2	4
75	0	0
70	— 5	25
72	— 3	9
76	1	1
75	0	0
72	— 3	9
74	— 1	1
76	1	1
$\Sigma x = 740$	$\Sigma d = 10$	$\Sigma d^2 = 54$

கூட்டுச் சராசரி $\bar{x}$ $= \dfrac{\Sigma x}{n}$

$= 740/10$

$= 74''$

திட்ட விலக்கம் σ $= \sqrt{\dfrac{\Sigma d^2}{n} - (\bar{x} - a)^2}$

$= \sqrt{\dfrac{54}{10} - (75-74)^2}$

$= \sqrt{\dfrac{54-10}{10}}$

$= \sqrt{\dfrac{44}{10}}$

$= 2{\cdot}1''$ (தோராயமாக)

மாதிரி 170

கீழ்க் காணும் எண்களுக்குத் திட்ட விலக்கம் காண் :

38	45	51	59	64	66	67	70	72	74
77	77	80	81	82	83	86	87	89	90.

தீர்வு :

மேற்கண்ட மதிப்புகளை x-மாறியாகக் கொண்டால் கீழ்க் காணும் மதிப்புகளை அடைகிறோம்.

$$n = 20$$
$$\Sigma x = 1438$$
$$\Sigma x^2 = 107470.$$

ஆகவே, கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$$= \frac{1438}{20}$$

$$= 71 \cdot 9.$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\Sigma d x^2 - \left(\frac{\Sigma d x}{n}\right)^2}$

இங்கு, ஊகச் சராசரி A = 0 எனக் கொண்டால்

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{107470}{20} - \left(\frac{1438}{20}\right)^2}$

$$= \sqrt{5373 \cdot 5 - 5169 \cdot 61}$$
$$= \sqrt{203 \cdot 89}$$
$$= 14 \cdot 28.$$

மாதிரி 171

கீழ்க் காணும் 20 வெவ்வேறு ஆண்டுகளின் உலக வருடாந்திர தங்க வெளிக் கொணர்வின் (மில்லியன் பவுண்டில்) கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடுக.

94	95	96	93	97	79	73	69	68	67
78	82	83	89	95	103	108	117	130	97

கூட்டுச் சராசரியிலிருந்து $\pm \sigma$, $\pm 2\sigma$, $\pm 3\sigma$ தூரத்திற்கு வெளியே விழும் உறுப்புகளின் சதவீதத்தைக் கணக்கிடு. (σ = திட்ட விலக்கம்)

(எம். ஏ.—சென்னை—1959)

தீர்வு :

கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடல் :

மதிப்புகள் x	ஊகச் சராசரி ($A=90$) யிலிருந்து விலக்கம் d	விலக்கங்களின் வர்க்கம் d^2
94	4	16
95	5	25
96	6	36
93	3	9
87	−3	9
79	−11	121
73	−17	289
69	−21	441
68	−22	484
67	−23	529
78	−12	144
82	−8	64
83	−7	49
89	−1	1
95	5	25
103	13	169
108	18	324
117	27	729
130	40	1600
97	7	49
$n=20$	$\Sigma d=3$	$\Sigma d^2=5113$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma d}{n}$

$$= 90 + \frac{3}{20}$$

$= 90{\cdot}15$ (மில்லியன் பவுண்டுகள்)

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma d^2}{n} - \left(\frac{\Sigma d}{n}\right)^2}$

$= \sqrt{\frac{5113}{20} - \frac{9}{20}}$

$= \sqrt{255 \cdot 6275}$

$= 15 \cdot 99$ **(மில்லியன் பவுண்டுகள்)**

1. இங்கு, $\bar{x} \pm \sigma = 90 \cdot 15 \pm 15 \cdot 99$

$= (106 \cdot 16, \quad 74 \cdot 16)$

இந்த இடைவெளிக்கு வெளியே விழும் உறுப்புகளின் எண்ணிக்கை

$= 7.$

சதவீதத்தில் வெளியே விழும் உறுப்புகளின் எண்ணிக்கை

$= \frac{7}{20} \times 100$

$= 35\%$

2. இதேபோல் $\bar{x} \pm 2\sigma = 90 \cdot 15 \pm (2 \times 15 \cdot 99)$

$= 90 \cdot 15 \pm 31 \cdot 98$

$= (122 \cdot 13, \quad 58 \cdot 17)$

இந்த இடைவெளிக்கு வெளியே விழும் உறுப்புகளின் எண்ணிக்கை

$= 1.$

சதவீதத்தில் வெளியே விழும் உறுப்புகளின் எண்ணிக்கை

$= \frac{1}{20} \times 100$

$= 5\%$

3. இங்கு, $\bar{x} \pm 3\sigma = 90 \cdot 15 \pm (3 \times 15 \cdot 99)$

$= 90 \cdot 15 \pm 47 \cdot 97$

$= (138 \cdot 12, \quad 42 \cdot 18)$

இந்த இடைவெளிக்கு வெளியே விழும் உறுப்புகளின் எண்ணிக்கை

$= 0.$

சதவீதத்தில் வெளியே விழும் இந்த உறுப்புகளின் எண்ணிக்கை

$$= 0\%$$

மாதிரி 172

கீழ்க் காணும் அட்டவணை 542 மக்கள் சபை உறுப்பினர்களின் வயதுப் பரவலைத் தருகிறது. திட்ட விலக்கத்தைக் கணிக்கவும்.

வயது	20	30	40	50	60	70	80
உறுப்பினர்களின் எண்ணிக்கை	3	61	132	153	140	51	2

(சென்னை—பல்கலை)

தீர்வு :

திட்ட விலக்கத்தைக் கணக்கிடல் :

x	f	$dx = \frac{x-A}{c}$, $A = 50$, $c = 10$	$f\,dx$	$f\,dx^2$
20	3	−3	−9	27
30	61	−2	−122	244
40	132	−1	−132	132
50	153	0	0	0
60	140	1	140	140
70	51	2	102	204
80	2	3	6	18
மொத்தம்	542		−15	765

வயதுகளின் திட்ட விலக்கம் $\sigma = C\sqrt{\frac{\Sigma dx^2}{\Sigma f} - \left(\frac{\Sigma dx}{\Sigma f}\right)^2}$

அல்லது $\sigma = 10 \times \sqrt{\frac{765}{542} - \left(\frac{15}{542}\right)^2}$

$= 11{\cdot}6$ (தோராயமாக)

மாதிரி 173

260 விவசாயிகள் தம்முடைய தேவைப் பண்டங்கள் வாங்க நடந்து சென்ற தூரம் (மைலில்) பற்றிய கீழ்வரும் விவரத்துக்குத் திட்ட விலக்கம் காண்.

மைல்	1	3	5	7	9	11	13	15	17	19
விவசாயிகளின் எண்ணிக்கை	19	52	70	39	24	21	14	12	8	1

(பி. ஏ.—மதுரை—1970)

தீர்வு :

திட்ட விலக்கம் கணக்கிடல் :

x	f	dx	dx^2	fdx	fdx^2
1	19	− 9	81	−152	1216
3	52	− 6	36	−312	1872
5	70	− 4	16	−280	1120
7	39	− 2	4	−78	156
9	24	0	0	0	0
11	21	2	4	42	84
13	14	4	26	56	224
15	12	6	36	72	432
17	8	8	64	64	512
19	1	10	100	10	100
மொத்தம்	260			−578	5716

$$\text{திட்ட விலக்கம் } \sigma = \sqrt{\frac{\Sigma f\,dx^2}{n} - \left(\frac{\Sigma f\,dx}{n}\right)^2}$$

$$= \sqrt{\frac{5716}{260} - \left(\frac{-578}{260}\right)^2}$$

$$= \sqrt{21{\cdot}99 - 4{\cdot}84}$$

$$= \sqrt{17{\cdot}15}$$

$$= 4{\cdot}14 \text{ மைல்கள்.}$$

$$\bar{x} = A + \frac{\Sigma f\, dx}{n} \times C$$
$$= 9 + \frac{-578}{260} \times 2$$
$$= 9 + 2{\cdot}2 \times 2$$
$$= 9 \times 4{\cdot}4$$
$$= 13 \cdot 4.$$

திட்ட விலக்கக் கெழு $= \dfrac{\sigma}{\bar{x}} = \dfrac{4{\cdot}14}{13\,4}$

$= \mathbf{0{\cdot}31.}$

மாதிரி 174

கீழ்க் காணும் பரவலுக்குத் திட்ட விலக்கம் காண் :

x :	2	3	4	5	9	10	12	13	15
f :	25	37	44	59	68	43	31	23	12

தீர்வு :

x	f	$dx = x - A$ $A = 9$	fdx	fdx^2
2	25	−7	−175	1225
3	37	−6	−222	1332
4	44	−5	−220	1100
5	59	−4	−236	944
9	68	0	0	0
10	43	1	43	43
12	31	3	93	279
13	23	4	92	368
15	12	6	72	432
மொத்தம்	342		$\Sigma fdx = -553$	$\Sigma fdx^2 = 5723$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\dfrac{\Sigma f\, dx^2}{n} - \left(\dfrac{\Sigma f\, dx}{n}\right)^2}$

$= \sqrt{\dfrac{5723}{342} - \left(\dfrac{-553}{342}\right)^2}$

$= \mathbf{3{\cdot}76.}$

மாதிரி 175

பிரிட்டனிலுள்ள 2298 குடும்பங்களின் கீழ்க் காணும் பரவலுக்குத் திட்ட விலக்கம் காண் :

குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை	1	2	3	4	5
குடும்பங்களின் எண்ணிக்கை	165	552	580	433	268

குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை	6	7	8	9	10	11	12
குடும்பங்களின் எண்ணிக்கை	148	77	41	20	8	5	1

(எம். ஏ.—அலகாபாத்—1942)

தீர்வு :

திட்ட விலக்கம் கணக்கிடல் :

குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை x	குடும்பங்களின் எண்ணிக்கை f	$(A=4)$ யிலிருந்து விலக்கம் dx	பெருக்கல் $f \times dx$	fdx^2
1	165	—3	— 495	1485
2	552	—2	—1104	2208
3	580	—1	— 580	580
4	433	0	0	0
5	268	1	268	268
6	148	2	296	592
7	77	3	231	693
8	41	4	164	656
9	20	5	100	500
10	8	6	48	288
11	5	7	55	245
12	1	8	8	64
	$n=2298$		$\Sigma fdx = -1029$	$\Sigma fdx^2 = 7579$

$$\text{திட்ட விலக்கம் } \sigma = \sqrt{\frac{\Sigma . f\, dx^2}{n} - \left(\frac{\Sigma\, f\, dx}{n}\right)^2}$$

$$= \sqrt{\frac{7579}{2298} - \left(\frac{-1029}{2298}\right)^2}$$

$$= \sqrt{3{\cdot}3 - 0{\cdot}2}$$

$$= \sqrt{3{\cdot}1}$$

$$= 1{\cdot}73 \text{ (தோராயமாக)}$$

மாதிரி 176

கீழ்க் காணும் அட்டவணை குறிப்பிட்ட நிலப் பகுதியில் 1940-41-ம் ஆண்டில் கதிர் அறுவடைச் சோதனையின் அடிப்படையில் கிடைத்த நெல் மகசூலே (ஏக்கருக்கு —மாண்டுகளில்) தருகிறது. பரவலின் திட்ட விலக்கத்தைக் கணக்கிடு.

மகசூல் (மாண்டில்) – ஏக்கருக்கு –	அலைவெண்	மகசூல் (மாண்டில்) – ஏக்கருக்கு –	அலைவெண்
0	4	24	128
3	4	27	73
6	32	30	50
9	81	33	13
12	135	36	12
15	198	39	5
18	210	42	1
21	144		

(ஐ. ஏ. எஸ்.—1949)

தீர்வு :

திட்ட விலக்கத்தைக் கணக்கிடல் :

மகசூல் (ஏக்கருக்கு-மாண்டுகளில்)	அலைவெண்	(18)-லிருந்துபடி விலக்கம் dx	dx^2	fdx	fdx^2
0	4	—6	36	—24	144
3	4	—5	25	—20	100
6	32	—4	16	—128	512
9	81	—3	9	—243	929
12	135	—2	4	—270	540
15	198	—1	1	—198	198
18	210	0	0	0	0
21	144	1	1	144	144
24	128	2	4	256	512
27	73	3	9	219	657
30	50	4	16	200	800
33	13	5	25	65	325
36	12	6	36	72	432
39	5	7	49	35	245
42	1	8	64	8	64
				$\Sigma fdx = 116$	$\Sigma fdx^2 = 5420$

$$\text{திட்ட விலக்கம் } \sigma = \sqrt{\frac{\Sigma f\, dx^2}{n} - \left(\frac{\Sigma f\, dx}{n}\right)^2}$$

$$= \sqrt{\frac{5402}{1090} - \left(\frac{116}{1090}\right)}$$

$$= 5{\cdot}85.$$

மாதிரி 177

230 பேர்களின் வருமானத்தைத் தரும் கீழ்க் காணும் விவரப் பட்டியலிலிருந்து திட்ட விலக்கத்தைக் காண்.

வருமானம் (ரூபாயில்)	மனிதர்களின் எண்ணிக்கை	வருமானம் (ரூபாயில்)	மனிதர்களின் எண்ணிக்கை
70— 80	12	110—120	50
80— 90	18	120—130	45
90—100	35	130—140	20
100—110	42	140—150	8

தீர்வு :

திட்ட விலக்கம் கணக்கிடல் :

மத்திய மதிப்பு	f	$dx = \frac{x-A}{c}$ $A = 105$ $c = 10$	fdx	$f\,dx^2$
75	12	—3	—36	108
85	18	—2	—36	72
95	35	—1	—35	35
105	42	0	0	0
115	50	1	50	50
125	45	2	90	180
135	20	3	60	180
145	8	4	32	128
மொத்தம்	230		$\Sigma fdx = 125$	$\Sigma fdx^2 = 753$

திட்ட விலக்கம் $\sigma = C \sqrt{\frac{\Sigma f dx^2}{n} - \left(\frac{\Sigma f dx}{n}\right)^2}$

$$= 10 \times \sqrt{\frac{753}{230} - \left(\frac{125}{230}\right)^2}$$

$$= \mathbf{17 \cdot 3}$$ ரூபாய்.

மாதிரி 178

கீழ்க் காணும் 3061 அறுவடைச் சோதனை முடிவுகளின் பரவலிலிருந்து நெல் மகசூலையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடுக.

நெல் மகசூல் (ஏக்கருக்கு—பவுண்டில்)	சோதனைகளின் எண்ணிக்கை
1— 400	236
401— 800	481
801—1200	604
1201—1600	576
1601—2000	419
2001—2400	333
2401—2800	217
2801—3200	87
3201—3600	64
3601—4000	23
4001—4400	14
4401—4800	6
4801—5200	1
மொத்தம்	3061

(பி. காம்.—பம்பாய்—1945)

தீர்வு :

திட்ட விலக்கத்தைக் கணக்கிடல் :

மத்திய மதிப்பு x	f	$dx = \frac{x-A}{c}$ $A = 1800{\cdot}5$ $c = 400$	fdx	fdx^2
200 5	236	—4	— 944	6723
600·5	481	—3	—1443	4329
1000·5	604	—2	—1208	2416
1400·5	576	—1	— 576	576
1800·5	419	0	0	0
2200 5	333	1	333	333
2600 5	217	2	434	868
3000·5	87	3	261	783
3400·5	64	4	256	1024
3800 5	23	5	115	575
4200·5	14	6	84	504
4600·5	6	7	42	294
5000·5	1	8	8	64
			Σfdx $=-2638$	Σfdx^2 $=15542$

நெல்லின் கூட்டுச் சராசரி $= A + \frac{\Sigma f dx}{n} \times C$

$$= 1800{\cdot}5 - \frac{2638}{3061} \times 400$$

$= 1455{\cdot}8$ பவுண்டுகள் (ஏக்கருக்கு)

திட்ட விலக்கம் σ $= C \times \sqrt{\frac{\Sigma f dx^2}{n} - \left(\frac{\Sigma f dx}{n}\right)^2}$

$= 400 \times \sqrt{\frac{15542}{306} - \left(\frac{-2638}{3061}\right)^2}$

$= 400 \times \sqrt{4 \cdot 34}$

= **832·2 பவுண்டுகள் (ஏக்கருக்கு)**

மாதிரி 179

கீழ்க் காணும் அட்டவணை இரண்டு தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் வார வருமானத்தையும் தருகிறது. அவ்விரு தொழிற்சாலைகளில் அவர்களின் வார வருமானத்தின் கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடு.

வார வருமானம் (ரூபாயில்)	தொழிலாளர்களின் எண்ணிக்கை	
	தொழிற்சாலை *A*	தொழிற்சாலை *B*
4–6	74	71
6—8	376	379
8—10	304	303
10—12	110	112
12—14	18	18
14—16	0	1
16—18	9	3
18—20	9	9
20—22	0	4

(எம். ஏ.—கல்கத்தா—1936)

தீர்வு :

தொழிற்சாலை A

கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடல்

வார வருமானம்	மத்திய மதிப்பு x	தொழிலாளர் களின் எண் ணிக்கை f_1	dx $(=x-A)$ $A=9$	$f\ dx$	fdx^2
4— 6	5	74	— 4	—296	1184
6— 8	7	376	— 2	—752	1504
8—10	9	304	0	0	0
10—12	11	110	2	220	440
12—14	13	18	4	72	288
14—16	15	0	6	0	0
16—18	17	9	8	72	576
18—20	19	9	10	90	900
20—22	21	0	12	0	0
		$n=900$		$\Sigma fdx = -594$	$\Sigma fdx^2 = 48\ 2$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \dfrac{\Sigma fdx}{n}$

$$= 9 + \frac{-594}{900}$$

= 8·34 ரூபாய்.

திட்ட விலக்கம், $\sigma = \sqrt{\dfrac{\Sigma fdx^2}{n} - \left(\dfrac{\Sigma fdx}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{4892}{900} - \left(\frac{-594}{900}\right)^2}$$

$$= \sqrt{\frac{4892}{900} - (\cdot 66)^2}$$

= 2·24 ரூபாய்.

தொழிற்சாலை B

கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடல்

வார வருமானம்	மத்திய மதிப்பு x	தொழிலாளர்களின் எண்ணிக்கை f'	$dy = y - B$, $B = 9$	$f'\,dy$	$f'\,dy^2$
4— 6	5	71	—4	—284	1136
6— 8	7	379	—2	—758	1516
8—10	9	303	0	0	0
10—12	11	112	2	224	448
12—14	13	81	4	72	288
14—16	15	1	6	6	36
16—18	17	3	8	24	192
18—20	19	9	10	90	900
20—22	21	4	12	48	576
		$n = 900$		$\Sigma f'dy = 578$	$\Sigma f'\,dy^2 = 5092$

கூட்டுச் சராசரி $\bar{y} = B + \dfrac{\Sigma f d' y}{n}$

$$= 9 + \frac{-578}{900}$$

$$= 8{\cdot}36 \text{ ரூபாய்.}$$

திட்ட விலக்கம் $\sigma_y = \sqrt{\dfrac{\Sigma f' dy^2}{n} - \left(\dfrac{\Sigma f' dy}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{5092}{900} - \left(\frac{-578}{900}\right)^2}$$

$$= \sqrt{5{\cdot}66 - (.64)^2}$$

$$= 2{\cdot}29 \text{ ரூபாய்.}$$

மாதிரி 180

மாதிரி 167-ல் கொடுத்த கணக்கிற்குத் திட்ட விலக்கத்தைக் காண். பின்பு, சராசரியிலிருந்து $\pm 2\sigma$, எல்லைக்குள் விழும் உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்.

(திருவனந்தபுரம்—1951)

தீர்வு :

1000 பேரின் வயதுப் பரவலுக்குரிய திட்ட விலக்கத்தைக் காணல் :

x	f	$dx\ (=x-A)$ $A=37{\cdot}5$	fdx	fdx^2
20—25	33	—3	— 99	297
25—30	112	—2	—224	448
30—35	152	—1	—152	152
35—40	154	0	0	0
40—45	136	1	136	136
45—50	118	2	236	472
50—55	96	3	288	864
55—60	74	4	296	1184
60—65	54	5	270	1350
65—70	37	6	222	1332
70—75	21	7	144	1008
75—80	9	8	72	576
80—85	4	9	36	324
	$n=1000$		$\Sigma fdx = 1228$	$\Sigma fdx^2 = 8143$

திட்ட விலக்கம் $\sigma = C \sqrt{\dfrac{\Sigma fdx^2}{n} - \left(\dfrac{\Sigma fdx}{n}\right)^2}$

$$= 5 \times \sqrt{\frac{8143}{1000} - \left(\frac{1228}{1000}\right)^2}$$

$$= 5 \times \sqrt{\frac{8143000-1507984}{1000^2}}$$

$$= 5 \times \sqrt{\frac{6635016}{1000^2}}$$

$$= \mathbf{12{\cdot}875}$$

$$\bar{x} = A + \left(\frac{\Sigma fdx}{n}\right) \times C$$

$$= 37{\cdot}5 + \frac{1228}{1000} \times 5$$

$$= 43{\cdot}64$$

$$\bar{x} \pm 2\sigma = 43{\cdot}64 \pm 12{\cdot}875$$

$$= 43{\cdot}64 \pm 25{\cdot}75$$

$$= (69{\cdot}39, \quad 17{\cdot}89)$$

இந்த எல்லைக்குள் விழும் உறுப்பு களின் எண்ணிக்கை $= (33 + 112 + 152 + 154 + 136 + 118 + 96 + 74 + 54 + 37)$

$= \mathbf{966.}$

மாதிரி 181

கீழ்க் காணும் அட்டவணையில் ஒரு வினா-விடைப் போட்டியில் பங்கு பெற்ற 217 மாணவர்களின் விவரம் கொடுக்கப்பட்டிருக் கிறது.

(i) நேரிடை முறை

(ii) கூட்டு முறை ஆகியவற்றின் மூலம் கூட்டுச் சராசரியை யும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடு.

மதிப்பெண்கள்	3—4	4—5	5—6	6—7	7—8	8—9	9—10
மாணவர்கள்	3	7	22	60	85	32	8

தீர்வு :

(i) நேரிடை முறை :

கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் காணல் :

பிரிவு	அலை வெண் f	$dx\left(=\frac{x-A}{C}\right)$ $A=6{\cdot}5$ $C=1$	fdx	fdx^2
3— 4	3	—3	— 9	7
4— 5	7	—2	—14	28
5— 6	22	—1	—22	22
6— 7	60	0	0	0
7— 8	85	1	85	85
8— 9	32	2	64	128
9—10	8	3	24	72
மொத்தம்	217		$\Sigma fdx = 128$	$\Sigma fdx^2 = 363$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n} \times C$

$$= 6{\cdot}5 + \frac{128}{217} \times 1$$

$$= 6{\cdot}5 + 0{\cdot}5898$$

$$= \mathbf{7{\cdot}0898}$$

திட்ட விலக்கம் $\sigma = C \times \sqrt{\frac{\Sigma fdx^2}{n} - \left(\frac{\Sigma fdx}{n}\right)^2}$

$$= 1 \times \sqrt{\frac{363}{217} - \left(\frac{128}{217}\right)^2}$$

$$= 1 \times \sqrt{1{\cdot}673 - 0{\cdot}3478}$$

$$= \sqrt{1{\cdot}3252}$$

$= 1{\cdot}15$ மதிப்பெண்கள்.

(ii) கூட்டு முறை :

கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் காணல் :

பிரிவு	மாணவர்கள் f	$c{\cdot}f$	$c\,(c{\cdot}f)$
3— 4	3	3	3
4— 5	7	10	13
5— 6	22	32	45
6— 7	60	92	137
7— 8	85	177	314
8— 9	32	209	523
9—10	8	217	740
	$n = 217$	740	1775

மேற்கண்ட பட்டியலிலிருந்து கீழ்க்காணும் மதிப்புகளை அடைகிறோம்.

$$C = 1 \;;\; M = 9{\cdot}5 \;;\; f_1 = \frac{740}{217} = 3{\cdot}4 \;;\; f_2 = \frac{1775}{217} = 8{\cdot}1$$

கூட்டு முறைச் சூத்திரம் $\overline{x} = M - C(f_1 - 1)$

$= 9{\cdot}5 - 1 \times (3{\cdot}4 - 1)$

$= 9{\cdot}5 - 2{\cdot}4$

$= 7{\cdot}1$

கூட்டு முறைச் சூத்திரம் $\sigma = C \times \sqrt{2f_2 - f_1 - (f_1)^2}$

$= 1 \times \sqrt{2 \times 8{\cdot}1 - 3{\cdot}4 - (3{\cdot}4)^2}$

$= \sqrt{16{\cdot}2 - 3{\cdot}4 - 11{\cdot}56}$

$= \sqrt{1{\cdot}24}$

$= 1{\cdot}15$

ஆகவே இரு முறைகளிலும் ஒரே விடையைக் காண்கிறோம்.

மாதிரி 112

கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள விவரங்களுக்கு,

(1) நேரிடை முறையிலும்

(2) கூட்டு முறையிலும்

கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடு.

பிரிவு (x)	1·5 – 2·5	2·5—3·5	3·5—4·5	4·5—5·5
அலைவெண் (f)	3	4	5	8
பிரிவு (x)	5·5—6·5	6·5—7·5	7·5—8·5	
அலைவெண் (f)	7	6	3	

தீர்வு :

(i) நேரிடை முறை :

கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடல் :

பிரிவு	மத்திய மதிப்பு x	அலைவெண் f	$dx\,(=x-A)$ $A=5$	fdx	fdx^2
1·5—2·5	2	3	—3	—9	27
2·5—3·5	3	4	—2	—8	16
3·5—4·5	4	5	—1	—5	5
4·5—5·5	5	8	0	0	0
5·5—6·5	6	7	1	7	7
6·5—7·5	7	6	2	12	24
7·5—8·5	8	3	3	9	27
		$n=36$		$\Sigma fdx = 6$	$\Sigma fdx^2 = 106$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \dfrac{\Sigma fdx}{n}$

$= 5+\frac{6}{36}$

$= 5+0{\cdot}17$

$= 5{\cdot}17$

திட்ட விலக்கம் $\sigma = C\times\sqrt{\dfrac{\Sigma fdx^2}{n} - \left(\dfrac{\Sigma fdx}{n}\right)^2}$

$= 1\times\sqrt{\dfrac{106}{36} - \left(\dfrac{6}{36}\right)^2} = \sqrt{\dfrac{106-1}{36}}$

$= 1{\cdot}71$ (தோராயமாக)

(ii) கூட்டு முறை :

கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடல் :

பிரிவு	அலைவெண் f	$c \cdot f$	$c\,(c \cdot f)$
1·5—2·5	3	3	3
2·5—3·5	4	7	10
3·5—4·5	5	12	22
4·5—5·5	8	20	42
5·5—6 5	7	27	69
6·5—7·5	6	33	102
7·5—8·5	3	36	138
	36	138	386

மேற்கண்ட பட்டியலிலிருந்து கீழ்க்காணும் மதிப்புகளை அடைகிறோம்.

$C = 1 \qquad f_1 = \frac{138}{36} = 3{\cdot}83$

$M = 8 \qquad f_2 = \frac{386}{36} = 10{\cdot}72$

கூட்டு முறைக்
கூட்டுச் சராசரி $\bar{x} = M - C\,(f_1 + 1)$

$$\therefore \bar{x} = 8 - 1 \times (3{\cdot}83 - 1)$$
$$= 8 - 2{\cdot}83$$
$$= \mathbf{5{\cdot}17}$$

கூட்டு முறைத்
திட்ட விலக்கம் $\sigma = i\sqrt{2f_2 - f_1 - (f_1)^2}$

$$= 1 \times \sqrt{2 \times 10{\cdot}72 - 3{\cdot}83 - (3{\cdot}83)^2}$$
$$= \sqrt{21{\cdot}44 - 3{\cdot}83 - 14{\cdot}44}$$
$$= \sqrt{3{\cdot}17}$$
$$= \mathbf{1{\cdot}71} \text{ (தோராயமாக)}$$

இவ்விரு முறைகளிலும் கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம் ஆகிய மதிப்புகள் மாருமல் சரியாகக் கிடைக்கப் பெறுகிறோம்.

மாதிரி 183

கீழ்க்காணும் பரவலுக்குக் கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும்,

(1) நேர்வழி மூலமும், (2) கூட்டுமுறை மூலமும் கணக்கிட்டு ஒப்பிடுக.

பிரிவு	அலைவெண்	பிரிவு	அலைவெண்
310—319	1	250—259	11
300—309	2	240—249	8
290—299	4	230—239	2
280—289	1	220—229	0
270—279	6	210—219	3
260—269	12		

(எம்.ஏ.—உளவியல்—ஆக்ரா—1964)

தீர்வு :

கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம் கணக்கிடல் :

பிரிவு	f	dx	fdx	fdx^2
310—319	1	5	5	25
300—309	2	4	8	32
290—299	4	3	12	36
280—289	1	2	2	4
270—279	6	1	6	6
260—269	12	0	0	0
250—259	11	—1	—11	11
240—249	8	—2	—16	32
230—239	2	—3	— 6	18
220—229	0	—4	— 0	0
210—219	3	—5	—15	75
	50		$\Sigma fdx = -15$	$\Sigma fdx^2 = 239$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f dx}{n} \times C$

$$= 264{\cdot}5 + \frac{-15}{50} \times 10$$

$$= 264{\cdot}5 + \frac{-150}{50} = \mathbf{261{\cdot}5}$$

திட்ட விலக்கம் $\sigma = C \times \sqrt{\frac{\Sigma f dx^2}{n} - \left(\frac{\Sigma f dx}{n}\right)^2}$

$$= 10 + \sqrt{\frac{239}{50} - \left(\frac{-15}{50}\right)^2}$$

$$= 10 \times \sqrt{\frac{239}{50} - \frac{225}{2500}}$$

$$= 10 \times \sqrt{\frac{11950 - 225}{2500}}$$

$$= \frac{1}{5} \times 108{\cdot}28 = \mathbf{21{\cdot}656}$$

(ii) கூட்டு முறை : கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம் கணக்கிடல் :

பிரிவு	f	$c.f$	$c(c.f)$
310—319	1	50	315
300—309	2	49	265
290—299	4	47	216
280—289	1	43	169
270—279	6	42	126
260—269	12	36	84
250—259	11	24	48
240—249	8	13	24
230—239	2	5	11
220—229	0	3	6
210—219	3	3	3
	$n = 50$	315	1267

மேற்கண்ட பட்டியலிலிருந்து கீழ்க்காணும் மதிப்புகள் கிடைக்கின்றன :

$$C = 10, \qquad f_1 = \frac{315}{50} = 6\cdot3$$

$$M = 314\cdot5 \qquad f_2 = \frac{1267}{50} = 25\cdot34$$

கூட்டுமுறைச் சூத்திரம்,
கூட்டுச் சராசரி $\bar{x} = M - C\,(f_1 - 1)$

$$\therefore\ \bar{x} = 314\cdot5 - 10\,(6\cdot3 - 1)$$
$$= 314\cdot5 - 53$$
$$= \mathbf{261\cdot5}$$

கூட்டு முறையில் திட்ட
விலக்கச் சூத்திரம் $\sigma = C \times \sqrt{2f_2 - f_1 - (f_1)^2}$

$$= 10 \times \sqrt{2 \times 25\cdot34 - (6\cdot3 - 39\cdot69)}$$
$$= 10 \times 2\cdot1656$$
$$= \mathbf{21\cdot656}$$

இரு முறையிலும் ஒரே விடையைக் காண்கிறோம்.

மாதிரி 184

கீழ்க்காணும் தொடர் பகுதி அலைவெண் பரவலுக்குச் சரியான மூலத்தையும் பிரதியளவையும் (scale) கொண்டு, கணக்கிடப்பட்ட கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம் ஆகியவற்றின் மதிப்புகள் முறையே 135·3 £, 9·6 £ ஆகும். உண்மையான பிரிவு இடைவெளியைக் (class interval) கண்டறிக.

x :	—4	—3	—2	—1	0	1	2	3	மொத்தம்
f :	2	5	8	18	22	13	8	4	80

(ஐ. ஏ. எஸ்.—1952)

தீர்வு :

பிரிவு இடைவெளியைக் கணக்கிடல் :

அலைவெண் f	படி விலக்கம் dx'	$\Sigma fdx'$	fdx'^2
2	—4	— 8	32
5	—3	—15	45
8	—2	—16	32
18	—1	—18	18
22	0	0	0
13	1	13	13
8	2	16	32
4	3	12	36
$\Sigma f = 80$		$\Sigma fdx' = -16$	$\Sigma fdx'^2 = 208$

இக் கணக்கில் கொடுக்கப்பட்டவை:

$$\bar{x} = 135{\cdot}3 \qquad \sigma = 9{\cdot}6$$

ஆகவே,
$$9{\cdot}6 = \sigma = C \times \sqrt{\frac{\Sigma fdx'^2}{\Sigma f} - \left(\frac{\Sigma fdx'}{\Sigma f}\right)^2}$$

$$ie., 9{\cdot}6 = C\sqrt{\frac{208}{80} - \left(\frac{-16}{80}\right)^2}$$

அல்லது
$$9{\cdot}6 = C \times \sqrt{\frac{13}{5} - \frac{1}{25}}$$

$$= C \times \sqrt{\frac{64}{25}}$$

$$9{\cdot}6 = C \times \frac{8}{5}$$

அல்லது $$C = \frac{9{\cdot}6 \times 5}{8}$$

$$\therefore \; C = \mathbf{6}$$

A ஐக் கணக்கிடல் :

இங்கு, $$\bar{x} = 135{\cdot}3$$

$$135{\cdot}3 = \bar{x} = A + \frac{\Sigma f dx'}{\Sigma f} \times C$$

அல்லது $$135{\cdot}3 = A + \left(\frac{-16}{80} \times 6\right)$$

$$135{\cdot}3 = (A - 1{\cdot}2)$$

$$\therefore \; A = \mathbf{136{\cdot}5}$$

ஆகவே, (22)ஐ அலைவெண்ணாகக் கொண்டுள்ள பிரிவின் மத்திய மதிப்பு 136·5 என்றும், அதன் இடைவெளி 6 என்றும் காண்கிறோம்.

∴ இந்தப் பிரிவு (136·5—3), (136·5+3); i.e.; **133·5—139·5** இவ்வழியே மற்றப் பிரிவுகளையும் கணக்கிடலாம்.

ஆகவே, மற்றப் பிரிவுகள் (109·5—115·5), (115·5—121·5)... ... ... (133·5—139·5) .... (151·5—157·5) எனக் கண்டறியலாம்.

மாதிரி 185

கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள பரவலுக்கு

(1) கூட்டுச் சராசரி, (2) திட்ட விலக்கம், (3) சார்லியரின் சோதனை ஆகியவற்றைக் காண்.

அளவு x :	12	13	14	15	16	17	18	19	20
அலைவெண் f :	4	19	30	63	66	69	18	1	1

தீர்வு :

கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம், சார்லியரின் சோதனை ஆகியவற்றைக் காணல் :

அளவு x	அலை வெண் f	ஊகச் சராசரி ($A=16$) -லிருந்து விலக்கம் dx	fdx	fdx^2	$(dx+1)$	$f(d+1)^2$
12	4	—4	—16	64	—3	36
13	19	—3	—57	171	—2	76
14	30	—2	—60	120	—1	30
15	63	—1	—63	63	0	0
16	66	0	0	0	1	66
17	29	1	29	29	2	116
18	18	2	36	72	3	162
19	1	3	3	9	4	16
20	1	4	4	16	5	25
	$n=231$		$\Sigma fdx = -124$	$\Sigma fdx^2 = 544$		$\Sigma f(d+1)^2 = 527$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \dfrac{\Sigma fdx}{n} \times C$

$$\therefore \bar{x} = 16 + \frac{-124}{231} \times 1$$

$$= 15{\cdot}47$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\dfrac{\Sigma fdx^2}{n} - \left(\dfrac{\Sigma fdx}{n}\right)^2}$

$$\therefore \quad \sigma = \sqrt{\frac{544}{231} - \left(\frac{-124}{231}\right)^2}$$
$$= \sqrt{2{\cdot}35 - 0{\cdot}28}$$
$$= \mathbf{1{\cdot}44}$$

சார்லியரின் சோதனை :

$$\Sigma f(d+1)^2 = \Sigma fd^2 + 2\Sigma fd + \Sigma f$$

பட்டியலிலிருந்து,

$$527 = 544 + (2 \times -124) + 231$$
$$= 544 - 248 + 231$$
$$= \mathbf{527}$$

சார்லியரின் சோதனை மூலம் கணக்கிடும் முறை சரியெனக் காண்கிறோம்.

மாறுவிகிதக் கெழு
(Coefficient of Variation)

மாதிரி 186

கீழ்க்காணும் அட்டவணை 100 நிறுவனங்களின் இலாப இழப்புகளைத் தருகிறது. இரு நிறுவனங்களின் தனித்தனி கூட்டுச் சராசரிகளையும் திட்ட விலக்கங்களையும் காண்.

இலாபம்	நிறுவனங்களின் எண்ணிக்கை	இலாபம்	நிறுவனங்களின் எண்ணிக்கை
5000—6000	8	0 —1000	5
4000—5000	12	—1000 — 0	6
3000—4000	30	—2000— —1000	8
2000—3000	10	—3000— —2000	9
1000—2000	5	—4000— —3000	7

(பி. என். எல். ஹேறன்ஸ்)

தீர்வு :

இலாபங்களின் கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் கணக்கிடல் :

இலாபங்கள்	நிறுவனங்களின் எண்ணிக்கை	ஊகச் சராசரி (1500)-லிருந்து படி விலக்கம் $d'x$	$fd'x$	$fd'x^2$
5000 — 6000	8	4	32	128
4000 — 5000	12	3	36	108
3000 — 4000	30	2	60	120
2000 — 3000	10	1	10	10
1000 — 2000	5	0	0	0
0 — 1000	5	—1	— 5	5
—1000 — 0	6	—2	—12	24
—2000 — —1000	8	—3	—24	72
—3000 — —2000	9	—4	—36	144
—4000 — —3000	7	—5	—35	175
			$\Sigma fd'x = 26$	$\Sigma fd'x^2 = 786$

கூட்டுச் சராசரி

அல்லது $\bar{x} = A + \frac{\Sigma fdx'}{n} \times C$

$= 1500 + \frac{26}{100} \times 1000$

$= 1500 + 260$

$= 1760$ ரூபாய்.

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma fd'x^2}{n} - \left(\frac{\Sigma fd'x}{n}\right)^2}$

$= \sqrt{\frac{786}{100} - \left(\frac{26}{100}\right)^2} \times 1000$

$= \sqrt{7{\cdot}86 - 0{\cdot}0676} \times 1000$

$\sqrt{7{\cdot}7924} \times 1000$

$= 2{\cdot}791 \times 1000$

$=$ **2791** ரூபாய்.

மாதிரி 187

கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து கூட்டுச் சராசரியையும் மாறுபாட்டையும் கணக்கிடுக.

கூலி	தொழிற்சாலை *A*-ல் தொழிலாளர்களின் எண்ணிக்கை	தொழிற்சாலை *B*-ல் தொழிலாளர்களின் எண்ணிக்கை
ரூ. 40-க்குக் குறைவாக	30	45
ரூ. 40-க்கு அதிகமான ஆனல் ரூ. 80-க்குக் குறைவான	25	35
ரூ. 80-க்கு அதிகமான ஆனல் ரூ. 120-க்குக் குறைவான	30	25
ரூ. 120-க்கு அதிகமான ஆனல் ரூ. 160-க்குக் குறைவான	45	40
ரூ. 160-க்கு அதிகமான ஆனல் ரூ 200-க்குக் குறைவான	25	25
ரூ. 200-க்கு அதிகமான ஆனல் ரூ. 240-க்குக் குறைவான	13	20
ரூ. 240-க்கு அதிகமான ஆனல் ரூ. 280-க்குக் குறைவான	24	5
ரூ. 280-க்கு அதிகமான ஆனல் ரூ. 320-க்குக் குறைவான	8	5
மொத்தம்	200	200

தீர்வு :

கூலி (ரூபாயில்)	மத்திய மதிப்பு x	$(A=180)$ -லிருந்து படி விலக்கம் dx'	தொழிற்சாலை A			தொழிற்சாலை B		
			தொழிலாளர்களின் எண்ணிக்கை	fdx'	fdx'^2	தொழிலாளர்களின் எண்ணிக்கை	$f'dx'$	$f'dx'^2$
0—40	20	—4	30	—820	480	45	—180	720
40—80	60	—3	25	—75	225	35	—105	315
80—120	100	—2	30	—60	120	25	—50	100
120—160	140	—1	45	—45	45	40	—40	40
160—200	180	0	25	0	0	25	50	0
200—240	220	1	13	13	13	20	20	20
240—280	260	2	24	48	96	5	10	20
280—320	300	3	8	24	72	5	15	45
			$n=200$	—215	1051	$n=200$	—330	1260

தொழிற்சாலை A :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f dx'}{n} \times C$

$= 180 + \frac{-215}{200} \times 40$

$= 137$ ரூபாய்.

திட்ட விலக்கம் $\sigma = C \times \sqrt{\frac{\Sigma f dx'^2}{n} - \left(\frac{\Sigma f dx'}{n}\right)^2}$

$= 40 \times \sqrt{\frac{1051}{200} - \left(\frac{-215}{200}\right)^2}$

$= 80{\cdot}8$ ரூபாய்

மாறுபாடு $\sigma^2 = (80{\cdot}8)^2$

$= 6528{\cdot}64$ ரூபாய்.

தொழிற்சாலை B :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f' dx'}{n} \times C$

$= 180 + \frac{-330}{200} \times 40$

$= 114$ ரூபாய்.

திட்ட விலக்கம் $\sigma' = C \times \sqrt{\frac{\Sigma f' dx'^2}{n} - \left(\frac{\Sigma f' dx'}{n}\right)^2}$

$= 40 \times \sqrt{\frac{1260}{200} - \left(\frac{-330}{200}\right)^2}$

$= 75{\cdot}6$ ரூபாய்.

$\therefore$ மாறுபாடு $\sigma'^2 = (75{\cdot}6)^2$

$= 5715{\cdot}36$ ரூபாய்.

மாதிரி 188

பின்வரும் அட்டவணைக்குக் கூட்டுச் சராசரியின் திட்ட விலக்கத்தையும் மாறு விகிதக் கெழுவையும் கணக்கிடுக.

செலவு	மாணவர்களின் எண்ணிக்கை
ரூ. 5-க்குக் குறைவாக	6
ரூ 10-க்குக் குறைவாக	16
ரூ. 15-க்குக் குறைவாக	28
ரூ. 20-க்குக் குறைவாக	38
ரூ. 25-க்குக் குறைவாக	46

(பி.காம்.—சென்னை)

தீர்வு :

முதலில் மேற்கண்ட அட்டவணையை அலைவெண் பரவல் அட்டவணையாக மாற்றுகிறோம். பின்பு, கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம், மாறு விகிதக் கெழு ஆகியவற்றைக் கணக்கிடுகிறோம்.

செலவு (ரூபாயில்)	மத்திய மதிப்பு x	மாணவர்களின் எண்ணிக்கை f	ஊகச்சராசரி ($A=12{\cdot}5$) யிலிருந்து படி விலக்கம் dx'	$fd'x$	$fd'x^2$
0— 5	2·5	6	—2	—12	24
5—10	7·5	10	—1	—10	10
10—15	12·5	12	0	0	0
15—20	17·5	10	1	10	10
20—25	22·5	8	2	16	32
		$\Sigma f=46$		$\Sigma fd'x=4$	$\Sigma fd'x^2=76$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd'x}{n} \times C$

$= 12{\cdot}5 + \frac{4}{46} \times 5$

$= 12{\cdot}94$ ரூபாய்

திட்ட விலக்கம் $\sigma = C \times \sqrt{\frac{\Sigma fd'x^2}{n} - \left(\frac{\Sigma fd'x}{n}\right)^2}$

$= 5 \times \sqrt{\frac{76}{46} - \left(\frac{4}{46}\right)^2}$

$= 6{\cdot}5$ ரூபாய் (தோராயமாக)

மாறு விகிதக் கெழு (C. V.) $= \frac{\sigma}{\bar{x}} \times 100$

$= \frac{6{\cdot}5}{12{\cdot}94} \times 100$

$= 50{\cdot}2\%$

மாதிரி 189

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு

(1) கூட்டுச் சராசரி (2) திட்ட விலக்கம் (3) மாறு விகிதக் கெழு ஆகியவற்றைக் கணக்கிடு.

(Histogram and less than Ogiv)

பிரிவு (x)	10—15	15—20	20—25	25—30	30—35	35—40	40—45
அலைவெண் f	7	19	43	52	40	15	3

(பி.எஸ்ஸி.—சென்னை—1972)

தீர்வு:

கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம், மாறுவிகிதக் கெழு காணல் :

பிரிவு	மத்திய மதிப்பு x	அலை வெண் f	ஊகச் சராசரி ($A = 27 \cdot 5$) யிலிருந்து படி விலக்கம் $d'x$	$fd'x$	$fd'x^2$
10—15	12·5	7	—3	—21	63
15—20	17·5	19	—2	—38	76
20—25	22·5	43	—1	—43	43
25—30	27·5	52	0	0	0
30—35	32·5	40	1	40	40
35—40	37·5	15	2	30	60
40—45	42·5	4	3	12	36
மொத்தம்		180		—20	318

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd'x}{n} \times C$

$$= 27 \cdot 5 + \frac{-20}{180} \times 5$$

$$= 27 \cdot 5 + \left(\frac{100}{180} \right)$$

$$= \mathbf{28 \cdot 056}$$

திட்ட விலக்கம் $\sigma = C \sqrt{\frac{\Sigma fd'x^2}{n} - \left(\frac{\Sigma fd'x}{n} \right)^2}$

$$= 5 \sqrt{\frac{318}{180} - \left(\frac{-20}{180} \right)^2}$$

$$= 5 \times \sqrt{1 \cdot 77 - 0 \cdot 0123}$$

$$= \mathbf{6 \cdot 60}$$

மாறு விகிதக் கெழு $C.V. = \frac{\sigma}{x} \times 100$

$$\frac{6 \cdot 6}{28 \cdot 056} \times 100$$

$= \mathbf{23 \cdot 5}$ **(தோராயமாக)**

மாதிரி 190

கீழ்க் காணும் இலைகளின் அகலங்களின் (சென்டி மீட்டரில்) பரவலுக்கு, திட்ட விலக்கத்தையும், மாறுவிகிதக் கெழுவையும் கணக்கிடுக.

அகலம் (சென்டி மீட்டரில்)	12—15	16—19	20—23	24—27
அலைவெண்	3	9	12	15
அகலம் (சென்டி மீட்டரில்)	28—31	32—35	36—39	40—43
அலைவெண்	28	21	11	1

(பி. ஏ.—சென்னை—1971 செப்.)

தீர்வு :

திட்ட விலக்கத்தையும் மாறுவிகிதக் கெழுவையும் கணக்கிடல் :

அகலம் (சென்டி மீட்டரில்)	மத்திய மதிப்பு x	அலை வெண் f	ஊகச் சராசரி $(A=25\cdot5)$ யிலிருந்து படி விலக்கம் $d'x$	$fd'x$	$fd'x^2$
12—15	13·5	3	—3	— 9	27
16—19	17·5	9	—2	—18	36
20—23	21·5	12	—1	—12	12
24—27	25·5	15	0	0	0
28—31	29·5	28	1	28	28
32—35	33·5	21	2	42	84
36—39	37·5	11	3	33	99
40—43	41·5	1	4	4	16
மொத்தம்		100		68	203

$$\text{கூட்டுச் சராசரி } \bar{x} = A + \frac{\Sigma fd'x}{\Sigma f} \times C$$

$$= 25{\cdot}5 + \frac{68}{100} \times 4$$

$$= 25{\cdot}5 + 2{\cdot}72$$

$$= \mathbf{28{\cdot}22}$$

$$\text{திட்ட விலக்கம் } \sigma = C\sqrt{\frac{\Sigma fd'x^2}{\Sigma f} - \left(\frac{\Sigma fd'x}{\Sigma f}\right)^2}$$

$$= 4\sqrt{\frac{302}{100} - \left(\frac{68}{100}\right)^2}$$

$$= 4 \times \sqrt{2{\cdot}5576}$$

$$= \mathbf{5{\cdot}00}$$

$$\left.\begin{array}{r}\text{மாறு விகிதக்}\\ \text{கெழு C. V.}\end{array}\right\} = \frac{\sigma}{\bar{x}} \times 100$$

$$= \frac{5{\cdot}0}{28{\cdot}22} \times 100$$

$$= \mathbf{17{\cdot}7}$$

மாதிரி 191

பின்வரும் பட்டியல் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வாரச் சம்பளப் பரவலாகும். அப் பரவலின் மாறுவிகிதக் கெழுவைக் காண்க.

வாரச் சம்பளம் (ரூபாயில்) மைய மதிப்பு	38	44	50	65	62	68	74	80	86
நிகழ் வெண்	27	72	135	170	285	175	96	28	12

(பி. ஏ.—மதுரை—1971)

தீர்வு :

மாறுவிகிதக் கெழுவைக் கணக்கிடல் :

வாரச் சம்பளம் (ரூபாயில்)	அலைவெண் f	ஊகச் சராசரி ($A=62$) யிலிருந்து படி விலக்கம் $d'x$	$fd'x$	$fd'x^2$
38	27	—4	—108	432
44	72	—3	—216	648
50	135	—2	—270	540
56	170	—1	—170	170
62	285	0	0	0
68	175	1	175	175
74	96	2	192	384
80	28	3	84	252
86	12	4	48	192
	1000		—265	2793

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd'x}{\Sigma f} \times C$

$$= 62 + \frac{-265}{1000} \times 6$$

$$= 62 - 1{\cdot}59$$

$$= 60{\cdot}41$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma f d'x^2}{\Sigma f} - \left(\frac{\Sigma f d'x}{\Sigma f}\right)^2}$

$= 6\sqrt{\frac{2793}{1000} - \left(\frac{-265}{1000}\right)^2}$

$= 6 \times \sqrt{2 \cdot 722775}$

$=$ **9·90**

மாறுவிகிதக் கெழு $C.V. = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$= \frac{9 \cdot 9}{60 \cdot 41} \times 100$

$=$ **16·39**

மாதிரி 192

கீழ்க் காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விவரங்களுக்குத் திட்ட விலக்கத்தையும் மாறு விகிதக் கெழுவையும் கணக்கிடு.

மதிப்பெண்கள்	0–10	10–20	20 - 30	30–40
மாணவர்கள் எண்ணிக்கை	5	10	20	40
மதிப்பெண்கள்	40–50	50–60	60–70	70–80
மாணவர்கள் எண்ணிக்கை	30	20	10	4

(பி.காம்.—சென்னை—1951)

தீர்வு :

திட்ட விலக்கம், மாறு விகிதக் கெழு கணக்கிடல் :

மதிப்பெண் பிரிவுகள்	மத்திய மதிப்பு x	மாணவர்கள் எண்ணிக்கை f	ஊகச் சராசரி ($A=35$) யிலிருந்து படி விலக்கம் dx	$fd'x$	$fd'x^2$
0—10	5	5	—3	—15	45
10—20	15	10	—2	—20	40
20—30	25	20	—1	—20	20
30—40	35	40	0	0	0
40—50	45	30	1	30	30
50—60	55	20	2	40	80
60 - 70	65	10	3	30	90
70—80	75	4	4	16	64
		$\Sigma f=139$		$\Sigma fd'x = 61$	$\Sigma fd'x^2 = 369$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd'x}{\Sigma f} \times C$

$$= 35 + \frac{61}{139} \times 10$$

= **39·5 மதிப்பெண்கள்**

திட்ட விலக்கம் $\sigma = C\sqrt{\frac{\Sigma fd'x^2}{\Sigma f} - \left(\frac{\Sigma fdx}{\Sigma f}\right)^2}$

$$\therefore \quad \sigma = 10\sqrt{\frac{369}{139} - \left(\frac{61}{139}\right)^2}$$

= **15·6 மதிப்பெண்கள்.**

மாறு விகிதக்கெழு $C.V. = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$$= \frac{15{\cdot}6}{39{\cdot}5} \times 100$$

= **39·2**

மாதிரி 193

மாதிரி 153-ல் கொடுத்துள்ள விவரங்களுக்கு (1) கூட்டுச் சராசரி (2) திட்ட விலக்கம் (3) மாறுவிகிதக் கெழு ஆகியவைகளைக் கணக்கிடுக.

(சென்னை—பல்கலை)

தீர்வு :

மாதிரி 153—லிருந்து கீழ்க் காண்பவற்றைக் கணக்கிடுகிறோம்.

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f d'x}{\Sigma f} \times C$

$= 50 + \frac{-15}{542} \times 10$

$= 49 \cdot 7$ வருடங்கள் (தோராயமாக)

மாதிரி 153-ல் திட்ட விலக்கம் σ } $=$ 11·6 வருடங்கள் (தோராயமாக)

மாறுவிகிதக் கெழு $C.V. = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$= \frac{11 \cdot 6}{49 \cdot 7} \times 100$

$= 23 \cdot 3$

மாதிரி 194

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு $\bar{x} \pm \sigma; \bar{x} \pm 2\sigma; \bar{x} \pm 3\sigma$ எல்லைக்குள் விழும் உறுப்புகளின் எண்ணிக்கையையும், சதவீதத்தையும் கணக்கிடு.

அளவு	10	9	8	7	6	5	4	3	2	1
அலைவெண்	1	0	1	5	6	8	14	5	6	4

(பி. காம்.—சென்னை)

தீர்வு :

$\bar{x} \pm \sigma$; $\bar{x} \pm 2\sigma$; $\bar{x} \pm 3\sigma$ எல்லைகளையும், அதற்குள் விழும் உறுப்புகளின் எண்ணிக்கையையும், சத வீதத்தையும் கணக்கிடல் :

அளவு x	அலைவெண் f	ஊகச் சராசரி ($A=5$) யிலிருந்து விலக்கம் dx	fdx	fdx^2
10	1	5	5	25
9	0	4	0	0
8	1	3	3	9
7	5	2	10	20
6	6	1	6	6
5	8	0	0	0
4	14	—1	—14	14
3	5	—2	—10	20
2	6	—3	—18	54
1	4	—4	—16	64
	50		—34	212

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$$= 5 + \frac{-34}{50}$$

$$= 4{\cdot}32$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma fdx^2}{n} - \left(\frac{\Sigma fdx}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{212}{50} - \left(\frac{-34}{50}\right)^2}$$

$$= 1{\cdot}94$$

σ எல்லைகளைக் கணக்கிடல் :

(1) $\bar{x} \pm \sigma = (4{\cdot}32+1{\cdot}94) \quad (4{\cdot}32-1{\cdot}94)$

$= (6{\cdot}26, \quad 2{\cdot}32)$

(6·26, 2·32) இடையே விழும் உறுப்புகளின் எண்ணிக்கை

$= 33$

அதாவது $= \frac{33}{50} \times 100$

$= 66\%$

(2) $\bar{x} \pm 2\sigma = (4{\cdot}32 + 2\times1{\cdot}94) \quad (4{\cdot}32-2\times1{\cdot}94)$

$= (4{\cdot}34+3{\cdot}88), \quad (4{\cdot}34-3{\cdot}88)$

$= (8{\cdot}20, \quad 0{\cdot}44)$

(8·20, 0·44) இடையே விழும் உறுப்புகளின் எண்ணிக்கை

$= 49$

அதாவது $= \frac{49}{50} \times 100$

$= 98\%$

(3) $\bar{x} \pm 3\sigma = (4{\cdot}32+3\times1{\cdot}94), \quad (4{\cdot}32-3\times1{\cdot}94)$

$= (4{\cdot}32+5{\cdot}82), \quad (4{\cdot}32-5{\cdot}82)$

$= (10{\cdot}4, \quad -1{\cdot}50)$

(10·4, −1·50)-க்கு இடையே விழும் உறுப்புகளின் எண்ணிக்கை

$= 50$

அதாவது $= \frac{50}{50} \times 100$

$= 100\%$

மாதிரி 195

கீழ்க் காணும் அட்டவணையிலுள்ள இரண்டு வரிசைக்கும் திட்ட விலக்கம் காண். எந்த வரிசை அதிக விலக்கத்தைக் காட்டுகிறது?

A வரிசை	192	288	236	229	184
B வரிசை	83	87	93	109	124

A வரிசை	260	348	291	330	243
B வரிசை	126	126	101	102	108

(பி. சி. எஸ்.—1938)

தீர்வு :

இரு வரிசைகளுக்கும் திட்ட விலக்கத்தையும் மாறுவிகிதக் கெழுவையும் காணல் :

A வரிசை			*B* வரிசை		
உறுப்புகளின் அளவு x	ஊகச் சராசரி $(A=260)$ யிலிருந்து விலக்கம் dx	விலக்கங்களின் வர்க்கம் dx^2	உறுப்புகளின் அளவு y	ஊகச் சராசரி $(B=105)$ யிலிருந்து விலக்கம் dy	விலக்கங்களின் வர்க்கம் dy^2
192	—68	4624	83	—22	484
288	28	784	87	—18	324
236	—24	576	93	—12	144
229	—31	619	109	4	16
184	—76	5776	124	19	361
260	0	0	126	21	441
348	88	7744	126	21	441
391	31	961	101	— 4	16
330	70	4900	102	— 3	9
243	—17	289	108	3	9
$\Sigma x = 2601$		$\Sigma dx^2 = 26615$	$\Sigma y = 1059$		$\Sigma dy^2 = 2245$

A வரிசை :

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$= \frac{2601}{10}$

$= 260{\cdot}1$

திட்ட விலக்கம் σ $= \sqrt{\frac{\Sigma x^2}{n} - (\bar{x}-A)^2}$

$= \sqrt{\frac{26615}{10} - (260{\cdot}1-260)^2}$

$= \sqrt{\frac{26615-10\,({\cdot}1)^2}{10}}$

$= \sqrt{\frac{26614{\cdot}9}{10}} = \sqrt{2661{\cdot}49}$

$= 51{\cdot}6$ (தோராயமாக)

மாறுவிகிதக் கெழு $= \frac{\sigma}{\bar{x}} \times 100$

$= \frac{51{\cdot}6}{260{\cdot}1} \times 100$

$= 19{\cdot}8$

B வரிசை :

கூட்டுச் சராசரி $\bar{y} = \frac{\Sigma y}{n}$

$= \frac{1059}{10}$

$= 105{\cdot}9$

திட்ட விலக்கம் $= \sqrt{\frac{\Sigma y^2}{n} - (\bar{y}-B)^2}$

$= \sqrt{\frac{2245}{10} - (105 \cdot 9 - 105)^2}$

$= \sqrt{224 \cdot 5 - 0 \cdot 81} = \sqrt{223 \cdot 69}$

$= \mathbf{14 \cdot 96}$

மாறுவிகிதக் கெழு $C.\,V. = \frac{\sigma}{\bar{y}} \times 100$

$= \frac{14 \cdot 96}{105 \cdot 9} \times 100$

$= \mathbf{14 \cdot 1}$

மாதிரி 176

'அ', 'ஆ' என்ற இரு கால்∴ப் ஆட்டக்காரர்கள் 12 ஆட்டங்களில் எடுத்துள்ள வெற்றிப் புள்ளிகள் கீழே தரப்பட்டு உள்ளன. யார் திறமையாக ஆடுபவர் என்றும், யார் மிகை யான நிலைப்புத்தன்மை உடையவர் எனவும் காண்.

அ :	74	75	78	72	78	77	79	81	79	76	72	71
ஆ :	87	84	80	88	89	85	86	82	82	79	86	80

(—சீதாராமன்—)

திறமையை அவர்களின் உயர்ந்த கூட்டுச் சராசரி மூலம் கணக்கிடுகிறோம். ஆட்டத்தின் மிகையான நிலைப்புத் தன்மையை அவர்களின் குறைவான மாறுவிகிதக் கெழுவின் மூலம் காண் கிறோம்.

வரிசை எண்	அ—ஆட்டக்காரர்			‘ ஆ ’—ஆட்டக்காரர்		
	வெற்றிப் புள்ளிகள் x	ஊகச் சராசரி ($A=75$) யிலிருந்து விலக்கம் dx	விலக்க வர்க்கம் dx^2	வெற்றிப் புள்ளிகள் y	ஊகச் சராசரி ($B=85$) யிலிருந்து விலக்கம் dy	விலக்க வர்க்கம் dy
1	74	—1	1	87	2	4
2	75	0	0	84	—1	1
3	78	3	9	80	—5	25
4	72	—3	9	88	3	9
5	78	3	9	89	4	16
6	77	2	4	85	0	0
7	79	4	16	86	1	1
8	81	6	36	82	—3	9
9	79	4	16	82	—3	9
10	76	1	1	79	—6	36
11	72	—3	9	86	1	1
12	71	—4	16	80	—5	25
	$n=12$	$\Sigma dx=12$	$\Sigma dx^2=126$	$n=12$	$\Sigma dy = -14$	$\Sigma dy^2=136$

ஆட்டக்காரர் 'அ' :

வெற்றிப் புள்ளிகளின் கூட்டுச் சராசரி $\overline{x} = 4 + \frac{\Sigma fx}{n}$

$= 75 + \frac{12}{12}$

$= 76$ வெற்றிப் புள்ளிகள்

திட்ட விலக்கம் $\sigma_x = \sqrt{\frac{\Sigma dx^2}{n} - \left(\frac{\Sigma dx}{n}\right)^2}$

$= \sqrt{\frac{126}{12} - \left(\frac{12}{12}\right)^2}$

$= \sqrt{9 \cdot 5}$

$= 3 \cdot 08$ வெற்றிப் புள்ளிகள்

மாறு விகிதக் கெழு C. V. $= \frac{\sigma_x}{x} \times 100$

$= \frac{3 \cdot 08}{76} \times 100$

$= 4 \cdot 0\%$

ஆட்டக்காரர் 'ஆ' :

வெற்றிப் புள்ளிகளின் கூட்டுச் சராசரி $\overline{y} = B + \frac{\Sigma dy}{n}$

$= 85 + \frac{-14}{12}$

$= 85 - \frac{14}{12}$

$= 83 \cdot 8$ வெற்றிப் புள்ளிகள்

$$\text{திட்ட விலக்கம் } \sigma_y = \sqrt{\frac{\Sigma dy^2}{n} - \left(\frac{\Sigma dy}{n}\right)^2}$$

$$= \sqrt{\frac{136}{12} - \left(\frac{-14}{12}\right)^2}$$

$$= \sqrt{9\cdot89}$$

$$= 3\cdot14 \text{ வெற்றிப் புள்ளிகள்}$$

$$\left.\begin{array}{r}\text{வெற்றிப் புள்ளிகள் மாறு விகிதக்}\\ \text{கெழு } C.V.\end{array}\right\} = \frac{\sigma_y}{y} \times 100$$

$$= \frac{3\cdot14}{83\cdot8} \times 100$$

$$= 3\cdot7\%$$

முடிவு :

ஆட்டக்காரர் 'அ'-ன் கூட்டுச் சராசரி 76·0, ஆனால் ஆட்டக்காரர் 'ஆ'-ன் வெற்றிப் புள்ளிகளின் கூட்டுச் சராசரி 83·8; இதில் 76·0 < 83·8; ஆகவே, ஆட்டக்காரர் 'ஆ', மிகத் திறமையாக ஆடக்கூடியவர் என முடிவு செய்கிறோம்.

ஆட்டக்காரர் 'அ'-ன் மாறுவிகிதக் கெழு 4·0%, ஆனால் ஆட்டக்காரர் 'ஆ'-ன் மாறுவிகிதக் கெழு 3·7% அதில் 4·0 > 3·7; ஆகவே ஆட்டக்காரர் 'ஆ' மிகையான நிலைப்புத் தன்மை உடையவர் என முடிவு செய்கின்றோம். ஆகவே, ஆட்டக்காரர் 'ஆ' திறமையும் மிகையான நிலைப்புத்தன்மையும் உடையவர்.

மாதிரி 197

கீழ்க் காணும் இரண்டு பங்குகளில் எந்தப் பங்கு அதிக மாறுபாடு கொண்டுள்ளது ?

கோஹினூர் : 618, 619, 616, 623, 620, 624, 622, 625, 622, 625, 626, 625.

டாடா டெஃபர் : $2152\frac{1}{2}$, $2131\frac{1}{2}$, $2134\frac{1}{4}$, $2132\frac{1}{2}$, 2145, $2142\frac{1}{2}$, $2146\frac{1}{4}$, 2130, $2146\frac{1}{4}$, $2142\frac{1}{2}$, 2150, 2135, $2152\frac{1}{2}$.

(பி.காம். — பம்பாய் — 1945)

தீர்வு : இரண்டு பங்குகளின் வரிசைகளுக்கு மாறு விகிதக் கெழுவைக் கணக்கிடல் :

வரிசை எண்	கோஹினூர்			டாடா டெஃபர்		
	பங்கின் விலை x	ஊகச் சராசரி ($A=622$) யிலிருந்து விலக்கம் dx	விலக்க வர்க்கம் dx^2	பங்கின் விலை y	ஊகச் சராசரி ($B=2142{\cdot}5$) யிலிருந்து விலக்கம் dy	விலக்க வர்க்கம் dy^2
1	618	—4	16	2152·5	10	100
2	619	—3	9	2132 5	—10	100
3	616	—6	36	2134·25	— 8·25	68·06
4	623	1	1	2132·5	—10	100
5	620	—2	4	2145·0	— 2·5	6·25
6	624	2	4	2142·5	0	0
7	622	0	0	2146 25	3·75	14·06
8	625	3	9	2130·0	—12·5	156·25
9	622	0	0	2146·25	3·75	14·06
10	625	3	9	2142·5	0	0
11	626	4	16	2150·0	7·5	56·25
12	625	3	9	2135·0	— 7·5	56·25
13				2152·5	10	100
	$n=12$	$\Sigma dx = 1$	$\Sigma dx^2 = 113$	$n = 13$	$\Sigma dy = -10{\cdot}57$	$\Sigma dy^2 = 771{\cdot}18$

கோஹினூர் :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma dx}{n}$

$$622 + \frac{1}{12}$$

$$= 622{\cdot}1 \text{ (தோராயமாக)}$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma dx^2}{n} - \left(\frac{\Sigma dx}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{113}{12}\left(\frac{1}{12}\right)^2}$$

$$= \sqrt{9{\cdot}42}$$

$$= 3{\cdot}07 \text{ (தோராயமாக)}$$

மாறுவிகிதக் கெழு $C.V. = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$$= \frac{3{\cdot}01}{622{\cdot}1} \times 100$$

$$= 0{\cdot}493\%$$

டாடா டெஃபர் :

கூட்டுச் சராசரி $\bar{y} = B + \frac{\Sigma dy}{n}$

$$= 2142{\cdot}5 + \frac{-10{\cdot}75}{13}$$

$$= 2141{\cdot}67$$

திட்ட விலக்கம் $\sigma_y = \sqrt{\frac{\Sigma dy^2}{n} - \left(\frac{\Sigma dy}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{771.18}{13} - \left(\frac{-10.75}{13}\right)^2}$$

$$= \sqrt{58.63}$$

$$= \mathbf{7.66}$$

மாறு விகிதக் கெழு C.V. $\left.\right\} = \frac{\sigma_y}{\bar{y}} \times 100$

$$= \frac{7.66}{2141.67} \times 100$$

$$= \mathbf{0.358\%}$$

மேலே கணக்கிடப்பட்ட இரண்டு மாறுவிகிதக் கெழுக்களில் கோஹினூரின் 0·493%, டாடா டெஃபரின் மாறுவிகிதக் கெழு 0·358%ஐ விட அதிகமாக இருப்பதால், கோஹினூர் அதிக மாறு பாடு உடைய பங்கு என முடிவு செய்கிறோம்.

மாதிரி 198

27 இன்னிங்ஸ் ஆட்டங்களில் பிராட்மென், பான்ஸ்போர்டு ஆகிய இரு புகழ் பெற்ற கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் ஓட்ட எண்ணிக்கை வருமாறு :

பிராட்மென் :	304	244	206	160	149	140	132	
	94	80	62	53	48	45	42	36
	35	32	28	25	23	20	18	16
	14	10	6	3				
பான்ஸ்போர்டு :	281	266	229	181	125	93	83	
	72	64	58	52	48	46	41	36
	27	21	12	10	8	8	7	6	5
	3	0	0.					

இவ்விரு ஆட்டக்காரர்களில் மிகையான நிலைப்புத் தன்மை உடையவர் யார்?

(சென்னைப் பல்கலை)

தீர்வு :

திட்ட விலக்கத்தையும் மாறுவிகிதக் கெழுவையும் காணல் :

பிராட்மென்			பான்ஸ்போர்டு		
ஓட்ட எண்ணிக்கை x	ஊகச் சராசரி ($B=100$) யிலிருந்து விலக்கம் dy	விலக்க வர்க்கம் dx^2	ஓட்ட எண்ணிக்கை y	ஊகச் சராசரி ($A=100$) யிலிருந்து விலக்கம் dy	விலக்க வர்க்கம் dx^2
304	204	41616	281	181	32761
244	144	20736	266	166	27556
206	106	11236	229	129	16641
160	60	3600	181	81	6561
149	49	2401	125	25	625
140	40	1600	93	—7	49
132	32	1024	83	—17	289
94	—6	36	72	—28	784
80	—20	400	64	—36	1296
62	—38	1444	58	—42	1764
53	—47	2209	52	—48	2304
48	—52	2704	48	—52	2704
45	—55	3025	46	—54	2916
42	—58	3364	41	—59	3481
36	—64	4096	36	—64	4096
35	—65	4225	27	—73	5329
32	—68	4624	21	—79	6241
28	—72	5184	12	—88	7744
25	—75	5625	10	—90	8100
23	—77	5929	8	—92	8464
20	—80	6400	8	—92	8464
18	—82	6724	7	—93	8649
16	—84	7056	6	—94	8836
14	—86	7396	5	—95	9025
10	—90	8100	3	—97	9409
6	—94	8836	0	—100	10000
3	—97	9409	0	—100	10000
2125		178999	1792		204088

பிராட்மென் :

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n}$

$= \frac{2125}{27}$

$= 78{\cdot}7$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma dx^2}{n} - (\bar{x} - A)^2}$

$= \sqrt{\frac{178999}{27} - (78{\cdot}7 - 100)^2}$

$= \sqrt{6629{\cdot}59 - 453{\cdot}69}$

$= \mathbf{78{\cdot}5}$

மாறுவிகிதக் கெழு C. V. $= \frac{\sigma_x}{\bar{x}} \times 100$

$= \frac{76{\cdot}7}{78{\cdot}7} \times 100$

$= \mathbf{97{\cdot}0}$

பான்ஸ்போர்டு :

கூட்டுச் சராசரி $\bar{y} = \frac{\Sigma y}{n}$

$= \frac{1792}{27}$

$= \mathbf{66{\cdot}37}$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma dy^2}{n} - (\bar{y} - B)^2}$

$= \sqrt{\frac{204088}{27} - (66{\cdot}37 - 100)^2}$

$= \sqrt{7595{\cdot}8 - 1130{\cdot}9769}$

$= \mathbf{80{\cdot}4}$

$$\text{மாறுவிகிதக் கெழு} = \frac{\sigma_y}{\bar{y}} \times 100$$

$$= \frac{80 \cdot 4}{66 \cdot 37} \times 100$$

$$= 121 \cdot 1$$

முடிவு :

மேற்கண்ட இரு மாறுபாடுகளையும் ஒப்பிட, பிராட்மெனின் மாறுவிகிதக் கெழுவே குறைவானது. ஆகவே, பான்ஸ்போர்டை விட பிராட்மென் அதிக நிலைப்புத் தன்மையுடையவர் என அறிகிறோம்.

மாதிரி 199

கீழ்க் காண்பவை, தினக் கணக்கில், 20 நாட்களுக்கு, *A*, *B* என்ற இரண்டு செங்கல் அடுக்குபவர்கள் அடுக்கிய செங்கற்களின் எண்ணிக்கையைத் தருகிறது.

A :	725	700	750	650	675	725	675
	725	625	675	700	625	725	675
	800	650	675	625	700	650	
B ;	575	625	600	575	675	625	575
	550	650	625	550	700	625	600
	625	650	575	675	625	600	

ஒவ்வொருவரின் மாறுவிகிதக் கெழுவையும் கணக்கிட்டு, யார் சீராகச் செங்கல் அடுக்குபவர் எனக் கண்டுபிடி.

A-ன் வரிசை உறுப்புகளில் ஒவ்வொன்றிலும் 10 செங்கற்களும், *B*-ன் வரிசை உறுப்புகளில், ஒவ்வொன்றிலும் 20 செங்கற்களும் அதிகமாகக் கொண்டால், முன்பு கணக்கிட்ட முடிவில் என்ன மாற்றம் ஏற்படும் ?

(பி.காம்.—1950)

தீர்வு :

A : மாறுவிகிதக் கெழு கணக்கிடல் :

செங்கல் அடுக்குபவர்—A			
செங்கற்கள் x	($A=700$) லிருந்து விலக்கம் dx	படி விலக்கம் $d'x\left(=\frac{dx}{25}\right)$	விலக்க வர்க்கம் $d'x^2$
725	25	1	1
700	0	0	0
750	50	2	4
650	— 50	— 2	4
675	— 25	— 1	1
725	25	1	1
675	— 25	— 1	1
725	25	1	1
625	— 75	— 3	9
675	— 25	— 1	1
700	0	0	0
675	— 25	— 1	1
725	25	1	1
675	— 25	— 1	1
800	100	4	16
650	— 50	— 2	4
675	— 25	— 1	1
625	— 75	— 3	9
700	0	0	0
650	— 50	— 2	4
$n=20$		— 8	60

செங்கல் அடுக்குபவர் A :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma d'x}{n} \times C$

$= 700 + \frac{-8}{20} \times 25$

$=$ 690 செங்கற்கள்.

திட்ட விலக்கம் $\sigma = C\sqrt{\frac{\Sigma d'x^2}{n} - \left(\frac{\Sigma d'x}{n}\right)^2}$

$= 25\sqrt{\frac{60}{20} - \left(\frac{-8}{20}\right)^2}$

$= 25\sqrt{3{\cdot}00 - 0{\cdot}16}$

$=$ 42·1 செங்கற்கள்.

மாறுவிகிதக் கெழு $C.\ V. = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$= \frac{42{\cdot}1}{690} \times 100$

$= 6{\cdot}1\%$

B :

மாறுவிகிதக் கெழு கணக்கிடல் :

செங்கல் அடுக்குபவர்—B			
செங்கற்கள் y	($B = 625$) லிருந்து விலக்கம் dy	படி விலக்கம் $d'y \left(= \frac{dy}{25}\right)$	விலக்க வர்க்கம் $d'y^2$
575	—50	—2	4
625	0	0	0
600	—25	—1	1

செங்கற்கள் y	$(B=625)$ -லிருந்து விலக்கம் dy	படிவிலக்கம் $dy' \left(= \frac{dy}{25}\right)$	விலக்க வர்க்கம் $d'y^2$
575	—50	—2	4
675	50	2	4
625	0	0	0
575	—50	—2	4
550	—75	—3	9
650	25	1	1
625	0	0	0
550	—75	—3	9
700	75	3	9
625	0	0	0
600	—25	—1	1
625	0	0	0
650	25	1	1
575	—50	—2	4
675	50	2	4
625	0	0	0
600	—25	—1	1
		—8	56

B செங்கல் அடுக்குபவர் :

கூட்டுச் சராசரி $\bar{y} = B + \frac{\Sigma d'y}{n} \times C$

$$= 625 + \frac{-8}{20} \times 25$$

$$= 625 - 10$$

= 615 செங்கற்கள்

திட்ட விலக்கம் $\sigma_y = C\sqrt{\frac{\Sigma d'y^2}{n} - \left(\frac{\Sigma d'y}{n}\right)^2}$

$= 25\sqrt{\frac{56}{20} - \left(\frac{-8}{20}\right)}$

$= 25\sqrt{2.8 - 0.16}$

$= 40.625$ செங்கற்கள்

மாறுவிகிதக் கெழு $C.V. = \frac{\sigma}{\bar{y}} \times 100$

$= \frac{40.625}{615} \times 100$

$= 6.6\%$

இங்கு $C.V.(A) = 6.1 < 6.6 = C.V.(B)$

ஆகவே செங்கல் அடுக்குபவர் A என்பவர் மிகவும் சீரானவர்.

A என்பவரின் வரிசை உறுப்புகள் 10 கூடுதலாயும் B என்பவரின் வரிசை உறுப்புகள் 20 கூடுதலாயும் இருப்பின் :

A-ன் கூட்டுச் சராசரி $= \bar{x} + 10$

$= 690 + 10$

$= 700$ செங்கற்கள்

B-ன் கூட்டுச் சராசரி $= \bar{y} + 20$

$= 615 + 20$

$= 635$ செங்கற்கள்

ஆனால், திட்ட விலக்கங்கள் σ_x, σ_y கள் மாறுவது இல்லை.

$\therefore \sigma_x = 42.1$

$\sigma_y = 40.625$

$$\text{தற்போது மாறுவிகிதக் கெழு } (A) = \frac{\sigma_x}{\bar{x}} \times 100$$

$$= \frac{42 \cdot 1}{700} \times 100$$

$$= 6 \cdot 014\%$$

$$\text{தற்போது மாறுவிகிதக் கெழு } (B) = \frac{\sigma_y}{\bar{y}} \times 100$$

$$= \frac{40 \cdot 6}{635} \times 100$$

$$= 6 \cdot 394\%$$

சார்புச் சீரான தன்மை A, B இருவருக்கும் அப்படியே இருக்கிறது. ஆகவே, மறுபடியும் A-யே சீராக அடுக்குபவர் எனக் காண்கிறோம்.

மாதிரி 200

கீழே தரப்பட்ட ஒரு கட்டுரையின் பகுதிக்கு, மாறுபட்ட எழுத்துகளின் எண்ணிக்கை கொண்ட வார்த்தைகளின் பரவலை அமைக்கவும். ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள எழுத்துகளை மாறியாக இங்குக் கணக்கிடவேண்டும். அப் பரவலுக்குக் கூட்டுச் சராசரி, இடைநிலை, மாறுவிகிதக் கெழு ஆகியவற்றைக் கணக்கிடுக.

"Success in the examination confers no absolute right to appointment, unless Government is satisfied, after such enquiry as may be considered necessary, that the candidate is suitable in all respects for appointment to the public Service.

(ஐ.ஏ.எஸ்.—1947)

தீர்வு :

முதலில் அமைத்த அலைவெண் பரவல் கீழ்க்காணுமாறு அமைகிறது.

எழுத்துகளின் எண்ணிக்கை	வார்த்தைகளின் எண்ணிக்கை	எழுத்துகளின் எண்ணிக்கை	வார்த்தைகளின் எண்ணிக்கை
2	9	7	4
3	6	8	3
4	2	9	3
5	2	10	2
6	2	11	3

கூட்டுச் சராசரி, இடைநிலை, மாறுவிகிதக் கெழு ஆகியவற்றைக் கணக்கிடல் :

எழுத்துகளின் எண்ணிக்கை x	வார்த்தைகளின் எண்ணிக்கை f	ஊகச் சராசரி ($A = 6$) யிலிருந்து விலக்கம் dx	fdx	fdx^2	குவி அலைவெண் $c.f$
2	9	—4	—36	144	9
3	6	—3	—24	54	15
4	2	—2	—4	8	17
5	2	—1	—2	4	19
6	2	0	0	0	21
7	4	1	4	4	25
8	3	2	6	12	28
9	3	3	9	27	31
10	2	4	8	32	33
11	3	5	15	75	36
	$\Sigma f = 36$		$\Sigma fdx = -18$	$\Sigma fdx^2 = 360$	

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f dx}{\Sigma f}$

$= 6 + \frac{18}{36}$

$= 5 \cdot 5$ எழுத்துகள்.

இடை நிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{36+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 18 \cdot 5$ ஆவது உறுப்பின் மதிப்பு

$\therefore$ இடை நிலை $= 5$ எழுத்துகள்

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\left(\frac{\Sigma f dx^2}{n}\right) - \left(\frac{\Sigma f dx}{n}\right)^2}$

$= \sqrt{\frac{360}{36} - \left(\frac{-18}{36}\right)^2}$

$= \sqrt{9 \cdot 75}$

$= 3 \cdot 12$ எழுத்துகள்

மாறுவிகிதக் கெழு $(C. V.) = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$= \frac{3 \cdot 12}{5 \cdot 5} \times 100$

$= 56 \cdot 7\%$

மாதிரி 201

கீழ்க் காணும் பத்தியிலுள்ள வார்த்தைகளின் எழுத்துகளின் எண்ணிக்கையை x-மாறியாகக் கொண்டு ஓர் அலைவெண் பட்டியலைத் தயார் செய் :

" The reliability of data must always be examined before any attempt is made to base conclusion upon them. This is true

of all data, but particulary so of numerical data, which do not carry their quality written large on them. It is a waste of time to apply the refined theoretical methods of statistics to data which are suspect from the beginning."

(1) கூட்டுச் சராசரி (2) இடைநிலை (3) முகடு (4) மாறுபாடு ஆகியவற்றை அமைத்த பரவலுக்குக் காண்.

(ஐ. ஏ. எஸ்.—1967)

தீர்வு :

அலைவெண் பரவல் அமைத்தல் :

எழுத்துகளின் எண்ணிக்கை x	குறிகள்	அலைவெண் f
1	|	1
2	卌 卌 卌 |	16
3	卌 |||	8
4	卌 卌 ||||	14
5	卌 ||	7
6	||	2
7	卌 |	6
8	|	1
9	||	2
10	|	1
11	|||	3
12	|	1

மேற்கண்ட அலைவெண் பரவலுக்குக் கூட்டுச் சராசரி, இடைநிலை, மாறுபாடு, திட்ட விலக்கம் ஆகியவற்றைக் கணக்கிடல் ;

எழுத்துகளின் எண்ணிக்கை x	அலைவெண் f	ஊகச் சாரசரி ($A=4$) யிலிருந்து விலக்கம் dx	fdx	fdx^2	குவி அலை எண் $c.f.$
1	1	—3	— 3	9	1
2	16	—2	—32	64	17
3	8	—1	— 8	8	25
4	14	0	0	0	39
5	7	1	7	7	46
6	2	2	4	8	48
7	6	3	18	54	54
8	1	4	4	16	55
9	2	5	10	50	57
10	1	6	6	36	58
11	3	7	27	147	61
12	1	8	8	64	62
	62		$\Sigma fdx = 35$	$\Sigma fdx^2 = 463$	

கூட்டுச் சாரசரி $\bar{x} = A + \frac{\Sigma fdx}{n}$

$$= 4 + \frac{35}{62}$$

$$= 4\frac{35}{62} \text{ எழுத்துகள்}$$

இடைநிலை $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{62+1}{2}\right)$ ஆவது அல்லது 31·5 ஆவது உறுப்பின் மதிப்பு

∴ இடைநிலை = 4 எழுத்துகள்.

மாறுபாடு $\sigma^2 = \sqrt{\frac{\Sigma fdx^2}{n} - \left(\frac{\Sigma fdx}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{463}{62} - \left(\frac{35}{62}\right)^2}$$

$$= 7{\cdot}149063$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{7{\cdot}1490}$

$$= \mathbf{2{\cdot}673}.$$

பிரிவு படுத்தும் முறையில் முகட்டைக் கணக்கிடுகிறோம்.

உறுப்புகளின் அளவு	f_i	I	II	III	IV	V	கூடுதலான அலைவெண் கொண்டுள்ள உறுப்புகளின் எண்ணிக்கை
1	1	17					1
2	16		**24**	**25**			3
3	8	**22**					5
4	14		21		**38**		3
5	7	9		23		**29**	1
6	2		8				0
7	6	7			15		0
8	1		3	9		9	0
9	2	3					0
10	1		4		4		0
11	3	4		5		6	0
12	1						0

ஆகவே 3ஐ முகடாகக் கொள்கிறோம்.

மாதிரி 202

பல்வேறு கால்பந்தாட்டப் போட்டிகளில் A, B என்ற இரு குழுவினர் பெற்ற வெற்றிப் புள்ளிகள் பற்றிய புள்ளி விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

வெற்றிப் புள்ளி களின் எண்ணிக்கை	ஆட்ட எண்கள்	
	A	B
0	27	17
1	9	9
2	8	6
3	5	5
4	4	3

ஒவ்வொரு குழுவிற்கும் மாறுவிகிதக் கெழுவைக் கணக்கிட்டு எந்தக் குழு மிகையான நிலைப்புத் தன்மையுடையது எனக் காண்.

(ஐ.ஏ.எஸ்—1954)

தீர்வு :

இரண்டு குழுக்களின் வெற்றிப் புள்ளிகளுக்கும் மாறு விகிதக் கெழுக்களைக் கணக்கிடல் :

வெற்றிப் புள்ளிகள் (x)	ஊகச் சராசரி ($A=2$) யிலிருந்து விலக்கம் d	பிரிவு A			பிரிவு B		
		அலைவெண் f	fd	fd^2	அலைவெண் f'	$f'd$	$f'd^2$
0	—2	27	—54	108	17	—34	68
1	- 1	9	—9	9	9	—9	9
2	0	8	0	0	6	0	0
3	1	5	5	5	5	5	5
4	2	4	8	16	3	6	12
		53	—50	138	40	—32	94

பிரிவு A :

$$\text{கூட்டுச் சராசரி} \quad \bar{x}_1 = A + \frac{\Sigma fd}{n}$$

$$= 2 + \left(\frac{-50}{53}\right)$$
$$= 2 - 0{\cdot}9434$$
$$= \mathbf{1{\cdot}06} \text{ வெற்றிப் புள்ளிகள்}$$

திட்ட விலக்கம் $\sigma_1 = \sqrt{\frac{\Sigma fd^2}{n} - \left(\frac{\Sigma fd}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{138}{53} - \left(\frac{-50}{53}\right)^2}$$
$$= \sqrt{2{\cdot}6 - 0{\cdot}81}$$
$$= \mathbf{1{\cdot}3} \text{ வெற்றிப்புள்ளிகள்}$$

மாறுவிகிதக் கெழு $(C.V.)_1 = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$$= \frac{1{\cdot}3}{1{\cdot}06} \times 100$$
$$= \mathbf{122{\cdot}6\%}$$

பிரிவு B :

கூட்டுச் சராசரி $\bar{x}_2 = A + \left(\frac{\Sigma f'd}{n}\right)$

$$= 2 + \left(\frac{-32}{40}\right)$$
$$= 2 - 0{\cdot}8$$
$$= 1{\cdot}2 \text{ வெற்றிப் புள்ளிகள்}$$

திட்ட விலக்கம் $\sigma_2 = \sqrt{\frac{\Sigma f'd^2}{n} - \left(\frac{\Sigma f'd}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{94}{40} - \left(\frac{-32}{40}\right)^2}$$
$$= \sqrt{2{\cdot}35 - 0{\cdot}64}$$
$$= \sqrt{1{\cdot}71}$$
$$= 1{\cdot}3 \text{ வெற்றிப் புள்ளிகள்.}$$

$$\text{மாறுவிகிதக் கெழு } (C.\ V.)_2 = \frac{\sigma_2}{x_2} \times 100$$

$$= \frac{1{\cdot}3}{1{\cdot}2} \times 100$$

$$= 1{\cdot}083 \times 100$$

$$= 108{\cdot}3\%$$

பிரிவு *A*-ன் மாறுவிகிதக் கெழு 122·6, பிரிவு *B*-ன் மாறு விகிதக் கெழு 108·3 ஐ விட அதிகமாக இருக்கிறது. மாறுவிகிதக் கெழு குறைவாகவுள்ள குழுவினரே மிகையான நிலைப்புத்தன்மை தம்முடைய ஆட்டத்தில் உடையவர்கள் எனக் கணக்கிடப் படுகிறது. இதன்படி, இங்கு *B* குழுவே மிகுதியான நிலைப்புத் தன்மையுடையது எனக் கொள்கிறோம்.

மாதிரி 203

கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு நகரங்களின் மக்கட் தொகை (ஆயிரத்தில்) அளவுகளுக்கு, இரு பரவல் அளவுகளைக் கணக்கிட்டு ஒப்பிடுக.

ஆண்டு	அலகாபாத் (ஆயிரத்தில்)	காசி (ஆயிரத்தில்)
1881	160	218
1891	175	223
1901	172	213
1911	172	204
1921	157	198
1931	184	205
1941	261	263

(எம். ஏ.—ஆக்ரா—1948)

தீர்வு :

கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம், மாறுவிகிதக் கெழு ஆகியவற்றை இரு நகரங்களுக்கும் கணக்கிடல் ;

ஆண்டு	அலகாபாத் மக்கட் தொகை (ஆயிரத்தில்) x	(183)-லிருந்து விலக்கம் dx	dx^2	காசி மக்கட் தொகை (ஆயிரத்தில்) y	(218)-லிருந்து விலக்கம் dy	dy^2
1881	160	−23	529	218	0	0
1891	175	− 8	64	223	5	25
1901	172	−11	121	213	− 5	25
1911	172	−11	121	204	−14	196
1921	157	−26	676	198	−20	400
1931	184	1	1	205	−13	169
1941	261	78	6084	263	45	2025
$n=7$	1281		7596	1524		2840

அலகாபாத்தின் மக்கட் தொகையின் கூட்டுச் சராசரி x = 183 ஆயிரங்கள்

காசியின் மக்கட் தொகையின் கூட்டுச் சராசரி y = 218 ஆயிரங்கள்

அலகாபாத் மக்கட் தொகையின் திட்ட விலக்கம் σ_x

$$= \sqrt{\frac{\Sigma\, dx^2}{n}} = \sqrt{\frac{7596}{7}} = 32{\cdot}9 \text{ ஆயிரங்கள்}$$

அலகாபாத் மக்கட் தொகையின் மாறு விகிதக் கெழு C. V.

$$= \frac{\sigma_x}{\overline{x}} = \frac{32{\cdot}9}{183} = {\cdot}18$$

காசியின் மக்கட் தொகையின் திட்ட விலக்கம் σ_y

$$= \sqrt{\frac{\Sigma\, dy^2}{n}}$$

$$= \sqrt{\frac{2840}{7}}$$

$= \mathbf{20{\cdot}1}$ **ஆயிரங்கள்**

காசி மக்கட் தொகையின் மாறு விகிதக் கெழு C V. $= \frac{\sigma y}{\bar{y}}$

$$= \frac{20{\cdot}1}{218}$$

$$= 0{\cdot}09$$

காசியின் மாறுவிகிதக் கெழு (0·09)ஐ விட அலகாபாத்தின் மாறுவிகிதக் கெழு (0·18) அதிகமாய் இருப்பதால் அலகாபாத்தின் மக்கட் தொகையே காசியின் மக்கட் தொகையை விட அதிக மாறுபாடுடையது என அறிய முடிகிறது.

மாதிரி 204

ஒரு தனித்த வரிசையில் கூட்டுச் சராசரி M உடன் ஒப்பிடும்பொழுது, விலக்கங்கள் சிறியவையாக இருந்து, அதனுல் $\left(\frac{X}{M}\right)^3$-ம், $\left(\frac{X}{M}\right)$-ன் அதைவிட உயர்வான வர்க்கங்களும் நீக்கப் பட்டால் கீழ்க் காணும் சமன்பாடுகள் தோராயமாகச் சரி யானவை எனக் காட்டு.

(1) $G = M\left(1 - \frac{\sigma_2}{2M^2}\right)$

(2) $M^2 - G^2 = \sigma^2$

(3) $H = M\left(1 - \frac{\sigma^2}{M^2}\right)$

(4) $MH = G^2$

(5) $M - 2G + H = 0.$

(இங்கு, M = கூட்டுச் சராசரி, G = பெருக்கல் சராசரி,
σ = திட்ட விலக்கம், H = ஹார்மனிக் சராசரி

(எம். எஸ்சி.—1953, 1963)

(பி. எஸ்ஸி.—ஆக்ரா—1955)

தீர்வு :

x ஒரு மாறி எனக் கொண்டால்,

$$x - m = X$$

$$x = X + M$$

$$= M\left(1 + \frac{X}{M}\right)$$

ஆதலின்

$$(1) \therefore \log G = \frac{1}{N}\Sigma f \log x$$

$$= \frac{1}{N}\Sigma f \log M\left(1 + \frac{X}{M}\right)$$

$$= \frac{1}{N}\Sigma f \log M + \frac{1}{N}\left[\Sigma f \log\left(1 + \frac{X}{M}\right)\right]$$

$$= \log M \frac{\Sigma f}{N} + \frac{1}{N}\Sigma f\left[\frac{X}{M} - \frac{X_2}{2M^2}\right]$$

($\frac{X}{M}$-ன் உயர் வர்க்கங்கள் நீக்கப் பட்டுள்ளன.)

$$\therefore \log G = \log M - \frac{1}{N}\Sigma f \frac{X^2}{2M^2}$$

$$\left(\text{இங்கு } \frac{1}{N}\Sigma fx = 0; \frac{1}{N}\Sigma f X^2 = \sigma^2\right)$$

$$\log G = -\frac{\sigma^2}{2M^2}$$

$$\therefore \frac{G}{M} = e^{\frac{-\sigma^2}{2M^2}}$$

$$G = Me^{\frac{-\sigma^2}{2M^2}}$$

$$= M\left(1 - \frac{\sigma^2}{2M^2}\right)$$

(இங்கு, $\frac{\sigma^2}{2M^2}$-ன் உயர் வர்க்கங்கள் நீக்கப்பட்டுள்ளன.)

$$G = M\left(1 - \frac{\sigma^2}{2M^2}\right)$$

(2) $$G^2 = M^2 e^{\frac{-\sigma^2}{M^2}}$$

$$= M^2 \left(1 - \frac{\sigma^2}{M^2}\right)$$

$$= M^2 - \sigma^2$$

$$G^2 - M^2 = -\sigma^2$$

$$\sigma^2 = M^2 - G^2$$

(3) $$\frac{1}{H} = \frac{1}{N}\Sigma f\left(\frac{1}{x}\right)$$

$$= \frac{1}{N}\frac{1}{M}\Sigma f\left(1 + \frac{X}{M}\right)^{-1}$$

$(\because x = X + M)$

$$= \frac{1}{N}\frac{1}{M}\Sigma f\left(1 + \frac{X}{M}\right)^{-1}$$

$$= \frac{1}{M}\frac{1}{N}\Sigma f\left(1 - \frac{X}{M} + \frac{X^2}{M^2}\right)$$

(இங்கு $\frac{X}{M}$ -ன் உயர் வர்க்கங்கள் நீக்கப்பட்டுள்ளன.)

$$= \frac{1}{M}\left\{\frac{\Sigma f}{N} - \frac{\Sigma fX}{N \cdot M} + \frac{\Sigma fX^2}{NM^2}\right\}$$

$$= \frac{1}{M}\left\{1 - 0 + \frac{\sigma^2}{M^2}\right\}$$

$$= \frac{1}{M}\left(1 + \frac{\sigma^2}{M^2}\right)$$

$$\therefore\ H = M\left(1 + \frac{\sigma^2}{M^2}\right)^{-1}$$

$$= M\left(1 - \frac{\sigma^2}{M^2}\right)$$

($\frac{\sigma^2}{M^2}$ -ன் உயர் வர்க்கங்கள் நீக்கப்பட்டுள்ளன.)

$$\therefore \ H = M\left(1 - \frac{\sigma^2}{M^2}\right)$$

(4) $$MH = M^2\left(1 - \frac{\sigma^2}{M^2}\right)$$

$$= M^2 - \sigma^2$$

$$= G^2$$ (2-ல் இருந்து)

$$\therefore MH = G^2$$

(5) $$M - 2G + H = M - 2M\left(1 - \frac{\sigma^2}{2M^2}\right) + M\left(1 - \frac{\sigma^2}{M^2}\right)$$

$$= 0$$

$$\therefore M - 2G + H = 0$$

மாதிரி 205

x என்ற மாறியின் கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம் முறையே M, σ என்பனவாகும். கூட்டுச் சராசரியின் மதிப்புடன் ஒப்பிடும்பொழுது விலக்கங்கள் சிறியனவாக இருந்தால், கீழ்க்காணும் சமன்பாட்டைச் சரி எனக் காண்.

$$\text{கூட்டுச் சராசரி } (\sqrt{x}) = \sqrt{M}\left(1 - \frac{\sigma^2}{8M^2}\right)$$

தீர்வு :

x ஐ மாறியாகக் கொண்டால்,

$$x - M = X$$

ஆகவே $$x = M + X$$

$$= M\left(1 + \frac{X}{M}\right)$$

$$\text{கூட்டுச் சராசரி } \sqrt{2} = \frac{1}{N}\Sigma f\ (\sqrt{x})$$

$$= \frac{1}{N}\Sigma f \sqrt{M}\left(1 + \frac{X}{M}\right)^{\frac{1}{2}}$$

$$= \sqrt{M}\ \frac{1}{N}\ \Sigma f\left(1 + \frac{X}{2M} - \frac{X^2}{8M^2}\right)$$

(இங்கு $\frac{X}{M}$-ன் உயர் வர்க்கங்கள் நீக்கப்பட்டுள்ளன.)

$$= \sqrt{M}\left(\frac{\Sigma f}{N} + \frac{\Sigma fx}{N2M} - \frac{\Sigma fX^2}{N\,8M^2}\right)$$

$$= \sqrt{M}\left(1 + 0 - \frac{\sigma^2}{8M^2}\right)$$

$$\therefore\ (\sqrt{x})\text{-ன் கூட்டுச் சராசரி} = \sqrt{M}\left(1 - \frac{\sigma^2}{8M^2}\right)$$

மாதிரி 206

எல்லாத் தனித்த பரவல்களிலும் திட்ட விலக்கம், கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கத்தை விடக் கூடிய மதிப்புடையது எனக் காண்.

தீர்வு :

$$\sigma^2 = \delta\bar{x}^2$$

என இங்குக் காட்டவேண்டும்.

$$\text{அதாவது,}\ \frac{1}{N}\Sigma f\left(x - \bar{x}\right)^2 = \left\{\frac{1}{N}\Sigma f\,|x - \bar{x}|\right\}^2$$

எனக் காட்டவேண்டும்.

$y = (x - \bar{x})$ என்று இருக்கட்டும்.

$$\text{பின்பு,}\ \frac{1}{N}\Sigma fy^2 \geqslant \left\{\frac{1}{N}\Sigma f\,|y|\right\}^2$$

$$\text{அல்லது,}\ N\Sigma fy^2 \geqslant \{\Sigma f\,|y|\}^2$$

$$\text{அல்லது,}\ (f_1+f_2+f_3+\dots\dots+f_n)\ (f_1y_1^2+f_2y_2^2+\dots\dots+f_n y_n^2) \geqslant (f_1|y_1|+f_2|y_2|+\dots\dots+f_n|y_n|)^2$$

$$\text{அல்லது,}\ f_1f_2(y_1^2+y_2^2) + \dots\dots \geqslant 2f_1f_2|y_1y_2| + \dots\dots$$

$$\text{அல்லது,}\ f_1f_2(|y_1| - |y_2|)^2 + \dots\dots \geqslant 0$$

$f_1 f_2 f_3 \ldots\ldots$ கள் எல்லாம் நேரிடை $(+ve)$ எண்களாக இருப்பதால், மேற்கண்ட சமன்பாட்டின்மை சரியானதே. ஆகவே, திட்ட விலக்கம் கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப் பட்ட சராசரி விலக்கத்தைவிடக் கூடிய மதிப்புடையதே எனக் காண்கிறோம்.

மாதிரி 207

$a, a+d, a+2d, a+3d, \ldots\ldots, a+2nd$ என்ற கூட்டுத்தொடர் உறுப்புகளின் கூட்டுச் சராசரியிலிருந்து காணும் கூட்டுச் சராசரி விலக்கத்தினையும், திட்ட விலக்கத்தினையும் காண்க. பின்னது முன்னதை விடப் பெரியது என்பதை நிறுவுக.

(சென்னைப் பல்கலை)

தீர்வு :

கொடுத்துள்ள வரிசை $= a, \; a+d, a+2d, \;\ldots\ldots\ldots\ldots\; a+2nd$ என்பதாகும்.

இதன் கூட்டுச் சராசரி

$$\bar{x} = \frac{a+(a+d)+(a+2d)+\ldots\ldots+(a+2nd)}{(2n+1)}$$

$$= a+nd$$

கூட்டுச் சராசரியிலிருந்து காணும் விலக்கம்

$$= \frac{[\,nd+(n-1)\,d+\ldots\ldots+d\,]\times 2}{(2\,n+1)}$$

$$= \frac{n\,(\,n+1\,)}{2\,n+1}\times d$$

திட்ட விலக்கம் காணல் :

ஊகச் சராசரி a எனக் கொள்வோம்.

$$\sigma^2 = \frac{\Sigma dx^2}{n} - \left(\frac{\Sigma dx}{n}\right)^2$$

$$= \frac{d^2+2^2d^2+\ldots\ldots\ldots+(2n)^2d^2}{(2n+1)}$$

$$= \left(\frac{d+2d+\ldots\ldots\ldots+2nd}{2n+1}\right)^2$$

$$= \frac{d^2\,(\,n+1\,)n}{3}$$

$$\therefore \sigma = d\sqrt{\frac{n(n+1)}{3}}$$

$\sigma \geqslant \delta\bar{x}$ எனக் காட்டல் :

$$d\sqrt{\frac{n(n+1)}{3}} \leqslant d \times \frac{n(n+1)}{(2n+1)}$$

அல்லது, $$\frac{n(n+1)}{3} \geqslant \left[\frac{n(n+1)}{(2n+1)}\right]^2$$

அல்லது $$\frac{1}{3} \geqslant \frac{[n(n+1)]}{(2n+1)^2}$$

அல்லது $$\frac{(2n+1)^2}{3(n^2+n)} \geqslant 1$$

இங்கு n என்ற எண் நேரிடை அல்லது எதிரிடை அல்லது பூச்சியமாக இருப்பினும் .($n = +ve, or -ve, or\ 0$), மேற்கண்ட சமன்பாட்டின்மை சரியானது எனக் காண்கிறோம்.

ஆகவே, இங்கு, திட்ட விலக்கம் கூட்டுச் சராசரியிலிருந்து கண்ட சராசரி விலக்க மதிப்பை விடக் கூடியதே என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

மாதிரி 208

முதல் n கண்டறிந்த உறுப்புகளிலிருந்து கூட்டுச் சராசரியும் மாறுபாடும் கணக்கிடப்பட்டது. பின்பு சரி பார்த்தபொழுது x_1 என்று கொண்டு கணக்கிடப்பட்ட மதிப்பெண் பிழையானது என்றும், அதற்குப் பதில் x_1' என்ற மதிப்பே சரியானது என்றும் கண்டறியப்பட்டது. முதலில் கணக்கிடப்பட்ட உறுப்புகளின் கூட்டல் T என்று கொண்டு, இப் பிழையினை மாறுபாட்டிலிருந்து சரி செய்யவேண்டிய மதிப்பு,

$$\frac{1}{n}(n_1'-x_1)\left(x_1'+x_1-\frac{x_1'-x_1+2T}{n}\right)$$

எனக் காண்.

(எம். எஸ்சி.—1968)

தீர்வு :

$x_1, x_2, x_3, \ldots\ldots x_n$ என்பன கண்டறிந்த உறுப்புகளாகும்.

பின்பு $T = x_1+x_2+x_3+\ldots\ldots+x_n$

ஆதலால் $T-x_1 = x_2+x_3+\ldots\ldots+x_n$

$\therefore \quad T-x_1+x_1' = x_1'+x_2+x_3+\ldots\ldots+x_n$

முதலில் கணக்கிடப்பட்ட கூட்டுச் சராசரி

$$= \frac{x_1+x_2+x_3+\ldots\ldots+x_n}{n}$$

$$= \frac{T}{n}$$

$\therefore$ புதிய கூட்டுச் சராசரி $= \dfrac{T-x_1+x_1'}{n}$

முதலில் கணக்கிடப் பட்ட மாறுபாடு $\Big\}$ $= \dfrac{x_1^2+x_2^2+x_3^2+\ldots\ldots+x_n^2}{n} - \left(\dfrac{x_1+x_2+\ldots\ldots+x_n}{n}\right)^2$

$$= \frac{x_1^2+x_2^2+x_3^2+\ldots\ldots+x_n^2}{n} \times \left(\frac{T}{n}\right)^2 \quad \ldots\ldots\ldots \; I$$

புதிய மாறுபாடு $= \dfrac{x_1'^2+x_2^2+\ldots\ldots\ldots+x_n^2}{n} - \left[\dfrac{T-x_1+x_1'}{n}\right]^2 \quad \ldots\ldots \; II$

ஆதலால், சரிக் கட்ட வேண் டிய மதிப்பு $\Big\}$ = புதிய மாறுபாடு — முதலில் கணக்கிடப் பட்ட மாறுபாடு

$$= \frac{x_1'^2-x_1^2}{n} + \left[\frac{T}{n}\right]^2 - \left[\frac{T-x_1+x_1'}{n}\right]^2$$

$$= \frac{(x_1'-x_1)(x_1'+x_1)}{n} + \left(\frac{T}{n} - \frac{T-x_1+x_1'}{n}\right) \times \left(\frac{T}{n} + \frac{T-x_1+x_1'}{n}\right)$$

$$= \frac{(x_1'-x_1)(x_1'+x_1)}{n} + \frac{(x_1-x_1')}{n} \times \left(\frac{2T+x_1'-x_1}{n}\right)$$

$$= \frac{(x_1'-x_1)}{n}\left[x_1'+x_1 - \frac{x_1'-x_1+2T}{n}\right]$$

மாதிரி 209

$\bar{x}_1$, $\bar{x}_2$ என்ற கூட்டுச் சராசரிகளிலிருந்து முறையே கணக்கிடப் பட்டு, n_1, n_2 என்ற எண்களை முறையே உறுப்புகளின் கூட்டுத் தொகையாகக் கொண்ட இரு குழுக்களின் திட்ட விலக்கங்கள் σ_1, σ_2 என்பனவாகும். இரு குழுக்களும் ஒன்ருகி (n_1+n_2) உறுப்புகள் உடைய ஒரு குழுவாளுல் அதன் திட்ட விலக்கம் (அதனுடைய கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்டபொழுது)

$$\sigma^2 = \frac{n_1\sigma_1^2+n_2\sigma_2^2}{n_1+n_2} + \frac{n_1 n_2}{(n_1+n_2)}(\bar{x}_1-\bar{x}_2)^2$$

ஆக இருக்கும் என்று காட்டு.

(பி.ஏ.— சென்னை 1953)

தீர்வு :

s_1^2, s_2^2 என்பன முறையே, இரு குழுக்களின் வர்க்க விலக்கங் களின் கூட்டுச் சராசரியாகும்.

S^2 என்பது ஒன்ருன இரு குழுக்களின் வர்க்க விலக்கங்களின் கூட்டுச் சராசரியாகும்.

A என்பது ஊகச் சராசரியாளுல்

$$S^2 = \frac{1}{n_1+n_2}\sum_{1}^{n_1+n_2} f\,(x-A)^2$$

$$= \frac{1}{n_1+n_2}\left(\sum_{1}^{n_1} f\,(x-A)^2 + \sum_{n_1+1}^{n_1+n_2} f\,(x-A)^2\right)$$

$$= \frac{n_1s_1^2 + n_2s_2^2}{n_1+n_2}$$

$$= \frac{n_1(\sigma_1^2+d_1^2)+n_2(\sigma_2^2+d_2^2)}{n_1+n_2}$$

$$(\because\ S_2 = \sigma^2+d^2)$$

$$= \frac{n_1\sigma_1^2 + n_2\sigma_2^2}{n_1 + n_2} + \frac{n_1 d_1^2 + n_2 d_2^2}{n_1 + n_2} \quad \ldots\ldots \quad I$$

இங்கு $d_1 = (\bar{x}_1 - A)$; $d_2 = (\bar{x}_2 - A)$

A என்பது இரு குழுக்கள் ஒன்றுகிய பின் அக்குழுவின் கூட்டுச் சராசரியாளுல்,

$$A = \bar{x} = \frac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2}{n_1 + n_2}$$

$$S^2 = \sigma^2$$

$$d_1 = x_1 - A$$

$$= \bar{x}_1 - \frac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2}{n_1 + n_2}$$

$$= \frac{n_2(\bar{x}_1 - \bar{x}_2)}{n_1 + n_2}$$

இதேபோல் $d_2 = \dfrac{n_1(\bar{x}_2 - \bar{x}_1)}{n_1 + n_2}$

இந்த மதிப்புக்களை I-ல் போட்டால், கீழ்க் காண்பவற்றை அடைகிறேம்.

$$\sigma^2 = \frac{n_1\sigma_1^2 + n_2\sigma_2^2}{n_1 + n_2} + \frac{n_1 n_2}{(n_1 + n_2)^2}(\bar{x}_1 - \bar{x}_2)^2$$

மாதிரி 210

200 மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தில் எடுத்த மதிப்பெண்களின் அலைவெண் பரவலில் (0—5, 5—10, ...etc. என்ற பிரிவுகளைக் கொண்டு) கூட்டுச் சராசரியும், திட்ட விலக்கமும் முறையே 40, 15 என்று கணக்கிடப்பட்டது. பின்பு, சரிபார்த்த பொழுது உண்மை மதிப்பெண் 43-க்குப் பதிலாக 53 என்று தவறுதலாக எடுத்துக் கொண்டு கணக்கிடப்பட்ட தவறு கண்டு பிடிக்கப்பட்டது. ஆகவே சரி செய்யப்பட்ட புதிய அலைவுப் பரவலுக்கு, சரியான கூட்டுச் சராசரி, திட்டவிலக்கம் ஆகியவைகளை முறையே கண்டுபிடி.

(ஐ. ஏ. எஸ்.—1957)

தீர்வு :

சரி செய்யப்படாத பரவலில் கூட்டுச் சராசரி = 40

மாணவர்கள் எண்ணிக்கை = 200

திட்ட விலக்கம் = 15

$$40 = \frac{1}{200} \Sigma f_i x_i$$

$$\therefore \Sigma f_i x_i = 8000$$

சரி செய்யப்படாத அலைவெண் பரவலில் தவறுதலான மதிப்பெண் 53, 50—55 என்ற பிரிவில் விழும். அதனுடைய மத்திய மதிப்பு 52·5 ஆகும். ஆனல் சரியான மதிப்பெண் 43-ன் பிரிவின் மத்திய மதிப்பு 42·5.

ஆதலால் $\Sigma f_i x_i$ (சரி செய்யப்பட்டது) $= 8000 - 52{\cdot}5 + 42{\cdot}5$
$= 7790$

$\therefore$ கூட்டுச் சராசரி (சரி செய்யப்பட்டது) $= \dfrac{7790}{200}$

$= \mathbf{39{\cdot}95}$ மதிப்பெண்

இதே போல்

$\Sigma f_i x_i^2$ (சரி செய்யப்படாதது) $= \Sigma f_i x_i^2$ (சரி செய்யப்பட்டது)
$= (52{\cdot}5)^2 - (42{\cdot}5)^2$

தற்பொழுது, $\Sigma f_i x_i^2$
(சரி செய்யப்படாதது) $= N(\sigma^2 + \bar{x}^2)$
$= 200\,[\,(15)^2 + (40)^2\,]$
$= 365000$

$\therefore \Sigma f_i x_i^2$
(சரி செய்யப்பட்டது) $= \Sigma f_i x_i^2$ (சரி செய்யப்படாதது)
$- (52{\cdot}5)^2 + (42{\cdot}5)^2$

$= 365000 - (95 \times 10)$
$= 364050$

ஆதலால் σ^2

$$\text{(சரி செய்யப்பட்டது)} = \frac{1}{N}\Sigma f_i x_i^2 \text{ (சரி செய்யப்பட்டது)}$$

$$- \bar{x}^2 \text{ (சரி செய்யப்பட்டது)}$$

$$= \frac{364050}{200} - (39{\cdot}95)^2$$

$$\sigma = 14{\cdot}974 \text{ மதிப்பெண்கள்.}$$


ஆகவே சரி செய்யப்பட்ட கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம் முறையே 39·95; 14·974 ஆகும்.

மாதிரி 211 *(a)*

இடை நிலையிலிருந்து கண்ட சராசரி விலக்கம், மற்ற வேறு எந்த அளவிலிருந்தும் கணக்கிடப்பட்ட விலக்கங்களை விடக் குறைவான மதிப்புடையது எனக் காட்டு.

(ஐ.ஏ எஸ்.—1947)

முதல் முறைத் தீர்வு :



படம் 1

மேற்கண்ட படத்தில் O என்பது இடைநிலையாகும். A என்பது O-லிருந்து c என்ற இடைவெளி கொண்டு O-ன் வலப் பக்கமாக உள்ள புள்ளியாகும்.

D_O, D_A என்பன முறையே O, A என்பவற்றிலிருந்து கணக்கிடப்பட்ட தனி விலக்கங்களின் கூடுதல்களாகும்.

D_{OR} D_{OL} என்பன முறையே O-ன் வல, இடப் பக்கங்களிலுள்ள கண்டறிந்த விவரங்களின் தனி விலக்கக் கூடுதல்களாகும். இவை இரண்டையும் கூட்டினால் D_O கிடைக்கிறது.

இதேபோல் D_{AL}, D_{AR} என்பன முறையே A-ன் இட, வலப் பக்கங்களிலுள்ள கண்டறிந்த விவரங்களின் தனி விலக்கக் கூடுதல்களாகும். இவை இரண்டின் கூடுதல் D_A ஐத் தருகிறது.

எனவே,

$$D_A - D_O = (D_{AL} + D_{AR}) - (D_{OL} + D_{OR})$$


$$= (D_{AL} - D_{OL}) + (D_{AR} + D_{OR})$$

மேற்கண்ட சமன்பாட்டின் வலப்புறமுள்ள முதல் பகுப்பு நேரிடை மதிப்பாகிய $\left(\frac{N}{2}\right)c$ ஆகும். இரண்டாவது பகுப்பு நேரிடை அல்லது எதிரிடை மதிப்பாக இருக்கலாம். ஆனால் $\left(\frac{N}{2}\right)c$ என்ற மதிப்பை விட அளவில் கூடுதலாக இராது. ஏனெனில் இங்கு O-ன் வலப்புறமுள்ள $\frac{N}{2}$ மதிப்புகளுக்கு A-லிருந்து விலக்கம் கணக்கிடும்பொழுது, அவை நேரிடையாகவோ அல்லது எதிரிடையாகவோ இருக்கின்றன என்பதாகும்.

ஆகவே,

$$D_A \geqslant D_O\ ;\quad D_B \geqslant D_O$$

கீழ்க்காணும் இரண்டாவது படத்தை எடுத்துக் கொள்வோம்:



படம் 2

மேலும் மேற்கண்ட படத்தில் CDஐ இடைநிலையாகக் கொண்டு, CD என்ற எல்லையில் விழும் ஏதாவது ஒரு புள்ளி இடைநிலையைக் குறிக்கட்டும். எனவே CD என்ற எல்லையினுள் உள்ள எந்தப் புள்ளியினின்றும் கணக்கிடப்படும் விலக்கக் கூடுதல், மற்ற எந்தப் புள்ளியினின்றும் கணக்கிடப்படும் விலக்கக் கூடுதலை விடக் குறைவாக இருக்கும்.

ஆகவே, இங்கு இடைநிலையிலிருந்து கணக்கிடப்படும் சராசரி விலக்கம் மற்ற எந்தச் சராசரியிலிருந்தும் கணக்கிடப்படும் சராசரி விலக்கத்தை விடக் குறைவாக இருக்கும் எனக் கணக்கிட்டு அறிகிறோம்.

இரண்டாம் முறைத் தீர்வு :

ஏதோ ஒரு புள்ளி a-லிருந்து கணக்கிடப்பட்ட சராசரி விலக்கம் :

$$\delta(a) = \int_{-\infty}^{a} |x-a|\ dF(x)$$

இங்கு $F(x)$ என்பது பரவல் சார்பாகும்.

$$= \int_{-\infty}^{a} (a-x)\, dF + \int_{a}^{\infty} (x-a)\, dF$$

ஆகவே,

$\delta(a+h)-\delta(a)$

$$= \int_{-\infty}^{a+h} (a+h-x)\, dF - \int_{-\infty}^{a} (a-x)\, dF$$

$$+ \int_{a+h}^{\infty} (x-a-h)\, dF - \int_{a}^{\infty} (x-a)\, dF$$

ஆகவே,

$$\frac{\delta(a+h)-\delta(a)}{h} = \int_{-\infty}^{a} dF = \int_{a}^{\infty} dF + 2\int_{a}^{a+h} \frac{a+h-x}{h}\, dF$$

$(a,\ a+h)$ என்ற இடைவெளியில் $\frac{a+h-x}{h}$ என்பதன் கீழ், மேல் எல்லைகள் முறையே 0, 1 என்பனவாகும்.

ஆகவே,

$$\int_{a}^{a+h} \frac{a+h-x}{h}\, dF = \lambda\, [F(a+h)-F(a)],$$

இங்கு $0 \leqslant \lambda \leqslant 1$ ஆகும்.

ஆகவே,

$$\lim_{h \to 0} \frac{\delta(a+h)-\delta(a)}{h} = A\,(a) + 2\lambda\, [F(a+h)-F(a)]$$

இங்கு,

$$A\,(a) = \int_{-\infty}^{a} dF - \int_{a}^{\infty} dF$$

a-ல் $F(x)$ ஒரு சால்டஸ் (Saltus) கொண்டிராவிட்டால்,

$$\lim_{h\to 0}\left[F(a+h)-F(a)\right] = 0$$

ஆகவே,

$\lim_{h\to 0} \frac{\delta(a+h)-\delta(a)}{h}$ என்பது $A(a)$-க்குச் சம மாகும். ஆகவே $\delta'(a) = A(a)$

மேலும் $\delta(a)$ என்பது மிகப் பெரியது, மிகச் சிறியது ஆக இருக்க $\delta'(a) = 0$ என்று இருக்கவேண்டும்.

ஆகவே,

$$\int_{-\infty}^{a} dF - \int_{a}^{\infty} dF = A(a) = \delta'(a) = 0$$

ஆகவே இடைநிலை a-ல் இருக்கிறது.

$\delta(a)$ மிகச் சிறியது ; ஆனால் மிகப் பெரியது அல்ல எனக் காட்டல் :

இங்கு $\int_{-\infty}^{a} df$ என்பது $-\infty$-லிருந்து a வரை அலைவு கொண்டு a ஐக் கொண்டு கூடுகிறது. அதேபோல், $\int_{a}^{\infty} dF$ என்பது a ஐக் கொண்டு குறைகிறது.

ஆகவே, $\delta'(a)$ என்பது a ஐக் கொண்டு கூடுகிறது. இது, $\delta(a)$ என்பது மிகச் சிறியது எனக் காட்டுகிறது. இங்ஙனம் தீர்வு காண்கிறோம்.

மாதிரி 211 (b)

கொடுக்கப்பட்ட எண்கள் வரிசை, சம இடைவெளி கொண்ட கூட்டுத் தொடர் (Arithmatic Progression) என்று இருந்தால், அதற்கு இடைநிலையிலிருந்து கண்ட சராசரி விலக்கம், மற்ற வேறு

எந்த அளவிலிருந்தும் கணக்கிடப்பட்ட விலக்கங்களை விடக் குறைவான மதிப்புடையது எனக் காட்டுக.

தீர்வு :

சோதனை 1 :

எடுத்துக் கொண்ட எண்களின் எண்ணிக்கை ஒற்றைப்படை எண்ணாக இருக்கும் பொழுது :

உதாரணமாக,

4, 7, 10, 13, 16 என்ற கூட்டுத் தொடர் சம விலக்கம் 3 ஐக் கொண்டும், மொத்த எண்களின் எண்ணிக்கை 5 என்று ஒற்றைப் படை எண்ணாகவும் இருக்கிறது. (இங்கு எடுத்துக் கொண்ட எண்களின் மதிப்பு ஒற்றைப் படையாகவோ, இரட்டைப் படையாகவோ இருக்கலாம் என்பதைக் கவனிக்கவும்.)

பொதுவாக,

எடுத்துக் கொண்ட எண்களின் எண்ணிக்கைக் கூடுதல் $(2n+1)$ என்று இருக்க, அவ் வெண்களை ஏறு வரிசை மதிப்பில் கீழ்க் கூறும் வரிசையில் எழுதலாம்.

$$(x_0-nh)\ (x_0-\overline{n-1}h)\ \ldots\ldots,\ x_0,\ \ldots\ldots\ (x_0+\overline{n-1}h)\ (x_0+nh).$$

x_0 என்பது மதிப்பில், மத்திய மதிப்பாகும்.

எனவே, இது இடைநிலை எனத் தெரிகிறது.

S_m என்பது x_m-லிருந்து விலகியுள்ள சார்பற்ற எண்களின் கூடுதல்களாகும்.

அதாவது,

$$S_m = \Sigma\ |x_m-x_r|$$

இங்கு,

x_r என்ற மதிப்பு $x_o-nh, \ldots\ldots, x_o+nh$ என்ற எல்லா மதிப்புகளையும் பெறுகிறது.

$$S_0 = \Sigma\ |x_0-x_r|$$
$$= 2\ (h+2h+\ldots+nh)$$
$$S_1 = 2\ (h+2h+\ldots+\overline{n-1}h)+nh+(n+1)h$$
$$S_1-S_0 = h$$

அதேபோல் $S_2 - S_1 = 3h$

ஆக, $S_0 < S_1 < S_2 \ldots\ldots$

அதே போல், $S_0 < S_{-1} < S_{-2} \ldots\ldots$

எனக் காட்டலாம்.

இங்கு m-ன் மதிப்பு கூடும்பொழுது, S_m, S_{-m}-களின் மதிப்பும் கூடுகிறது என அறிகிறோம். எனவே S_o குறை மதிப்புடையது என்பது தெளிவாகிறது.

சோதனை 2 :

எடுத்துக் கொண்ட கூட்டுத் தொடர் எண்களின் எண்ணிக்கைக் கூடுதல் இரட்டைப் படை எண்ணுக இருக்கும் பொழுது:

உதாரணமாக,

2, 7, 12, 17, 22, 27 என்ற கூட்டுத் தொடர் சம விலக்கம் 5ஐக் கொண்டும், மொத்த எண்களின் எண்ணிக்கை 6 என்று, இரட்டைப் படை எண்ணுகவும் இருக்கிறது.

(இங்கு, முன்போல் எடுத்துக் கொண்ட எண்களின் மதிப்பு ஒற்றைப் படையாகவோ இரட்டைப் படையாகவோ இருப்பதைக் கவனிக்கவும்)

பொதுவாக,

கொடுக்கப்பட்ட எண்களின் எண்ணிக்கைக் கூடுதல் $2n$ ஆக இருக்கட்டும். அவ்வெண்களை ஏறுவரிசை மதிப்பில் எழுதினுல் கீழ்க் கண்டுள்ளபடி அடைகிறோம் எனக் கொள்வோம்.

$$[x_0 - \tfrac{1}{2}(2n-1)h], \ldots, [x_0 - \tfrac{1}{2}h], [x_0 + \tfrac{1}{2}h], \ldots [x_0 + \tfrac{1}{2}(2n-1)h]$$

எனவே,

இங்கும் x_o என்பது இடைநிலை எனத் தெளிவாக அறியலாம்.

முன்போலவே கீழ்க் காண்பவற்றை அடைகிறோம்.

$$S_0 = 2[\tfrac{1}{2}h + \tfrac{1}{2}\cdot 3h + \tfrac{1}{2} \ldots + (2n-1)h]$$

$$S_1 = 2[\tfrac{1}{2}h + \tfrac{1}{2}\cdot 3h + \ldots + \tfrac{1}{2}(2n-3)h] + \tfrac{1}{2}(2n-1)h + \tfrac{1}{2}(2n+1)h$$

இங்கும் முன்போல் S_0 என்பது குறைவான மதிப்புடையது எனக் காட்டலாம்.

ஆகவே, தேவையான தீர்வை அடைகிறோம்.

மாதிரி 212

இரண்டு பிரிவு மாணவர்களின் அறிவு வளர்ச்சி வயதின் (மாதங்களில்) கூட்டுச் சராசரியும், திட்ட விலக்கமும் கீழே தரப் பட்டுள்ளன.

	கூட்டுச் சராசரி	திட்ட விலக்கம்
பிரிவு *A*	104	14
பிரிவு *B*	193	17

எப் பிரிவு அதிக ஒருபடித்தானது (Homogeneous) ?

(பி.ஏ.-சென்னை-1972)

தீர்வு :

பிரிவு *A* :

$$\text{மாறுவிகிதக் கெழு } C.V. = \frac{\sigma}{x} \times 100$$

$$= \frac{14}{104} \times 100$$

$$= 13{\cdot}46$$

பிரிவு *B* :

$$\text{மாறுவிகிதக் கெழு } C.V. = \frac{\sigma}{x} \times 100$$

$$= \frac{17}{193} \times 100$$

$$= 8{\cdot}808$$

இரண்டு பிரிவுகளின் மாறுவிகிதக் கெழுக்களையும் ஒப்பிட்டு நோக்கின், இரண்டாம் பிரிவின் மாறுவிகிதக் கெழு குறைவாக உள்ளது. ஆகவே, இரண்டாம் பிரிவே அதிக ஒருபடித்தான பிரிவாகும்.

மாதிரி 213

$$n_1 = 36 \qquad \Sigma x_1^2 = 49428$$
$$n_2 = 46 \qquad \Sigma x_2^2 = 71258$$

என்பன முறையே இரு மாதிரிகளின் கூட்டுச் சராசரிகளிலிருந்து எடுக்கப்பட்ட விலக்கங்களின் கூட்டுத் தொகைகளாகும். இரண்டு மாதிரிகளின் தனித்தனி திட்ட விலக்கங்களைக் காண்.

மேற்கண்ட இரண்டு மாதிரிகளின் தனித்தனி மாறுவிகிதக் கெழுக்களைக் கணக்கிட இன்னும் என்ன மதிப்புகள் தேவைப்படுகின்றன?

(பி.காம். —1943)

தீர்வு :

முதல் மாதிரியின் திட்ட விலக்கம் $= \sqrt{\dfrac{\Sigma x_1^2}{n_1}}$

$= \sqrt{\dfrac{49428}{36}}$

$= \dfrac{222{\cdot}06}{6}$

$=$ **37·01**

இரண்டாவது மாதிரியின் திட்ட விலக்கம் $= \sqrt{\dfrac{\Sigma x_2^2}{n_2}}$

$= \sqrt{\dfrac{71258}{49}}$

$= \dfrac{266{\cdot}56}{7}$

$=$ **38·08**

மாறுவிகிதக் கெழு C.V. $= \dfrac{\sigma}{\bar{x}}$

$= \dfrac{\text{திட்ட விலக்கம்}}{\text{கூட்டுச் சராசரி}} \times 100$

மேற்கண்ட இரு மாதிரிகளிலும் கூட்டுச் சராசரி கொடுக்கப்படவில்லை. ஆகவே மாறுவிகிதக் கெழு காணும் சூத்திரத்தில்

போட, கூட்டுச் சராசரிகள் தனித்தனியே இரண்டு மாதிரிகளுக்கும் தேவைப்படுகிறது.

மாதிரி 214

கீழ்க் காண்பவற்றுள் எந்தப் பிரிவு சீரான தன்மையுடையது ?

(1) $\sigma_1 = 14 \qquad \bar{x}_1 = 20$

(2) $\sigma_2 = 12 \qquad \bar{x}_2 = 18$

(பி.காம்.—சென்னை 1968)

தீர்வு :

(1) மாறுவிகிதக் கெழு C. V. $= \frac{\sigma_1}{\bar{x}_1} \times 100$

$= \frac{14}{20} \times 100$

$= 70\%$

(1) மாறுவிகிதக் கெழு C. V. $= \frac{\sigma_2}{\bar{x}_2} \times 100$

$= \frac{12}{18} \times 100$

$= 66{\cdot}66\%$ (தோராயமாக)

மேற்காணும் மாறுவிகிதக் கெழுக்களில் இரண்டாவது கணக்கின் கெழு ($66{\cdot}66\% < 70\%$) குறைவானது. ஆகவே இரண்டாவது பிரிவு மிகவும் சீரானது.

மாதிரி 215

ஒரு தொழிற்சாலையில் வாரச் சம்பளக் கூட்டுச் சராசரி ரூ. 8-லிருந்து ரூ. 12 ஆகவும், திட்ட விலக்கம் ரூ. 1-லிருந்து ரூ. 1·50 ஆகவும் உயர்ந்துள்ளது. சம்பளம் தற்பொழுது மிகவும் சீரடைந்துள்ளதா எனக் காண்.

(பி.காம்.—1963)

தீர்வு :

இந்தக் கணக்கில் நாம் மாறுவிகிதக் கெழுக்களைக் கணக்கிட்டு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

சம்பளம் உயர்வதற்கு முன்னுல் மாறுவிகிதக் கெழு :

$$C.V. = \frac{\sigma_1}{\bar{x}_1} \times 100$$

$$= \frac{1}{8} \times 100$$

$$= 12{\cdot}5\%$$

சம்பளம் உயர்ந்த பின்பு மாறு விகிதக் கெழு :

$$C.V. = \frac{\sigma_2}{\bar{x}_2} \times 100$$

$$= \frac{1{\cdot}5}{12} \times 100$$

$$= 12{\cdot}5\%$$

இரண்டு மாறுவிகிதக் கெழுக்களும் ஒன்றே. ஆகவே, சீரான தன்மையில் மாற்றமில்லை.

மாதிரி 216

(a) கொடுக்கப்பட்டவை : $n = 35$; $\Sigma x^2 = 2850$; $x = X - \bar{x}$.
திட்ட விலக்கத்தைக்காண்.

(b) கொடுக்கப்பட்டவை : $\sigma = 22$; $\Sigma fd^2 = 7744$.
உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்.

தீர்வு :

(a) திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma x^2}{n}}$

$$= \sqrt{\frac{2850}{35}}$$

$$= \sqrt{81{\cdot}43}$$

$= 9{\cdot}02$ (தோராயமாக)

(b) திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma fd^2}{n}}$ $[\because d = (x-\bar{x})]$

ஆகவே, $22 = \sqrt{\frac{7744}{n}}$

$$\text{அல்லது } (22)^2 = \frac{7744}{n}$$

$$\text{அல்லது } n = \frac{7744}{(22)^2}$$

$$\text{அல்லது } n = \frac{7744}{484}$$

$$\therefore n = 16$$

மாதிரி 217

இரு நிறுவனங்கள் *I*, *II* என்பன தம்முடைய வேலையாட்களுக்குக் கொடுத்த மாதச் சம்பளங்களின் பகுப்பாய்வு கீழே தரப் பட்டுள்ளது :

	நிறுவனம் *I*	நிறுவனம் *II*
சம்பளம் வாங்குபவர் எண்ணிக்கை	596	654
மாதச்சம்பளத்தின் கூட்டுச் சராசரி	ரூ. 54·65	ரூ. 48·54
சம்பளப் பரவலின் மாறுபாடு	ரூ. 81·64	ரூ. 100 42

மேற்கண்ட விவரங்களுக்கு,

(1) மாதச் சம்பளக் கூட்டுச் சராசரி, (2) வேலையாட்களின் சம்பளத் திட்ட விலக்கம் ஆகியவற்றை இரண்டு நிறுவனங்களையும் ஒன்றாக்கிக் கணக்கிடுக.

(பி. எஸ்சி. - சென்னை — 1968)

மேற்கண்ட விவரப்படி $N_1 = 596$ $N_2 = 654$

$\bar{x}_1 = 54{\cdot}65$ $\bar{x}_2 = 48{\cdot}54$

$\sigma_1 = 81{\cdot}64$ $\sigma_2 = 100{\cdot}42$

(1) இரண்டு நிறுவனங்களையும் ஒன்றாக்கி 1250 ($= N_1 + N_2$) பேர்களின் கூட்டுச் சராசரி கணக்கிடல் :

$$\bar{\bar{x}} = \frac{N_1\bar{x}_1 + N_2\bar{x}_2}{N_1 + N_2}$$

$$\bar{x} = \frac{(596 \times 54{\cdot}65) + (654 \times 48{\cdot}54)}{(596 + 654)}$$

$$= \frac{32580{\cdot}40 + 31745{\cdot}16}{1250}$$

$$= 51{\cdot}46$$

(2) இரு நிறுவனங்களையும் ஒன்றாக்கிக் கணக்கிட்ட மாறுபாடு:

$$\sigma^2 = \frac{(N_1\sigma_1^2+N_2\sigma_2^2)}{N_1+N_2} + \frac{N_1 \times N_2}{(N_1+N_2)^2}(\bar{x}_1 - \bar{x}_2)^2$$

$$= \frac{(596\times 81{\cdot}64)+(654\times 100{\cdot}42)}{1250} + \frac{(596\times 654)}{(1250)^2} \times (54{\cdot}65 - 48{\cdot}54)$$

$$= \frac{48657{\cdot}44 + 65674{\cdot}68}{1250} + \frac{389784}{1690000} \times 37{\cdot}33$$

$$= 90{\cdot}66 + 8{\cdot}5859$$

$$= 99{\cdot}2459$$

மாதிரி 218

மூன்று டாக்டர்கள் சில குழுவினரைப் பரிசோதனை செய்து கண்ட எடைகள் பின்வருமாறு :

மூன்று குழுக்களையும் ஒன்றாக்கிக் கணக்கிடப்பட்ட பொதுக் கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் காண்.

டாக்டர்கள்	குழுவின் எண்ணிக்கை	கூட்டுச்சராசரி (பவுண்டின்)	திட்ட விலக்கம் (பவுண்டில்)
A	50	113	6
B	60	120	7
C	90	115	8

(சென்னைப் பல்கலை—1935)

தீர்வு :

இங்கு,

$\sigma_1 = 6 \qquad \sigma_2 = 7 \qquad \sigma_3 = 8$

$\bar{x}_1 = 113 \qquad \bar{x}_2 = 120 \qquad \bar{x}_3 = 115$

$n_1 = 50 \qquad n_2 = 60 \qquad n_3 = 90$

ஆகவே $\bar{x} = \frac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2 + n_3\bar{x}_3}{n_1+n_2+n_3}$

$= \frac{(50\times113) + (60\times120) + (90\times115)}{50+60+90}$

$= \frac{5650 + 7200 + 10350}{200}$

$=$ **116** பவுண்டுகள்.

2. இங்கு,

$d_1 = \bar{x}_1 - \bar{x} = 113-116 = -3$

$d_2 = \bar{x}_2 - \bar{x} = 120-116 = 4$

$d_3 = \bar{x}_3 - \bar{x} = 115-116 = -1$

$N = n_1+n_2+n_3$

$= 50+60+90$

$= 200$

$$\sigma = \sqrt{\frac{n_1(\sigma_1^2+d_1^2)+n_2(\sigma_2^2+d_2^2)+n_3(\sigma_3^2+d_3^2)}{n_1+n_2+n_3}}$$

$\therefore N\sigma^2 = n_1(\sigma_1^2+d_1^2)+n_2(\sigma_2^2+d_2^2)+n_3(\sigma_3^2+d_3^2)$

$= 50(36+9)+60(49+16)+90(64+1)$

$= (50\times45)+(60\times65)+(90\times45)$

$= 2250+3900+5850$

$= 12000$

$\therefore \sigma^2 = \frac{12000}{200}$

$=$ **60**

$\therefore \sigma = \sqrt{60}$

$=$ **7·7**

மாதிரி 219

A,B என்ற இரு தொழிற்சாலைகளில், தொழிலாளர்களுக்குக் கொடுத்த சம்பளப் புள்ளி விவரங்கள் கீழ்வருமாறு :

விவரம்	தொழிற் சாலை *A*	தொழிற் சாலை *B*
தொழிலாளர்கள் எண்ணிக்கை	586	648
மாதக் கூட்டுச் சராசரி (ரூபாயில்)	52·5	47·5
சம்பளப் பரவலின் மாறுபாடுகள்	100	121

(*a*) *A,B* என்ற இரு தொழிற்சாலைகளில் எத்தொழிற்சாலை அதிக மாதச் சம்பளம் தருகிறது ?

(*b*) தனிப்பட்டவர்களின் சம்பளத்தில் எந்த நிறுவனம் அதிக மாறுபாட்டைக் கொண்டுள்ளது ?

(*c*) *A, B* என்ற தொழிற்சாலைகளை ஒன்றெனக் கொண்டு கீழ்க் காண்பவற்றைக் கணக்கிடு :

(1) மாதக் கூட்டுச் சராசரி

(2) தனிப்பட்டவர்களின் சம்பள மாறுபாடு

(ஐ.ஏ.எஸ்.—1951)

தீர்வு :

(*a*) **தொழிற்சாலை** *A* :

தனித் தொழிலாளியின் மாதச் சம்பளக் கூட்டுச் சராசரி

$$\bar{x}_1 = 52{\cdot}5 \text{ ரூபாய்}$$

மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை $n_1 = 586$

∴ எல்லாத் தொழிலாளர்களுக்கும் மாதச் சம்பளமாகக் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை = ரு. 52·5 × 586

= **30765** ரூபாய்

தொழிற்சாலை B :

தனித் தொழிலாளியின் மாதச் சம்பளக் கூட்டுச் சராசரி

$$\bar{x}_2 = 47{\cdot}5 \text{ ரூபாய்}$$

மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை

$$n_1 = 648$$

∴ எல்லாத் தொழிலாளர்களுக்கும் மாதச் சம்பளமாகக் கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை

$$= 47{\cdot}5 \times 648$$

$$= 30780 \text{ ரூபாய்.}$$

B என்ற தொழிற்சாலை A ஐ விட அதிகச் சம்பளம் கொடுக்கிறது.

(*b*) **தொழிற்சாலை** A :

சம்பளப் பரவலின் மாறுபாடு $\sigma_1^2 = 100$

சம்பளப் பரவலின் திட்ட விலக்கம் $\sigma_1 = \sqrt{100} = 10$

மாறுவிகிதக் கெழு C. V. $= \dfrac{\sigma_1}{\bar{x}_1} \times 100$

$$= \frac{10}{52{\cdot}5} \times 100$$

$$= 19\%$$

தொழிற்சாலை B :

சம்பளப் பரவலின் மாறுபாடு $\sigma_2^2 = 121$

∴ சம்பளப் பரவலின் திட்ட விலக்கம் $\sigma_2 = \sqrt{121}$

$$= 11$$

மாறுவிகிதக் கெழு C. V. $= \dfrac{\sigma_2}{\bar{x}_2}$

$$= \frac{11}{47{\cdot}5} \times 100$$

$$= 23\%$$

இரண்டு தொழிற்சாலைகளின் மாறுவிகிதக் கெழுக்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தொழிற்சாலை B அதிக மாறுபாடுடையதாகத் தெரிகிறது.

(c) A, B என்ற இரு தொழிற்சாலைகளையும் ஒன்றெனக் கொண்டு கணக்கிடப்பட்ட மொத்தத் தொழிலாளர்களின் கூட்டுச் சராசரி :

$$\bar{x} = \frac{n_2 \bar{x}_1 + n_2 \bar{x}_2}{n_1 + n_2}$$

$$= \frac{(586 \times 52 \cdot 5) + (648 \times 47 \cdot 5)}{586 + 648}$$

$$= \frac{61545 \cdot 0}{1234}$$

$$= \mathbf{49 \cdot 9} \text{ ரூபாய்}$$

இரு தொழிற்சாலைத் தொழிலாளர்களின் பொதுத் திட்ட விலக்கம் :

$$\sigma = \sqrt{\frac{n_1\sigma_1^2 + n_2\sigma_2^2}{n_1+n_2} + \frac{n_1 (\bar{x}_1 - \bar{x})^2 + n_2 (\bar{x}_2 - \bar{x})^2}{n_1+n_2}}$$

$$= \sqrt{\frac{(586 \times 100) + (648 \times 121) + 586(52 \cdot 5 - 49 \cdot 9)^2 + 648\,(47 \cdot 5 - 49 \cdot 9)^2}{586+648}}$$

$$= \sqrt{\frac{58600 \times 78408 + 3984 \cdot 6 + 3693 \cdot 6}{1234}}$$

$$= \sqrt{\frac{144686 \cdot 2}{1234}}$$

$$= \sqrt{117 \cdot 2}$$

$$= \mathbf{10 \cdot 8} \text{ ரூபாய்}$$

மாதிரி 220

பின்வரும் புள்ளி விவரங்கள் புதிதாகச் சேர்ந்தவர்களின் எடை விவரங்களைத் தருகிறது.

பல்கலைக் கழகம்	கூட்டுச் சராசரி (பவுண்டில்)	திட்ட விலக்கம் (பவுண்டில்)	புதிதாகச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை
1	138·6	16 7	907
2	139·2	16·4	1102
3	138·9	17·3	841

எல்லா எடைகளையும் சேர்த்து, பொதுவாகக் கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் காண்.

(சென்னைப் பல்கலை—1950)

தீர்வு :

இங்கு,

$$\sigma_1 = 16{\cdot}7 \qquad \sigma_2 = 16{\cdot}4 \qquad \sigma_3 = 17{\cdot}3$$

$$\bar{x}_1 = 138{\cdot}6 \qquad \bar{x}_2 = 139{\cdot}2 \qquad \bar{x}_3 = 138{\cdot}9$$

$$n_1 = 907 \qquad n_2 = 1102 \qquad n_3 = 841$$

(1) ஆகவே, $\bar{\bar{x}} = \dfrac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2 + n_3\bar{x}_3}{n_1+n_2+n_3}$

$$= \frac{(907 \times 138{\cdot}6) + (1102 \times 139{\cdot}2) + (841 \times 138{\cdot}9)}{907+1102+841}$$

$$= \frac{125710{\cdot}2 + 153398{\cdot}4 + 116814{\cdot}9}{907+1102+841}$$

$$= \frac{395923{\cdot}5}{2850}$$

$$= \mathbf{138{\cdot}92}$$

(2) பொதுவான திட்ட விலக்கம் காணல் :

இங்கு $d_1 = \bar{x}_1 - \bar{x} = 138{\cdot}6 - 138{\cdot}9 = -0{\cdot}3$

$$d_2 = \bar{x}_2 - \bar{x} = 139{\cdot}2 - 138{\cdot}9 = 0\,3$$

$$d_3 = \bar{x}_3 - \bar{x} = 138{\cdot}9 - 138{\cdot}9 = 0{\cdot}0$$

$$N = n_1+n_2+n_3 = 907+1102+841$$

$$\sigma = \left\{ \frac{n_1(\sigma_1{}^2+d_1{}^2)+n_2(\sigma_2{}^2+d_2{}^2)+n_3+(\sigma_3{}^2+d_3{}^2)}{n_1+n_2+n_3} \right\}$$

$$\therefore \quad N\sigma^2 = n_1(\sigma_1{}^2+d_1{}^2)+n^2(\sigma_2{}^2+d_2{}^2)+n_3(\sigma_3{}^2+d_3{}^2)$$

$$= 907(278{\cdot}89+0{\cdot}09)+1102(268{\cdot}96+0{\cdot}09) +841(299{\cdot}29+0{\cdot}0)$$

$$= 253034{\cdot}86+296493{\cdot}1+251702{\cdot}89$$

$$= 801230{\cdot}85$$

$$\sigma^2 = \frac{801280{\cdot}85}{2850}$$

$$= \mathbf{281{\cdot}13}$$

ஆகவே, $\sigma = \mathbf{16{\cdot}8}$

மாதிரி 221

35 உறுப்புகள் கொண்ட ஒரு மாதிரியின் கூட்டுச் சராசரி 80 ; திட்ட விலக்கம் 4 ஆகும். 65 உறுப்புகள் கொண்ட இரண்டாவது மாதிரியின் கூட்டுச் சராசரி 70;. திட்ட விலக்கம் 3 ஆகும். ஒன்றாக இணைக்கப்பட்டு 100 உறுப்புகளைக் கொண்டுள்ள புதிய மாதிரியின் கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் காண்.

(பி.ஏ.—டெல்லி—1959)

தீர்வு :

மேற்கண்ட கணக்கின் மூலம் இரு மாதிரிகளின் புள்ளி விவரங்கள் முறையே,

$n_1 = 35 \qquad n_2 = 65$

$\bar{x}_1 = 80 \qquad \bar{x}_2 = 70$

$\sigma_1 = 4 \qquad \sigma_2 = 3$ ஆகும்.

ஆகவே, இரண்டு மாதிரிகளையும் இணைத்துப் பெறப்படும் மாதிரியின் கூட்டுச் சராசரி :

$$\bar{x} = \frac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2}{n_1+n_2}$$

$$= \frac{(35 \times 80) + (65 \times 70)}{(35+65)}$$

$$= \mathbf{73{\cdot}5}$$

இங்கு,

$$d_1 = \bar{x}_1 - \bar{x} = 80-73\cdot5 = 6\cdot5$$

$$d_2 = \bar{x}_2 - \bar{x} = 70-73\cdot5 = 3\cdot5$$

ஆகவே இரண்டு மாதிரிகளையும் இணைத்துப் பெறப்படும் மாதிரியின் மாறுபாடு $= \sigma^2$

$$\therefore \sigma^2 = \frac{n_1\sigma_1^2 + n_1d_1^2 + n_2\sigma_2^2 + n_2d_2^2}{n_1 + n_2}$$

$$= \frac{35(4)^2 + 35(6\cdot5)^2 + 65(3)^2 + 66(-3\cdot5)^2}{35 + 65}$$

$$= \frac{560 + 1478\cdot75 + 585 + 796\cdot25}{100}$$

$$= \frac{3420}{100}$$

$$= 34\cdot2$$

ஆகவே, திட்ட விலக்கம் $\sigma = \sqrt{34\cdot2}$

$= 5\cdot85$ (தோராயமாக)

மாதிரி 222

இரண்டு மாதிரிகளின் உறுப்புகளின் எண்ணிக்கைகள் முறையே 50, 100 என்றும், கூட்டுச் சராசரிகள் முறையே 54·1, 50·3 என்றும், திட்ட விலக்கங்கள் முறையே 8, 7 என்றும் இருப்பின், ஒன்றாக இணைக்கப்பட்ட மொத்த 150 உறுப்புகளின் கூட்டுச் சராசரியையும் திட்ட விலக்கத்தையும் காண்.

(பி.ஏ.—சென்னை-- 1953)

தீர்வு :

மேற்கண்ட கணக்கின் மூலம், இரு மாதிரிகளின் புள்ளி விவரங்கள் முறையே :

$n_1 = 50$ $n_2 = 100$

$\bar{x}_1 = 54\cdot1$ $\bar{x}_2 = 50\cdot3$

$\sigma_1 = 8$ $\sigma_2 = 7$

ஆகும். ஆகவே, இரண்டு மாதிரிகளையும் இணைத்துப் பெறப்படும் மாதிரியின் கூட்டுச் சராசரி :

$$\bar{x} = \frac{n_1 \bar{x}_1 + n_2 \bar{x}_2}{n_1 + n_2}$$

$$= \frac{(50 \times 54{\cdot}1) + (100 \times 50{\cdot}3)}{50 + 100}$$

$$= \frac{2705 + 5030}{150}$$

$$= \frac{7735}{150}$$

$= \mathbf{51{\cdot}57}$ **(தோராயமாக)**

இங்கு,

$$d_1 = \bar{x}_1 - \bar{x} = (54{\cdot}10 - 51{\cdot}75) = 2{\cdot}35$$

$$d_2 = \bar{x}_2 - \bar{x} = (50{\cdot}30 - 51{\cdot}75) = -1{\cdot}45$$

ஆகவே, இரு மாதிரிகளையும் இணைத்துப் பெறப்படும் மாதிரியின் மாறுபாடு

$$\sigma^2 = \frac{n_1\sigma_1^2 + n_2\sigma_2^2 + n_1 d_1^2 + n_2 d_2^2}{n_1 + 2}$$

$$= \frac{50(8)^2 + 50(2{\cdot}35)^2 + 100(7)^2 + 100(-1{\cdot}45)^2}{50 + 100}$$

$$= \frac{200 + 4900 + 320{\cdot}045 + 161{\cdot}29}{150}$$

$$= \frac{8581{\cdot}335}{150}$$

$\therefore$ திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{8581{\cdot}335}{150}}$

$= \mathbf{7{\cdot}55}$ (தோராயமாக)

மாதிரி 223

இரு மாதிரிகளில் முதல் மாதிரி 100 உறுப்புகளையும், முறையே 15 ; 3 களை கூட்டுச் சராசரியாகவும், திட்ட விலக்கமாகவும் கொண்டுள்ளது. மொத்தப் பிரிவு 280 உறுப்புகளையும், முறையே 15·6, $\sqrt{13{\cdot}14}$-களைக் கூட்டுச் சராசரியாகவும், திட்ட விலக்க

மாகவும் : கொண்டிருந்தால் இரண்டாவது மாதிரியின் திட்ட விலக்கத்தைக் காண்.

(எம்.ஏ.—டெல்லி—1959)

தீர்வு :

ஒன்றிணைந்த இரு மாதிரிகளின் கூட்டுச் சராசரி

$$\bar{x} = \frac{(n_1 \bar{x}_1) + (n_2 \bar{x}_2)}{n_1 + n_2}$$

$$\therefore\ 15{\cdot}6 = \frac{(100 \times 15) + (150 \times \bar{x}_2)}{100 + 150}$$

அல்லது $3900 = 1500 + 150\,\bar{x}_2$

அல்லது $\bar{x}_2 = \frac{2400}{150} = 16$

∴ இரண்டாவது மாதிரியின் கூட்டுச் சராசரி $\bar{x}_2$ $= 16$

ஒன்றிணைந்த இரு மாதிரிகளின் திட்டவிலக்கம் σ $= \frac{n_1\sigma_1^2 + n_2\sigma_2^2 + n_1(\bar{x}_1 - \bar{x})^2 + n_2(\bar{x}_2 - \bar{x})^2}{n_1 + n^2}$

ஆகவே, $\sqrt{13{\cdot}44}$

$$= \sqrt{\frac{100 \times (3)^2 + 150\sigma_2^2 + 100(15{\cdot}6 - 15)^2 + 150(15{\cdot}6 - 16)}{250}}$$

அல்லது $\sqrt{13{\cdot}44} = \sqrt{\frac{900 + 15\sigma_2^2 + 36 + 24}{250}}$

அல்லது $13{\cdot}44 = \frac{960 + 150\,\sigma_2^2}{250}$

அல்லது $3360 = 960 + 150\,\sigma_2^2$

அல்லது $150\,\sigma_2^2 = 3360 - 960$

$= 2400$

$$\therefore \quad \sigma_2^2 = \frac{2400}{150}$$

$$= 16$$

ஆகவே $\sigma_2 = \sqrt{16}$

$$= 4$$

மாதிரி 224

A, B என்ற இரு மாதிரிகளின் அளவைகள் வருமாறு :

மாதிரி	உருவ அளவு	கூட்டுச் சராசரி	திட்ட விலக்கம்
A	20	44·8	8·3
B	30	47·3	6·5

A ஐயும், B ஐயும் இணைத்துப் பெறப்படும் மாதிரியின் கூட்டுச் சராசரியையும், திட்ட விலக்கத்தினையும் காணக்கிடுக.

(சென்னைப் பல்கலை)

தீர்வு :

மேற்கண்ட பட்டியலின் படி A, B என்ற மாதிரிகளில் முறையே

$n_1 = 20$ $\quad n_2 = 30$

$\bar{x}_1 = 44{\cdot}8$ $\quad \bar{x}_2 = 47{\cdot}3$

$\sigma_1 = 8{\cdot}3$ $\quad \sigma_2 = 6{\cdot}5$ ஆகும்.

ஆகவே, A, B களை இணைத்துப் பெறப்படும் மாதிரியின் கூட்டுச் சராசரி

$$\bar{x} = \frac{n_1\bar{x}_1 + n_2\bar{x}_2}{n_1 + n_2}$$

$$= \frac{(20 \times 44{\cdot}8) + (30 \times 47{\cdot}3)}{20 + 30}$$

$$= \frac{896 + 1419}{50}$$

$$= \frac{2315}{50}$$

$$= 46{\cdot}3$$

இங்கு,

$$d_1 = \bar{x}_1 - \bar{x} = 44 \cdot 8 - 46 \cdot 3 = -1 \cdot 5$$

$$d_2 = \bar{x}_2 - \bar{x} = 47 \cdot 3 - 46 \cdot 3 = 1 \cdot 0$$

ஆகவே, A, B களை இணைத்துப் பெறப்படும் மாதிரியின் மாறுபாடு

$$\sigma^2 = \frac{n_1\sigma_1^2 + n_1 d_1^2 + n_2\sigma_2^2 + n_2 d_2^2}{n_1 + n_2}$$

$$= \frac{20 \times (8 \cdot 3)^2 + 20 \times (-1 \cdot 5)^2 + 30 \times (6 \cdot 5)^2 + 30 \times (1 \cdot 0)^2}{20 + 30}$$

$$= \frac{(20 \times 68 \cdot 89) + (20 \times 2 \cdot 25) + (30 \times 42 \cdot 25) + (30 \times 1)}{50}$$

$$= \frac{1377 \cdot 80 + 45 + 1267 \cdot 50 + 30}{50}$$

$$\sigma^2 = 52 \cdot 406$$

$$\therefore \sigma = \sqrt{52 \cdot 406}$$

$$= 7 \cdot 24 \text{ (தோராயமாக)}$$

மாதிரி 225

20 எண்ணிக்கை கொண்ட ஒரு மாதிரியின் கூட்டுச் சராசரி திட்ட விலக்கம் முறையே 45 ; 5·4 எனக் கணக்கிடப்பட்டது. சரி பார்க்கும்பொழுது, கணக்கில் சேர்த்த மதிப்பு 25 என்பது சரியான மதிப்பு அல்ல என்று கண்டறியப்பட்டது. இந்த மதிப்பை நீக்கிவிட்டு, மீத மதிப்புகளின் (1) கூட்டுச் சராசரி, (2) திட்ட விலக்கம் ஆகியவற்றைக் கணக்கிடுக.

(பி. எஸ்ஸி.—சென்னை—1972)

தீர்வு :

கூட்டுச் சராசரி $\bar{x} = 45$

எண்ணிக்கை $n = 20$

மதிப்புகளின் கூடுதல் $\Sigma x = 900$

தவறுதலாகக் கணக்கிட்ட எண்ணின் மதிப்பு $= 25$

இந்த மதிப்பை நீக்கிய பின்பு மதிப்புகளின் கூடுதல் $\left.\right\} \sum_{i=1}^{19} x_i = 900-25$

$= 875$

தற்போதைய எண்ணிக்கை $= 19$

ஆக, புதிய சராசரி $\bar{x} = \dfrac{875}{19}$

$= 46{\cdot}1$

புதிய திட்ட விலக்கம் கணக்கிடல் :

$$\sigma^2 = \frac{\Sigma x^2}{n} - \bar{x}^2$$

இங்கு $n = 20$; $\bar{x} = 45$; $\sigma = 5{\cdot}4$

$$\therefore \sum_{i=1}^{20} x_i^2 = [(5{\cdot}4)^2+(45)^2]\times 20$$

$$= 41083{\cdot}2$$

தவறுதலாகக் கணக்கிட்ட எண்ணின் மதிப்பு $= 25$

இம்மதிப்பை நீக்கியபின்பு $\left.\sum_{i=1}^{19} x_i^2 \right\} = 41083{\cdot}2 - (25)^2$

$= 40458{\cdot}2$

தவறுதலான எண்ணை நீக்கிய பின்பு புதிய திட்ட விலக்கம் $\left.\right\} = \sqrt{\dfrac{40458{\cdot}2}{19} - \left(\dfrac{875}{19}\right)^2}$

$= \sqrt{2129{\cdot}5 - (46{\cdot}1)^2}$

$= \sqrt{2129{\cdot}5 - 2125{\cdot}21}$

$= \sqrt{4{\cdot}19}$

$= 2{\cdot}05$

முடிவு : புதிய கூட்டுச் சராசரி $= 46{\cdot}1$

புதிய திட்ட விலக்கம் $= 2{\cdot}05$

மாதிரி 226

ஒரு தேர்வின் வெற்றி மதிப்பெண் 30 ஆகும். கீழ்க் காணும் அட்டவணை பையன்கள் பெண்கள் என்று பிரிவுபடுத்தப்பட்டு வெற்றி அடைந்தவர்களின் பரவலைத் தருகிறது :

மதிப்பெண்கள்	அலைவெண்	
	பையன்கள்	பெண்கள்
30—34	5	15
35—39	10	20
40—44	15	30
45—49	30	20
50—54	5	5
55—59	5	—
மொத்தம்	70	90

தோல்வியடைந்த 30 பையன்களையும் சேர்த்துக் கணக்கிடப் பட்ட பையன்களின் மதிப்பெண் பரவலுக்குக் கிடைக்கும் கூட்டுச் சராசரியும், திட்ட விலக்கமும் முறையே 38, 10 ஆகும். 10 தோல்வியடைந்த பெண்களையும் சேர்த்துக் கண்ட கூட்டுச் சராசரி திட்ட விலக்கம் முறையே 35, 9 ஆகும்.

தேர்வில் தோல்வியடைந்த 30 பையன்களின் மதிப்பெண் களுக்கு (1) கூட்டுச் சராசரியையும் (2) திட்ட விலக்கத்தையும் காண்.

(ஐ. ஏ. எஸ்.—1959)

தீர்வு :

மேற்கண்ட அட்டவணைக்குக் கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம் கணக்கிடல் :

மத்திய மதிப்பு	ஊகச் சராசரி (42) யிலிருந்து விலக்கம்	f	fdx	fdx^2
32	—10	5	—50	500
37	— 5	10	—50	250
42	0	15	—	—
47	5	30	150	750
52	10	5	50	500
57	15	5	75	1125
		70	175	3125

$$\bar{x}_1 = A + \frac{\Sigma fdx}{\Sigma f} = 42 + \frac{175}{70} = 44{\cdot}5$$ மதிப்பெண்கள்

$$n = 70$$

$\bar{x}$ = எல்லா 100 பையன்களின் மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி $= -38$

$$n = n_1 + n_2 = 70 + 30$$

$$= 100$$

அப்படியானல் $$\bar{x} = \frac{n_1 \bar{x}_1 + n_2 \bar{x}_2}{n_1 + n_2}$$

$$\bar{x}_2 = \frac{(n_1 + n_2)\bar{x} - n_1 \bar{x}_1}{n_2}$$

$$= \frac{(100 \times 38) - (70 \times 44{\cdot}5)}{30}$$

$$= \frac{3800 - 3115}{30}$$

$$= \frac{685}{30}$$

$$= \frac{137}{6}$$

$= 22{\cdot}83$ (தோராயமாக)

எல்லா 100 பையன்களின் மதிப்பெண்களின் ஒன்றிணைந்த திட்ட விலக்கம்

$$\sigma = \sqrt{\frac{[n_1\sigma_1^2 + n_1(\bar{x}_1 - x)^2 + n_2\sigma_2^2 + n_4\sigma_2^2 + n_2(\bar{x}_2 - \bar{x})^2]}{n_1 + n_2}}$$

இங்கு, $\sigma = 10$

$$\sigma_1 = \sqrt{\frac{\Sigma f dx^2}{\Sigma f} - \left(\frac{\Sigma f dx}{\Sigma f}\right)^2}$$

$$= \sqrt{\frac{3125}{70} - \left(\frac{175}{70}\right)^2}$$

$$\sigma_1^2 = \frac{625}{14} - \frac{25}{4}$$

$$= \frac{1075}{28}$$

அல்லது

$$100 = \frac{70 < \frac{1075}{28} + 70(44\ 5-38)^2 + 30\sigma_2^2 + 30(22\ 83-38)}{100}$$

$$\therefore\ 1000 = 268{\cdot}75 + 295{\cdot}75 + 3\sigma_2^2 + 230{\cdot}13$$

அல்லது $3\sigma_2^2 = 1000 - 764{\cdot}63$

$$= 205{\cdot}37$$

$$\therefore\ \sigma_2^2 = 68{\cdot}46$$

$$\sigma_2 = \sqrt{68{\cdot}46}$$

$$= 8{\cdot}27 \text{ (தோராயமாக)}$$

இவ்வாறாக, தேர்வில் தேர்ச்சி பெறாத 30 மாணவர்களின் மதிப்பெண்களின் கூட்டுச் சராசரி, திட்ட விலக்கம் முறையே 22·83, 8·27 என்று கண்டறியலாம்.

மாதிரி 227

கினியின் சராசரி வித்தியாசம்

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்குக் கினியின் சராசரி வித்தியாசத்தைக் கணக்கிடுக :

10 13 16 20 25

அளவு	வித்தியாசம் Δ				மொத்தம்
10					
13	3				3
16	6	3			9
20	10	7	4		21
25	15	12	9	5	41
மொத்தம்	34	22	13	5	$\Sigma\Delta = 74$

$$m = \frac{1}{N}(N-1) = \frac{1}{2} \times 5(5-1)$$

$$= \tfrac{1}{2} \times 5 \times 4$$

$$= 10$$

g அல்லது $\Sigma\Delta = (34+22+13+5)$

$$= 74$$

அல்லது $= 3+9+21+41$

$$= 74$$

கினியின் சராசரி வித்தியாசம் $= \dfrac{g}{m}$

$$= \frac{74}{10}$$

$$= 7{\cdot}4$$

மாதிரி 228

கொடுக்கப்பட்டவை :

	எண்ணிக்கை	கூட்டுச் சராசரி	மாறுபாடு
I பிரிவு	—	20	—
II பிரிவு	60	—	35
I, II ஆவது பிரிவுகள் சேர்ந்த மொத்தம்	95	22	45

காணாத மதிப்புகளைக் காண்.

தீர்வு :

n_1 = (முதல் பிரிவின் எண்ணிக்கை) $= 95-60 = 35$

பொதுக் கூட்டுச் சராசரி $\bar{x} = \dfrac{n_1\bar{x}_1+n_2\bar{x}^2}{n_1+n_2}$

ஆகவே *II* பிரிவின் கூட்டுச் சராசரி $\bar{x}_2 = \dfrac{x(n_1+n_2)-n_1\bar{x}_1}{n_2}$

$$= \frac{(20\times 95)-(35\times 20)}{60}$$

$= 23{\cdot}17$ **(தோராயமாக)**

I பிரிவின் மாறுபாடு கணக்கிடல் :

$$\sigma^2 = \frac{n_1\sigma_1{}^2+n_2\sigma_2{}^2+n_1d_1{}^2+n_2d_2{}^2}{n_1+n_2}$$

$\therefore\ d_1 = \bar{x}_1 - \bar{x} = 20-22 = -2$

$d_2 = \bar{x}_2 - \bar{x} = 23{\cdot}17-22 = 1{\cdot}17$

$\therefore\ d_1{}^2(-2)^2 = 4;\ d_2{}^2 = (1{\cdot}17)^2 = 1{\cdot}37$

ஆதலால் $45 = \frac{(35 \times \sigma_1^2)+(60 \times 35)+(35 \times 4)+(60 \times 1{\cdot}37)}{35 \times 60}$

அல்லது $45 = \frac{35\sigma_1^2+2100+140+82\ 20}{95}$

அல்லது $4275 = 35\sigma_1^2+2322\ 2$

$$\sigma_1^2 = \frac{4275-2322{\cdot}2}{35}$$

$$= \mathbf{55{\cdot}79}$$ (தோராயமாக)

ஆகையால் $n_1 = 35$; $\bar{x}_2 = 23{\cdot}17$; $\sigma_1^2 = 55{\cdot}79$.

3. கோட்டமும் தட்டையளவும்
(Skewness And Kurtosis)

கோட்டம் :

'ஒரு சமச்சீரான பரவலுக்கு மாறுபட்டு பரவலின் சராசரி மதிப்பிற்கு இரு புறமும் அலைவெண்கள் சமமற்றுப் பரவி அமைந்தால் அது கோட்டமுடைய அல்லது சமச்சீரற்ற பரவல் எனப் படும். எனவே ஒரு பரவல் சமச்சீருடையது எனில், அதன் கூட்டுச் சராசரி, இடைநிலை, முகடு ஆகிய மதிப்புகள் மாறுபடாது ஓரிடத்தில் பொருந்தும்.

பெரும்பாலும் அலைவெண் பரவல்கள் கீழ்க்காணும் நான்கு வகைகளில் அமைகின்றன :

(1) சமச்சீரான பரவல்

(2) ஓரளவு கோட்டமுடைய பரவல்

(3) முழுமையான கோட்டமுடைய அல்லது 'J' வடிவுடைய பரவல்

(4) 'U' வடிவுடைய பரவல்

என்பனவாகும்.

கோட்ட அளவைகள்
(Measures of Skewness)

I **முதல் அளவையும் அதன் கெழுக்களும்**

(1) கோட்டம் = இடைநிலை—முகடு = $M_e - M_o$

கோட்டக் கெழு (j) = $\dfrac{M_e - M_o}{\delta_{M_o}}$ **(முகட்டிலிருந்து சராசரி விலக்கம்)**

(2) கோட்டம் = கூட்டுச் சராசரி — இடைநிலை = $\bar{x}-M_e$

கோட்டக் கெழு $(j) = \dfrac{\bar{x}-M_e}{\delta_{M_e}}$

(3) கோட்டம் = கூட்டுச் சராசரி - முகடு = $\bar{x}-M_o$

கோட்டக் கெழு $(j) = \dfrac{\bar{x}-M_o}{\delta_{M_o}}$

(4) கார்ல் — பியர்சனின் முறை :

கோட்டம் = $\bar{x}-M_o$

கோட்டக் கெழு $(j) = \dfrac{\bar{x}-M_o}{\sigma}$

(5) கார்ல் — பியர்சனின் முறை :

(முகடு கணக்கிட முடியாவிட்டால்)

கோட்டம் = 3 (கூட்டுச் சராசரி — இடைநிலை)

கோட்டக் கெழு $(j) = \dfrac{3\text{ (கூட்டுச் சராசரி — இடைநிலை)}}{\text{திட்ட விலக்கம்}}$

$$= \frac{3(\bar{x}-M_e)}{\sigma}$$

II இரண்டாவது கோட்ட அளவு :

கோட்டம் $= (Q_3-M)-(M-Q_1)$

$= Q_3+Q_1-2M$

கோட்டக் கெழு $= \dfrac{(Q_3-M)-(M-Q_1)}{(Q_3-M)+(M-Q_1)}$

$$= \frac{Q_3+Q_1-2M}{Q_3-Q_1}$$

III மூன்றாவது கோட்ட அளவு :

கோட்டம் $= \dfrac{\sqrt[3]{\Sigma d^3}}{n}$

கோட்டக் கெழு $= 3\ \dfrac{\sqrt[3]{\Sigma d^2}}{\sigma}$

இங்குக் கொடுக்கப்பட்டுள்ள சூத்திரங்கள் மூலம் கோட்ட அளவுகள் கணக்கிடல் மிகவும் கடினமான செயலாகும். ஆகவே, இவ்வளவு முறை உயர் புள்ளியியல் வேலைகளில் மட்டும் பயன் படுத்தப்படுகிறது.

IV **மற்றக் கோட்ட அளவு வகைகள் :**

கிராக்டனும் கவுடனும் (Croxton and Cowden)

(*a*) கோட்டம் $= P_{90}+P_{10}-2P_{50}$

$$\text{கோட்டக் கெழு} = \frac{P_{90}+P_{10}-2\,P_{50}}{P_{90}-P_{10}}$$

(*b*) கோட்டம் $= D_9+D_1-2\,D_5$

$$\text{கோட்டக் கெழு} = \frac{D_9+D_1-2\,D_5}{D_9-D_1}$$

விலக்க விசைப் பெருக்கச் சராசரி அல்லது மூமெண்ட்ஸ்ச் (Moments)

'விலக்கங்களில் விசைப் பெருக்கச் சராசரிகள் மூமெண்ட்ஸ்ச் கள் எனப்படும்.

இவை இரண்டு வகைப்படும்.

(1) ஊகச் சராசரியிலிருந்து கணக்கிடப்படுபவை;

(2) கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்படுபவை என்பனவாகும்.

I. **ஊகச்** சராசரி (*A*)யிலிருந்து **கணக்கிடப்படும் விலக்க விசைப்** பெருக்கச் சராசரிகள் :

(1) தனித்த தொகுதி :

$$\text{முதல் மூமெண்ட்ஸ்ச்}\quad V_1 = \frac{\Sigma d}{n}$$

$$\text{இரண்டாம் மூமெண்ட்ஸ்ச்}\quad V_2 = \frac{\Sigma d^2}{n}$$

மூன்றும் மூமெண்ட்டீச் $V_3 = \frac{\Sigma d^3}{n}$

நான்காம் மூமெண்ட்டீச் $V_4 = \frac{\Sigma d^4}{n}$

(2) அலைவெண் பரவல் :

$$V_1 = \frac{\Sigma f dx}{n}$$

$$V_2 = \frac{\Sigma f dx^2}{n}$$

$$V_3 = \frac{\Sigma f dx^3}{n}$$

$$V_4 = \frac{\Sigma f dx^4}{n}$$

இங்கு, $dx = (x-A)$ ஆகும்.

II. உண்மையான கூட்டுச் சராசரியிலிருந்து $(\bar{x})$ கணக்கிடப் படும் விலக்க விசைப் பெருக்கச் சராசரிகள் :

(1) தனித்த தொகுதி :

முதல் மூமெண்ட்டீச் $\mu_1 = \frac{\Sigma d}{n} = 0$

இரண்டாவது மூமெண்ட்டீச் $\mu_2 = \frac{\Sigma d^2}{n}$

மூன்றுவது மூமெண்ட்டீச் $\mu_3 = \frac{\Sigma d^3}{n}$

நான்காவது மூமெண்ட்டீச் $\mu_4 = \frac{\Sigma d^4}{n}$

இங்கு, $d = x-\bar{x}$ ஆகும்.

(2) அலைவெண் பரவலுக்கு (தொடர் தொகுதிக்கு) :

$$\mu = \frac{\Sigma f d}{n} = 0$$

$$\mu_2 = \frac{\Sigma f d^2}{n}$$

$$\mu_3 = \frac{\Sigma f d^3}{n}$$

$$\mu_4 = \frac{\Sigma f d^4}{n}$$

இங்கு $d = (x - \bar{x})$ ஆகும்.

இரண்டு மூமெண்ட்ஃச் வகைகளின் சார்பு :

$\mu_1 = V_1 - V_1$ = சராசரி விலக்கம்

$\mu_2 = V_2 - V_1^2$ = மாறுபாடு

$\mu_3 = V_3 - 3V_1 V_2 + 2V_1^3$


$\mu_4 = V_4 - 4 V_3 V_1 + 6V_2 V_1^2 - 3V_1^4$

இங்கு, முதல் மூமெண்ட்ஃச் கூட்டுச் சராசரியையும், இரண்டாம் மூமெண்ட்ஃச் விலக்கத்தையும், மூன்றும் மூமெண்ட்ஃச் கோட்டத்தையும், நான்காம் மூமெண்ட்ஃச் தட்டையளவையும் கொடுக்கப்பட்ட அலைவெண் பரவலிலிருந்து அளந்தறிந்து கணக்கிடப் பயன்படுகின்றன.

தட்டையளவுகள் அல்லது கர்டாசிஃச்கள் (Kurtosis)

அலைவெண் வளைகோடுகளின் உச்சி முனை, தட்டைப் புள்ளியியலில் கர்டாசிஃச் எனப்படுகிறது. கோட்டமற்ற சமச் சீரான பரவல்களை ஒப்பிட்டுப் பார்க்க இது பயன்படுகிறது. சமச்சீரான அலைவெண் பரவலில், அலைவெண்கள் மையத்தில் மிகவும் செறிந்து காணப்பட்டால் அப் பரவலின் அலைவெண் வளைகோடு மையத்தில் உயர்ந்து, உச்சி முனையில் தட்டை குறைந்து இருக்கும். இவ்வித அலைவெண் வளைகோடுகள் குறைதட்டை அல்லது லெப்டோகர்டிக் எனப்படுகின்றன. அலைவெண்கள் மையத்தில் செறிவற்று இருப்பின், அலைவெண் வளைகோடு அதிகத் தட்டையுடையதாக இருக்கும். இவ்வித அலைவெண் வளைகோடுகள் மிகைத்தட்டை அல்லது பிளாடிகர்டிக் எனப்படுகின்றன. இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் மணி வடிவில் அமையும் அலைவெண் வளைகோடுகள் மெசோகர்டிக் எனப்படுகின்றன.

இவைகளைக் கீழ்வரும் வளைகோடுகளின் படத்தின் மூலம் நன்கு புரிந்து கொள்ளலாம்.



படம் 3

பீட்டாக் கெழுக்கள்

மூமென்ட்ஃச்சுகளின் சார்பலன்களே இப் பீட்டாக் கெழுக்களாக அமைகின்றன. வெவ்வேறு வகைகளான அலைவெண் பரவல்களை விவரிக்கவும், வித்தியாசப்படுத்தவும் இவைகள் பயன் படுகின்றன. இரண்டு முக்கிய பீட்டாக் கெழுக்கள் β_1, β_2 (β என்பது கிரேக்க எழுத்தாகும்) என்பன கோட்டத்தையும், தட்டையளவையும், அளந்து அறிய முறையே பயன்படுகின்றன.

$$\beta_1 = \frac{(\text{கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட மூன்றும் மூமென்ட்ஃச்})^2}{(\text{கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட இரண்டாம் மூமென்ட்ஃச்})^3}$$

$$= \frac{\mu_3^2}{\mu_2^3}$$

பொதுவாக $\sqrt{\beta_1}$ ஐ, கோட்ட அளவுகளை அளக்கப் பயன் படுத்துகிறோம்.

அதேபோல்

$$\beta_2 = \frac{\text{கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட நான்காம் மூமென்ட்ஃச்}}{[\text{கூட்டுச் சராசரியிலிருந்து கணக்கிடப்பட்ட இரண்டாம் மூமென்ட்ஃச்}]^2}$$

$$= \frac{\mu_4}{\mu_2^{\,2}}$$

$$= \frac{\mu_4}{\sigma^2}$$

இவ்விரண்டாவது பீட்டாக் கெழுவைப் பொதுவாக தட்டையளவுகளை அல்லது கர்டாசீஃச் அளவுகளை அளக்கப் பயன்படுத்துகிறோம்.

கர்டாசீஃச் அளவைகள்

கர்டாசீஃச் நாலாவது மூமென்ட்ஃச்சின் அடிப்படையில் காணப்படுகின்றது. சமச்சீரான இயல்நிலைப் பரவலின் 4 ஆவது மூமென்ட்ஃச்சின் அளவு 3-க்குச் சமம். எனவே 3-க்கு மேலுள்ள எச்சமே கர்டாசீஃச்சின் அளவு ஆகும். கர்டாசீஃச் என்பது 'K' என்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது.

$$K = \beta_2 - 3$$

$$\beta_2 = \frac{\mu_4}{\mu_2^{\,2}} = \frac{\mu_4}{\sigma^4}$$

$K = -$ ஆனால் அது பிளாடிகர்டிக்.

$K = +$ ஆனால் அது லெப்டிகர்டிக்.

$K = 0$ ஆனால் அது மெசோகர்டிக் எனக் கொள்கிறோம்.

மாதிரி 229

கீழ்க் காணும் எண்களின் கார்ல் பியர்சனின் கோட்டக் கெழுவைக் கணக்கிடுக.

35, 25, 33, 50, 37, 35, 33, 35, 30

தீர்வு :

ஏற்ற மதிப்பு வரிசையில் அமைத்து கணக்கிடப்படும் பட்டியல் :

(x)	35-லிருந்து விலக்கங்கள் (d_x)	d_x^2
25	—10	100
30	— 5	25
33	— 2	4
33	— 2	4
35	0	0
35	0	0
35	0	0
37	2	4
50	15	225
மொத்தம் = 313	—2	362

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n} = \frac{313}{9}$

$= 34 \cdot 8$

முகடு : $M_o = 35$ (அதிக அலைவெண் கொண்ட எண்)

திட்டவிலக்கம் : $\sigma = \sqrt{\frac{\Sigma d_x^2}{n} - \left(\frac{\Sigma d_x}{n}\right)^2}$

$= \sqrt{\frac{362}{9} - \left(\frac{-2}{9}\right)^2}$

$= \sqrt{40 \cdot 2222 - 0 \cdot 0494}$

$= 6 \cdot 34$

கார்ல் பியர்சனின் கோட்டக் கெழு

$= \frac{\bar{x} - M_o}{\sigma}$

$= \frac{34 \cdot 8 - 35}{6 \cdot 34}$

$= -0 \cdot 0315$

மாதிரி 230

ஒரு வகுப்பின் 10 மாணவர்கள் எடுத்த மதிப்பெண்கள் கீழே தரப்பட்டுள்ளன. கால்மானங்களைக் கணக்கிட்டு, கோட்டக் கெழுவைக் காண்.

10, 12, 14, 13, 20, 27, 15, 18, 36, 25

தீர்வு :

ஏற்ற வரிசை மதிப்பில் மதிப்பெண்களை அமைக்கவும்.

10, 12, 13, 14, 15, 18, 20, 25, 27, 36

இடைநிலை : $M_e = \left(\frac{n+1}{2}\right)$ஆவது உறுப்பு மதிப்பு

$= \left(\frac{10+1}{2}\right)$ ஆவது உறுப்பு

$= 5{\cdot}5$ ஆவது உறுப்பு மதிப்பு

$= \dfrac{5 \text{ ஆவது உறுப்பு மதிப்பு} + 6\text{ஆவது உறுப்பு மதிப்பு}}{2}$

$= \dfrac{15+18}{2}$

$= \mathbf{16{\cdot}5}$

முதல் கால்மானம் $Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பு மதிப்பு

$= \left(\frac{10+1}{4}\right)$,, ,, ,,

$= 2{\cdot}75$,, ,, ,,

$= 2$ ஆவது உறுப்பின் மதிப்பு $+ \frac{3}{4}$ (3 ஆவது உறுப்பின் மதிப்பு$-$2ஆவது உறுப்பு மதிப்பு)

$= 12+\frac{3}{4}\ (13-12)$

$= 12+0{\cdot}75$

$= \mathbf{12{\cdot}75}$

மூன்றும் கால்மானம் $Q_3 = 3\left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 3\left(\frac{10+1}{4}\right)$,, ,, ,,

$= 8{\cdot}25$,, ,, ,,

= 8 ஆவது உறுப்பு மதிப்பு $+\frac{1}{4}$(9 ஆவது உறுப்பு மதிப்பு—8ஆவது உறுப்பு மதிப்பு)

$= 25+\frac{1}{4}\ (27-25)$

$= 25 + 0{\cdot}5$

$= 25{\cdot}5$

கோட்டக் கெழு $= \frac{Q_3+Q_1-2M_e}{Q_3-Q_1}$

$= \frac{25{\cdot}5+12{\cdot}75-2(16{\cdot}5)}{25{\cdot}5 - 12{\cdot}75}$

$= \frac{38{\cdot}25-33}{12{\cdot}75}$

$= \frac{5{\cdot}25}{12{\cdot}75}$

$= \mathbf{0{\cdot}41}$

மாதிரி 231

விலைகளின் வாரக் குறியீட்டெண்கள் : 120, 125, 128, 119 120, 125, 124, 131.

மேற்கண்ட புள்ளி விவரங்களின் கோட்டக் கெழுவைக் கணக்கிடுக.

தீர்வு :

கோட்டக் கெழு கணக்கிடல் :

குறியீட்டெண்கள் (x)	உண்மைச் சராசரி (= 124) யிலிருந்து விலக்கம் d_x	d_x^2
120	–4	16
125	1	1
128	4	16
119	–5	25
120	–4	16
125	1	1
124	0	0
131	7	49
மொத்தம் = 992		124

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n} = \frac{992}{8}$

$= \mathbf{124}$

இடைநிலை $M_e = \left(\frac{8+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 4{\cdot}5$ ஆவது உறுப்பின் மதிப்பு

(ஏற்ற வரிசையில் உறுப்புகளை எழுதியபின்பு)

$= \frac{124+125}{2}$

$= \mathbf{124{\cdot}5}$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma d_x^2}{n}} = \sqrt{\frac{124}{8}}$

$= 3{\cdot}94$

கோட்டக் கெழு $= \frac{3(\bar{x} - M_e)}{\sigma}$

$= \frac{3(124 - 124{\cdot}5)}{3{\cdot}94} = \frac{-1{\cdot}5}{3{\cdot}94}$

$= -0{\cdot}38$

மாதிரி 232

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு (1) மாறு விகிதக் கெழு (2) கோட்டக் கெழு ஆகியவைகளைக் கணக்கிடுக:

உறுப்பு அளவு	6	7	8	9	10	11	12
அலைவெண்	3	6	9	13	8	5	4

தீர்வு :

உறுப்புகளின் அளவு x	அலைவெண் f	ஊகச் சராசரி ($A = 9$) யிலிருந்து விலக்கம் dx	fd_x	fd_x^2
6	3	—3	- 9	27
7	6	—2	-12	24
8	9	—1	- 9	9
9	13	0	0	0
10	8	1	8	8
11	5	2	10	20
12	4	3	12	36
மொத்தம்	$\Sigma f = 48$		$\Sigma fd_x = 0$	$\Sigma fd_x^2 = 124$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f d_x}{n} = 9+0$

$= 9$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma f d_x}{n} - \left(\frac{\Sigma f d_x}{n}\right)}$

$= \sqrt{\frac{124}{48}}$

$= 1{\cdot}6$

மாறு விகிதக் கெழு C. V. $= \frac{\sigma}{\bar{x}} \times 100$

$= \frac{1{\cdot}6}{9} \times 100$

$= 18$ (தோராயமாக)

முகடு பிரிவு சேர் முறையில் கணக்கிடல் :

பிரிவு சேர் பட்டியல்

உறுப்பின் அளவு	அலைவெண்					
	I	II	III	IV	V	VI
6	3	9		18		
7	6		15		8	
8	9	22				30
9	13		21	26		
10	8	13			17	
11	5		9			
12	4					

பகுப்பாய்வுப் பட்டியல்

பத்தி	கூடிய அலைவெண்கள் கொண்ட உறுப்புகளின் அளவு							
I				9				
II			8	9				
III				9	10			
IV				9	10	11		
V		7	8	9				
VI			8	9	10			

ஆகவே முகட்டு அளவு = 9

$$\text{கோட்டக் கெழு} = \frac{\text{கூட்டுச் சராசரி} - \text{முகடு}}{\text{திட்ட விலக்கம்}}$$

$$= \frac{9-9}{1{\cdot}6}$$

$$= 0$$

மாதிரி 233

கீழ்க் காணும் பட்டியல் 230 ஆட்களின் சம்பளத்தைத் தருகிறது.

(1) திட்ட விலக்கம்

(2) கோட்டக் கெழு ஆகியவற்றைக் கணக்கிடுக.

சம்பளம் (ரூபாயில்)	ஆட்களின் எண்ணிக்கை	சம்பளம் (ரூபாயில்)	ஆட்களின் எண்ணிக்கை
70— 80	12	110—120	50
80— 90	18	120—130	45
90—100	35	130—140	20
100—110	42	140—150	8

(பி.காம்.—ஆக்ரா—1940

தீர்வு :

சம்பளம் (ரூபாயில்)	மத்திய மதிப்பு x	ஆட்களின் எண்ணிக்கை f	$d_x' = \left(\frac{x-115}{10}\right)$	fd_x'	$fd_x'^2$
70— 80	75	12	−4	−48	192
80— 90	85	18	−3	−54	162
90—100	95	35	−2	−70	140
100—110	105	42	−1	−42	42
110—120	115	50	0	0	0
120—130	125	45	1	45	45
130—140	135	20	2	40	80
140—150	145	8	3	24	72
		$\Sigma f = 230$		$\Sigma fd_x' = -105$	$\Sigma fd_x' = 733$

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd_x'}{n} \times C$

$$= 115 + \frac{-105}{230} \times 10$$

$$= 115 + \frac{-105}{23} = 115 - 4{\cdot}6$$

= ரூ. 110·4 (தோராயமாக)

திட்ட விலக்கம் $\sigma = \left\{ \frac{\Sigma fd_x'^2}{\Sigma f} - \left(\frac{\Sigma fd_x'}{\Sigma f}\right)^2 \right\}^{\frac{1}{2}} \times C$

$$= \left\{ \frac{733}{230} - \left(\frac{-105}{230} \right)^2 \right\}^{\frac{1}{2}} \times 10$$

$$= \sqrt{2 \cdot 98} \times 10$$

= ரூ. 17·3 (தோராயமாக)

அதிக அலைவெண் 50, விழும் பிரிவு 110—120 ஆகும்.

ஆகவே முகடு $M_o = 110 + \frac{50-42}{100-42-45} \times 100$

= ரூ. 116·1

கோட்டக் கெழு $= \frac{\bar{x} - M_o}{\sigma}$

$$= \frac{110 \cdot 4 - 116 \cdot 1}{17 \cdot 3}$$

$$= -0 \cdot 3$$

மாதிரி 234

கீழ்க் காணும் பட்டியல் பத்து மாணவர்கள் பொருளாதாரம். கணக்குப் பாடங்களில் வாங்கியமதிப் பெண்களைத் தருகிறது. கோட்டக் கெழுவைக் கணக்கிடுக.

பொருளாதாரம்	25	50	45	30	70	42	36	48	34	60
கணக்கு	10	70	50	20	95	55	42	60	48	80

(பி.காம்.—ஆக்ரா - 1950)

தீர்வு :

ஏறுவரிசை மதிப்பில் மதிப்பெண்களை அமைத்த பின்பு :

பொருளாதாரப் பாடம்			கணக்குப் பாடம்		
மதிப் பெண்கள் x	உண்மைச் சராசரி $(\bar{x}=14)$ யிலிருந்து விலக்கம் d_x	d_x^2	மதிப் பெண்கள் y	உண்மைச் சராசரி $((\bar{y})=53)$ யிலிருந்து விலக்கம் d_y	d_y^2
25	—19	361	10	—43	1849
30	– 14	196	20	—33	1089
34	—10	100	42	—11	121
36	— 8	64	48	—5	25
46	— 2	4	50	—3	9
45	1	1	55	2	4
48	4	16	60	7	49
50	6	36	70	17	289
60	16	254	80	27	729
70	26	676	95	42	1764
$\Sigma x=440$		$\Sigma d_x^2 = 1710$	$\Sigma y=530$		$\Sigma d_y^2 = 5928$

இடைநிலை $= \left(\frac{n+1}{2}\right)$ அல்லது $\left(\frac{10+1}{2}\right)$ அல்லது 5·5 ஆவது உறுப்பு மதிப்பு

பொருளாதாரப் பாடம் :

இடைநிலை M_e = 5·5 ஆவது உறுப்பின் மதிப்பு

$$= \frac{42+45}{2}$$

$$= 43·5$$

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n} = \frac{440}{10}$

$$= 44$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma d_x^2}{n}} = \sqrt{\frac{1710}{10}}$

$= 13{\cdot}08$

கோட்டக் கெழு $j = \frac{3(\bar{x} - M_e)}{\sigma}$

$= \frac{3(44-43{\cdot}5)}{13{\cdot}08}$

$= \frac{1{\cdot}5}{13{\cdot}08}$

$= 0{\cdot}11$

கணக்குப் பாடம் :

இடைநிலை M_e = 5·5 ஆவது உறுப்பின் மதிப்பு

$= \frac{50+55}{2}$

$= 52\ 5$

கூட்டுச் சராசரி $\bar{y} = \frac{\Sigma y}{n} = \frac{530}{10}$

$= 53$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma d_y^2}{n}} = \sqrt{\frac{5928}{10}}$

$= 24{\cdot}34$

கோட்டக் கெழு $j = \frac{3(\bar{x} - M_e)}{\sigma}$

$= \frac{3(53-52{\cdot}5)}{24{\cdot}34}$

$= \frac{1{\cdot}5}{24{\cdot}34}$

$= 0{\cdot}062$

மாதிரி 235

கீழே தரப்பட்டுள்ள இரண்டு பிரிவுகளின் கோட்டக் கெழுக்களைக் கணக்கிட்டு, எந்தப் பரவல் அதிகக் கோட்டமுடையதாக இருக்கிறது எனக் காட்டு.

மதிப்பெண்கள்	பிரிவு *A*	பிரிவு *B*
55—58	12	20
58—61	17	22
61 64	23	25
64—67	18	13
67—70	11	7

(எம்.ஏ.—ஆக்ரா—1954)

மதிப்பெண்கள்	மத்திய மதிப்பு	$d'\left(=\frac{x-A}{3}\right)$ $A=62{\cdot}5$	பிரிவு *A*			பிரிவு *B*		
			f	fd'	fd'^2	f	fd'	fd'^2
55—58	56·5	—2	12	—24	48	20	—40	80
58—61	59·5	—1	17	—17	17	22	—22	22
61—64	62·5	0	23	0	0	25	0	0
64—67	65·5	1	18	18	18	13	13	13
67—70	68·5	2	11	22	44	7	14	28
		மொத்தம்	81	—1	127	87	—35	143

பிரிவு *A* :

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd'}{n} \times C$

$$= 62{\cdot}5 + \frac{-1}{81} \times 3$$

$$= \mathbf{62{\cdot}46}$$

திட்ட விலக்கம் $\sigma = \left\{ \frac{\Sigma f d'^2}{n} - \left(\frac{\Sigma f d'}{n} \right)^2 \right\}^{\frac{1}{2}} \times C$

$= \left\{ \frac{127}{81} - \left(\frac{-1}{81} \right)^2 \right\}^{\frac{1}{2}} \times C$

$= 3{\cdot}75$

முகடு $M_o = 61 + \frac{23-17}{46-17-18} \times 3$

$= 62{\cdot}63$

கோட்டக் கெழு $j = \frac{\bar{x} - M_o}{\sigma}$

$= \frac{62{\cdot}46 - 62{\cdot}63}{3{\cdot}75}$

$= -0{\cdot}03$

பிரிவு B :

கூட்டுச் சராசரி $\bar{y} = 62{\cdot}5 + \frac{-35}{87} \times 3$

$= 61{\cdot}3$

திட்ட விலக்கம் $\sigma = \left\{ \frac{143}{87} - \left(\frac{-35}{87} \right)^2 \right\}^{\frac{1}{2}} \times 3$

$= 3{\cdot}6$

முகடு $M_o = 61 + \frac{25-22}{50-22-13} \times 3$

$= 61{\cdot}6$

கோட்டக் கெழு $j = \frac{\bar{y} - M_o}{\sigma}$

$= \frac{61{\cdot}3 - 61{\cdot}6}{3{\cdot}6}$

$= -0{\cdot}18$

பிரிவு A, B-க்களின் கோட்டக் கெழுக்களை ஒப்பிட்டுப் பார்க்க, பிரிவு B, பிரிவு A ஐ விட அதிகக் கோட்டமுடையதாகத் தெரிகிறது.

மாதிரி 236

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்கு (1) கூட்டுச் சராசரி (2) முகடு (3) திட்ட விலக்கம் (4) கோட்டக் கெழு ஆகியவற்றைக் கணக்கிடுக.

ஆண்டு (கீழாக)	10	20	30	40	50	60
ஆட்கள் எண்ணிக்கை f	15	32	51	78	97	109

(பி. சி. எஸ்.— 1952)

தீர்வு :

கூட்டுச் சராசரி, முகடு,......ஆகியவை கணக்கிடல்.

ஆண்டு	மத்திய மதிப்பு x	ஆட்கள் எண்ணிக்கை f	$d_x' \left(=\frac{x-35}{10}\right)$	fd_x'	$fd_x'^2$
0—10	5	15	−3	−45	135
10—20	15	17	−2	−34	68
20—30	25	19	−1	−19	19
30—40	35	27	0	0	0
40—50	45	19	1	19	19
50—60	55	12	2	24	48
மொத்தம்		109		−55	289

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f d_x'}{n} \times C$

$$= 35 + \frac{-55}{109} \times 10$$

= 29·95 ஆண்டுகள்

திட்ட விலக்கம் $\sigma = \left\{ \frac{289}{109} - \left(\frac{-55}{109}\right)^2 \right\}^{\frac{1}{2}} \times 10$

= 15·49 ஆண்டுகள்,

$$\text{முகடு} \quad M_o = l_o + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$$

$$= 30 + \frac{27-19}{54-19-19} \times 10$$

$$= 30+5$$

$$= \mathbf{35}$$

$$\text{கோட்டக் கெழு } j = \frac{\bar{x} - M_o}{\sigma}$$

$$= \frac{29{\cdot}95 - 35}{15{\cdot}49}$$

$$= \frac{-5{\cdot}05}{15{\cdot}49}$$

$$= \mathbf{-0{\cdot}32}$$

மாதிரி 237

கீழே தரப்பட்டுள்ள பட்டியல், 100 மாணவர்கள் ஒரு பள்ளித் தேர்வில் எடுத்த மதிப்பெண்களின் அலைவெண் பரவலாகும். கோட்டக் கெழுவைக் கணக்கிடுக :

மதிப்பெண்கள்	மாணவர் எண்ணிக்கை
10—20	3
20—30	7
30—40	20
40—50	30
50—60	15
60—70	10
70—80	7
80—90	5
90—100	3
மொத்தம்	100

(எம்.ஏ. — ஆக்ரா — 1964)

தீர்வு :

மதிப்பெண்கள்	f	ஊகச் சராசரி ($A=45$) யிலிருந்து விலக்கம் dx	fd_x	fd_x^2
10— 20	3	—30	— 90	2700
20— 30	7	—20	—140	2800
30— 40	20	—10	—200	2000
40— 50	30	0	0	0
50— 60	15	10	150	1500
60— 70	10	20	200	4000
70— 80	7	30	210	6300
80— 90	5	40	200	8000
90—100	3	50	150	7500
மொத்தம்	100		480	34800

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f dx}{n}$

$$= 45 + \frac{480}{100}$$

$$= \mathbf{49 \cdot 8}$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma f d_x^2}{n} - \left(\frac{\Sigma f d_x}{n}\right)^2}$

$$= \sqrt{\frac{34800}{300} - \left(\frac{480}{100}\right)^2}$$

$$= 18 \cdot 02$$

முகடு $M_o = l_o + \frac{f_2}{f_2 + f_o} \times C$

$$= 40 + \frac{15}{15+20} \times 10$$

$$= 44 \cdot 3$$

கோட்டக் கெழு $j = \frac{\bar{x} - M_0}{\sigma}$

$= \frac{49 \cdot 8 - 44 \cdot 3}{18 \cdot 02}$

$= 0 \cdot 3$

மாதிரி 238

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்குக் கால்மானக் கோட்டக் கெழுவைக் காண்.

எடை (பவுண்டுகளில்)	70–80	80–90	90–100	100–110
ஆட்கள் எண்ணிக்கை	12	18	35	49
எடை (பவுண்டுகளில்)	110–120	120–130	130–140	140–150
ஆட்கள் எண்ணிக்கை	50	45	20	8

(பி. காம்.—சென்னை—1950)

தீர்வு :

எடை (பவுண்டில்)	ஆட்கள் எண்ணிக்கை f	குவி அலைவு $c \cdot f$
70— 80	12	12
80— 90	18	30
90—100	35	65
100—110	49	114
110—120	50	164
120—130	45	209
130—140	20	229
140—150	8	237

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{237+1}{2}\right)$,, ,, ,,

$= 119$,, ,, ,,

119 ஆவது உறுப்பு 110—120 என்ற பிரிவில் விழுகிறது.

$$\text{ஆகவே } M_e = l_1 + \frac{\left(\frac{n+1}{2}\right) - C}{f} \times h$$

$$= 110 + \frac{119-114}{50} \times 10$$

$= 111$ **பவுண்டுகள்**

முதல் கால்மானம் $Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{237+1}{4}\right)$,, ,, ,,

$= 59{\cdot}5$,, ,, ,,

59·5 ஆவது உறுப்பு 90—100 என்ற பிரிவில் விழுகிறது.

$$\text{ஆகவே } Q_1 = 90 + \frac{59{\cdot}5-30}{35} \times 10$$

$= 98{\cdot}4$ **பவுண்டுகள்.**

மூன்றும் கால்மானம் $Q_3 = 3\left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= 3\left(\frac{237+1}{4}\right)$,, ,, ,,

$= 178{\cdot}5$,, ,, ,,

178·5 ஆவது உறுப்பு 120—130 என்ற பிரிவில் விழுகிறது.

$$\text{ஆகவே, } Q_3 = 120 + \frac{178{\cdot}5-164}{45} \times 10$$

$$= 120 + \frac{14{\cdot}5 \times 10}{45}$$

$= 123{\cdot}2$ **பவுண்டுகள்**

கோட்டக் கெழு $j = \frac{Q_3+Q_1-2M_e}{Q_3-Q_1}$

$= \frac{123 \cdot 2+98 \cdot 4-2(111)}{123 \cdot 2-98 \cdot 4}$

$= -0 \cdot 016$

மாதிரி 239

கீழ்க் காணும் அலைவெண் பரவலுக்குக் கோட்டக் கெழு காண்.

x	0—5	5—10	10—15	15—20
f	2	5	7	13
x	20—25	25—30	30—35	35—40
f	21	16	8	3

(பி.காம்.—அலிகார்—1952)

தீர்வு :

மாறி (பிரிவு)	மத்திய மதிப்பு x	அலை வெண் f	ஊகச் சராசரி $(A=22 \cdot 5)$ யிலிருந்து படி விலக்கம் d_x'	$d_x'^2$	fd_x'	$fd_x'^2$
0— 5	2·5	2	—4	16	— 8	32
5—10	7·5	5	—3	9	—15	45
10—15	12·5	7	—2	4	—14	28
15—20	17·5	13	—1	1	—13	13
20—25	22·5	21	0	0	0	0
25—30	27·5	16	1	1	16	16
30—35	32·5	8	2	4	16	32
35—40	37·5	3	3	9	9	27
மொத்தம்		75			—9	193

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma f d_x'}{n} \times C$

$$= 22{\cdot}5 + \frac{-9}{75} \times 5$$

$$= \mathbf{21{\cdot}9}$$

திட்ட விலக்கம் $\sigma = \sqrt{\frac{\Sigma f d_x'^2}{n} - \left(\frac{\Sigma f d_x'}{n}\right)^2} \times C$

$$= \sqrt{\frac{193}{75} - \left(\frac{-9}{75}\right)} \times 5$$

$$= 1{\cdot}6 \times 5$$

$$= \mathbf{8}$$

முகடு $M_o = l_1 + \frac{f_m - f_1}{2f_m - f_1 - f_2} \times C$

$$= 20 + \frac{21-13}{42-13-16} \times 5$$

$$= \mathbf{23{\cdot}08}$$

கோட்டக் கெழு $j = \frac{\bar{x} - M_o}{\sigma}$

$$= \frac{21{\cdot}9 - 23{\cdot}08}{8} = -\frac{1{\cdot}18}{8}$$

$$= \mathbf{-0{\cdot}148}$$

மாதிரி 240

கீழ்க் காணும் புள்ளி விவரங்களுக்கு,

1. திட்ட விலக்கக் கெழு
2. கார்ல் பியர்சனின் கோட்டக் கெழு

ஆகியவற்றைக் காண்.

எடை (பவுண்டில்)	ஆட்கள் எண்ணிக்கை
70— 79·99	12
80— 89·99	18
90— 99·99	35
100—109·99	42
110—119·99	50
120—129·99	45
130—139·99	20
140—149·99	8

(பி.காம்.—ஆக்ரா—1962)

தீர்வு :

பிரிவு	f	d_x	fd_x	fd_x^2
70— 80	12	—4	—48	192
80— 90	18	—3	—54	162
90—100	35	—2	—70	140
100—110	42	—1	—42	42
110—120	50	0	0	0
120—130	45	1	45	45
130—140	20	2	40	80
140—150	8	3	24	72
மொத்தம்	230		—105	733

கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma fd_x}{n} \times C$

$$= 115 + \frac{-105}{230} \times 10$$

$$= 110{\cdot}435$$

$$\text{திட்ட விலக்கம் } \sigma = \sqrt{\frac{\Sigma fd_x'^2}{n} - \left(\frac{\Sigma fd_x'}{n}\right)^2} \times C$$

$$= \sqrt{\frac{733}{230} - \left(\frac{-105}{230}\right)^2} \times 10$$

$$= 17{\cdot}26$$

$$\text{முகடு } M_o = l_o + \frac{f_2}{f_2 + f} \times C$$

$$= 110 + \frac{45}{45+42} \times 10$$

$$= 110 + 5{\cdot}17$$

$$= 115{\cdot}17$$

$$\text{திட்ட விலக்கக் கெழு} = \frac{\text{திட்ட விலக்கம்}}{\text{கூட்டுச் சராசரி}}$$

$$= \frac{17{\cdot}26}{110{\cdot}435}$$

$$= 0{\cdot}156$$

$$\text{கோட்டக் கெழு } j = \frac{\bar{x} - M_o}{\sigma}$$

$$= \frac{(110 \cdot 435 - 115{\cdot}17)}{17{\cdot}26}$$

$$= -\frac{4{\cdot}735}{17{\cdot}26}$$

$$= -0{\cdot}274$$

மாதிரி 241

கீழே தரப்பட்டுள்ள அலைவெண் பரவல் பட்டியலுக்குக் கோட்டக் கெழுவைக் கணக்கிடுக :

உறுப்பு அளவு	அலைவெண்	உறுப்பு அளவு	அலைவெண்
2	3	8	10
3	8	9	8
4	10	10	17
5	12	11	5
6	16	12	4
7	14	13	1

(கோசும், சௌத்ரியும்—பக். 174)

தீர்வு :

உறுப்பு அளவு (x)	அலைவெண் (f)	fx	$c.f.$	$\|d_{me}\|$ $m_e = 7$	$f\|d_{me}\|$
2	3	6	2	5	15
3	8	24	11	4	32
4	10	40	21	3	30
5	12	60	33	2	24
6	16	96	49	1	16
7	14	98	63	0	0
8	10	80	73	1	10
9	8	72	81	2	16
10	17	170	98	3	51
11	5	55	103	4	20
12	4	48	107	5	20
13	1	13	108	6	6
மொத்தம்	108	762			240

கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma fx}{n} = \frac{762}{108}$

$= 7{\cdot}05$ (தோராயமாக)

இடைநிலை M_e $= \left(\frac{n+1}{2}\right)$ ஆவது உறுப்பு மதிப்பு

$= \left(\frac{108+1}{2}\right)$,, ,, ,,

$= 54{\cdot}5$,, ,, ,,

$= 7$ (தோராயமாக)

இடைநிலையிலிருந்து கணக்கிடப்பட்ட கூட்டுச்சாரசரி விலக்கம் δ_{M_e} $\Big\} = \frac{\Sigma f|d_{me}|}{n}$

$= \frac{240}{108}$

$= 2{\cdot}2$ (தோராயமாக)

கோட்டக் கெழு j $= \frac{\bar{x} - M_e}{\delta_{M_e}}$

$= \frac{7{\cdot}05 - 7}{2{\cdot}2}$

$= 0{\cdot}022$ (தோராயமாக)

மாதிரி 242

கீழே தரப்பட்டுள்ள அலைவெண் பரவலுக்குக் கால்மானக் கோட்டக் கெழுவைக் கணக்கிடுக :

பிரிவு x	அலைவெண் f
0— 5	9
5—10	12
10—15	18
15—20	26
20—25	16
25—30	13
30—35	7
35—40	4
40—45	3

(பி எஸ்சி.—சென்னை—1968)

தீர்வு :

கால்மானக் கோட்டக் கெழுவைக் கணக்கிடல் :

பிரிவு	மத்திய மதிப்பு x	அலைவெண் f	குவிஅலைவெண் $c.f$
0— 5	2.5	9	9
5—10	7.5	12	21
10—15	12.5	18	39
15—20	17.5	26	65
20—25	22.5	16	81
25—30	27.5	13	94
30—35	32.5	7	101
35—40	37.5	4	105
40—45	42.5	2	107
மொத்தம்		107	

முதல் கால்மானம் $Q_1 = \left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

$= \left(\frac{107+1}{4}\right)$,, ,, ,,

$= 27$,, ,, ,,

27 ஆவது உறுப்பு '10 — 15' என்ற பிரிவில் விழுகிறது.

ஆகவே, $$Q_1 = l_1 + \frac{\left(\frac{n+1}{4}\right) - C}{f} \times h$$

$$= 10 + \frac{27-21}{18} \times 5$$

$$= 10 + \frac{6 \times 5}{18}$$

$$= 10 + 1{\cdot}667$$

$$= \mathbf{11{\cdot}667}$$

இடைநிலை $M_e = \left(\frac{n+1}{2}\right)$ ஆவது அல்லது $\left(\frac{107+1}{2}\right)$ ஆவது அல்லது 54 ஆவது உறுப்பின் மதிப்பாகும்.

54 ஆவது உறுப்பு '15—20' என்ற பிரிவில் விழுகிறது.

ஆகவே, இடைநிலை $M_e = 15 + \frac{54-39}{26} \times 5$

$$= 15 + 2{\cdot}88$$

$$= \mathbf{17{\cdot}88}$$

மூன்றாவது கால்மானம் $Q_3 = 3\left(\frac{n+1}{4}\right)$ ஆவது உறுப்பின் மதிப்பு

= 81 ஆவது உறுப்பின் மதிப்பு

81 ஆவது உறுப்பு '20 25' ஆவது பிரிவில் விழுகிறது.

ஆகவே $Q_3 = 20 + \frac{81-65}{16} \times 5$

$$= 20 + 5$$

$$= \mathbf{25}$$

கால்மானக் கோட்டக் கெழு காணும் சூத்திரம்

$$j = \frac{Q_3 + Q_1 - 2M_e}{Q_3 - Q_1}$$

ஆகவே $j = \frac{25 + 11{\cdot}667 - 2(17{\cdot}88)}{25 - 11{\cdot}667}$

$$= \frac{0{\cdot}907}{13{\cdot}333}$$

$$= \mathbf{0{\cdot}068}$$

மாதிரி 243

A, *B* என்ற இரண்டு பிரிவுகளிலிருந்து, கணக்கிட்டு அறிந்த புள்ளி விவரங்கள் கீழ் வருமாறு :

விவரம்	*A*	*B*
இடைநிலை	19·64	24·46
முதல் கால்மானம்	13.46	15·64
மூன்றும் கால்மானம்	25·94	37·74

A, *B*, பிரிவுகளின் விலக்கம் கோட்டம் பற்றி ஒப்பிட்டுக் கூறு.

(திருவனந்தபுரம் பல்கலை)

பிரிவு *A*

கால்மான விலக்கம் $Q.D = \dfrac{Q_3 - Q_1}{2}$

$$= \frac{25{\cdot}94 - 19{\cdot}64}{2}$$

$$= 3{\cdot}15$$

கால்மானக் கோட்டக் கெழு $j = \dfrac{Q_3 + Q_1 - 2M_e}{Q_3 - Q_1}$

$$= \frac{25\ 94 + 13{\cdot}46 - 2(19{\cdot}64)}{25{\cdot}94 - 13\ 46}$$

$$= \frac{0{\cdot}12}{12{\cdot}48}$$

$$= 0.0096$$

பிரிவு *B*

கால்மான விலக்கம் $Q.D. = \dfrac{Q_3 - Q_1}{2}$

$$= \frac{37{\cdot}76 - 15{\cdot}64}{2}$$

$$= 11{\cdot}06$$

காலமானக் கொட்டக் கெழு $j = \frac{Q_3 + Q_1 - 2M_e}{Q_3 - Q_1}$

$$= \frac{37{\cdot}76 + 15{\cdot}64 - 2(24{\cdot}46)}{37{\cdot}76 - 15{\cdot}64}$$

$$= \frac{4{\cdot}48}{22{\cdot}12}$$

$$= 0{\cdot}2$$

பிரிவு A, B-க்களை ஒப்பிட, பிரிவு B அதிக விலக்கமும் கோட்டமும் உடையதாக இருப்பது காண்கின்றோம்.

மாதிரி 244

கீழ்க் காணும் பட்டியல், நகரங்கள் அ, ஆ என்பனவற்றின் மக்கள் தொகையின், வயதுப் பிரிவுப் பரவல்களைத் தருகிறது. இரு கார்ல் பியர்சனின் கோட்டக் கெழுக்களையும் கணக்கிட்டு, இவ்விரு பரவல்களின் அலைவெண்களின் கோட்டங்களை ஒப்பிடுக.

வயதுப் பிரிவு	மக்கள் தொகை (ஆயிரத்தில்)	
	நகர் அ	நகர் ஆ
0—10	10	10
10—20	12	12
20—30	24	18
30—40	32	25
40—50	29	16
50—60	11	14
60—70	3	8
70—80	1	0

தீர்வு :

வயதுப் பிரிவு	மத்திய மதிப்பு x	ஊகச்சராசரி $A=35$ யிலிருந்து விலக்கம் d'	நகர் அ				நகர் ஆ			
			f	fd'	fd'^2	குவி அலைவெண் cf	f	fd'	fd'^2	குவி அலைவெண் cf
0—10	5	—3	10	—30	90	10	10	—30	90	10
10—20	15	—2	12	—24	48	22	12	—24	48	22
20—30	25	—1	24	—24	24	46	18	—18	18	40
30—40	35	0	32	0	0	78	25	0	0	65
40—50	45	1	29	29	29	107	16	16	16	81
50—60	55	2	11	22	44	118	14	28	56	95
60—70	65	3	3	9	27	121	8	24	72	103
70—80	75	4	1	4	16	122	0	0	0	103
மொத்தம்			122	—14	278		103	—4	300	

நகர் அ :

மக்கள் தொகையின் கூட்டுச் சராசரி வயது

$$\bar{x} = A + \frac{\Sigma f d'}{n} \times C$$

$$= 35 + \frac{-14}{122} \times 10$$

$$= 33{\cdot}9 \text{ ஆண்டுகள்}$$

திட்ட விலக்கம் $\sigma = \left\{ \frac{\Sigma f d'^2}{\Sigma f} - \left(\frac{\Sigma f d'}{\Sigma f} \right)^2 \right\}^{\frac{1}{2}} \times C$

$$= \left\{ \frac{278}{122} - \left(\frac{14}{122} \right)^2 \right\}^{\frac{1}{2}} \times C$$

$$= 15 \text{ ஆண்டுகள்}$$

முகடு $M_o = 30 + \frac{32-24}{64-24-29} (40-30)$

$$= 37{\cdot}3$$

முதல் கால்மானம் $Q_1 = 20 + \frac{\left(\frac{123}{4} - 22 \right)}{24} \times 10$

$$= 23{\cdot}54$$

இடைநிலை $M_e = 30 + \frac{\left(\frac{123}{2} - 46 \right)}{32} \times 10$

$$= 34{\cdot}84 \text{ ஆண்டுகள்}$$

மூன்றும் கால்மானம் $Q_3 = 40 + \frac{92{\cdot}25 - 78}{29} \times 10$

$$= 44{\cdot}91$$

கார்ல் பியர்சனின் முதல் கோட்ட அளவைக் கெழு

$$= \frac{\text{கூட்டுச் சராசரி} - \text{முகடு}}{\text{திட்ட விலக்கம்}}$$

$$= \frac{33{\cdot}9 - 37{\cdot}6}{15}$$

$= -0{\cdot}25$ (தோராயமாக)

கார்ல் பியர்சனின் இரண்டாம் கோட்ட அளவைக் கெழு

$$= \frac{Q_3 + Q_1 - 2M_e}{Q_3 - Q_1}$$

$$= \frac{44{\cdot}91 + 23{\cdot}54 - 2(34{\cdot}84)}{44{\cdot}91 - 23{\cdot}54}$$

$= 0{\cdot}06$ (தோராயமாக)

நகர் ஆ :

கூட்டுச் சராசரி $\bar{y} = B + \frac{\Sigma f d'}{n} \times C$

$$= 35 + \frac{-4}{103} + 10$$

$= 34{\cdot}61$ ஆண்டுகள்

திட்ட விலக்கம் $\sigma = \left\{ \frac{\Sigma f d'^2}{\Sigma f} - \left(\frac{\Sigma f d'}{\Sigma f} \right)^2 \right\}^{\frac{1}{2}} \times C$

$$= \left\{ \frac{300}{103} - \left(\frac{-4}{103} \right)^2 \right\}^{\frac{1}{2}} \times 10$$

$= 17$ ஆண்டுகள்

முகடு $M_0 = 30 + \frac{25-18}{50-18-16} \times 10$

$= 34{\cdot}4$

முதலாவது, மூன்றாவது நீதிபதிகளின் தீர்ப்புகளுக்கிடையே உள்ள தரவரிசை இடையுறவுக் கெழு

$$= 1 - \frac{6\,(\Sigma d^2)}{n\,(n^2 - 1)}$$

$$= 1 - \frac{6 \times 50}{10(100 - 1)}$$

$$= 1 - \frac{360}{990}$$

$$= 1 - {\cdot}364 \quad = \mathbf{0{\cdot}636}$$

இரண்டாவது, மூன்றாவது நீதிபதிகளின் தீர்ப்புகளுக்கிடையே உள்ள தர வரிசை இடையுறவுக் கெழு

$$= 1 - \frac{6\,(\Sigma d^2)}{n\,(n^2 - 1)}$$

$$= 1 - \frac{6 \times 214}{10(100 - 1)}$$

$$= 1 - \frac{1284}{990}$$

$$= 1 - 1{\cdot}297 \quad = -\mathbf{0{\cdot}297}$$

I, III-வது குழுக்களில் கண்ட தரவரிசை இடையுறவுக் கெழு எதிரிடையுறவு எண்ணாக இருக்கிறது. முதலாவது, மூன்றாவது நீதிபதிகளின் தீர்ப்புகளுக்கு இடையேயுள்ள தரவரிசை இடையுறவுக் கெழு (0·636) ஒன்று மட்டும்தான் நேரிடை இடையுறவாக இருக்கிறது ஆகையால் இவ்விரு நீதிபதிகளும் பொதுவான உறவுடைய அழகுக் கண்ணோட்டமுடையவர்களாக இருப்பது காண்கிறோம்

மாதிரி 305

கீழ்க்காணும் பட்டியல் 12 விற்பனையாளர்களின் திறமைத் தர வரிசையையும், வேலையிலிருந்த காலவரையின் தர வரிசையையும் தருகிறது. தர வரிசைக் கெழுவைக் கிணக்கிடு.

விற்பனையாளர்கள்	*D*	*K*	*L*	*A*	*C*	*H*	*E*	*I*	*J*	*F*	*B*	*G*
திறமை (*X* வரிசை)	1	2	3	5	5	5	7	8	9	10	11	12
வேலைக் காலம் (*Y* வரிசை)	2	1	5	3	9	7·5	7·5	6	4	11·5	10	11·5

தீர்வு :

தர வரிசை இடையுறவுக் கெழுவைக் கணக்கிடும் அட்டவணை:

விற்பனையாளர்கள்	திறமைத் தர வரிசை *X*	வேலைக்காலத் தர வரிசை *Y*	விலக்கம் $d = X-Y$	விலக்க வர்க்கம் d^2
D	1	2	—1	1
K	2	1	1	1
L	3	5	—2	4
A	5	3	2	4
C	5	9	—4	16
H	5	7·5	—2·5	6·25
E	7	7·5	—0·5	6·25
I	8	6	2	4
J	9	4	5	25
F	10	11·5	—1·5	2·25
B	11	10	1	1
G	12	11·5	0·5	0·25
மொத்தம்				65·0

மேற்கண்ட பட்டியல் மூலம் $\Sigma d^2 = 65{\cdot}0$

பட்டியலில், மூன்று தர வரிசை சொல்ல முடியாத முடிச்சுகள் (Ties) முறையே மூன்றாகவும் இரண்டாக இரண்டும், இருப்பதால் சரி செய்த விலக்கங்களின் வர்க்கக் கூட்டல் காணவேண்டும்.

$$\therefore \Sigma d^2 \text{ (சரி செய்யப்பட்டது)} = 65{\cdot}0 + \tfrac{1}{12}(3^3-3) + \tfrac{1}{12}(2^3-2) + \tfrac{1}{12}(2^3-2)$$

$$= 68{\cdot}0$$

$$\text{தரவரிசை இடையுறவுக் கெழு } r = 1 - \frac{6\,(\Sigma d^2)}{n\,(n^2-1)}$$

$$r = 1 - \frac{6 \times 68}{12\,(144-1)}$$

$$= 0{\cdot}76 \text{ (தோராயமாக)}$$

மாதிரி 306

ஒரு கலைப் போட்டிக்கு அனுப்பப்பட்ட 12 படங்களை இரண்டு நீதிபதிகள் கீழ்க்காணுமாறு தர வரிசைப்படுத்தித் தீர்ப்பு அளித்தனர். தர வரிசை இடையுறவுக் கெழுவைக் கணக்கிடு.

படங்கள்	*A*	*B*	*C*	*D*	*E*	*F*	*G*	*H*	*I*	*J*	*K*	*L*
முதல் நீதிபதி வழங்கிய தர வரிசை	5	9	6	7	1	3	4	12	2	11	10	8
இரண்டாம் நீதிபதி வழங்கிய தர வரிசை	5	8	9	11	3	1	2	10	4	12	7	6

(ஐ ஏ.எஸ்.—1956)

தீர்வு :

தர வரிசை இடையுறவுக் கெழுவைக் கணக்கிடல் :

படங்கள்	முதல் நீதிபதி வழங்கிய தர வரிசை X	இரண்டாவது நீதிபதி வழங்கிய தர வரிசை Y	விலக்கம் d (= X − Y)	விலக்க வர்க்கம் d^2
A	5	5	0	0
B	9	8	1	1
C	6	9	—3	9
D	7	11	—4	16
E	1	3	—2	4
F	3	1	2	4
G	4	2	2	4
H	12	10	2	4
I	2	4	—2	4
J	11	12	—1	1
K	10	7	3	9
L	8	6	2	4
மொத்தம்				60

மேற்கண்ட பட்டியலில்

$$n = 12$$

$$\Sigma d^2 = 60$$

தரவரிசை இடையுறவுக் கெழு

$$r = 1 - \frac{6\,(\Sigma d^2)}{n\,(n^2-1)}$$

$$= 1 - \frac{6 \times 60}{12\,(12^2-1)}$$

$$= 1 - \frac{360}{1716}$$

$$= 1 - 0{\cdot}2098$$

$$= \mathbf{0{\cdot}7902}$$

மாதிரி 307

ஒரு பொருளின் விற்பனைக்கு வந்த சரக்குக் குறியீட்டெண்ணும் விலையும் கீழேயுள்ள பட்டியலில் தரப்பட்டுள்ளன. தகுந்த மாற்றங்களை முடிச்சு (Tie) எண்களுக்குக் கொடுத்து தர வரிசைக் கெழுவைக் கண்டுபிடி.

விற்பனைக்கு வந்த சரக்குக் குறியீட்டெண்	124	100	105	112	102	93	99	115
விலைக் குறியீட்டெண்	80	100	102	91	100	111	109	100
விற்பனைக்கு வந்த சரக்குக் குறியீட்டெண்	123	104	99	113	121	103	101	
விலைக் குறியீட்டெண்	89	104	111	102	98	111	123	

தீர்வு :

தரவரிசை இடையுறவுக் கெழுவைக் கணக்கிடல் :

விற்பனைக்கு வந்த சரக்குக் குறியீட்டெண்	விலைக் குறியீட்டெண்	வி.வ.ச.குறியீட்டெண் தரவரிசை X	விலைக் குறியீட்டெண் தரவரிசை Y	விலக்கம் $d = X-Y$	விலக்க வர்க்கம் d^2
124	80	1	15	—14	196
100	100	12	10	2	4
105	102	7	7·5	—5	0·25
112	91	6	13	—7	49
102	100	10	10	0	0
93	111	15	3	12	144
99	109	13·5	5	8·5	72·25
115	100	4	10	— 6	36
123	89	2	14	—12	144
104	104	8	6	2	4
99	111	13·5	3	10·5	110·25
113	102	5	7·5	—2·5	6·25
121	98	3	12	9	81
103	111	9	3	6	36
101	123	11	1	10	100
மொத்தம்					983·00

மேற்கண்ட பட்டியல் மூலம் $\Sigma d^2 = 983{\cdot}00$

மேற்கண்ட பட்டியலில் நான்கு தரவரிசைகளின் சொல்ல முடியாத முடிச்சுகள் (Ties) முறையே மூன்றாக இரண்டும், இரண்டாக இரண்டும் இருப்பதால், சரி செய்த விலக்கங்களின் வர்க்கக் கூட்டல் காணவேண்டும்.

$$\therefore \Sigma d^2 \text{ (சரி செய்யப்பட்டது)} = 983 + \frac{(3^3-3)}{12} + \frac{(3^3-3)}{12} + \frac{(2^3-2)}{12} + \frac{(2^3-2)}{12}$$

$$= 983+2+2+\tfrac{1}{2}+\tfrac{1}{2}$$

$$= 988$$

$$\text{தர வரிசை இடையுறவுக் கெழு } r = 1 - \frac{6(\Sigma d^2)}{n(n^2-1)}$$

$$= 1 - \frac{6\times 988}{15(15^2-1)}$$

$$= 1 - \frac{5928}{3360}$$

$$= 1-1{\cdot}76$$

$$= -0{\cdot}76$$

கன்கரண்ட் விலக்க முறை
(Concurrent Deviation Method)

மாதிரி 308

கீழே தரப்பட்ட விவரப் பட்டியலுக்கு கன்கரண்ட் விலக்கக் கெழுவைக் கணக்கிடு :

ஆண்டு	1943	1944	1945	1946	1947	1948	1949	1950	1951
விற்பனைக்கு வந்த சரக்கு (x)	160	164	172	182	166	170	178	192	186
விலை (y)	292	280	260	234	266	254	230	190	200

தீர்வு : கன்கரண்ட் விலக்கக் கெழுவைக் கணக்கிடல் :

ஆண்டு	விற்பனைக்கு வந்த சரக்கு வரிசை x		விலை வரிசை y		பெருக்கல் $d_x \times d_y$
	குறியீட்டெண் x	முன் வருடத்தில் இருந்து விலக்கம் d_x	குறியீட்டெண் y	முன் வருடத்தில் இருந்து விலக்கம் d_y	
1943	160		292		
1944	164	+	280	—	
1945	172	+	260	—	—
1946	182	+	234	—	—
1947	166	—	266	+	—
1948	170	+	254	—	—
1949	178	+	230	—	—
1950	192	+	190	—	—
1951	186	—	200	+	—
		$n=8$		$n=8$	0

கன்கரண்ட் விலக்கக் கெழுச் சூத்திரம் :

$$\therefore \quad r = \pm\sqrt{\pm\left(\frac{2c-n}{n}\right)}$$

$$\therefore \quad r = \pm\sqrt{\pm\left(\frac{0-8}{8}\right)}$$

$$= -\sqrt{-(-1)}$$

ஆகவே, கன்கரண்ட் விலக்க முறையில் விற்பனைச் சரக்கிற்கும் விலைக்கும் இடையே முழு அளவு எதிரிடையுறவு திகழ்வதைக் காணலாம்.

மாதிரி 309

கீழ்க்காணும் விவரங்களுக்குக் கன்கரண்ட் விலக்கக் கெழுவைக் கணக்கிடுக.

n = கண்டறிந்த ஜோடி எண்கள் = 47

c = கன்கரண்ட் விலக்க எண்கள் = 15

தீர்வு :

கன்கரண்ட விலக்கக் கெழு $r = \pm\sqrt{\pm\left(\frac{2c-n}{n}\right)}$

மேற்கண்ட சூத்திரத்தில் மதிப்புகளைப் பிரதியிட்ட பின் :

$$r = \pm\sqrt{\pm\frac{(2\times 15-49)}{49}}$$

$$= -\sqrt{-\left(\frac{-19}{49}\right)}$$

$$= -\frac{\sqrt{19}}{7} = -\frac{(-4{\cdot}36)}{7}$$

$$= \frac{4{\cdot}36}{7} = 0{\cdot}623 \quad \text{(தோராயமாக)}$$

மாதிரி 310

கீழ்க் காணும் பட்டியல் 12 மாதங்களுக்கு எஃகு உற்பத்தியையும் (டன்களில்) எஃகுத் தொழிலில் வேலை கிடைக்காதவர்களின் எண்ணிக்கையையும் (ஆயிரத்தில்) கொடுக்கிறது. கன்கரண்ட் விலக்கக் கெழுவைக் கணக்கிடுக.

மாதங்கள்	எஃகு உற்பத்தி (1000 டன்களில்)	வேலை கிடைக்காதவர்கள் (ஆயிரத்தில்)
சனவரி	16·0	180
பிப்ரவரி	18·4	195
மார்ச்	18·6	183
ஏப்ரல்	17·0	222
மே	14·4	276
ஜூன்	11·8	471
ஜூலை	10·2	390
ஆகஸ்டு	13·2	318
செப்டம்பர்	15·8	174
அக்டோபர்	15·2	240
நவம்பர்	16·4	150
டிசம்பர்	18·6	135

தீர்வு :

கன்கரண்ட் விலக்கச் செழுமைக் கணக்கிடல் :

மாதங்கள்	எஃகு உற்பத்தி (1000 டன்னில்)		எந்தத் தொழிலில் வேலை கிடைக்காதவர்கள் (ஆயிரத்தில்)		பெருக்கல் $d_x \times d_y$
	உற்பத்தி (x)	முன் மாதத்திலிருந்து விலக்கம் d_x	எண்ணிக்கை (ஆயிரத்தில்) (y)	முன் மாதத்திலிருந்து விலக்கம் d_y	
சனவரி	16·0		180		
பிப்ரவரி	18·4	+	195	+	+
மார்ச்	18·6	+	183	—	—
ஏப்ரல்	17·0	—	222	+	—
மே	14·4	—	276	+	—
சூன்	11·8	—	471	+	—
சூலை	10·2	—	390	—	+
ஆகஸ்டு	13·2	+	318	—	—
செப்டம்பர்	15·8	+	174	—	—
அக்டோபர்	15·2	—	240	+	—
நவம்பர்	16·4	+	150	—	—
டிசம்பர்	18·6	+	135	—	—
		$n=11$		$n=1$	$c=2$

கன்கரண்ட் விலக்கக் கெழுச் சூத்திரம் :

$$r = \pm\sqrt{\pm\left(\frac{2c-n}{n}\right)}$$

$$\therefore r = \pm\sqrt{\pm\left(\frac{-7}{11}\right)}$$
$$= -\sqrt{-(-0{\cdot}6364)}$$
$$= -\sqrt{0{\cdot}6364}$$
$$= -0{\cdot}798$$

எஃகு உற்பத்திக்கும் எஃகுத் தொழிலில் வேலையற்றவர்களுக்கும் இடையே உள்ள கன்கரன்ட் விலக்கக் கெழு —0·798 ஆகும். ஆதலின் மேற்கண்ட இரண்டிலும் உயர் அளவு எதிரிடைத் தொடர்பு இருத்தலைக் காணலாம்.

மாதிரி 311

கீழ்க்காணும் பட்டியலில் தந்துள்ள 12 ஆண்டுகளின் அரிசி விலைக்கும் மழையளவிற்கும் இடையேயுள்ள கன்கரண்ட் விலக்கக் கெழுவைக் கணக்கிடு.

ஆண்டுகள்	அரிசி விலை (மூட்டைக்கு)	வருட மழையளவு (அங்குலத்தில்)
1931	25·3	126
1932	23·9	135
1933	22·3	137
1934	33·3	137
1935	33·0	131
1936	32·5	134
1937	32·8	139
1938	32·0	131
1939	32·2	147
1940	32·4	137
1941	33·1	142
1942	33·6	138

தீர்வு :

கன்கரண்ட் விலக்கக் கெழு கணக்கிடல் :

ஆண்டுகள்	அரிசி விலை		வருட மழையளவு		பெருக்கல் $d_x d_y$
	அரிசி விலை (மூட்டைக்கு) x	முன் ஆண்டிலிருந்து விலக்கம் d_x	மழையளவு (அங்குலத்தில்) y	முன் ஆண்டிலிருந்து விலக்கம் δ_y	
1931	25·3		126		
1932	23·9	—	135	+	—
1933	22·3	—	137	+	—
1934	33·3	+	137	0	0
1935	33·0	—	131	—	+
1936	32·5	—	134	+	—
1937	32·8	+	139	+	+
1938	32·0	—	133	—	+
1939	32·2	+	147	+	+
1940	32·4	+	137	—	—
1941	33·1	+	142	+	+
1942	33·6	+	138	—	—
		$n=11$		$n=11$	$c=5$

கன்கரண்ட் விலக்கக் கெழுச் சூத்திரம் :

$$r = \pm\sqrt{\pm\left(\frac{2c-n}{n}\right)}$$

$$= \pm\sqrt{\pm\left(\frac{2\times 5-11}{11}\right)}$$

$$= -\sqrt{-\left(-\frac{1}{11}\right)}$$

$$= -\sqrt{\frac{11}{121}} = -\frac{3\cdot 317}{11} = -0\cdot 301$$

மாதிரி 312

கீழ்க் காணும் விவரங்களுக்கு (1) கார்ல் பியர்சன் (2) ஸ்பியர்மேன் தரவரிசை (3) கன்காரண்ட் விலக்கம் ஆகிய முறைகளில் இடையுறவுக் கெழுவினைக் கண்டுபிடி.

விற்பனைக்கு வந்த சரக்கு	285	290	280	281	275	284	280	286
விலை	15	19	21	20	19	15	18	16

தீர்வு :

(1) கார்ல் பியர்சனின் இடையுறவுக் கெழு கணக்கிடல் :

விற்பனைக்கு வந்த சரக்கு (x)	(290) லிருந்து விலக்கம் d_x	விலக்க வர்க்கம் d_x^2	விலை (y)	(20) லிருந்து விலக்கம் d_y	விலக்க வர்க்கம் d_y^2	விலக்கங்களின் பெருக்கல் $d_x \times d_y$
285	–5	25	15	–5	25	25
290	0	0	19	–1	1	0
280	–10	100	21	1	1	–10
281	–9	81	20	0	0	0
275	–15	225	19	–1	1	15
284	–6	36	15	–5	25	30
280	–10	100	18	–2	4	20
286	–4	16	16	–4	16	16
$n=8$	–59	583	$n=8$	–17	73	96

கார்ல் பியர்சனின் இடையுறவுக் கெழுச் சூத்திரம்

$$r = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x)\,(\Sigma d_y)}{n}}{\sqrt{\left[\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right] \times \left[\Sigma d_y^2 - \frac{(\Sigma \sigma_y)^2}{n}\right]}}$$

மேற்கண்ட பட்டியலிலிருந்து,

$$n = 8\,; \qquad \Sigma d_x = -59\,; \qquad \Sigma d_x^2 = 583\,;$$

$$\Sigma d_y = -17\,; \qquad \Sigma d_y^2 = 73\,; \qquad \Sigma d_x d_y = 96.$$

$$\therefore \quad r = \frac{\left(96 - \frac{(-56 \times -17)}{8}\right)}{\sqrt{\left[583 - \frac{(-59)^2}{8}\right] \times \left[73 - \frac{(-17)^2}{8}\right]}}$$

$$= \frac{96 - 125{\cdot}375}{\sqrt{(583 - 435{\cdot}125)\ (73 - 36{\cdot}125)}}$$

$$= \frac{-29{\cdot}375}{\sqrt{147{\cdot}875 \times 36{\cdot}875}}$$

$$= -0{\cdot}4$$

(2) ஸ்பியர்மேன் தரவரிசை முறையில் இடையுறவுக் கெழுவினைக் கணக்கிடல் :

(x)	தர வரிசை	(y)	தர வரிசை	தர வரிசை விலக்கங்கள் (d)	விலக்க வர்க்கம் d^2
285	3	15	7·5	—4·5	20 25
290	1	19	3·5	—2·5	6·25
280	6·5	21	1,	5·5	30·25
281	5	20	2	3	9·00
275	8	19	3·5	4·5	20·25
284	4	15	7·5	—3·5	12·25
280	6·5	18	5	1·5	2·25
286	2	16	6	—4	16·00
$n=8$		$n=8$			$\Sigma d^2 = 116{\cdot}5$

ஸ்பியர்மேனின் தரவரிசை இடையுறவுக் கெழுச் சூத்திரம் :

$$r = 1 - \frac{6\Sigma d^2}{n(n^2-1)}$$

ஆகவே, $r = 1 - \frac{(6 \times 116{\cdot}5)}{8\,(64-1)}$

$$= 1 - \frac{699}{504}$$

$$= -\frac{195}{504}$$

$$= -0{\cdot}39$$

(3) கன்கரண்ட் விலக்க முறையில் இடையுறவுக் கெழுவினைக் கணக்கிடல் :

வரிசை எண்	x	முன் எண்ணிலிருந்து விலக்கம் d_x	y	முன் எண்ணிலிருந்து விலக்கம் d_y	கன்கரண்ட் விலக்கம்
1	285		15		
2	290	+	19	+	+
3	280	—	21	+	—
4	281	+	20	—	—
5	275	—	19	—	+
6	284	+	15	—	—
7	280	—	18	+	—
8	286	+	16	—	—
		$n=7$		$n=7$	$c=2$

கன்கரண்ட் விலக்க இடையுறவுக் கெழுச் சூத்திரம் :

$$r = \pm \sqrt{\pm \left(\frac{2c-n}{n}\right)}$$

$$= \pm \sqrt{\pm \frac{2 \times 2 - 7}{7}}$$

$$= -\sqrt{\frac{3}{7}} = -\sqrt{43}$$

$$= -0{\cdot}65$$ (தோராயமாக)

மாதிரி 313

கொடுக்கப்பட்டவைகள்:

x, y வரிசைகளின் கண்டறியப்பட்ட ஜோடி எண்கள் $= 15$

x வரிசையின் கூட்டுச் சராசரி $= 25$

x வரிசையின் திட்ட விலக்கம் (Standard deviation) $= 3{\cdot}01$

y வரிசையின் கூட்டுச் சராசரி $= 18$

y வரிசையின் திட்ட விலக்கம் $= 3{\cdot}03$

x, y வரிசைகளின் விலக்கங்களின் பெருக்கலின் கூடுதல் $= 122$

(i) x, y-களின் இடையுறவுக் கெழு

(ii) இடையுறவுக் கெழுவின் ஊகப் பிழை ஆகியவற்றைக் கண்டுபிடி.

(பி.காம்.—1948)

தீர்வு :

$$\text{(i)} \quad r = \frac{\Sigma x' y'}{n\,\sigma_x\,\sigma_y}$$

$$= \frac{122}{15 \times 3{\cdot}01 \times 3{\cdot}03} = \frac{122}{136{\cdot}8045}$$

$$= 0{\cdot}89$$

ஆகவே, இடையுறவுக் கெழு $= \mathbf{0{\cdot}89}$.

$$\text{(ii)} \quad \text{ஊகப் பிழை} = 0{\cdot}6745\ \frac{(1-r^2)}{\sqrt{n}}$$

$$= 0{\cdot}6745\ \frac{1-(0{\cdot}89)^2}{\sqrt{15}}$$

$$= 0{\cdot}036$$

ஆகவே, இடையுறவு ஊகப் பிழை $= \mathbf{0{\cdot}036}$

மாதிரி 314

16 கண்டறிந்த எண்களைக் கொண்ட இடையுறவுக் கணக்கில் $0{\cdot}6745 = \frac{2}{3}$ என ஊகித்துக்கொண்டு, இடையுறவுக் கெழுவின்

ஊகப் பிழையின் மதிப்பு 0·125 எனக் கணக்கிடப்பட்டது. r-ன் மதிப்பு சிறப்பு வாய்ந்ததாக (significant) இராது என நிரூபி.

(பி.காம்.—1964)

தீர்வு :

$$P.E = \frac{\frac{2}{3}(1-r^2)}{\sqrt{n}}$$

$$0\,125 = \frac{\frac{2}{3}(1-r^2)}{\sqrt{16}}$$

அல்லது $0{\cdot}125 = \dfrac{\frac{2}{3}-\frac{2}{3}r^2}{4}$

அல்லது $0{\cdot}5 = \frac{2}{3}-\frac{2}{3}r^2$

அல்லது $5-\frac{2}{3} = \frac{2}{3}r^2$

அல்லது $\dfrac{-5}{30} = -\frac{2}{3}r^2$

அல்லது $r^2 = \dfrac{15}{60} = 0{\cdot}25$

$\therefore \quad r = 0{\cdot}5$

ஆகவே, $r(=0{\cdot}5)$ என்பது ஆறுமடங்கு ஊகப் பிழை மதிப்பிற்குக் குறைவாக இருப்பதால் r சிறப்பற்றது (insignificant).

மாதிரி 315

எந்த r மிகவும் சிறப்புடையது (significant) ?

(i) $r = 0{\cdot}8$; ஊகப் பிழை = 0·09

(ii) $r = 0{\cdot}7$; ஊகப் பிழை = 0·05

(பி.காம்.—1963)

தீர்வு :

(i) $\dfrac{0{\cdot}8}{0{\cdot}09} = 9$ (r—ன் மதிப்பு ஊகப் பிழையைப் போல 9 மடங்கு)

(ii) $\dfrac{0{\cdot}7}{0{\cdot}05} = 14$ (r—ன் மதிப்பு ஊகப் பிழையைப் போல 14 மடங்கு)

எனவே, இரண்டாவது கணக்கிலுள்ள r மிகவும் சிறப்புடையது (more significant) ஆகும்.

மாதிரி 316

கொடுக்கப்பட்டவை :

உடன் மாற்றம் (covariance) = 27;

இடையுறவுக் கெழு r = 0·6;

y-ன் மாறுபாடு = 25;

x-ன் திட்ட விலக்கத்தைக் கண்டுபிடி

(பி.காம்.—1957)

தீர்வு

உடன்மாற்றம் (covariance) = $r \times \sigma_x \times \sigma_y$

அல்லது $27 = 0 \cdot 6 \times \sigma_x \times \sqrt{25}$

$= 0 \cdot 6 \times \sigma_x \times 5$

அல்லது $27 = 3\ \sigma_x$

அல்லது x-ன் திட்டவிலக்கம்

$$= \frac{27}{3} = 9$$

மாதிரி 317

x, y இரண்டும் தொடர்புடைய மாறிகள். அவற்றைத் தொடர்புபடுத்தும் சில இடையுறவுக் கெழுக்கள் (r) கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(a) $r = 1$; (b) $r = -1$; (c) $r = 0$; (d) $r = \frac{1}{2}$

(e) $r = -\frac{1}{2}$.

ஒவ்வொரு r மதிப்புக்கும் உரிய விலக்கப் பொருள் என்ன ?

(பி.ஏ.—மதுரை—1972)

(a) $r = 1$ ஆக இருந்தால் x, y ஆகிய இரு தொடர்புடைய மாறிகளுக்கிடையே முழு அளவு நேரிடை இடையுறவு இருக்கிறது எனக் கொள்ளலாம்.

(b) $r = -1$ ஆக இருந்தால், x, y ஆகிய இரு தொடர்புடைய மாறிகளுக்கிடையே முழு அளவு எதிரிடை இடையுறவு இருக்கிறது என அறியலாம்.

ஒரு மாறி மதிப்புகளின் அதிகரிப்பு, மற்றதன் வீழ்ச்சியாலும், வீழ்ச்சி மற்றதன் அதிகரிப்பாலும் பின் தொடரப்பட்டால் அவ்விரு மாறிகளுக்கிடையே எதிரிடை இடையுறவு இருப்பதாகக் கூறலாம். இங்கு இது முழு அளவில் இருப்பதைக் காண்கிறோம்.

(c) $r=0$ ஆக இருந்தால் x,y ஆகிய இரு தொடர்புடைய மாறிகளுக்கிடையே இடையுறவு சிறிதும் இல்லை எனப் பொருள். ஆகவே x,y இரண்டும் சார்பிலா மாறிகள்.

(d) $r=\frac{1}{2}$ ஆக இருந்தால் x,y ஆகிய இரு தொடர்புடைய மாறிகளுக்கிடையே பாதியளவு நேரிடை இடையுறவு இருக்கிறது எனப் பொருள் கொள்ளலாம்.

(e) $r=-\frac{1}{2}$ ஆக இருந்தால் x,y ஆகிய இரு தொடர்புடைய மாறிகளுக்கிடையே பாதியளவு எதிரிடை இடையுறவு இருக்கிறது எனப் பொருள் கொள்ளலாம்.

மாதிரி 318

கார்ல் பியர்சனின் இடையுறவுக் கெழுவினைப் பொருள் படுத்தும் விதி முறைகளைக் கூறு.

கண்டறிந்த எண்கள் (i) 50 ; (ii) 500 ஆக இருந்தால் கீழ்க்காணும் r-ன் மதிப்புகளுக்கு என்ன சிறப்புத் தன்மை கிடைக்கிறது ?

$$r = 0{\cdot}2\ ;\quad r = 0{\cdot}4\ ;\quad r = 0{\cdot}9.$$

(பி·காம். — 1949)

தீர்வு :

கார்ல் பியர்சனின் இடையுறவுக் கெழுவின் ஊகப் பிழை காணும் சூத்திரம் $= 0{\cdot}6745\left[\dfrac{1-r^2}{\sqrt{n}}\right]$

மேற்கண்ட ஊகப் பிழையை அடிப்படையாகக் கொண்ட இடையுறவுக் கெழுவிற்குக் கீழ்க்காணும் சிறப்புத்தன்மை கொடுக்கலாம் :

(1) r ஆனது ஊகப் பிழையை விடக் குறைவாக இருந்தால் அங்கு இடையுறவு தென்படவில்லை.

(2) r ஆனது .6 மடங்கு ஊகப் பிழையை விடக் கூடுதலாக இருந்தால் இடையுறவு சிறப்பாக இருக்கிறது.

(3) ஊகப் பிழையானது உறவில் குறைவாக இருந்தால் இடையுறவைக் கணக்கிட வேண்டியதில்லை (அதாவது r-ன் மதிப்பு 0·3-க்குக் குறைவாய் இருக்கும்பொழுது)

(4) ஊகப் பிழையானது உறவில் குறைவாக இருந்தால் இடையுறவு கவனிக்கும் அளவிற்கு இருக்கிறது. (அதாவது r-ன் மதிப்பு 0·5-க்கு அதிகமாக இருக்கும்பொழுது)

(5) ஊகப் பிழையானது ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறைவாக இருப்பின், இடையுறவானது மிக உயரிய அளவில் சிறப்பாகத் தெரிகிறது. (அதாவது r-ன் மதிப்பு 0·75-க்குக் கூடுதலாக இருக்கும்பொழுது)

(i) $n = 50$

(a) $r = 0{\cdot}2$ ஆக இருக்கும்போது ஊகப் பிழை

$$= 0{\cdot}6745 \; \frac{1-r^2}{\sqrt{n}}$$

$$= 0{\cdot}6745 \times \frac{1-(0{\cdot}2)^2}{\sqrt{50}}$$

$$= \mathbf{0{\cdot}09} \quad \text{(தோராயமாக)}$$

இங்கு r-ன் மதிப்பு 3 மடங்கு ஊகப் பிழையை விடக் குறைவாக இருக்கிறது. ஆகவே இடையுறவு சிறப்பாக இல்லை.

(b) $r = 0{\cdot}4$ ஆக இருக்கும்போது ஊகப் பிழை

$$= 0{\cdot}6745 \; \frac{1-r^2}{\sqrt{n}}$$

$$= 0{\cdot}6745 \; \frac{1-(\cdot 4)^2}{\sqrt{50}}$$

$$= \mathbf{0{\cdot}08} \quad \text{(தோராயமாக)}$$

இங்கு r-ன் மதிப்பு 5 மடங்கு ஊகப் பிழைக்குச் சமமாக இருக்கிறது. ஆகவே இடையுறவு நிச்சயிக்கத் தக்க நம்பிக்கையுடன் சிறப்பாக இருக்கிறது எனக் கொள்ளலாம்.

(c) $r = 0{\cdot}9$ ஆக இருக்கும்போது, ஊகப் பிழையானது

$$= 0{\cdot}6745 \; \frac{1-r^2}{\sqrt{n}}$$

$$= 0{\cdot}6745 \ \frac{1-(0{\cdot}9)^2}{\sqrt{50}}$$

$$= \mathbf{0{\cdot}018}$$

இங்கு r-ன் மதிப்பு 50 மடங்கு ஊகப் பிழைக்குச் சமமாக இருக்கிறது. ஆகவே r-ன் மதிப்பு அதிக அளவு சிறப்பாகத் தெரிகிறது (highly significant).

(ii) $n = 500$

(a) $r = 0{\cdot}2$ ஆக இருக்கும்போது ஊகப் பிழை

$$= 0{\cdot}6745 \ \frac{1-r^2}{\sqrt{n}}$$

$$= 0{\cdot}6745 \ \frac{1-(0{\cdot}2)^2}{\sqrt{500}}$$

$$= \mathbf{0{\cdot}029}$$

இங்கு r-ன் மதிப்பு 6 மடங்கு ஊகப் பிழையைவிட அதிகமாக இருப்பினும் 0·3 மதிப்புக்குக் குறைவாக இருப்பதைக் காணலாம். ஆகவே, இடையுறவைக் கவனிக்கத் தேவையில்லை.

(b) $r = 0{\cdot}4$ ஆக இருக்கும்போது ஊகப் பிழை

$$= 0{\cdot}6745 \ \frac{1-r^2}{\sqrt{n}}$$

$$= 0{\cdot}6745 \ \frac{[\,1-(0{\cdot}4)^2\,]}{\sqrt{n}}$$

$$= \mathbf{0{\cdot}025}$$

இங்கு r-ன் மதிப்பு 0·4 ஆக இருப்பதாலும் 16 மடங்கு ஊகப் பிழைக்குச் சமமாக இருப்பதாலும் இடையுறவு சிறப்பாக இருப்பதாகக் கூறலாம்.

(c) $r = 0 \cdot 9$ ஆக இருக்கும்போது ஊகப் பிழை

$$= 0{\cdot}6745 \ \frac{1-r^2}{\sqrt{n}}$$

$$= 0{\cdot}6745 \ \frac{1-(0{\cdot}9)^2}{\sqrt{500}}$$

$$= \mathbf{0{\cdot}006}$$

இங்கு, $r = 0{\cdot}9$ ஆகவும் 150 மடங்கு ஊகப் பிழைக்குச் சமமாகவும் இருப்பதால் இடையுறவு அதிக அளவு சிறப்பாக (highly significant) இருக்கிறது.

மாதிரி 319

கீழ்க்காணும் விவரங்களுக்கு இடையுறவுக் கெழுவைக் கணக்கிடுக.

(a) y-ன் திட்ட விலக்கம் $= 2{\cdot}5$ யூனிட்டுகள்

x-ன் திட்ட விலக்கம் $= 3{\cdot}6$ யூனிட்டுகள்

x, y களின் உடன் தொடர்பு மாறி (covariance) $= -1{\cdot}8$ யூனிட்டுகள்

(b) x-ன் திட்ட விலக்கம் $= 3{\cdot}6$ யூனிட்டுகள்

y-ன் திட்ட விலக்கம் $= 1{\cdot}4$ யூனிட்டுகள்

y சார்ந்த x-ன் ஒட்டுறவுக் கெழு $= 0{\cdot}28$, $\frac{x \text{ யூனிட்டுகள்}}{y \text{ யூனிட்டுகள்}}$

தீர்வு :

கார்ல் பியர்சனின் இடையுறவுக் கெழுச் சூத்திரம் :

$$r = \frac{\mu''}{\sigma_x \sigma_y}$$

(a) இங்கு, $\sigma_y = 2{\cdot}5$; $\sigma_x = 3{\cdot}6$ $\mu'' = -1{\cdot}8$

$$r = \frac{-1{\cdot}8}{3{\cdot}6 \times 2{\cdot}5}$$

$$= \mathbf{-0{\cdot}2}$$

(b) இங்கு, $\sigma_x = 3{\cdot}0$; $\sigma_y = 1{\cdot}4$; $b_{yx} = 0{\cdot}28$

y சார்ந்த x-ன் ஒட்டுறவுக் கெழு $b_{yx} = r\,\frac{\sigma_y}{\sigma_x}$

இங்கு இடையுறவுக் கெழு rஐக் கண்டு பிடிக்கவேண்டும்.

$$\therefore \quad r = b_{yx} \times \frac{\sigma_x}{\sigma_y}$$

$$ie., \; r = 0{\cdot}28 \times \frac{3{\cdot}0}{1{\cdot}4}$$

$$= 0{\cdot}6$$

ஆகவே, $r = 0{\cdot}6$

மாதிரி 320

ஒரு கணக்கிடும் இயந்திரம் 25 ஜோடி கண்டறிந்த x, y மாறிகளின் இடையே உள்ள இடையுறவுக் கெழுவைக் கணக்கிடும் போது கீழே கொடுத்துள்ள மதிப்புகளைக் கொடுத்தது :

$$n = 25; \quad \Sigma x = 125; \quad \Sigma x^2 = 650;$$

$$\Sigma y = 100; \quad \Sigma y^2 = 960; \quad \Sigma xy = 508$$

உண்மையான ஜோடிகளின் மதிப்புகள்

x	y
8	12
6	8

ஆக இருக்கும் போது தவறுதலாக

x	y
6	14
8	6

என்ற மதிப்பாகக் கொண்டு கணக்கிடும் இயந்திரம் கணக்கிட்டு மேற்கண்ட மதிப்புகளைக் கொடுத்துள்ளதைப் பின்பு சரி பார்க்கும் போது கண்டுபிடிக்கப்பட்டது.

சரியான இடையுறவுக் கெழுவின் மதிப்பைக் கண்டுபிடித்துக் காட்டு.

(பி.ஏ.—திருவனந்தபுரம்)

தீர்வு :

மேற்கண்ட தவற்றினால் Σx, Σy, Σx^2 ஆகியவைகளின் மதிப்பு மாறவில்லை.

ஆனால், Σy^2, Σxy ஆகியவற்றின் மதிப்புகள் மாறியிருக்கின்றன.

பழைய $\Sigma y^2 = 14^2 + 6^2 = 232$

ஆனால் உண்மையான $\Sigma y^2 = 12^2 + 8^2 = 208$

ஆதலால், சரி செய்யப்பட்ட $\Sigma y^2 = 960 - 232 + 208 = 936$

பழைய $\Sigma xy = (6 \times 14) + (8 \times 6)$

$= 132$

ஆனால் உண்மையான $\Sigma xy = (8\times 12)+(6\times 8)$
$= 144$

ஆகையால் சரி செய்யப் பட்ட Σxy $\Big\}$ $= 508-132+144 = 520.$

$$\therefore r = \frac{\Sigma xy}{\sqrt{\Sigma x^2 \Sigma y^2}}$$

$$= \frac{520}{\sqrt{650\times 936}} = \tfrac{2}{3}$$

சரி செய்யப்பட்ட இடையுறவுக் கெழு $r = \frac{2}{3}$

மாதிரி 321

$X_i+Y_i = (n+1)$ என்றால், $r = -1$ என்று காட்டு.

தீர்வு :

இங்கு $X_i-Y_i = d_i$;

$$X_i+Y_i = (n+1)$$

$$\therefore d_i = 2X_i - (n+1)$$

$$\therefore \Sigma d^2 = 4\Sigma X_i^2 - 4(n+1)\Sigma X+(n)\times(n+1)^2$$

$$= 4\ \frac{n(n+1)(2n+1)}{6} - 4\ (n+1)\frac{n(n+1)}{2} + n\ (n+1)^2$$

$$= \tfrac{1}{3}\, n\,(n^2-1)$$

$$\therefore r = 1 - \frac{6\times\frac{1}{3}n\ (n^2-1)}{n(n^2-1)} = -1$$

ஆதலால் $r = -1$ எனக் காண்கிறோம்

மாதிரி 322

கொடுக்கப்பட்டவை :-

$r = 0{\cdot}56$; $\Sigma x'y' = 60$; $\sigma_y = 4$; $\Sigma x^2 = 90$

$[x' = (x-\bar{x})$; $y' = (y-\bar{y})]$

n-ன் மதிப்பைக் கண்டுபிடி.

தீர்வு :

கார்ல் பியர்சன் உடன் தொடர்புக் கெழு $r = \dfrac{\Sigma x'y'}{\sqrt{(\Sigma x'^2)\ (\Sigma y'^2)}}$

கொடுக்கப்பட்ட மதிப்புகளைச் சூத்திரத்தில் பிரதியிட்ட பின்பு,

$$56 = \frac{60}{\sqrt{90 \times (\Sigma y'^2)}}$$

அல்லது $0\ 3136 = \dfrac{3600}{90 \times (\Sigma y'^2)}$

அல்லது $28{\cdot}224 \times (\Sigma y'^2) = 3600$

$$ie.,\ \Sigma y'^2 = \frac{3600}{28{\cdot}224}$$

$\therefore\ \Sigma y'^2 =$ **128** (தோராயமாக)

$$\sigma_y^2 = \frac{\Sigma y'^2}{n}$$

$$= 16\ (\because \sigma_y = 4)$$

$$ie.,\ \frac{128}{n} = 16$$

அல்லது, $n = \dfrac{128}{16}$

$= \mathbf{8}$

ஆகவே கொடுக்கப்பட்ட கணக்கின் கண்டறிந்த விவரங்களின் எண்ணிக்கை $n = \mathbf{8}$

5. ஒட்டுறவு
(Regression)

x, y என்ற இரு மாறிகளுக்கு இடையே முழு இடையுறவு இருந்தால், ஒரே ஒரு சார்புச் சமன்பாடு இருக்கும். இங்ஙனம் முழு இடையுறவு இல்லையென்றால், இரண்டு சார்புச் சமன்பாடுகளைக் காண்கிறோம். அவைகளை முறையே 'x சார்ந்த y சமன்பாடு' என்றும், 'y சார்ந்த x சமன்பாடு' என்றும் அழைக்கிறோம்.

'x சார்ந்த y சமன்பாடு'

$$(y-\bar{y}) = r\,\frac{\sigma_y}{\sigma_y}\,(x-\bar{x}) \qquad \dots (1)$$

(அல்லது)

$$(y-\bar{y}) = b_{yx}\,(x-\bar{x})$$

(அல்லது)

$$(y-\bar{y}) = \frac{\mu_{11}}{\sigma_x^2}\,(x-\bar{x})$$

ஆகவே, 'x சார்ந்த y ஒட்டுறவுக் கெழு' :

$$b_{yx} = r\,\frac{\sigma_y}{\sigma_y} = \frac{\mu_{11}}{\sigma_x^2} \qquad \dots (2)$$

'y சார்ந்த x சமன்பாடு'

$$(x-\bar{x}) = r\,\frac{\sigma_x}{\sigma_y}\,(y-\bar{y}) \qquad \dots (3)$$

(அல்லது)

$$(x-\bar{x}) = b_{xy}\,(y-\bar{y})$$

(அல்லது)

$$(x-\bar{x}) = \frac{\mu_{11}}{\sigma_y^2}\,(y-\bar{y})$$

ஆகவே, 'y சார்ந்த x ஒட்டுறவுக் கெழு' :

$$b_{xy} = r\ \frac{\sigma_x}{\sigma_y} = \frac{\mu_{11}}{\sigma_y{}^2} \qquad \dots (4)$$

மேற்காணும் (1), (2), (3), (4)-களில் $\bar{x}$, $\bar{y}$ என்பன முறையே x, y களில் கூட்டுச் சராசரிகளாகும்; σ_x, σ_y என்பன முறையே x, y-களின் திட்ட விலக்கங்களாகும்; r என்பது இரண்டு வரிசைகளின் இடையுறவுக் கெழுவாகும்; b_{yx} என்பது 'x சார்ந்த x-ன் ஒட்டுறவுக் கெழுவாகும் ; b_{xy} என்பது 'y சார்ந்த x-ன் ஒட்டுறவுக் கெழுவாகும்; μ_{11} என்பது x, y வரிசை களின் உடன்மாற்றமாகும்.

ஒட்டுறவுக் கெழுக்களைக் கணக்கிடல் :

$$b_{yx} = r\frac{\sigma_y}{\sigma_x} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x)(\Sigma d_y)}{n}}{\left(\Sigma d_x{}^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right)}$$

$$b_{xy} = r\frac{\sigma_x}{\sigma_y} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x)(\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_y{}^2 - \frac{(\Sigma d_y)^2}{n}\right]}$$

மாறு விகிதம் (Ratio of Variation)

$$\text{மாறு விகிதச் சூத்திரம்} = \frac{\Sigma \frac{d_y}{d_x}}{n}$$

சூத்திரத்தில் d_x என்பது x மாறியின் கூட்டுச் சராசரியை அடிப்படையாகக் கொண்டு கண்ட சதவீத மதிப்புகளின், 100-லிருந்து அடைந்த விலக்கங்கள் ; d_y என்பது y மாறியின் கூட்டுச் சராசரியை அடிப்படையாகக் கொண்டு கண்ட சதவீதங்களின், 100-லிருந்து அடைந்த விலக்கங்கள்.

அதாவது, $d_x = \left(\frac{x}{\bar{x}} \times 100\right) - 100$

$$d_y = \left(\frac{y}{\bar{y}} \times 100\right) - 100$$

மாதிரி 323

இடையுறவுக் கெழுவானது, இரண்டு ஒட்டுறவுக் கெழுக்களின் பெருக்கல் சராசரியாகும் எனக் காட்டு.

$$x \text{ சார்ந்த } y \text{ ஒட்டுறவுக் கெழு } b_{yx} = r \times \frac{\sigma_y}{\sigma_x}$$

$$y \text{ சார்ந்த } x \text{ ஒட்டுறவுக் கெழு } b_{xy} = r \times \frac{\sigma_x}{\sigma_y}$$

இரண்டு ஒட்டுறவுக் கெழுக்களின் பெருக்கல்

$$= r \times \frac{\sigma_y}{\sigma_x} \times r \times \frac{\sigma_x}{\sigma_y} = r^2$$

$$\therefore \quad r = \pm \sqrt{b_{yx} \times b_{xy}}$$

+ அல்லது — குறிகளை b_{yx} (அல்லது b_{xy}) என்ற ஒட்டுறவுக் கெழுக்கள் + ஆகவோ, — ஆகவோ இருப்பதற்குத் தகுந்தாற் போல் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆகையால் இடையுறவுக் கெழுவானது, இரண்டு ஒட்டுறவுக் கெழுக்களின் பெருக்கல் சராசரியாக இருக்கிறது எனப் பார்த்தோம்.

மாதிரி 324

கீழ்க் காணும் அட்டவணையில் தரப்பட்ட விவரங்களைக் கொண்டு தண்ணீரைச் சார்ந்த அரிசி மகசூலைக் கொண்ட ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாட்டைக் கண்டுபிடி. 40 அங்குலங்கள் ஆழத் தண்ணீருக்குள் நிகழக்கூடிய அரிசி மகசூலைக் கணக்கிடு.

(பி.ஏ.—சென்னை—1953)

தண்ணீர் (அங்குலத்தில்)	12	18	24	30	36	42	48
மகசூல் (டன்னில்)	5·27	5·68	6·25	7·21	8·02	8·71	8·42

தீர்வு :

இங்கு, *தண்ணீர் சார்பற்ற மாறியாகும்.* *ஆகையால், அதை* x *மாறியாகக் கொள்கிறோம் ; மகசூலை* y *மாறியாகக் கொள்கிறோம்.*

x	y	உண்மையான சராசரி 30 லிருந்து விலக்கம் d_x	உண்மையான சராசரி 7.08 லிருந்து விலக்கம் d_y	விலக்கங்களின் பெருக்கல் $d_x \times d_y$	x விலக்கத்தின் வர்க்கம் d_x^2
12	5·27	—18	—1·81	32·58	324
18	5·68	—12	—1·40	16·80	144
24	6·25	— 6	—0·83	4·98	36
30	7·21	0	+0·13	0	0
36	8·02	+ 6	+0·94	5·64	36
42	8·71	+12	+1·63	19·56	144
48	8·42	+18	+1·34	24·12	321
210	49·56	0	0	103·68	1008

x *சார்ந்த* y *ஒட்டுறவுக் கெழு :*

$$b_{yx} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x)(\Sigma d_y)}{n}}{\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}}$$

$$= \frac{103{\cdot}68 - 0}{1008 - 0} = 0{\cdot}10 \text{ (தோராயமாக)}$$

மேற்கண்ட பட்டியலில்,

$$n = 7\,; \quad \bar{x} = \frac{210}{7} = 30$$

$$\bar{y} = \frac{49{\cdot}56}{7} = 7{\cdot}08$$

$\therefore$ x *சார்ந்த* y*–ன் ஒட்டுறவுக் கோடு*

$$(y - \bar{y}) = b_{yx}\,(x - \bar{x})$$

அல்லது $(y-7\cdot08) = 0\cdot10\ (x-30)$

அல்லது $y = 0\cdot10x+4\cdot08.$

இந்தச் சமன்பாட்டில் $x = 40$ எனப் போட்டால்,

$y = 0\cdot10\ (40)+4\cdot08 = 8\cdot08$ ஆகும்.

ஆகையால் மழையளவு 40″ இருக்கும் பொழுது, நிகழக் கூடிய அரிசி மகசூலின் அளவு 8·08 டன்னுக நிச்சயிக்கின்றோம்.

மாதிரி 325

கீழ்க் காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்ட விவரங்களுக்கு இடையுறவுக் கெழுவைக் கணக்கிட்டு, இரண்டு ஒட்டுறவுக் கோடுகளையும் கண்டுபிடி.

x	1	2	3	4	5	6	7	8	9
y	9	8	10	12	11	13	14	16	15

$x = 6\cdot2$ என இருக்கும்பொழுது y-ன் மதிப்பைக் கண்டுபிடி.

(ஐ. ஏ. எஸ்.—1955)

தீர்வு :

இடையுறவுக் கெழுவையும், இரண்டு ஒட்டுறவுக் கெழுக்களையும் கணக்கிடல் :

x	$d_x=x-5$	d_x^2	y	$d_y=x-12$	d_y^2	$d_x\times d_y$
1	−4	16	9	−3	9	12
2	−3	9	8	−4	16	12
3	−2	4	10	−2	4	4
4	−1	1	12	0	0	0
5	0	0	11	−1	1	0
6	1	1	13	1	1	1
7	2	4	14	2	4	4
8	3	9	16	4	16	12
9	4	16	15	3	9	12
$n=9$	0	60	$n=9$	0	60	57

மேற்கண்ட அட்டவணையின் மூலம்,

$$n = 9;\quad \Sigma d_x = 0;\quad \Sigma d_x^2 = 60;\quad \Sigma d_y = 0;$$
$$\Sigma d_y^2 = 60;\quad \Sigma d_x d_y = 57.$$

x வரிசையின் சராசரி : $\bar{x} = A + \dfrac{\Sigma d_x}{n} \times c = 5+0 = 5.$

y வரிசையின் சராசரி : $\bar{y} = B + \dfrac{\Sigma d_y}{n} \times c = 12+0 = 12.$

இடையுறவுக் கெழு r :

$$r = \frac{\Sigma d_x d_y - \dfrac{(\Sigma d_x)(\Sigma d_y)}{n}}{\sqrt{\left[\Sigma d_x^2 - \dfrac{(\Sigma d_x^2)}{n}\right] \times \left[\Sigma d_y^2 - \dfrac{(\Sigma d_y)^2}{n}\right]}}$$

$$= \frac{57 - \dfrac{(0) \times (0)}{9}}{\sqrt{(60-0) \times (60-0)}} = \frac{57}{60} = \frac{19}{20}$$

$$= 0{\cdot}95$$

x சார்ந்த y ஒட்டுறவுக் கெழு b_{yx} :

$$b_{yx} = \frac{\Sigma d_x\, d_y - \dfrac{(\Sigma d_x)(\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_x^2 - \dfrac{(\Sigma d_x)^2}{n}\right]}$$

$$= \frac{57-0}{60-0} = \frac{57}{60}$$

$$= 0{\cdot}95$$

'y சார்ந்த x' ஒட்டுறவுக் கெழு b_{xy} :

$$b_{xy} = \frac{\Sigma\, d_x d_y - \dfrac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_y^2 - \dfrac{(\Sigma d_y)^2}{n}\right]}$$

$$= \frac{57-0}{60-0}$$

$$= 0{\cdot}95$$

'x சார்ந்த y' ஒட்டுறவுக் கோடு :

$$(y-\bar{y}) = b_{yx}(x-\bar{x})$$
$$(y-12) = \cdot 95\,(x-5)$$
$$y = \cdot 95x+7\cdot 25$$

'y சார்ந்த x' ஒட்டுறவுக் கோடு :

$$(x-\bar{x}) = b_{xy}(y-\bar{y})$$
$$(x-\bar{x}) = \cdot 95\,(y-\bar{y})$$
$$x = \cdot 95y-6\cdot 4$$

$x=6\cdot 5$ என இருக்கும்பொழுது, y-ன் மதிப்பைக் காண, 'x சார்ந்த y' ஒட்டுறவுக் கோட்டைப் பயன்படுத்த வேண்டும்.

$x=6\cdot 2$ எனக் கொண்டால்,

$$y = \cdot 95x+7\cdot 25$$
$$y = \cdot 95x+7\cdot 25$$
$$y = \cdot 95\times 6\cdot 2+7\cdot 25$$
$$= 13\cdot 14$$

ஆகவே $x=6\cdot 5$ என்பதற்கு ஈடான மதிப்பிடப்பட்ட y-ன் மதிப்பு 13·14 ஆகும்.

மாதிரி 326

கீழே x-பருத்தி, y-கம்பளி மயிர் — இவைகளின் விலைக் குறியீட்டெண்கள் 12 மாதங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பட்டியலிலிருந்து ஒட்டுறவுக் கெழுவையும், இரண்டு ஒட்டுறவுக் கோடுகளின் சமன்பாடுகளையும் கண்டுபிடிக்க.

மேலும் ஒரு சிதறல் விளக்கப் படம் வரைந்து, இரண்டு ஒட்டுறவுக் கோடுகளையும் அதில் காட்டுக.

x	78	77	85	88	87	82	81	77	76	83	97	93
y	84	82	85	89	90	82	88	92	83	89	98	99

(பி.ஏ.—சென்னை—1971)

தீர்வு :

ஒட்டுறவுக் கெழுக்களையும், இரண்டு ஒட்டுறவுக் கோடுகளையும் கண்டுபிடித்தல்:

x	$d_x = x-85$	d_x^2	y	$d_y = y-85$	d_y^2	$d_x \times d_y$
78	−7	49	84	−1	1	7
77	−8	64	82	−3	9	24
85	0	0	85	0	0	0
88	3	9	89	4	16	12
87	2	4	90	5	25	10
82	−3	9	82	−3	9	9
81	−4	16	88	3	9	−12
77	−8	64	92	7	49	−56
76	−9	81	83	−2	4	18
83	−2	4	89	4	16	−8
97	12	144	98	13	169	156
93	8	64	99	14	196	112
	−16	508		41	503	272

ஒட்டுறவுக் கெழுச் சூத்திரம்

$$r = \frac{\frac{\Sigma d_x d_y}{n} - \frac{(\Sigma d_x)(\Sigma d_y)}{n}}{\sqrt{\left[\frac{\Sigma d_x^2}{n} - \left(\frac{\Sigma d_x}{n}\right)^2\right]\left[\Sigma d_y^2 - \left(\frac{\Sigma d_y}{n}\right)^2\right]}}$$

$$= \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x)(\Sigma d_y)}{n}}{\sqrt{\left[\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right]\left[\Sigma d_y^2 - \frac{(\Sigma d_y)^2}{n}\right]}}$$

$$= \frac{272 - \frac{(-16)(41)}{12}}{\sqrt{\left[508 - \frac{(-16)^2}{12}\right]\left[503 - \frac{(41)^2}{12}\right]}}$$

$$= \frac{272+54\cdot67}{\sqrt{(508-21\cdot33)\ (503-140\cdot1)}}$$

$$= \frac{326\cdot67}{\sqrt{486\cdot67\times362\cdot9}}$$

$$= \frac{326\cdot67}{416\cdot6}$$

$= 0\cdot78$ (தோராயமாக)

ஆகவே, ஒட்டுறவுக் கெழு $= \mathbf{0\cdot78}$

மாதிரி 327

கீழ்க் காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்ட ஒன்பது ஜோடி மதிப்புகளுக்கு இரண்டு ஒட்டுறவுச் சமன்பாடுகளையும் எழுதவும்.

x	152	114	138	154	144	153	141	117	156
y	193	300	414	594	676	549	320	483	481

(ஐ.ஏ.எஸ்.—1915)

தீர்வு :

இரு ஒட்டுறவுக் கெழுக்களையும், இரு ஒட்டுறவுச் சமன்பாடுகளையும் கண்டுபிடித்தல் :

x	$d_x = x-141$	d_x^2	y	$d_y = y-445$	d_y^2	$d_x \times d_y$
152	11	121	193	−252	63504	−2772
114	−27	729	300	−145	21025	3915
138	− 3	9	414	− 41	1681	123
154	13	169	594	149	22201	1937
144	3	9	676	231	53361	693
153	12	144	549	104	10816	1248
141	0	0	320	−125	15625	0
117	−24	576	483	38	1444	−912
156	15	225	481	36	1296	540
$n=9$	0	1982		−5	190953	4772

மேற்கண்ட பட்டியலின் மூலம் கீழ்க் காணும் மதிப்புகளை அடைகிறோம்.

$$n=9;\ \Sigma d_x = 0\ ;\ \Sigma d_x^2 = 1982\ ;$$

$$\Sigma d_y = -5\ ;\ \Sigma d_y^2 = 190953\ ;\ \Sigma d_x d_y = 4772.$$

'x சார்ந்த y' ஒட்டுறவுக் கெழு b_{yx} :

$$b_{yx} = \frac{\Sigma d_x d_y - \dfrac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_x^2 - \dfrac{(\Sigma d_x)^2}{n}\right]}$$

$$= \frac{4772 - \dfrac{(0) \times (-5)}{9}}{\left[1982 - \dfrac{(0)^2}{9}\right]}$$

$$= \frac{4772-0}{1982-0} = \frac{4772}{1982}$$

$$= \mathbf{2{\cdot}408}$$ (தோராயமாக)

'y சார்ந்த x' ஒட்டுறவுக் கெழு b_{xy} :

$$b_{xy} = \frac{\Sigma d_x d_y - \dfrac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_y^2 - \dfrac{(\Sigma d_y)^2}{n}\right]}$$

$$= \frac{4772 - \dfrac{(0) \times (-5)}{9}}{\left[190953 - \dfrac{(-5)^2}{9}\right]} = \frac{4772}{190953 - \dfrac{25}{9}}$$

$$= \frac{4772}{190950{\cdot}23} = {\cdot}025$$

'x சார்ந்த y' ஒட்டுறவுச் சமன்பாடு :

$$(y-\bar{y}) = b_{yx}(x-\bar{x})$$

$$ie., (y-444\cdot45) = 2\cdot408\,(x-141)\ [\because \bar{y} = 444\cdot45]$$

$$ie., \quad y = 2\cdot408x+104\cdot922$$

'y சார்ந்த x' ஒட்டுறவுச் சமன்பாடு :

$$(x-\bar{x}) = b_{xy}(y-\bar{y})$$

$$ie., (x-141) = \cdot025\,(y-444\cdot45)$$

$$ie., \quad x = \cdot025y+129\cdot889.$$

ஆகவே,

$$b_{yx} = 2\cdot408$$

$$b_{xy} = 0\cdot025$$

$$y = 2\cdot408x+104\cdot922$$

$$x = 0\cdot025+129\cdot889$$

மாதிரி 328

எட்டு ஜோடி தந்தை மகன்களின் உயரங்கள் (அங்குலத்தில்) கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :

தந்தை உயரம் (x) (அங்குலத்தில்)	65	66	67	67	68	69	71	73
மகன் உயரம் (y) (அங்குலத்தில்)	67	68	64	68	72	70	69	70

இரண்டு ஒட்டுறவுக் கோடுகளை உருவாக்கி, தந்தையின் உயரம் 67·5 அங்குலமாக இருக்கும்பொழுது, மகனின் மதிப்பளவு உயரத்தைக் கண்டுபிடி.

(ஆக்ரா—1957)

தீர்வு :

இரு ஒட்டுறவுக் கோடுகளை உருவாக்கல் :

x	$d_x=x-69$	d_x^2	y	$d_y=y-69$	d_y^2	$d_x \times d_y$
65	−4	16	67	−2	4	8
66	−3	9	68	−1	1	3
67	−2	4	64	−5	25	10
67	−2	4	68	−1	1	2
68	−1	1	72	3	9	−3
69	0	0	70	1	1	0
71	2	4	69	0	0	0
73	4	16	70	1	1	4
$n=8$	−6	54	$n=8$	−4	42	24

x வரிசையின் கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma d_x}{n}$

$$= 69 - \frac{6}{8} = 68{\cdot}25$$

y வரிசையின் கூட்டுச் சராசரி $\bar{y} = B + \frac{\Sigma d_y}{n}$

$$= 69 + \frac{4}{8} = 68{\cdot}5$$

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கெழு b_{yx} :

$$b_{yx} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right]}$$

$$b_{yx} = \frac{24 - \frac{(-6) \times (-4)}{8}}{\left[54 - \frac{(-6)^2}{8}\right]}$$

$$= \frac{24 - 3}{54 - 4{\cdot}5} = \frac{21}{49{\cdot}5}$$

$$= \mathbf{0{\cdot}421} \quad \text{(தோராயமாக)}$$

'y சார்ந்த x'-ன் கூட்டுறவுக் கெழு b_{xy} :

$$b_{xy} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_y^2 - \frac{(\Sigma d_y)^2}{n}\right]}$$

$$= \frac{24 - \frac{(-6) \times (-4)}{8}}{\left[42 - \frac{(-4)^2}{8}\right]}$$

$$= \frac{24 - 3}{42 - 2} = \frac{21}{40}$$

$$= 0{\cdot}524 \quad \text{(தோராயமாக)}$$

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு :

$$(y - \bar{y}) = b_{yx} (x - \bar{x})$$

$$ie.\ (y - 68{\cdot}5) = 0{\cdot}421 (x - 68{\cdot}25)$$

$$i e.\ y = 0{\cdot}421x + 39{\cdot}77$$

'y சார்ந்த x'-ன் ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு :

$$(x - \bar{x}) = b_{xy} (y - \bar{y})$$

$$i.e.\ (x - 68{\cdot}25) = 0{\cdot}524 (y - 68\ 5)$$

$$i.e.\ x = 0{\cdot}524y + 32{\cdot}29.$$

$x = 67{\cdot}5$ ஆக இருப்பின், y-ன் மதிப்பளவைக் கண்டுபிடிக்க 'x' சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாட்டை உபயோகிக்க வேண்டும்.

$$x = 67{\cdot}5 \text{ என்றால்,}$$

$$y = 0{\cdot}421x + 39{\cdot}77$$

$$= 0{\cdot}421 \times 67{\cdot}5 + 39{\cdot}77$$

$$= 68{\cdot}19$$

மாதிரி 329

புள்ளியியல் பாடத்தில் ஒரு மாணவக் குழு வாங்கிய மதிப்பெண்களை (100-க்கு) கீழ்க் காணும் அட்டவணை தருகின்றது.

பேப்பர் *I*	45	55	56	58	60	65	68	70	75	80	85
பேப்பர் *II*	56	50	48	60	62	64	65	70	74	82	90

மேற்கண்ட விவரங்களுக்கு இடையுறவுக் கெழுவைக் கணக்கிடு ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாடுகளைக் கண்டுபிடி.

(பி.எஸ்சி.—அண்ணமலை—1945)

தீர்வு :

இடையுறவுக் கெழு; ஒட்டுறவுக் கோடுகளின் சமன்பாடுகளைக் கணக்கிடல்.

பேப்பர் *I*			பேப்பர் *II*			
மதிப் பெண்கள் (100க்கு) x	ஊகச் சராசரி (65) லிருந்து விலக்கம் d_x	விலக்க வர்க்கம் d_x^2	மதிப் பெண்கள் (100க்கு) y	ஊகச் சராசரி (70) லிருந்து விலக்கம் d_y	விலக்க வர்க்கம் d_y^2	விலக்கங்களின் பெருக்கல் $(d_x \times d_y)$
45	—20	400	56	—14	196	280
55	—10	100	50	—20	400	200
56	—9	81	48	—22	484	198
58	—7	49	60	—10	100	70
60	—5	25	62	—8	64	40
65	0	0	64	—6	36	0
68	3	9	65	—5	25	—15
70	5	25	70	0	0	0
75	10	100	74	4	16	40
80	15	225	82	12	144	180
85	20	400	90	20	400	400
$n = 11$	2	1414	$n = 11$	—49	1865	1393

மேற்கண்ட பட்டியலிலிருந்து கீழ்க் காணும் மதிப்புக்களை அடைகிறோம்.

$$n = 11; \quad \Sigma d_x = 2; \quad \Sigma d_x^2 = 1414;$$
$$\Sigma d_y = -49; \quad \Sigma d_y^2 = 1865; \quad \Sigma d_x d_y = 1393.$$

கார்ல் பியர்சனின் இடையுறவுக் கெழுச் சூத்திரம் :

$$r = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x)\times(\Sigma d_y)}{n}}{\sqrt{\left[\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right] + \left[\Sigma d_y^2 - \frac{(\Sigma d_y)^2}{n}\right]}}$$

$$r = \frac{1393 - \frac{2x-49}{11}}{\sqrt{\left[1414 - \frac{(2)^2}{11}\right] + \left[1865 - \frac{(49)^2}{11}\right]}}$$

$$= \frac{15323+98}{\sqrt{(15554-4)\times(20515-2401)}} = \frac{15421}{\sqrt{15550 \times 18114}}$$

$$= 0{\cdot}918$$

'y சார்ந்த x'-ன் ஒட்டுறவுக்கெழு b_{xy}

$$b_{xy} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_y^2 - \frac{(\Sigma d_y)^2}{n}\right]}$$

$$= \frac{1393 + \frac{2\times 49}{11}}{\left[1865 - \frac{(49)^2}{11}\right]} = \frac{1401{\cdot}9}{1646{\cdot}7}$$

$$= 0{\cdot}85$$

'x சார்ந்த y-ன் ஒட்டுறவுக் கெழு b_{yx} :

$$b_{yx} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right]}$$

$$= \frac{1393 - \frac{2x-49}{11}}{\left[1414 - \frac{(2)^2}{11}\right]} = \frac{1401 \cdot 9}{1413 \cdot 6}$$

$$= 0 \cdot 99$$

முதல் பேப்பரின் கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma d_x}{n}$

$$= 65 + \frac{2}{11} = 65 \cdot 2$$

இரண்டாம் பேப்பரின் கூட்டுச் சராசரி $\bar{y} = B + \frac{\Sigma d_y}{n}$

$$= 70 + \frac{-49}{11} = 65 \cdot 55$$

'y சார்ந்த x'-ன் ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு

$$(x - \bar{x}) = b_{xy}(y - \bar{y})$$

i.e., $(\bar{x} - 65 \cdot 5) = 0 \cdot 85(y - 65 \cdot 55)$

i,e , $x = 0 \cdot 85y + 9 \cdot 48$

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு

$$(y - \bar{y}) = b_{yx}(x - \bar{x})$$

i.e., $(y - 65 \cdot 55) = 0 \cdot 99(x - 65 \cdot 2)$

i.e., $\mathbf{y = 0 \cdot 99x + 1}$

மாதிரி 389

கீழ்க் காணும் அட்டவணையில் தரப்பட்ட x, y வரிசைகளுக்கு இடையுறவுக் கெழுவைக் கணக்கிடு. 'x சார்ந்த y' என்ற ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாட்டையும் எழுது.

x	78	89	97	69	59	79	68	61
y	125	137	156	112	107	136	123	108

x மாறிக்கு 69 ஐயும், y மாறிக்கு 112 ஐயும் வேகச் சராசரியாகக் கொள்.

(எம்.காம்.—டில்லி.—1953)

தீர்வு :

இடையுறவுக் கெழுவையும், 'x சார்ந்த y' ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாட்டையும் கண்டுபிடித்தல்:

x			y			$d_x \times d_y$
x	$d_x = (x-69)$	d_x^2	y	$d_y = (y-112)$	d_y^2	
78	9	81	125	13	169	117
89	20	400	137	25	625	500
97	28	784	156	44	1936	1232
69	0	0	112	0	0	0
59	—10	100	107	— 5	25	50
73	10	100	136	24	576	240
68	— 1	1	123	11	121	— 11
61	— 8	64	108	—4	16	32
$n = 8$	48	1530	$n = 8$	108	3468	2160

மேற்கண்ட பட்டியலிலிருந்து கீழ்க் காண்பவற்றை அடைகிறோம்.

$$n = 8; \qquad \Sigma d_x = 48; \qquad \Sigma d_x^2 = 1530;$$
$$\Sigma d_y = 108; \qquad \Sigma d_y^2 = 3468; \qquad \Sigma d_x d_y = 2160.$$

x வரிசையின் கூட்டுச் சராசரி $\bar{x} = A + \dfrac{\Sigma d_x}{n}$

$$= 69 + \frac{48}{8} = 75$$

y வரிசையின் கூட்டுச் சராசரி $\bar{y} = B + \dfrac{\Sigma d_y}{n}$

$$= 112 + \frac{108}{8} = 125{\cdot}5$$

கார்ல் பியர்சனின் இடையுறவுக் கெழு :

$$r = \frac{\Sigma d_x d_y - \dfrac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\sqrt{\left[\Sigma d_x^2 - \dfrac{(\Sigma d_x)^2}{n}\right] \times \left[\Sigma d_y^2 - \dfrac{(\Sigma d_y)^2}{n}\right]}}$$

$$= \frac{2160 - \dfrac{48 \times 108}{8}}{\sqrt{\left[1530 - \dfrac{(48)^2}{8}\right] \times \left[3468 - \dfrac{(108)^2}{8}\right]}}$$

$$= \frac{2160-648}{\sqrt{(1530-288) \times (3468-1458)}}$$

$$= \frac{706}{\sqrt{621 \times 1005}} = \frac{706}{789}$$

$$= 0{\cdot}957$$

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு காணல் :

$$b_{yx} = \frac{\Sigma d_x d_y - \dfrac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_y^2 - \dfrac{(\Sigma d_x)^2}{n}\right]}$$

$$= \frac{2160 - \dfrac{48 \times 108}{8}}{\left[1530 - \dfrac{(48)^2}{8}\right]} = \frac{1512}{1242}$$

$$= 1{\cdot}22 \quad \text{(தோராயமாக),}$$

ஆகையால் $(y-\bar{y}) = b_{yx}(x-\bar{x})$

$$(y-125{\cdot}5) = 1{\cdot}22\,(\bar{x}-75)$$

அல்லது $y = 1{\cdot}22x + 34$

மாதிரி 331

15 மாவட்டங்களின், கோதுமை, உருளைக் கிழங்கு விளைச்சலைக் கீழ்வரும் பட்டியல் தருகின்றது. இடையுறவுக் கெழுவைக் கண்டு பிடி. கோதுமை விளைச்சல் 33 கன எடையாக இருப்பின், உருளைக் கிழங்கின் மதிப்பிடத்தக்க விளைச்சலைக் கண்டுபிடி.

கோதுமை (கன எடையில்)	16	20	17	16	15	18	14	12	13	14	15	12	11	10	12
உருளைக் கிழங்கு (கன எடையில்)	5	6	6	8	6	6	5	7	4	6	7	4	6	3	6

(அண்ணாமலை — 1948)

தீர்வு :

ஒட்டுறவுக் கெழுவையும் 'கோதுமையின் எடை சார்ந்த உருளைக் கிழங்கின்'' ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாட்டையும் கண்டுபிடித்தல் :

கோதுமை (கன எடையில்)			உருளைக் கிழங்கு (கன எடையில்)			பெருக்கல் $d_x \times d_y$
x	$dx=(x-15)$	d_x^2	y	$dy=(y-5)$	d_y^2	
16	1	1	5	0	0	0
20	5	25	6	1	1	5
17	2	4	6	1	1	2
16	1	1	8	3	9	3
15	0	0	6	1	1	0
18	3	9	6	1	1	3
14	−1	1	5	0	0	0
12	−3	9	7	2	4	−6
13	−2	4	4	−1	1	2
14	−1	1	6	1	1	−1
15	0	0	7	2	4	0
12	−3	9	4	−1	1	3
11	−4	16	6	1	1	−4
10	−5	25	3	−2	4	10
12	3	9	6	1	1	3
	−4	111		8	30	20

மேற்கண்ட பட்டியலிலிருந்து நாம் அடைவது:

$n = 15; \quad \Sigma d_x = -4; \quad \Sigma d_x^2 = 111; \quad \Sigma d_y = 8$

$\Sigma d_y^2 = 30; \quad \Sigma d_x d_y = 20.$

கோதுமை எடையின் கூட்டுச் சராசரி

$$\bar{x} = A + \frac{\Sigma d_x}{n}$$

$$= 15 + \frac{4}{15}$$

$$= 15 - 0{\cdot}267$$

$$= 14{\cdot}733$$

உருளைக் கிழங்கு எடையின் கூட்டுச் சராசரி

$$\bar{y} = B + \frac{\Sigma d_y}{n}$$

$$= 5 + \frac{8}{15}$$

$$= 5 + 0{\cdot}533$$

$$= 5{\cdot}533$$

இடையுறவுக் கெழு காணும் சூத்திரம்

$$= \frac{20 - \frac{(-4)(8)}{15}}{\sqrt{\left[111 - \frac{(-4)^2}{15}\right]\left[30 - \frac{(8)^2}{15}\right]}}$$

$$= \frac{300 + 32}{\sqrt{1649 \times 386}}$$

$$= \frac{332}{797{\cdot}8}$$

$$= 0{\cdot}22$$

கோதுமையின் எடை சார்ந்த உருளைக் கிழங்கின் ஒட்டுறவுக் கோடு காணல் ;

$$b_{yx} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x)\ (\Sigma d_y)}{n}}{\sqrt{\left[\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right]}}$$

$$= \frac{20 - \frac{(-4)\ (8)}{15}}{\sqrt{111 - \frac{(-4)^2}{15}}}$$

$$= \frac{332}{1649} = 0{\cdot}2 \text{ (தோராயமாக)}$$

ஆகையால்,

$$(y - \bar{y}) = b_{yx}\,(x - \bar{x})$$

$$(y - 5{\cdot}533) = 0{\cdot}2\ (x - 14{\cdot}733)$$

$$y = 0{\cdot}2x + 2{\cdot}5867$$

அல்லது, கோதுமையின் விளைச்சல் 33 கன எடை எனில் உருளைக் கிழங்கின் கன அளவு மதிப்பு :

$x = 33$ எனில்,

$$y = 0{\cdot}2 \times 33 + 2{\cdot}5867$$

$$= 9{\cdot}1867 \text{ (கன அளவு)}$$

மாதிரி 332

கீழ்க் காணும் பட்டியல், பத்து விற்பனையாளர்களின் அறிவுப் போட்டியில் பதிந்த மதிப்பெண்களையும், அவர்களின் வார விற்பனையையும் கொடுக்கிறது :

விற்பனையாளர்கள்	1	2	3	4	5	6	7	8	9	10
போட்டியின் மதிப்பெண்கள்	40	70	50	60	80	50	90	40	60	60
விற்பனை (ஆயிரத்தில்)	2·5	6·0	4·5	5·0	4·5	2·0	5·5	3·0	4·5	3·0

'போட்டி மதிப்பெண்களைச் சார்ந்த விற்பனை' ஒட்டுறவுக் கோட்டைக் கணக்கிட்டு, விற்பனையாளர் 70 போட்டி மதிப்பெண்களை அடைந்தால், அதற்குச் சரியாக நிகழக்கூடிய வார விற்பனையை மதிப்பிடு.

(ஐ.ஏ.எஸ்.—1948)

தீர்வு :

'போட்டி மதிப்பெண்களைச் சார்ந்த விற்பனை' ஒட்டுறவுக் கோட்டைக் கணக்கிடல் :

போட்டி மதிப்பெண்கள் x	$d_x = \left(\frac{x-60}{10}\right)$	d_x^2	விற்பனை y	$d_y = \left(\frac{y-4}{5}\right)$	d_y^2	$(d_x \times d_y)$
40	−2	4	2·5	−3	9	6
70	1	1	6·0	+1	1	4
50	−1	1	4·5	1	1	−1
60	0	0	5·0	2	4	0
80	2	4	4·5	1	1	2
50	−1	1	2·0	−4	16	4
90	3	9	5·5	3	9	9
40	−2	4	3·0	−2	4	4
60	0	0	4·5	1	1	0
60	0	0	3·0	−2	4	0
$n = 10$	0	24	$n = 10$	1	65	28

மேற்கண்ட பட்டியலிலிருந்து கீழ்க் காணும் மதிப்புகளை அடைகிறோம்.

$$n = 10; \quad \Sigma d_x = 0; \quad \Sigma d_x^2 = 24;$$

$$\Sigma d_y = 1; \quad \Sigma d_y^2 = 65; \quad \Sigma d_x d_y = 28.$$

போட்டி மதிப்பெண்கள் கூட்டுச் சராசரி $\bar{x} = A + \frac{\Sigma d_x}{n} \times c$

$$= 60 + 0 = 60$$

வார விற்பனையின் கூட்டுச் சராசரி $\bar{y} = B + \frac{\Sigma d_y}{n} \times c$

$$= 4 + \frac{1}{10} \times 5$$

$$= 4{\cdot}05$$

'x சார்ந்த y' ஒட்டுறவுக் கெழு b_{yx} :

$$b_{yx} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x)+(\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right]} \times \left\{\frac{(10 \times \cdot 5)}{(10 \times 10)}\right\}$$

($\because$ x-ன் விலக்கத்தை 10 ஆல் வகுப்பதாலும்; y-ன் விலக்கத்தை 5 ஆல் வகுப்பதாலும்.)

$$= \frac{28 - \frac{0+1}{10}}{\left(24 - \frac{0^2}{10}\right)} \times \frac{1}{20} = \frac{28-0}{24-0} \times \frac{1}{20} = \frac{28}{480}$$

$$= 0{\cdot}06 \text{ (தோராயமாக)}$$

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு :

$$(y - \bar{y}) = b_{yx}(x - \bar{x})$$

$$(y - 4{\cdot}05) = 0{\cdot}06\,(x - 60)$$

அல்லது $y = 0{\cdot}06x - (0{\cdot}06 \times 60) + 4{\cdot}05$

i.e. $y = 0{\cdot}06x + 0{\cdot}45$

$x = 70$ ஆக இருக்கும்பொழுது y-ன் மதிப்பு

$$y = (0{\cdot}06 \times 70) + 0{\cdot}45$$

$$= 4{\cdot}65$$

மாதிரி 333

கீழ்க் காணும் பட்டியல், 17 வயது நிரம்பிய பெரிய மாணவக் குழுவிலிருந்து ராண்டம் மாதிரியாக எடுக்கப்பட்ட 10 மாணவர் களின் உயரத்தையும் (x-அங்குலத்தில்) எடையையும் (y—பவுண் டில்) கொடுக்கிறது :

X	61	68	68	64	65	70	63	62	64	67
Y	112	123	130	115	110	125	100	113	116	126

69 அங்குலம் உயரமுள்ள மாணவனின் எடையை மதிப்பிடுக.

(ஐ. ஏ. எஸ்.—1960)

தீர்வு :

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு காணல் :

உயரம் (X — அங்குலத்தில்)			எடை (Y — பவுண்டில்)			விலக்கங் களின் பெருக்கல் $(d_x \times d_y)$
X	(65) லிருந்து விலக்கம் d_x	விலக்க வர்க்கம் d_x^2	*Y*	(117)லிருந்து விலக்கம் d_y	விலக்க வர்க்கம் d_y^2	
61	—4	16	112	— 5	25	20
68	3	9	123	6	36	18
68	3	9	130	13	169	39
64	—1	1	115	— 2	4	2
65	0	0	110	— 7	49	0
70	5	25	125	8	64	
63	—2	4	100	—17	289	34
62	—3	9	113	— 4	16	12
64	—1	1	116	— 1	1	1
67	2	4	126	9	81	18
652	2	78	1170	0	734	

மேற்கண்ட பட்டியலிலிருந்து கீழ்க் காணும் மதிப்புகள் கிடைக்கின்றன :

$$n = 10; \quad \Sigma x = 652; \quad \Sigma d_x = 2; \quad \Sigma d_x^2 = 78;$$
$$\Sigma y = 1170; \quad \Sigma d_y = 0; \quad \Sigma d_y^2 = 734; \quad \Sigma d_x d_y = \;;$$

உயரத்தின் கூட்டுச் சராசரி $= \frac{\Sigma x}{n} = \frac{652}{10} = 65{\cdot}2.$

எடையின் கூட்டுச் சராசரி $= \frac{\Sigma y}{n} = \frac{1170}{10} = 117.$

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கெழு காணல் :

$$b_{yx} = r \times \frac{\sigma_y}{\sigma_x} = \frac{\Sigma d_x d_y - \frac{(\Sigma d_x) \times (\Sigma d_y)}{n}}{\left[\Sigma d_x^2 - \frac{(\Sigma d_x)^2}{n}\right]}$$

$$= \frac{184 - \frac{(2) \times (0)}{10}}{\left[78 - \frac{(2)^2}{10}\right]}$$

$$= \frac{184-0}{78-{\cdot}4} = \frac{184}{77{\cdot}6} = 2{\cdot}37$$

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாடு காணல் :

$$(y - \bar{y}) = b_{yx}(x - \bar{x})$$

அல்லது $(y - 117) = 2{\cdot}37\ (x - 65{\cdot}2)$

உயரம் $x = 69$ அங்குலமாக இருக்கும் பொழுது எடை y-ன் மதிப்பைக் காணல் :

$$(y - 117) = 2{\cdot}37\ (x - 65{\cdot}2)$$

அல்லது $(y - 117) = 2{\cdot}37\ (69 - 65{\cdot}2)$

$$y = (2{\cdot}37 \times 3{\cdot}8) + 117$$

$$= 9{\cdot}01 + 117$$

$$= 126{\cdot}01$$

ஆகவே, 69 அங்குலங்கள் உயரமுடைய மாணவனின் மதிப்பிடப்பட்ட எடை 126·01 பவுண்டுகளாகும்.

மாதிரி 334

கீழ்க் காணும் பட்டியலில் இரு மாறிகள் X, Y களின் மதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன :

X	48	50	53	49	51	55	53	49
Y	36	32	33	38	37	31	35	30

1) இடையுறவுக் கெழு
2) இரு ஒட்டுறவுச் சமன்பாடுகள்
3) $y=34$, எனில் x—ன் மதிப்பு
4) $x=47$, எனில் y—ன் மதிப்பு
5) இரு ஒட்டுறவுக் கெழுக்கள்

ஆகியவற்றைக் கணக்கிடுக.

தீர்வு :

X			Y			விலக்கங்களின் பெருக்கல் $x' \times y'$
X	சராசரி (51) லிருந்து விலக்கம் (x')	விலக்க வர்க்கம் (x'^2)	Y	சராசரி (34) லிருந்து விலக்கம் (y')	விலக்க வர்க்கம் (y'^2)	
48	—3	9	36	2	4	—6
50	—1	1	32	—2	4	2
53	2	4	33	—1	1	—2
49	—2	4	38	4	16	—8
51	0	0	37	3	9	0
55	4	16	31	—3	9	—12
53	2	4	35	1	9	2
49	—2	4	30	—4	16	8
408		42	272		60	—16

மேற்கண்ட பட்டியலிலிருந்து கீழ்க் காணும் மதிப்புகளை அடை கிறோம்.

$$\Sigma x = 408; \quad \Sigma x'^2 = 42; \qquad \Sigma x'y' = -16.$$
$$\Sigma y = 272; \quad \Sigma y'^2 = 60:$$

x மாறியின் கூட்டுச் சராசரி $\bar{x} = \frac{\Sigma x}{n} = \frac{408}{8}$

$= 51$

y மாறியின் கூட்டுச் சராசரி $\bar{y} = \frac{\Sigma y}{n} = \frac{272}{8}$

$= 34$

(1) x, y மாறிகளின் இடையுறவுக் கெழுவினைக் காணல் :

கார்ல் பியர்சனின் இடையுறவுக் கெழுச் சூத்திரம்

$$r = \frac{\Sigma x'y'}{\sqrt{(\Sigma x'^2)+(\Sigma y'^2)}}$$

$$\therefore \quad r = \frac{-16}{\sqrt{42 \times 60}} = \frac{-16}{50 \cdot 2} = -0 \cdot 3$$

(தோராயமாக)

இங்கு, $\sigma_x = \sqrt{\frac{\Sigma x'^2}{n}}$

$= \sqrt{\frac{42}{8}} = \sqrt{5 \cdot 25} = 2 \cdot 3$

$\sigma_y = \sqrt{\frac{\Sigma y^2}{n}} = \sqrt{\frac{60}{8}}$

$= \sqrt{7 \cdot 5} = 2 \cdot 7$

(2) ஒட்டுறவுச் சமன்பாடுகள் கணக்கிடல் :

'x சார்ந்த y'-ன் ஒட்டுறவுச் சமன்பாடு :

$$(y - \bar{y}) = r \frac{\sigma_y}{\sigma_x}(x - \bar{x})$$

$$i.e., \quad (y-34) = \frac{(-3)\times(2\cdot7)}{2\cdot3}(x-51)$$

அல்லது $(y-34) = -0\cdot35\,(x-51)$

அல்லது $y = -0\cdot35x+51\cdot85$ ஆகும்.

'y சார்ந்த x'-ன் ஒட்டுறவுச் சமன்பாடு :

$$(x-\bar{x}) = r\frac{\sigma_x}{\sigma_y}(y-\bar{y})$$

$$i.e., \quad (x-51) = \frac{(-0\cdot3)\times(2\cdot3)}{2\cdot7}(y-34)$$

அல்லது $(x-51) = -0\cdot26\,(y-34)$

அல்லது $x = -0\cdot26\,y+59\cdot84$

(3) $y = 34$ ஆக இருக்கும்பொழுது :

$$\begin{aligned} x &= -0\cdot26y+59\cdot84 \\ &= (-0\cdot26)\times(34)+59\cdot84 \\ &= -8\cdot84+59\cdot84 \\ &= 51 \end{aligned}$$

ஆகவே $y=34$ ஆக இருக்கும்பொழுது y-ன் மதிப்பு **51** ஆகும்.

(4) $x = 47$ ஆக இருக்கும்பொழுது :

